இராவணேசுவரன் இந்திர உலா

(இராவணன் சரிதை)



பேரறிஞர் கந்தசாமி பாலசுப்பிரமணியம்

இராவணேசுவரன் இந்திர உலா

(இராவணன் சரிதை)

பேராசிரியர். கந்தசாமி பாலசுப்பிரமணியம்

ஈழத்து இலக்கியச் சோலை

21, ஒளவையார் வீதி, திருக்கோணமலை.

இலங்கை

2004

வெளியீடு	-	17
நூற்பெயர்	-	இராவணேசுவரன் இந்திர உலா (இராவணன் சரிதை)
ஆசிரியர்	-	பேரறிஞர். கந்தசாமி பாலசுப்ரமணியம்
முதற்பதிப்பு	-	01 - 03 - 2004
பக்கங்கள்	-	200
வெளியீடு	-	ஈழத்து இலக்கியச் சோலை 21, ஔவையார் வீதி, திருக்கோணமலை இலங்கை
அச்சகம்	-	ரெயின்போ மினிலாப் 361, மின்சார நிலைய வீதி, திருக்கோணமலை. 026-2223454, 0777-303938
அட்டை	-	திரு. D.N. ஞானகுரு
விலை	-	ரூபா 150.00

ISBN : 955-1029-00-3

Publication	-	17
Title	-	Ravaneswaran Indra Ula (History of Ravanesan)
Auther	-	Peraringar Kandasamy Balasubramaniam
First Edition	-	01 - 03 - 2004
Pages	-	200
Copies	-	1000
Publisher	-	Ezathu Ilakiyach cholai 21 Aouvaiyar Street Trincomalee. (Sri lanka)
Printed at	-	Rainbow Mini lab (PTE) 361, Court Road Trincomalee 026-2223454, 0777-303938
Price	-	Rs 150.00

நூலினுள். . . . . .

அணிந்துரை	- தவத்திரு. சிவகுருநாதன் அடிகளார்	- 05
வாழ்த்துரை	- பேராசிரியர் அ. சண்முகதாஸ்	- 08
தோற்றுவாய்	- பேரறிஞர் பாலசுப்பிரமணியம்	- 10
வெளியீட்டுரை	- கலாவிநோதன். த. சித்திஅமரசிங்கம்	- 16

இராவணேசுவரன் இந்திர உலா

1.	பாலகாண்டம்	- 29
2.	சுந்தரகாண்டம்	- 65
3.	கைலாய காண்டம்	- 85
4.	இந்திரகாண்டம்	- 105
5.	சிறைக்காண்டம்	- 124
6.	போர்க்காண்டம்	- 146
7.	பரதகாண்டம்	- 181
8.	உசாவிய நூல்கள்.	- 197

உலக ஆன்மீக எழுச்சிப் பேரணியின் முனைவர் தவத்திரு சிவகுருநாதன் அடிகளார் அவர்கள் அன்புடன் வாழ்த்தி வழங்கிய

அணிந்துரை

மக்கள் நல்லவண்ணம் வாழ வழிகாட்டிய நம் மூதாதையர், வாழ்வாங்கு வாழும் வழிகளை மக்கட்கு உணர்த்த, உதாரண புருஷர்களையும் அவர்களின் வரலாறுகளையும், காவிய நயத்துடன் படைத்து, தந்துள்ளார்கள். இவற்றை இதிகாசங்கள் என்று சொல்வார்கள். மகா பாரதமும், இராமாயணமும் இவ்வகையினவே.

இராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனை ஒரு அவதாரமாக, தெய்வாம்சம் கொடுத்து, வரையப்பட்டது இராமாயணம். பலர் இக் கதையைத் தத்தமது உள்ளப்பாங்கு, நம்பிக்கை, ஆய்வு, தெளிவு என்பவற்றிற்கு ஏற்ப மாற்றங்களை புகுத்தி வரலாற்றையே மாற்றிப் புரிந்து கொள்ளச் செய்துள்ளார்கள். மேலும் இதிகாசங்களுக்கு சமய முக்கியத்துவம் கொடுத்து அவற்றின் யதார்த்த நிலையை இட்டுச் சிந்திப்பதே, பாவமான செயல் என நம்ப வைத்து உண்மையை மறைத்தும் விட்டார்கள். அதனால் வரலாறுகள் இன்னமும் மூடமாகவே இருக்கிறது.

இந்த இருள் நிலையில் இருந்து உண்மையை காண விளைந்த பகுத்தறிவாளர்களும் திராவிடம் எனும் மாயக் கண்ணாடியை அணிந்து கொண்டு இதனை பார்க்க முற்பட்டமையால் பல உண்மைகளை அறியவோ ஆயவோ முற்படவில்லை. உண்மையை எவன் காண விளைகிறானோ

அவன் திறந்த மனத்தினனாக, எந்த விடயத்தையும் அணுகும் பண்பினனாக இருக்க வேண்டும். அப்படியானால் தான் காய்தல் உவத்தல் அற்று உண்மையை அறிய முடியும்.

பண்டிதர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் நாலும் அறிந்த பண்டிதர் மரபில் வந்தவர். தமது பண்டிதப் பணியில் பல ஆய்வுகள் செய்து நூல்கள் வெளியிட்டுள்ளார். உடலியல், உயிரியல், மருந்தியல், மதியியல் என்னும் கலைகளில் துறைபோன பேரறிஞர் பாலசுப்பிரமணியம் வரலாற்றியலிலும் தமது சுவட்டைப் பதித்துள்ளார். சுழிபுரம் பிரபு ஆறுமுகம் குடும்பத்தின் வழித்தோன்றல் இவர். பிரபு ஆறுமுகம் அவர்களோ மணிபுர குலசேகர ராசவம்சத்தவர். ஆதலால் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் இச்சாதனையை செய்வது வியப்பன்று.

வரலாற்று ஆசிரியர்களும், தமிழ் பேராசிரியர்களும், சிந்திக்காத, அறிய முயற்சிக்காத, அகத்தியர் பற்றிய வரலாறு, அவர் சாதனைகள் ஆற்றல் போன்ற பல உண்மைகளை தமது ஆன்மீக உணர்வின் தூண்டுதலால், சித்த தெளிவால் ஆராய்ந்து முத்தூர் அகத்தியர் என்னும் ஆய்வு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதையும் மூதூர் அன்னை சாரதா மகளிர் இல்ல (பெற்றோரை இழந்த மங்கையர் இல்லம்) நிதிக்காக வழங்கியிருப்பது அவரது பண்பட்ட சமூக நோக்கை உணர்த்தி நிற்கிறது. இவ்வறிஞர் வரலாற்றுத் துறையில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் அமைதியாவும் ஆழமாகவும் பல நூல்களை ஆய்ந்தும், தமது இயல்பான சிந்தனையால் தெளிந்தும், 'இராவணேசுவரன் இந்திர உலா' என்னும் இந்த நூலை ஆக்கி வெளியிடுகிறார்

இந்நூலை ஆய்வு நூல் என்பதா? அல்லது இதிகாச காவியம் என்பதா? என்ற மயக்கத்தை தருமளவு சிறப்பாக, வரலாற்றுப் பின்னணியை தெளிவாக விளக்கியும், இதுவரை மற்றவர்கள் சிந்திக்கத் தவறிய பல விடயங்களை சிந்திக்க வைத்தும் இலங்கையர்கோனின் காதையை வடித்துள்ளார். இவரது நடுவு நிலை நிற்கும் பண்பும், தக்க வரையறை கொண்டு விடயங்களை அணுகும் திறனும் அவற்றை விஞ்சி நிற்கும் தாய்நாட்டுப் பற்றும், தமிழ்ப் பற்றும் போற்றப்பட வேண்டியவையே.

அன்னார் ஈழத் தமிழர்களின் அறிவுக் கண்ணைத் திறக்கவும், அவர்களின் கலப்பற்ற தூய தமிழ் பண்பாட்டை வளர்க்கவும், சமயச் சிந்தனைகளைத் தூண்டவும் மேலும் பல நூல்களை வெளியிட வேண்டும். அவற்றை ஒவ்வொரு ஈழவனும் வாங்கி தன் தனித்துவத்தை உணர வேண்டும்.

வாழ்க ! வளர்க !!

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
முதுநிலை தமிழ்ப் பேராசிரியர்
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

வாழ்த்துரை.

பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் எங்கள் மரபுவழி மருத்துவ ஆய்விலே ஈடுபட்டு வந்துள்ளார். சித்த ஆயுள்வேத மருத்துவ துறையுடன் தொடர்புள்ள ஞானிகள், அறிஞர் ஆகியோரைப்பற்றியும் ஆராய்ந்து வருகிறார். அவர் அண்மையில் வெளியிட்ட முத்தார் அகத்தியர் என்னும் நூல் இத்தகைய ஓர் ஆய்வேயாகும்.

இப்பொழுது அவர் எழுதி வெளியிடும் இராவணேசுவரன் இந்திர உலா புதிய பல செய்திகளைக் கூறும் நூலாக அமைகின்றது. வால்மீகி இராமயணத்திலோ கம்பராமாயணத்திலோ சொல்லப்படாத சில மரபுகள் தூரகிழக்கு நாடுகளிலே காணப்படுகின்றன. இராவணனிலும் வாலியிலும் மிகுந்த மதிப்புடையவர்களாக இந்தோனேசியர்கள் உள்ளனர். வாலியினுடைய பெயராகவே பாலி (Bali) என்று இந்தோனேசியா தீவு அமைகின்றது. பேரறிஞர் பாலசுப்பிரமணியத்தின் இராவணேசுவரன் இந்திர உலா நூலும் இராவணன் பற்றிய புதிய பல செய்திகளை கூறுகின்றது.

சிவனாலே மிக விரும்பப்பட்ட ஒருவனாக அவன் காட்டப்படுகிறான். அவனுடைய ஆட்சி சிறப்புற்றதாக அமைந்திருந்தது, என அறியமுடிகின்றது. அயோத்தியை

பல தடவை இவன் வென்று ஆண்ட செய்தியும் கூறப்படுகின்றது. முனிவர்கள் அறிஞர்கள் யாவராலும் விருப்புக்குரியவனாகவும் கலைகளிலே கைதேர்ந்தவனாகவும் இராவணன் விளங்கியதை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.

நாணயத்திற்கு ஒரு மறுபக்கம் உண்டு அதே போல மரபுவழியாக நாம் கேட்டுவரும் கதைகளுக்கு மாற்று வடிவங்களும் இருக்கும் என்பதை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது. பேரறிஞர் பாலசுப்பிரமணியம் காவிய வடிவிலே பல புதிய செய்திகளை நமக்கு வழங்குகிறார். அவருக்கு எமது பாராட்டுக்களைக் கூறி இவ்வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

தோற்றுவாய்

மாணவனாக படிக்கின்ற காலத்தில் என் ஆசிரியர் காலையில் சைவநெறி பாடத்தில் இராவணனை உயர்ந்த சிவபக்தனாகவும் , மாலையில் தமிழ் கற்பிக்கும் போது சீதையை சிறை எடுத்த காமுகனாகவும் கற்பித்தார். இரண்டு செயல்களும் ஒன்றுக் கொன்று முரணானவை. இராவணன் சிவபக்தனா? அல்லது காமுகனா? என என்மனம் ஆராய தொடங்கியது. இலங்கேசனைப் பற்றிய தேவையான விபரங்களை உடன் பெற்றுக் கொள்ள முடியவில்லை. திருகோணமலையில் விபரங்களைப் பெற்றுக் கொண்டேன்.சாயீஸ்வரத்தில் பஜனைச் சொற் பொழிவின் போது இராமன் நல்லவன் இராவணன் உயர்ந்தவன் என்று பகவான் பாபா கூறியதான வார்த்தைகள் தான் இவ் வரலாற்றினை எழுத ஆர்வமாக அமைந்தவை. இலங்கேசனைப் பெருவேந்தனாகப் பார்த்தவர் பலர். சீலமிக்க சிவபக்தனாகப் பார்த்தவர்கள் மெஞ்ஞானிகள். வரலாற்று இந்திரனாக இரசித்த வால்மீகிகள். அரக்கனாக கண்ட ஆரிய கம்பன். சீதையை இராவணன் மகளாகக் கண்ட துளசிதாசர். அசுரேந்திரனாகக் கண்ட வியாசமுனி. திராவிடப் பெருவேந்தனாக பார்த்த அறிஞர் அண்ணா, இருந்தும் இலங்கேசன் பற்றிய வரலாறு முழுமையாக இல்லை. அக்குறையை நீக்கும் முயற்சி இதுவாகும்.

பேரின்பத்தை நாடிய ஞானிகளும் சிற்றின்பத்தை வெறுக்கவில்லை. கோள்களின் நல்ல நேரங்களில் உத்தம குமாரர்களை உலகினைக் காக்க உவந்தளித்தார்கள். உலகம் உய்வதற்கும், நிலை பெறுவதற்கும் மனித இனம் விருத்தி செய்யப் படவேண்டியது அவசியமானது மட்டுமல்ல

இன்றியமையாததுமாகும். பெருவள நாட்டின் ஈழமண்டலத்தில் வாழ்ந்த புலத்திய மகாசித்தரின் மகன் விச்சிரவசு முனிவர் இலங்கேசனைப் பெற்றார். இலங்கேசனின் வரலாற்று உண்மைகளை வெளிக்கொணரும் போது முடிவுறாது தொடரும் சர்ச்சைகளுக்கு பதில் கிடைக்கும். அவனுடைய வரலாறு உலகின் சமய, கலாசார, பண்பாட்டு, நிகழ்வுகளில் கலந்து காணப்படுகின்றது

திரிகோணமலை,இலங்கைநகர், திருக்கோணேச்சரம், இராவணன் வெட்டு, கன்னியா தீர்த்தம், இராவணன் சமாதி, புலத்தியநகர், புலத்தியர் சிலை, முத்தூர் அகத்திய தாபனம், சல்லி வெள்ளை மலை, திருத்தம்பலேசுவரம் கீரிமலை, வீணாகானபுரம், பாதாளமலை, சின்னராவணன் கோட்டை, விபீடணன் சிற்பம்காலி,முனீச்சரம், இராமேச்சரம் இராமர் அணை, தனுக்கோடி, சீதை குகை பெருமுக்கல்மலை, சனத்தானம், திருலங்கா - ஆந்திரா, கரனூர்கருவூர், திரிசிரநகர் திரிச்சிராப்பள்ளி, பஞ்சவடி, நாசிக் முக்கறுத்த இடம், கலிங்கம் (ஒரிசா), அகத்தியாச்சிரமம், தண்டக வனம், வைத்திய நாதஈச்சரம், அயோத்தி, அளகாபுரி, அமராவதி இவை வரலாற்று தடயங்களாகும். இலங்கேசுவரன் நாடகங்கள், திரைப்படம், இராவணலீலா, தசராப் பண்டிகை இவை கலாசார நிகழ்வுகளாகும். கைலாய வாகனம், தேவாரங்கள், திருமந்திரம் முதலியவை சமய சடங்குகளாகும். இலங்கை வேந்தன் குளிகை, இராவண யாழ், இராவண வீணை, எனப் பல கலைகளிலும் காணக்கிடக்கின்றது.

பழையராமாயணம், முலராமாயணம் என்ற பெயர்களில் தமிழில் கதைப்பாடல்கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் இலக்கிய உருவம் பெறும் போது எழுதியவர்களின் சமய,

மொழி கலாசாரங்களும் கலந்துள்ளன. பதினெண் சித்தர்களுள் ஒருவரான வான்மீகர் எட்டுக்குடியில் வாழ்ந்த தமிழர் ஆவார். அகத்தியர் காலத்தவர். இரு திராவிட அரசர்களுக்கிடையே நடந்த போரினை கதைப்பாடல்களாக இயற்றினார். இவர்தான் கானகத்தில் சீதையைக் காப்பாற்றியவர். இராமன் காலத்திலேயே சீதையை வனத்தில் விட்டது வரை இயற்றி அயோத்தியில் பாடப்பட்டது. இராமாயணம் முதலில் எட்டுக்குடி வான்மீகரினால் தமிழில் பாடப்பட்ட திராவிட காவியமாகும். கலியுகம் இரண்டாயிரம் ஆண்டளவில் தான் வடமொழியில் இரத்தினாகரன், பிராசேதர், ஆகியோரால் காவியமாக இயற்றப்பட்டது. இரத்தினாகரன், பிராசேதர், சித்பவானந்தர் எல்லாரும் வான்மீகி இராமாயணம் என்றே பாடியுள்ளார்கள். அவர்கள் வான்மீகி அல்ல. மூலக்கதையை இயற்றியவரே, எட்டுக்குடி வான்மீகி. சீதை பிறப்பு, இராவணன் சிறை வைத்த நோக்கம், வாலிவதம், கற்பினளை கனலிட்டது, கர்ப்பிணியை காட்டில் விட்டது போன்ற ஐயுறவுகளை தெளிவுபடுத்தியுள்ளேன். கற்புள்ள சீதையை இராவணனால் எவ்வாறு சிறை எடுக்க முடிந்தது? கணப்பொழுதில் இராவணனை அழிக்கும் வல்லமை இருந்தும் இராவணனை சீதை சுட்டெரிக்காதது ஏன்? வைணவர்கள் சைவர்களை விரோதித்த படியால் இராவணன் வரலாறு மாசுபடுத்தப்பட்டது. இலங்கையில் பேதங்கள் கிடையாது. சங்கர நாராயணன் மந்திரமே "ராம" ஆகும். நமசிவாய என்பதில் ' ம' வும் நாராயணா என்பதில் 'ரா' வும் சேர்ந்து 'ராம' மந்திரமாகும். இது இராமன் பிறப்பதற்கு முன்பே இருந்த மந்திரமாகும்.

இந்திரற்கு இந்திரனும் எழுதலாகச் சுந்தரனுமாகிய இராவணேசுவரன் திராவிட மன்னர்களின் வரலாற்றில் ஈடு இணையற்று விளங்கும் கீர்த்தி மிக்க மூர்த்தியாவான்.

அவ்வீர வேந்தன் இந்திரனாக முடிசூடிக் கொள்ளவும், முடிசூடிக் கொண்ட பின்னரும், ஈரேழு பதினான்கு உலகங்களிலும் சென்று வென்று வாகை சூடிய போர்களின் வரலாறே இந்திர உலா என்னும் இக்காவியமாகும்.

சித்தர்கள் முக்காலமும் உணர்ந்த ஞானிகள். அறுபத்தினான்கு கலைகளிலும் புலமை பெற்றவர்கள். சீதை பெற்ற மகன் இலவனை இளவரசனாக பயிற்சியளித்து இராமனை தோற்கடிக்க வைத்தவர் சித்தர் வான்மீகர்.

வான்மீகர் தமிழில் பாடிய இராமகதை ஆரியக்கவிகளுக்கு மனோரம்மியமாக இருந்தபடியால் இரத்தினாகரன், பிராசேதர் என்ற இரு கவிகளும் அதை தனித்தனியாக வடமொழியில் பாடி தமது பெயரைப் போடாது வான்மீகி இராமாயணம் என்றே பெயரிட்டார்கள். சுவாமி சித்பவானந்தரும் அவ்வாறே வான்மீகி இராமாயணம் எழுதினார். இதனை அறியாததால் அவர்களையே வான்மீகி என தெரிவித்தார்களா? அல்லது திராவிட வரலாற்றினை மறைத்து ஆரியவரலாறாக காட்டுதற்காக இரத்தினாகரனையும் பிராசேதரையும் வான்மீகி என்று குறிப்பிட்டார்களா? இருந்தும் வான்மீகி என்பவர் ஒருவரே.

ஆரிய மகாகவி கம்பன் வடமொழி இராமாயணத்தை மூலமாக கொண்டு தமிழில் இராமாயணம் பாடும் போது தமது ஆரிய கலாச்சாரத்தைப் புகுத்தியும், இளவரசன் இராமனை தெய்வத்தன்மை வாய்ந்தவனாக காட்டியும், ஆரியர்களைப் போற்றியும் தமிழர்களைத் தூற்றியும் இயற்றினான். தமிழினத்தை இழிவு படுத்தும் நோக்கில் மூலக்கதையில் மாற்றங்களை ஏற்படுத்தி கம்பராமாயணத்தை பாடினான். வான்மீகி இராமனின் நடத்தையிலுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டியபோதும்,

அவற்றை கம்பன் மூடிமறைத்து நிறைவாகக் காட்ட பெரிதும் முயன்றுள்ளான். காடேகும் போது சீதை கூறிய சூடான வார்த்தைகள் இராமனின் முகவாட்டம், கைகேயியை இலக்குவன் இழித்துரைத்தமை., பஞ்சவடியில் சீதை கூறிய அறநெறி ஆகியவற்றின் சுவடே கம்பராமாயணத்தில் இல்லை. சங்கத்தில் கம்பராமாயணம் தமிழ் புலவாகளினால் அரங்கேற்றப்படாது மறுக்கப்பட்ட நூலாகும். பொய் புனைந்துரைகள் முரண்படு கருத்துக்களை புகுத்தியது. அடாத செயல் என எண்ணி கம்பனே மனம் கலங்கினான் " நொந்த மனம் கொண்டு வையகம் என்னை இகழுமோ? மாசு வந்தெய்துமோ? என்று கூறினான். அம்பிகாபதி மரணத்தினால் கம்பனின் மனம் பெரிதும் பாதிக்கப்பட்டதனால், சோழமன்னன் குலோத்துங்கனை சூழ்ச்சியாக கொல்வதற்கு முயன்றான். சதி அம்பலமான போது, மன்னன் கம்பனை கொன்றான். இதுதான் கம்பனின் பின்னணியாகும். ஆரிய மாயையில் சிக்கிய சிலர், தமிழர் தன்மானத்தை மறந்து அவனுக்கு தாசர்களாக உள்ளனர்.

அறிஞர் அண்ணா இராமனை ஆரியன் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இராமனும் திராவிடனே என்பதை அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் தன்னூலில் தெளிவுபடுத்தியுள்ளார். மனு, ரகு என்ற அரசர்கள் சோழ அரச வம்சத்தில் தோன்றியவர்கள், அவர்களின் குலத்தில் தோன்றிய இராமனும் தமிழனே என்று குறிப்பிட்டுள்ளர்.

அரசனின் கடமைகள், அரசநீதி, மனித நெறிகள், விதியின் வலிமை, போர் நியாயங்கள், சூழ்ச்சி, தந்திரம் பற்றி எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இதிகாச, புராண, திருமுறைகளில் காணப்படும் இலங்கேசுவரன் வரலாற்றினைத் தொகுத்து, என் கருத்துக்களையும் சேர்த்து எழுதியுள்ளேன். பயத்தையும் பக்தியையும் விட்டுவிட்டு

பகுத்தறிவுடன் பாருங்கள். சிவன் நெற்றிக்கண்ணைக் காட்டியபோதும், அறிவுக்கண்ணால் அவர் பாட்டில் குற்றம் கண்டவர்கள் எம்முன்னோராகிய தமிழர்கள். இந்நூலை தொகுக்க உதவியோருக்கும், அணிந்துரை வழங்கிய தவத்திரு சிவகுருநாதன் அடிகளாருக்கும், வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், இவ்வரலாற்றினை எழுத ஊக்கம் அளித்தவரும் வெளியிட்டு உதவியவருமான வீணைவேந்தன் கலாபூஷணம் அமரசிங்கம் அவர்களுக்கும் என்னை என்றும் ஆதரிக்கும் அன்பு நெஞ்சங்களுக்கும் என் மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர். Dr. க. பாலசுப்பிரமணியம்.
36/2, 37வதுஒழுங்கை.
கொழும்பு - 6

பதிப்புரை

''இராவணேசுவரன் இந்திர உலா''

ஈழத்து இலக்கியச் சோலையின் பதினேளாவது வெளியீடு.

1954ஆம் ஆண்டு ''யாழ்'' என்ற கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வெளிக்கொணர்ந்தபோது, எனக்கு நான் வைத்துக்கொண்ட புனைப்பெயர்களுள் ஒன்று ''வீணைவேந்தன்'' என்பது. இந்தப் பெயரை நான் வைத்துக் கொண்டபோதே, என்னை அறியாமல் என் அடிமனதில் இராவணன் பற்றிய சிந்தனையும் துளிர்விடத் தொடங்கியது.

பாடசாலையில் கம்பராமாயணத்தைப் பாடமாக படிக்குமுன்பே, நான் கம்பராமாயணத்தை வாசித்து விட்டேன்.

சிறுவயதில் பாடசாலை விடுமுறைநாட்களில், எனது மாமனார் செல்லமாணிக்கம் அவர்கள் வசித்த கிராமமான கும்பிறுபிட்டிக்குச் செல்வேன். அங்கு, எனது பகல்பொழுதெல்லாம் மாமாவின் சோளஞ்சேனையை, மைத்துனனோடு சேர்ந்து, காவல் காப்பதிலேயே கழியும். காவலுக்குப் போகும்போது, என் மாமாவிடம் இருந்த பெரிய எழுத்து கம்பராமாயண புத்தகத்தை எடுத்துச் செல்வேன். அந்தப் புத்தகத்தில் நிறைய படங்கள் (சம்பவங்களை விளக்கிப் படங்கள்) வரையப்பட்டிருக்கும். அந்தப் படங்களையும் பார்த்துக்கொண்டு அந்த பெரிய எழுத்து கம்பராமாயணத்தை வாசிப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

மாமாவின் மகன் சோமசுந்தரம், சேனையில் கிளிகள் குரங்குகள் கலைப்பதில் தீவிரமாக இருப்பான். நான் பறன்மேல் இருந்துகொண்டு கம்பராமாயணத்தை வாசிப்பேன். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். இதனிடையே சோமசுந்தரம் பறனின் கீழ் உள்ள நெருப்பில், உடன்பறித்த சோளங்கதிர்களை வேகவைத்துத் தருவான். அந்த சூழலில் வேகவைத்த இளம் சூட்டு உடன் சோளங்கதிரின் சுவையும், படங்களைப் பார்த்துக்கொண்டே பெரிய

எழுத்துக் கம்பராமாயணத்தை வாசிக்கும் உணர்வும் ஆகா! அது ஒரு தனி இன்பம்.

விபரமறியா வயதில் நான் வாசித்த ''ஒரு கதைப்புத்தகமாக" வாசித்தது இது தான். ஒரு வீரம் நிறைந்த காவியத்தை வாசிப்பதுபோன்று உணர்ந்தேன். அதில் வரும் பாத்திரங்கள் என்மனதில் ஆழமாகவே பதிந்திருக்கும். விடுமுறை நாட்களில் நான் கும்புறுபிட்டிக்கும் போகும்போதெல்லாம் இதை வாசிப்பேன். பலமுறை வாசித்திருக்கிறேன். இன்றும் அந்தப் புத்தகம் என்னிடம் பத்திரமாகவே இருக்கின்றது.

சிரேஸ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குப் (S.S.C) படிக்கும்போது, எமது பாடத்திட்டத்திற்கமைய கம்பராமாயணத்தின் சில பகுதிகளை படிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. சிறுவயதில் வசன நடையில் வாசித்தேன். இப்போ செய்யுள் வடிவில் ஆசிரியர் விளக்கம் கூறக்கேட்டுப் படித்தோம். இதே காலப்பகுதியில் கம்பராமாயணம் பற்றிப் பலவிதமான தகவல்களையும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. அண்ணாவின் கம்பரசம், பெரியாரின் கருத்துக்கள், திருமுருகானந்த வாரியாரின் சொற்பொழிவுகள், இராஜாஜியின் கட்டுரைகள். இப்படிக் கம்பராமயணத்தின் பல கோணங்களைக் காணத் தொடங்கினேன்.

இராவணனை அறிமுகம் செய்யும்போது, முதலில் கூறுவது அவன் அரக்கன். அடுத்தது காமாந்தக் காரன். இதை நன்றாக மனதில் பதியவைத்த பின்பே அதன் அடிப்படையில் அவன் செயற்பாட்டை விளக்கத் தொடங்குவர். இதுவரை ஆசிரியர்களின் பார்வையூடாக பார்க்கப்பட்ட பழக்கப்பட்ட என் உள்ளத்தில் சில, கேள்விகள் துளிர்விடத் தொடங்கியது. என் உள்ளத்திலே இராவணனைப் பற்றி பல சந்தேகங்கள் - கேள்விகள் எழத்தொடங்கின.

இராவணன் சீதையின்மேல் மோகங்கொண்டு அவளைச் சிறை எடுத்திருந்தால், சீதையின் சுயம்வரத்திற்குச் சென்றபோது ஏன் அவளை மோகிக்கவில்லை?

சீதையின்மேல் மோகம்கொண்டவனுக்கு, தன் மோகத்தைத்

தீர்த்துக் கொள்ள, அந்த அடர்ந்த காட்டில் இடம் கிடைக்காமலா அரன்மனைக்குத் தூக்கி வந்தான்.

மோகவெறிபிடித்தவன் பின்விளைவுகளைப் பற்றியோ, சுற்றம் சூழலையோ சிந்திக்க மாட்டான். அப்படிஇருக்க இவன் ஏன் கவர்ந்து சென்றான்.

இராவணன் ஓர் சிவபக்தன். புஜபலபராக்கிரமசாலி, இசையில் விற்பன்னன். கைலயங்கிரியைப் பெயர்த்தான். பரமசிவனின் கால்விரல் அழுத்தத்தால் மலை இடுக்குள் மாட்டிக்கொண்டான். சாமகாணம் பாடி, சங்கரணை மகிழ்வித்து வீரவாளும், நீண்ட ஆயுளும் பெற்றான். நினைந்த நேரத்தில் நினைத்த வடிவை எடுக்கும் வல்லமை பெற்றவன். இவன் காமத்தால் சீதையைக் கவர்ந்தானா?

இராவணனின் ஆற்றல்களையும், அவனிடம் உள்ள சக்திகளையும் திறமைகளையும் கூறப்புகின் பக்கங்கள் போதாது. (நீங்களே வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள்)

இராவணனை அரக்கன் என்றார்கள். இராவணனின் மைந்தன் இந்திரசித்தனைக் கண்ட அனுமன், அவன் அழகில் மயங்கி, இவன் சிவனின் மைந்தனோ என்று ஐயுற்றானே!

வண்டோதரியைக் கண்ட அனுமன், இவன்தான் சீதையோ? சீதை துக்கித்திருப்பவர், ஆனால் இவர் மகிழ்ச்சியாக இருப்பதால், இவர் சீதையாக இருக்க முடியாது என்று தெளிகின்றான்.

அப்படி என்றால் அரக்கர் என்பவர் அழகானவர்கள் என்பது பொருளா?

சிவபக்தன் இராவணன் ஒரு காமாந்தக் காரனாக இருந்தால், ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தர் தன் திருநீற்றுப் பதிகத்தில் ''இராவணன் மேலது நீறு'' என்று ஏன் பாட வேண்டும்?

தமிழ் வேதத்தைத் தந்த திருமூலர், ஏன் இராவணனைப் புகழ்ந்து பாட வேண்டும்.

இராவணனை பொய்யாக இகழ்ந்த கம்பர் தன்னை மறந்து

எங்கேயாவது தனது கவிதையில் சீதையின்மேல் இராவனனுக்கு காதல் இல்லை என்பதை கோடிட்டுக் காட்டி இருக்கமாட்டாரா?

இப்படிப் பலகேள்விகள் 58ஆம் ஆண்டில் இருந்த 94ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான சிந்தனையின் தேடலின் பயனாக நான் தெளிவடைந்த போது என் உணர்வுகளின் ஊடாக வெளிவந்ததுஎன் கேள்விகளுக்கு பதிலாக அமைந்ததுதான் எனது 'இராவணதரிசனம்' என்னும் நாடக நூல்.

இராவணனுக்குப் பெண்ணால்தான் அழிவு. ஆனால் அது சீதை இல்லை என்பதனையும், இராவணனை இராமன் கொல்லவில்லை. இராமன் ஒரு ஆயுதமே அவனைக் கொண்றவன் அவன் தம்பி விபீடனனே என்பதையும், தெளிவாக விளக்கினேன் எனது 'இராவணதரிசனம்' நாடக நூலில்,

ஞானசிரோன்மணி பண்டிதர் இ. வடிவேல் ஐயா இல்லத்தில், ஒரு நாள் மதியம், வைத்தியக் கலாநிதி பாலசுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. இருவரையும் அறிமுகப்படுத்திவைத்தார் பண்டிதர் ஐயா அவர்கள், என்னைக் காட்டி இதோ இவர்தான் நீங்கள் தேடிய இராவணன் என்றார். அவரைக் காண்பித்து இவரும் ஒரு இராவண பக்தர்தான் என்றார்.

எனது ''இராவணதரிசனத்தைக்" காண்பித்து என்கருத்தைக் கூறியதும், ஆனந்தக்களிப்பில் இப்போப்பட்டவர்களைத்தான் நானும் தேடிக் கொண்டிருக்கின்றேன். அது மட்டுமின்றி, இராவணனைப்பற்றிய ஒரு பூரணமான ஆய்வு செய்து கொண்டிருக்கின்றேன். அந்த ஆய்வு முடிந்து, இராவணன் பற்றிய ஒரு முழுமையான நூலை வெளிக்கொணர்ந்த பின்புதான், இராவணன் யார்? என்பதை உலகம் அறியும் என்றார்.

நீங்கள் அதை எழுதி முடியுங்கள். வெளியீட்டு வைப்பதை நான் பார்க்கிறேன் என்றேன். 1997ம் ஆண்டு இது நடந்தது. எனது இராவணதரிசன நூல் வெளியீட்டின் போது விமர்சன உரை நிகழ்த்தியவரும் இவரே. அதன் பின் பலமுறை சந்தித்து உரையாடியுள்ளோம்.

பேரறிஞர், வைத்தியக் கலாநிதி பாலசுப்டபிரமணியம் அவர்களோடு நான் நெருங்கிப் பழகிய போது எமது நட்பு நாடகம் - இலக்கியம் அதிலும் இராவணன் பற்றி இருந்ததேயன்றி எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி இருவரும் பேசவே இல்லை.

அண்மையில் வெளிவந்த அவரது முத்தூர் அகத்தியர் நூலைப் பார்த்த போது தான், அவரது ஆழமான தேடலின் மகத்துவத்தை என்னால் ஓர் அளவிலே உணரமுடிந்தது. எனவே சந்திக்கும் வேளைகளில் ''எங்கே இராவணன்?'' என்பேன். ''விரைவில் வருவான்'' என்பார்.

2003ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஒரு நாள் என் இல்லம் வந்தார். அன்று அவர் முகத்தில் சிரிப்பு வித்தியாசமாக இருந்தது. மௌனமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தன் பிரயாணப் பையைத் திறந்தார். அதில் இருந்து ஒரு கோவையை எடுத்து என்னிடத்தே நீட்டினார். வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். எனக்கு ஒரு அதிர்ச்சியாக இருந்தது. ''இராவணேசுவரன் இந்திர உலா''. ஆம் நான் இதுநாள் வரை எதிர்பார்த்த இராவணனின் கதை.

1997ஆம் ஆண்டு அவரை சந்தித்தப்போ இதை எழுதுவதாகக் கூறி இருந்தார் 2003ஆம் ஆண்டில் எழுதி முடித்திருந்தார். அதைப் பெற்றுக் கொண்டதும் அதை வாசிக்க வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை. இதை உடனடியாக அச்சேற்ற வேண்டிய செயற்பாட்டில்தான் என் சிந்தனை இருந்தது.

எனக்கு எப்பொழுதுமே பிடித்த விருப்பமான நாள் புதன் கிழமை. அந்த நாட்களில் தான் எந்தப் புதுக்காரியத்தையும் ஆரம்பிப்பேன். அடுத்தது நேரம் என் தந்தையார் எனக்குக் கூறுவதுண்டு, எந்த நாளாக இருந்தாலும் இரவோ பகலோ பன்னிரண்டு மணிக்கும் ஒரு மணிக்கும் இடைப்பட்ட நேரம் குற்றமற்ற நேரம். நீ எதையும் பயமின்றி அந்த நேரத்தில் ஆரம்பிக்கலாம் என்பதே. எனவே ஒரு புதன்கிழமை மதியம் 12.30 மணிக்கு அச்சகம் சென்று இதைக் கையளித்தேன். இந்தக் காலப்பகுதியில் தான் எனது பதினாறாவது வெளியீட்டிற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். இதன் காரணமாக நீண்ட நாட்களுக்குப்

பின்பு தான் அச்சகம் சென்றேன். அவர்களும் கணனிமயப்படுத்திய பிரதியையும் மூலப்பிரதியையும் தந்தார்கள். இப்பொழுதுதான் இந்த நூலை ஆறுதலாக வாசிக்கத் தொடங்கினேன். அந்த வாசிப்பில் மூன்று நோக்கங்கள் இருந்தது. இந்நூலை முழுமையாக வாசிப்பது, ஒப்பு நோக்குவது,சரவைபார்ப்பது. அப்படி வாசித்த போது தான் அதிர்ச்சியூட்டும் மேலும் பலதகவல்களை அறிய முடிந்தது.

இவரது இந்த முயற்சிக்கு என் சந்திப்புத்தான் மூலகாரணம் என்று எண்ணிய என் முட்டாள்தனம் தெளிவுபட்டது. இவருக்கு இராவணனைப் பற்றிய தேடல் 25 வருடங்களுக்கு முன்பிருந்தே இருக்கின்றதென்பதை, உலக ஆண்மீக எழுச்சிப் பேரணியின் முனைவர் தவத்திரு சிவகுருநாதன் அடிகளார் அவர்களின் அணிந்துரையின் ஊடாக அறிந்தேன்.

இருபத்தைந்து வருடங்களாக இவரது தேடல் முயற்சி இருந்திருக்கிறதே அவ்வளவு காலத்திற்தேடுவதற்கு என்ன இருக்கு, கம்பராமாயணம், வால்மீகி ராமாயணம், துளசிதாச இராமாயணம் (நான் அறிந்தது) இவற்றைப் படிக்க இத்தனை வருடமா என்று யோசித்தேன். உசாவிய நூல்களைப் புரட்டிப்பார்த்த போதுதான் நான் அசந்துபோனேன்.

இராமாயாணத்தில் இருபத்திமூன்று இராமாயணங்கள் இருக்கின்றது என்பதை அன்றுதான் நான் அறிந்தேன் (மற்றவர்களுக்கு தெரிந்திரக்கலாம்) அதுமட்டுமன்றி மற்றவர்கள் குறைகாணாத அளவிற்கு ஆதாரப் பூர்வமாக இராவணனை வெளிக்கொணர மேலும் இருபத்தைந்து நூல்களை ஆய்வு செய்துள்ளார் என்பதைக் காணும்போது அவர்தன் கருமத்தை சரிவரச் செய்து முடிக்க நேர்மையாகவும் உண்மையாகவும் பாடுபட எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை அன்றுதான் சிந்தித்தேன்.

ஒரு வைத்திய தொழிலில் இருப்பவர்கள், தங்கள் தொழிலையே செய்ய நேரமில்லை என்று கூறுவோர் மத்தியில், தன் தொழிலை முறையாகச் செய்து கொண்டே, இந்த ஆய்வையும் நடத்த இவருக்கு எப்படி நேரம் கிடைத்தது. சிந்தித்தேன், தேடல் என்பது இலகுவான விடயமில்லை. சிலரது தேடல்களைப்

பார்த்திருக்கிறேன். அனேக விசயங்கள் விடுபட்டிருக்கும். கேட்டால் எங்களுக்கு கிடைக்கவில்லை என்பார்கள். அவர்களது தேடல், வாழப்பழத்தை உரித்து வாயிற்குள் வைத்தால்தான் திண்பார்கள். தாங்களாகத் தோல் உரிக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட தேடல் உடையவர்கள். ஆனால் இங்கே..... எவ்வளவு சிரமப்பட்டிருப்பார் நாற்பத்தெட்டு நூல்களையும் தேடிக் கண்டுபிடிக்க.

அவரது முயற்சியை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. ஆனால் இந்த நூல் மக்கள் மத்தியில் உலாவரும் போதுதான் அதன் மகத்துவமும் அவரது உழைப்பும் வெளிவரும். அன்று அவரைச் சமூகம் உணரும். இந்த நூலை ஒப்புநோக்கிச் சரவைபார்க்கும்போது, என் மனதில் எழும் சந்தேகங்களை அந்த இடத்திலேயே ஓரமாக குறித்துக்கொள்வேன். ஐயங்களை அடிக்கோடிட்டுக் கொள்வேன், இல்லைக் கேள்வி அடையாளம் போட்டுக் கொள்வேன். அவர் வந்ததும் அதை அப்படியே கொடுத்தேன். கொடுக்குமுன் அவரிடம் ஒன்று கூறினேன்.

ஐயா! தங்களின் ''இராவணேசுவரன் இந்திர உலா''வை வாசித்த போது, மலைப்பும் வியப்புமாகவே இருந்தது. காரணம் உங்கள் அளவிற்கு நான் வாசித்தவனுமல்ல, தேடலில் முயன்றவனுமல்ல.

இராமாயணத்தில், கம்பராமாயனம், வால்மீகிராமாயணம், துளசிதாசர் இராமாயணம்ட என்று ஒரு சில இராமாயணங்கள் இருப்பதாகத்தான் நான் எண்ணினேன். ஆனால் உங்கள் நூலை வாசித்தபோதுதான் இருபத்தி மூன்று இராமாயணங்கள் இருப்பதை அறிந்தேன். இதைவிட இன்னும் பல இதிகாச புராணங்களை யெல்லாம் புரட்டி வாசித்திருக்கிறீர்கள். மொத்தத்தில் நாற்பத்து மூன்று நூல்களை புரட்டி வாசித்து எடுத்த சாரமே இந்த ''இராவணேசுவரன் இந்திர உலா'' நூலாகும்.

உங்கள் தொழில் நேரம் என்பது மிகவும் சிக்கனமானது. இந்த வேலைப் பளுவுக்குள்ளும் இதை நீங்கள் எப்படிச் செய்து முடித்தீர்கள். உண்மையில் நீங்கள் பாராட்டப்பட வேண்டியவரே. கண்டிப்பாக உங்கள் பணியை மக்கள் பாராட்டவே செய்வார்கள்.

உங்களிடத்தில் குற்றம் காணவேண்டும் என்பது என் நோக்கமல்ல. அதற்கு எனக்குத் தகுதியுமில்லை. ஆனால் ஒரு நடுத்தர வாசகன் இதை வாசிக்கும் பொது அவனுக்கு ஏற்படும் ஐயங்களையே நான் இங்கு குறிப்பிட்டுள்ளேன். அந்த ஐயங்களைத் தீர்த்து, அவற்றைத் தெளிவடையச் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு - கடமை. மற்றவர்கள் உங்களைக் குறைகாணக் கூடாது என்பதுதான் என் விருப்பம்" என்றேன் பணிவோடு.

அவர் சிந்தித்துக் கொண்டே, "இது போன்ற ஒரு வாசிப்பையே நான் எதிர்பார்த்தேன். உங்களுக்குதான் நான் நன்றி கூற வேண்டும். என்னால் முடிந்த வரை விளக்கம்தர முயற்சிக்கிறேன்" என்று கூறிப் பெற்றுக் கொண்டார்.

பலமுறை இதை வாசித்து, சரவைபார்த்து, சந்தேக நிவர்த்தி செய்து, முடிந்தவரை இதைப் பூரணப்படுத்தினோம். என்னுடைய வேண்டுகோளை, எவ்வித மன உளைச்சலோ, இறுமாப்போ கொள்ளாமல், பெருந்தன்மையோடு ஏற்று முடிந்தவரை விளக்கம் தந்து, நூலை முழுமைப்படுத்தியதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நூலை நாம் பலமுறை சரவைபார்த்து, அப்படிப் பார்க்கும் ஒவ்வொரு முறையும், ஏதாவதொரு பகுதியை நீக்குவதும், ஒரு பகுதியைச் சேர்ப்பதுமாக, இப்படிப் பல சிரமங்கள் ஏற்பட்ட போதும், எந்த வித முகச்சுழிப்புமின்றி புண்முறுவல் பூத்தபடி, நான் கேட்டபோது கேட்டபடி திருத்தி வடிவமைத்துக் கொடுக்கும் போதும், இன்னும் ஏதாவது விடுப்பட்டிருந்தால் தயங்காமல் கூறுங்கள் என்று கூறி ஒத்துழைப்பு நல்கிய அந்த ஊழியர்களுக்கு எமது நன்றிகளை மனமாறத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூலின் சிறந்த முறையின் வெளிக்கொணர்வுக்கு மூலாதாரமாக நின்று நிறைவு செய்த-வெளிக்கொணர்ந்த றெயின்போ மினிலேப் உரிமையாளர் திரு. சிவபாலன் அவர்கட்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த இடத்தில் திரு சிவபாலன் அவர்களைப்பிற்றி, என் அனுபவத்தினூடாக என் மனதில் பட்டதை நான் கூறியே ஆக வேண்டும். இது தவறின், வேறு இடமே எனக்கும் கிடைக்காமல் போவது மட்டுமன்றி வேறுயாரும் கூறவும் மாட்டார்கள்.

மேடையில் பேசுவது காற்றோடு கலந்து போய்விடும். எழுத்து காலாகாலத்திற்கும் இருக்கும். ஒரு ஆவனப் பதிவாகிவிடும்.

நான் எனது வெளியீடுகளை பல அச்சகங்களினூடாக வெளிக் கொணர்ந்திருக்கிறேன். இருந்தும் எனது வெளியீடுகளில் அனேகமானவை கணேசா அச்சகத்தினூடாகவே வெளிவந்தன. என்னையும் ஒரு வெளியீட்டாளன் என்று ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு உயர்த்தியது கணேசா அச்சகமும் அதன் உரிமையாளர் சுந்தரலிங்கதேசிகர் அவர்களும் என்றால் மிகையாகாது. எனக்கும் அவருக்கும் உள்ள உறவு தனித்துவமானது. அதற்காக நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். எனவே என்னை விடுவித்து. பொதுவாக இங்குள்ள அச்சகங்கள் தங்களை நாடிவரும் படைப்பாளிகளுக்கு தங்களால் இயன்ற அளவு ஒத்தாசை புரிந்து வருகின்றார்கள் என்பதை பறுப்பதற்கில்லை.

ஆனால் திரு. சிவபாலன் அவர்களின் அனுகுமுறை ஒரு தனித்துவமாக இருப்பதை, வேறுபட்டதாக இருப்பதை நான் கண்டு கொண்டேன். இலக்கிய வெளியீட்டாளருக்கு, குறிப்பாக திருக்கோணமலை படைப்பாளிகட்கு இவர் ஓர் வரப்பிரசாதம் என்பதை அவருடன் பழகிய நாட்களில் இருந்து நான் கண்டு கொண்டேன்.

வசதியற்ற இலக்கிய படைப்பாளிகளின் ஆகக்குறைந்த ஆசைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதில் மனநிறைவடையும் ஒரு உபகாரி.

அப்படியென்றால்.....?

எத்தனையோ படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை, ஆகக்குறைந்தது தனிப்பிரதியாக நூல்வடிவில் காணமுடியுமா? என்று ஏங்கித் தவிக்கும் அந்த உள்ளங்களுக்கு, தாகசாந்தி செய்யும் ஒரு தர்மவான்.

வசதியற்ற படைப்பாளிகளின் ஒரு படைப்பை, கணனி மயப்படுத்தி, பிரதியெடுத்து நூல்வடிவமைத்து ஒரு பிரதியையும், கணனி மயப்படுத்திய அந்த நூலை ஒரு CDயிலும் போட்டுக் கொடுப்பார். இதனால் அவர்கள் தங்கள் படைப்பை நூல்வடிவில் காணும் பாக்கியத்தை அடைகின்றார்கள். இது இலவசம்.

எதிர்பாராத விதமாக இந்த நூலை அச்சேற்றக்கூடிய வசதி ஏற்படுமாயின் அதை இந்த அச்சகத்தில்தான் அச்சேற்ற வேண்டும் என்று நிற்பந்திக்கப்பட மாட்டார்கள். அவர்கள் தங்களுக்கு விரும்பிய அச்சகத்தினூடாக அந்நூலை வெளிக்கொணரலாம். அப்படி விரும்பிய அச்சகத்தினூடாக அது வெளிவரும் போது, கணனி மயப்படுத்தியதற்காக தங்கள் மனச்சாட்சிக்கு ஏற்ப ஒரு தொகையை எதிர்பார்ப்பார். இவரிடமே நூல் உருப்பெறுமாயின் அத்தேவை இல்லை. வசதியற்றோர் இந்த ஒரு பிரதியை நூல் வடிவில் கண்ட ஆத்ம திருப்தியோடு மனஆறுதல் அடையலாம்.

இந்த வசதி, இன்றைய வசதியற்ற படைப்பாளிகட்கு பெரும் வரப்பிரசாதம் என்றால், மிகையாகாது. இப்பேர்ப்பட்ட ஒரு நல்ல உள்ளத்தைக் காண்பதென்பது அரிதே.

அவரது தோற்றத்திற்கும், குணத்திற்கும் சம்பந்தமே இல்லை. பழகுவதற்கு இலகுவானவர். இனிமையானவர். மெதுவான, தெளிவான பேச்சு, இயல்பாகவே பிறர்க்கு உதவும் சுபாவம். பணம் மட்டும்தான் குறிக்கோளல்ல, அதற்காக அவர் ஏமாளியுமல்ல. வெளியீட்டாளார்களின் விருப்பத்திற்கெல்லாம் இசைந்து கொடுக்கும் சுபாவம் அனைவரிடமும் உண்டு.

மாணவர்கள் நூல் வடிவமைக்கும் போது, சிலசமயம், அவர்களே கணனிமுன் அமர்ந்து வடிவமைப்பார்கள். எந்த அளவிற்குச் சுதந்திரம் கொடுப்பாரோ, அந்த அளவிற்கு கண்டிப்பும் உண்டு. கோபத்தை காண்பது அபூர்வம்.

இப்பேர்ப்பட்ட நல்ல உள்ளம் கொண்ட ஒரு மனிதர் கிடைத்தது இலக்கிய உலகத்திற்கு ஒரு வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது.

அன்னாருக்கும் எம் நன்றியைத் தெரிவிப்பதில் மன நிறைவடைகின்றோம்.

1968, 69,70 காலப் பகுதியில் கொழும்பில் இருந்து வெளிவந்த மாத சஞ்சிகை ''குங்குமம்'', திருக்கோணமலை விநியோகத்தராக நான் இருந்தேன். மாத சஞ்சிகையின் வரலாற்றிலே ''மாநில மஞ்சரியை'' முதல் முதல் வெளிக்கொணர்ந்து 'குங்குமம்' தான். அது திருக்கோணமலை மாநில மஞ்சரி வெளிவந்த ஆண்டு 1971, அந்த மாநில மஞ்சரிக்குப் பொறுப்பாசிரியராக இருந்து, விளம்பரம் முதற்கொண்டு, கட்டுரை. கவிதை, சிறுகதை ஆகியவற்றை சேர்த்து மலரை வடிவமைத்து வெளிக்கொணர்ந்தேன். அந்த காலகட்டத்தில் திருக்கோணமலை மாவட்டங்களான திரியாய் புல்மோட்டைவரையும், தம்பலகாமம் கிண்ணியா கந்தளாய் வரையும் மூதூர் வெருகல் வரையும் குங்குமம் பரவியிருந்தது. சுமார் 780 பிரதிகள் விற்பனையிலிருந்தது. அதன் ஆசிரியர் 'குங்குமநாதன்' என்ற சிவகுருநாதன். இவரது இல்லத்தில் இருந்து வெளிவந்த இன்னுமொரு ஆத்மீக மாதசஞ்சிகை ''அருளொளி'' ஆசிரியர் குமார் விவேகானந்தன்.

அந்த சிவகுருநாதன்தான், இன்றறைய அடியார்க்கடியான், - அடிகளார் சிவகுருநாதன். இவரும் ஒரு இராவணபக்தரே. இந்நூலுக்கு மனமுவந்து, அணிந்துரை தந்து சிறப்பித்தமைக்காக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1973ஆம் ஆண்டு எனது ஈழத்து இலக்கியச் சோலையின் முதலாவது வெளியீடு 'ஒற்றைப் பனை' என்ற சிறுகதைத் தொகுப்பாகும். இது திருக்கோணமலை எழுத்தாளர்களைக் கொண்ட ஒரு தொகுப்பு. அந்த வெளியீட்டிற்கும் அணிந்துரை தந்து உதவியவர் பேராசிரியர் அ. சண்முகதாசன் அவர்கள், அவரும் திருக்கோணமலை மண்ணின் மைந்தனே.

இதே ஈழத்து இலக்கியச் சோலையின் பதினேளாவது, வெளியீடான ''இராவணேசுவரன் இந்திர உலா'' என்ற இந்த நூலுக்கு, அணிந்துரை வழங்கி பெருமை சேர்த்தமைக்காக எமது

மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இந்நூலுக்கு அழகிய அட்டைப்படத்தை வரைந்து தந்த சித்திரக் கலைஞர் திரு N.D. ஞானகுரு அவர்களுக்கும் எமது நன்றிகள்.

ஈற்றில் எனது இலக்கியப் பணியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கரையோடு ஈடுபட்டோரும், தங்களைப் பின்னிப் பிணைந்து ஒவ்வொரு வெளியீட்டு நிகழ்வுகளிலும் தங்கள் வேலைப் பளுக்களுக்கு மத்தியிலும் கலந்து சிறப்பிக்கும் என் இனிய அன்பிற்குரிய இலக்கிய நெஞ்சங்களுக்கும், தவிர்க்க முடியாத காரணங்களால் விழாவிற்கு சமூகமளிக்க முடியாத போதும், என் இல்லம் தேடிவந்து நூல்களைப் பெற்றுப் பெருமைப்படுத்திய அன்பு நெஞ்சங்களுக்கும், என்னைச் சந்திக்கும் இடத்தில் வைத்தே உரிமையோடு கேட்டு நூலைப் பெற்றுக் கொள்ளும் அந்த இலக்கிய நெஞ்சங்களுக்கும் எம் நன்றிகள்.

அத்தோடு இலக்கியப் படைப்புக்களை பெற்று ஊக்கமளித்துவரும் சகல பிரதேச சபைகளுக்கும், கல்வி அமைச்சுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறி விடை பெறுகின்றேன் - நன்றி.

வணக்கம்

''யாழ்'' அகம்
21, ஒளவையார் வீதி,
திருக்கோணமலை.

கலாவினோதன் கலைவிருதன்
கலாபூஷணம்
த. சித்தி அமரசிங்கம்
30. 01. 04

1. பாலகாண்டம்

ஆற்றுச் செழிப்பு

மழை வளம்

உலவுகின்ற வெள்ளை நிறத்து மேகக் கூட்டங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பூமியிலோடும் ஆற்று நீரையெல்லாம் பருகிக்களித்தன. அவை கடல் நீரையும் விட்டு வைக்க வில்லை. நீறணிந்த எல்லாம் வல்ல சிவபெருமானைப் போன்ற வெள்ளை வெளேர் என்ற மேகக் கூட்டங்கள் எல்லாம் நீரைப் பருகியதால் கருமை நிறம் கொண்டன. நெடுமாலைப் போன்று அந்த மேகக் கூட்டங்களின் நிறமெல்லாம் கறுத்துவிட்டன.

சிவபெருமானின் பாதம் பதிந்த சிவனொளிபாத மலையிலே சூரியன் வெம்மை தகித்தது. ஒப்பற்ற உயர்ந்த மலை சூரியன் வெப்பத்தால் துடித்தான். மலையரசனை குளிர வைப்பதற்காக வெம்மையை தணிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அங்கு வந்து பறந்து நின்ற மேகக்கூட்டங்கள் எல்லாம் ஆற்று நீரையும் கடல் நீரையும் நன்றாகவே பருகிவிட்டதால் மழையாகப் பொழிந்து மலை மன்னனின் சூட்டைத் தணித்திட முனைந்தன.

வள்ளல்களின் சிறப்புத் தன்மை போன்று தமக்கென்று எதையும் வைத்திடாமல் தம்மிடமுள்ள நீரை எல்லாம் வஞ்சனை எதுவுமின்றி அந்த மாமலையின் மீது கொட்டி அந்த மலையை குளிர வைத்து மகிழ்ந்தனவாம் அந்த மேகக்கூட்டங்கள்.

வெள்ளப்பெருக்கு

சிவனொளிபாதமலை குளிரும் வண்ணம் மேகங்கள் எல்லாம் தங்கள் வயிற்றகத்தில் வைத்திருந்த நீரை எல்லாம் கொட்டி மகிழ சிவனொளிபாதமலை நன்றாகவே குளித்து மகிழ்ந்தது. அதன் உடம்பிலிருந்து பாய்ந்தோடிய நீர் எதை எதையெல்லாம் இழுத்துச் சென்றன. அந்த மலையிலிருந்து பிறந்து பிரிந்து சென்ற ஆறுகள் கணக்கற்ற பொருட்களை சுமந்தவண்ணம் சென்றன. இன்னொரு பிரிவில் மணிகள், பொன் மயிற் பீலி, யானைத் தந்தங்கள் அகிற்கட்டை இன்னும் விலை மதிக்கமுடியாத வாசனைப்பொருட்களையும் வாரிச் சென்றுகொண்டிருந்ததைப் பார்க்கையில் நல்ல திறமை மிகுந்த வணிகன் எல்லாப் பொருட்களையும் கொள்முதல் செய்து தன்னுடன் கொண்டு செல்வது போன்ற தோற்றத்தைத் தந்தது.

பலவிதமான நிறம் கொண்ட வண்ண மலர்களையும் மகரந்தப்பொடி போன்றவற்றையும் யானைகளின் மதநீரையும், இனிய தேனையும் கொண்டு சென்றது வேறு ஒரு பிரிவு. இவை வளைந்த தோற்றமுடன் சென்ற காட்சி வானவில்லைப் போன்ற தோற்றம் தந்தது.

விரைந்து வந்த நீர் மரங்களை முறித்தும், பாறைகளை புரட்டியும் பூச்செடிகளை பிடுங்கியும் காய்கனிகளை கவர்ந்தும் கொண்டு செல்லும் காட்சி வானரப் படைகளையே நினைவுபடுத்தியது.

நுங்கும் நுரையுமாக வந்துகொண்டிருக்கும் தண்ணீரில் ஈக்களோடு வண்டுகளும் மொய்ப்பதையும் நீர் கலங்கிக் காட்சி தருவதையும் பார்க்கும்போது கள்ளருந்தியவர்களின் தோற்றத்தையே காட்டும்.

விரைந்து வந்து கொண்டிருந்த நீர் எத்தனை யானைகளை இழுத்துச் சென்றன. யானைகளெல்லாம் விரைந்து சென்று கடலுடன் போர் செய்யச் செல்வது போன்ற தோற்றத்தை அளித்தது. வெள்ளப்பெருக்கின் ஆற்றலில் நிற்க முடியாமல் யானைகள் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தன.

மாவலியாறு

அந்த சிவனொளிபாதமலையில் இருந்து விரைந்து வந்த வெள்ளப் பெருக்கானது புகழ்மிக்கதும் புண்ணியத்தை தருவதுமான மாவலியாற்றை வந்தடைந்தது. மகாலிங்க கங்கையாறு என்னும் வளங்கொழிக்கும் ஆற்றில் நீர் பெருக்கெடுத்து வந்தடைந்த பின்னர் அங்கிருந்து பல இடங்களுக்கும் நீர் பிரிந்து செல்லும். வற்றாத வளம் கொழிக்கும் நதியாக மாவலியாறு திகழ்ந்து வந்ததால் எல்லாருக்கும் சக்தியூட்டும் தாய்ப்பாலைப் போன்று இந்நதியின் நீர் விளங்கியது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற நிலங்களுக்கு நீர் இங்கிருந்து பிரிந்து சென்று அந்நிலங்களை மேலும் மேலும் வளம் சேர்க்க வைத்தது.

குறிஞ்சிக்கு சென்ற நீர்ப்பெருக்கு கொடிச்சியர் இடித்து வைத்த சுண்ணம், குங்குமம், கோட்டம், ஏலம், சந்தனம், சிந்தூரம் முதலியவற்றையும், நாரத்தம், சுரபுன்னை, கடுக்காய், கொன்றை, வேங்கை, கோங்கு போன்ற மரங்களையும் தன்னுடன் இழுத்துச் சென்றது.

பின்னரும் அமைதியடையாது முல்லை நிலத்திற்கு சென்றது. தயிர், பால் இவற்றை உறியோடு புரட்டித் தள்ளி ஆர்ப்பாட்டம் செய்து, குருந்து, மருதம் போன்ற மரங்களை

முறித்து தள்ளி, ஆய்ச்சியர்களின் ஆடையணிகளை யெல்லாம் கண்ணன் கவர்ந்து சென்றது போல தன்னுடன் இழுத்துச் சென்றது.

மருதநிலம் சென்ற பின்னர்தான் கொஞ்சம் அமைதி பெற்றது. பல வாய்க்கால்களாகப் பிரிந்து அந்த வாய்க்கால்களை யெல்லாம் நிரப்பிய வண்ணம் சென்றது. எல்லா இடங்களுக்கும் விளை நிலங்களுக்கும் தண்ணீரைத் தந்து பொன் மணிகளை விளைய வைத்து வாழைத் தோட்டங்களையும் கமுகஞ் சோலைகளையும் வளம்படுத்தி தோப்புகளையும் கரும்புத் தோட்டங்களையும் வளம்படுத்தி மகிழ்ந்தது. செண்பகத் தோட்டங்களெல்லாம் நுழைந்து அதன் மணத்தைப் பெற்று வளத்தைத் தந்து மகிழ்ந்த வண்ணம் குதித்து ஓடியது.

நாட்டுவளம்

ஈழநாட்டுவளம்

மாவலியாறு என்னும் வளம் மிகுந்த நதியின் தண்ணீரால் ஈழநாடு செழிப்படைந்து திகழ்ந்தது. எங்கும் பச்சைப்பசேல் என்ற காட்சிக்கு இந்த ஆற்று நீரே பேருதவியாய் இருந்தது. மருத நிலத்தில் பல வாய்க் கால்கள் வாயிலாக பாய்ந்தோடி கழனிகளையெல்லாம் வளம்படுத்தி மகிழ்ந்தது. தண்ணீருக்கு எப்போதும் குறை வில்லாத காரணத்தினால் வயல் வரப்புகளின் பக்கத்தி லெல்லாம் முத்துச் சிப்பிகள் நிறைந்து காணப்பட்டன. மடை முகப்புகளிலெல்லாம் வெண்சங்குகள் பெருகிக் காணப்பட்டன. ஆங்காங்கே செம்பொன்னும் நிறைந்து காணப்பட்டன. குமிழியிட்டுப் பாயும் நீரில் செங்கழுநீர்

பூக்கள் நிறைந்து மிதந்து வந்தன. வரம்படித்துச் சமப்படுத்திய வயல்களிலெல்லாம் பவளங்கள் நிறைய தென்பட்டன. இவை இரத்தினதுவீபம் என்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தன.

நடவு நட்டுக் கொண்டிருக்கும் பெண்கள் பயிர்களிடையே அன்னங்கள் போன்று காட்சியளித்தனர். வயல் நீரிலே அன்னப் பறவைகளும் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. வயல் ஓரங்களிலும் திட்டுக்களிலும் வளர்ந்து நின்ற கரும்புகளிலிருந்தும் தேன் பாய்ந்த வண்ணம் இருந்தது. சந்தன மரக்காடுகளில் வண்டுகள் ரீங்காரம் செய்த வண்ணம் இருந்தன.

நாட்டிலே குளங்கள் அமைத்து நீர்பாசனம் செய்து விவசாயம் செய்தனர். அகத்தியரால் அமைக்கப்பட்ட குளம் பெரிய குளம் என அழைக்கப்படுகிறது. பெரிய குளம் திருகோணமலை மாவட்டத்தில் ஏழு கல் தொலைவில் அமைந்துள்ளது.

நகர்ச்சிறப்பு

இலங்கிய மாநகர் இலங்காபுரி. ஈழநாட்டின் தலைநகராக இலங்கை நகர் விளங்கியது. மன்னன் குபேரன், மயன் சிற்பியினால் அகத்தியர் ஆலோசனைகளின் படி இந்த நகரை நிர்மாணித்தவன். அமராவதியைவிட சிறந்த அழகுடன் இலங்கை மாநகர் திகழ்ந்தது.

உயர்ந்த சாதிக்குதிரைகளும் எண்ணற்ற யானைகளும் நாட்டில் நிரம்பி இருந்தது. சிறந்த தேர்களும் ஆகாயத்தில் பறக்கும் விமானங்களும் இந்த நகருக்கு தனிச் சிறப்பைக் கொடுத்தன. தேவர்கள், நாகர்கள்,

முனிவர்கள், சித்தர்கள், இயக்கர்கள், புலவர்கள் அடிக்கடி அரண்மனைக்கு வந்து குபேரனை சந்திப்பது வழக்கம்.

இலங்கை நகர் உயர்ந்து விளங்கியது போல் அதன் மதில்களும் வானுலகை தொட்டு நின்றனவாம். அந்த மதில்களின் மேலே பல பொறிகள் பொருத்திக் காணப்பட்டது. வேல்கள், சூலங்கள் மதிலில் பொருத்தப் பட்டிருந்தனவாம். எந்த எதிரியும் உள்ளே செல்ல முடியாத விதத்தில் பாதுகாப்பாக விளங்கின.

மதிலைச் சூழ்ந்த அகழி மிகவும் ஆழமானது. எண்ணற்ற தாமரை மலர்கள் அகழி எங்கும் நிறைந்து காணப்பட்டது. பகைவர்கள் படையெடுத்தால் விரைந்து வரும் யானைப்படைகளை இந்த அகழி அப்படியே சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிடும் தன்மையது. ஆழமான அகழியை சூழ்ந்திருந்த சோலையானது இருண்ட சோலையாக காட்சி யளித்தது. உயர்ந்த ஓங்கிய மதிலுக்கு உடுத்தப்பெற்ற நீல ஆடைபோல இச்சோலை தோற்றம் தந்தது.

மாளிகைகள், அவற்றின் கோபுரங்கள் வெள்ளிமலை மீது இளஞ் சூரியன் கதிர்களைப் பரப்பியது போலக் காட்சி தந்தது. மாளிகையின் உள்ளே வேலைப்பாடுகள் மிகவும் வியந்து பாராட்டத்தக்கவை. கலைத்திறன் மிக்கவை. மரகதம், வைரம், சந்திரகாந்தக்கல், இழைத்து சித்திர வேலைப்படுகள் செய்யப்பட்டிருந்தன. இருளிலும் ஒளி வீசும் தன்மை வாய்ந்தவை சந்திரகாந்தக்கல். பொன் மயமான மண்டபங்கள் காணப்பட்டன. அங்கே பூத்துக் குலுங்கிய மலர்கள் சுகந்த மணத்தை வாரி இறைத்தவண்ணம் இருந்தன. இந்த மாளிகையில் இருந்து எழும் அகில் புகை மணம் கமிழ்ந்து கொண்டிருக்கும். ஒளி விளக்குகள் மின்னல் என செங்கதிர் பிளம்பு என ஒளியை உமிழ்ந்தன.

ஆடவர் காலில் வீரக்கழலும், பெண்கள் காலில் சிலம்பும் அணிந்து காணப்பட்டனர் மக்கள் மன்னன் மீதும் நாட்டிலும் பற்று மிகுந்து இருந்தனர். செல்வம் நிரம்பி இருந்தது. கல்விக்கும் குறைவே இல்லை. எடுப்பவர் இல்லையதனால் கொடுப்பவர் இல்லை. இதனால் காவலுமில்லை. எல்லோரும் நலமுடையவர்களாக இன்பமுடன் வாழ்ந்தனர்.

புலத்திய மகா சித்தர்

அட்டமா சித்திகளிலும் வல்லமை பெற்ற சித்தர் புலத்தியர் ஆவார். ஈழ மண்டலத்தில் இயக்க நாட்டில் புலத்திய நகரத்தில் வாழ்ந்தவர். தமிழ் கலைகள் அறுபத்து நான்கிலும் ஆழமான புலமை உள்ளவர். ஏற்றமிகு ஏழு முனிவர்களில் ஒருவர் புலத்தியர். மகா கைலாயத்தில் சிவனைச் சார்ந்த சித்தர்களுள் ஒருவர். தமிழில் மருத்துவம், மாந்திரீகம், இரசவாதம், சோதிடம், இலக்கணம் ஆகிய துறைகள் பற்றி நூல்கள் பல எழுதியுள்ளவர். (இலங்கையின் கீழ் மாகாணத்தில் அவருடைய சிலைகள் காணப்படுகின்றன. இயக்க ஊர் என்ற இடமே இயக்கர்களின் இடமாகும்.)

அகத்திய சித்தரின் முதல் மாணாக்கரான இவர் அகத்தியரை தலைவராகக் கொண்ட பதினெண் சித்தர் குழுவின் இரண்டாவது சித்தர் ஆவார். புலத்தியருடைய சகோதரி உலோபா முத்திரையை அகத்தியர் மணந்தார். புலத்திய சித்தரின் மகனே இராவணனின் தந்தையான விச்சிரவசு முனிவர். முத்தூரில் அகத்தியரால் ஆரம்பிக்கப் பட்ட அகத்திய பல்கலைத் தாபனத்தில் பல்கலைகளையும் போதித்த ஆசிரியர்களில் புலத்தியரும் ஒருவராவார்.

விச்சிரவரசு முனிவர் குமாரர்கள் எல்லோரும் புலத்தியரிடமும் அகத்திய தாபனத்தில் தமது கல்விகளையும் பயிற்சிகளையும் பெற்றனர். தேவ குலத்தைச் சேர்ந்த புலத்தியர், விச்சிரவசு, இராவணன் பேசிய மொழி தமிழாகும். (இராவணன் அரக்கர் குலமல்ல. பிராசேதரும், ரத்தினாகரரும் கம்பரும், கவிகளும் வேண்டுமென்றே அரக்கர் குலம் என இராவணனை அவமதித்துள்ளார்கள்.) தமிழர்களில் சான்றோர் தேவர் என அழைக்கப்பட்டனர். துட்டர்களை அரக்கர் என்றனர். சாதாரண மனிதர்களையே மானுடன் என்று அழைத்தனர்.

பிரம்மாவின் புதல்வனான புலத்தியர் சிவனை நோக்கி தவம் செய்து வாழ்ந்து வருகையில் ஒரு எழில் மிகு கன்னியை கண்டு காதல் கொண்டார். மங்கையும் விரும்பி மணந்து கொண்டார்.

இல்லறத்தின் பயனாக ஓர் ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தனர். அவன் வைரமான உடலுடன் காணப்பட்ட படியால் வச்சிரவாகு என்றும் விச்சிரவசு என்றும் அழைத்தனர்.

புலத்தியர் தவத்தில் மேலான நிலையை அடைவதற்காக அகத்தியரை நாடி முத்தூருக்குச் சென்றார். அகத்தியரை வணங்கி ஐயனே நான் தங்கள் மாணாக்கராக விரும்புகிறேன். ஏற்று அருள வேண்டுமென்று வேண்டினார். அகத்தியரும் ஏற்று அறுபத்தினான்கு கலைகளையும் கற்பித்து வந்தார். அவர் திறமையுடன் கற்று சித்தர் நிலையடைந்தார். புலத்தியருடைய சிறந்த ஒழுக்கத்தினாலும் மேன்மையாலும் தமது சித்தர் குழாத்தில் சேர்த்துக் கொண்டார்.

அகத்தியர் மாதோட்ட நகர் கண்டகி இலிங்கத்தை தரிசிக்க விரும்பி முத்தூரிலிருந்து புறப்பட்டார். மீண்டும் வரும் வழியில் புலத்திய நகர் சென்று புலத்தியருடன் இளைப்பாறினார். அங்கு அவருக்கு உணவளித்து உதவிகள் புரிந்தார் உலோபா முத்திரை. இவர் புலத்தியரின் உடன் பிறந்த சோதரி ஆவார். உலோபா முத்திரையின் அழகும், அடக்கமும், அறிவும் அவள் அகத்தியரை வரவேற்ற விதத்திலும் அகத்தியர் மனம் நெகிழ்ந்து போனார். தன் விருப்பத்தை புலத்தியருக்கு தெரிவித்தார். புலத்தியர் தங்கையிடம் எடுத்துச் சொல்லி திருமணத்திற்கு அவளும் சம்மதித்தாள். அகத்தியருக்கும் உலோபா முத்திரைக்கும் புலத்திய நகரில் புலத்தியர் வணங்கிவரும் சிவாலயத்தில் அவர் ஆசீர்வாதத்துடன் திருமணம் நடந்தது. (புலத்திய நகரில் பிரமாண்டமான புலத்தியரின் சிலை காணப்படுகிறது.)

விச்சிரவசு குமாரர்கள்

விச்சிரவசு முனிவர் முதலில் இளி என்ற பெண்ணை மணந்தார். இளியுடன் நடத்திய இல்லறத்தின் பயனாக குபேரன் என்ற குமாரன் பிறந்தான். அகத்தியர் புலத்தியரை தம் ஐயராகக் கொண்டு தமிழ் முதலிய எல்லாக் கலைகளையும் குபேரன் கற்றான். திரிகூட மலையில் இருந்து ஆட்சி செய்த மாலியவான் என்ற அரசனை வென்று நாட்டைக் கைப்பற்றினான். இந்நாட்டின் தலைநகராக இலங்காபுரியை அமைத்தான்.

நாடுநகர நிர்மாணத்திற்கும், நாகரீகத்திற்கும் சிறப்பாக எடுத்துக் கூறப்படுவது அளகாபுரியாகும். அளகாபுரியும் திராவிட நாகரீகமே. திராவிட கட்டிட நிர்ணமாக் கலையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும்.

குபேரன் தமிழ் பேரவையில் தமிழ்ச் சங்கத்தில் அகத்தியர் தலைமையில் புலவராக திகழ்ந்தவர்.

விச்சிரவசு முனிவர் மாலியவான் மகள் கேகசியைக் கண்டார். அவள் எழிலில் மயங்கி மணந்து கொண்டார். இல்லற இன்பம் இனிதே நடந்து வந்தது. ஞானத்தால் புண்ணிய நேரம் வருவதையும் அந்த நேரத்தில் பிறக்கும் குமாரன் ஈரேழு பதினான்கு உலகங்களையும் ஆட்சி செய்யும் பராக்கிரமமும் கீர்த்தியும் பெறுவான் என்பதையும் அறிந்த முனிவர் கேகசியுடன் உறவுகொண்டு இராவணனைப் பெற்றார். இளஞ்சூரியனாகவே இராவணன் தோன்றினான். பாலூட்டும் போதே தாய் கேகசி வீரத்தையும் துணிவையும் இழந்த நாட்டை மீட்க வேண்டும் என்ற ஆவலையும் ஊட்டினாள். பயம் என்பது என்னவென்றே அறியாது வளர்ந்தான்.

இரண்டாவது மைந்தனாக கும்பகர்ணன் அவதரித்தான். முனிவரும் கேகசியும் இராவணனை போலவே கும்பகர்ணனும் பிறந்ததால் மகிழ்ச்சியடைந்தனர். விச்சிரசு முனிவருக்கும் கேகசிக்கும் மூன்றாவது குமாரனாக பிறந்த குழந்தைக்கு விபீடணன் என்று பெயர் இட்டனர். கேகசியின் இல்லறத்தின் பயனாக நான்காவதாக பெண் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை பேரழகுடன் காணப்பட்டதால் காமவல்லி என்று பெயரிட்டனர். அவள் பெரிதாக ஆர்ப்பரித்துச் சிரித்த காரணத்தால் அவளுக்கு சூர்ப்பனகை என்ற பெயரும் ஏற்பட்டது.

தவம் செய்த முனிவர் விச்சிரவசுவிற்கு உட்போத் கடை என்ற கன்னிமேல் காதல் உண்டாயிற்று. இனிதே மகிழ்ந்திருந்ததன் பலனாக இருவருக்கும் இரு ஆண் மக்கள் உதித்தார்கள். அவர்கள் முறையே மகோதரன்,

மகாபார்சுவன் என அழைக்கப்பட்டனர். இன்னொரு மனைவிக்கு பிறந்தாலும் உட்போத்கடையின் பிள்ளைகளும் கேகசியின் குமாரர்களும் விச்சிரவசுவின் புதல்வர்களாக ஒன்றாக புலத்திய நகரில் வளர்ந்தார்கள்.

உலகம் வாழ்வதற்கு இனம் விருத்தியாவது அவசியம் என்பதை உணர்ந்த முனிவர் இராகை என்ற மங்கையிடத்தில் தன் மனதைப் பறிகொடுத்தார். அவளை மணந்து வாழும் காலத்தில் கரன், தூடணன், திரிசிரசு என்ற மூன்று மைந்தர்கள் பிறந்தார்கள். பெண்களுக்கு பெண்மைக் காலம் குறைந்ததாலும் வாழ்நாளும் குறைவதாலும் காலம் செல்லச் செல்ல வேறு மங்கைகளை முனிவர் நாடவேண்டியேற்பட்டது. முனிவர்களுக்கு வயதெல்லை கிடையாது. ஆசைகளையும் மனதையும் புலன்களையும் அவர்கள் அடக்கி வாழ்வதால் வயதேற ஏற ஆண்மை அதிகமாகவே காணப்படும்.

மூன்று தாய்மார்களின் குழந்தைகளும் ஒற்றுமையாகவும் அன்பாகவும் பாசத்துடன் வளர்ந்தார்கள். புலத்திய மகா சித்தரிடம் இவர்கள் எல்லோரும் தமிழ், சைவம், மருத்துவம், இசை, மாந்திரீகம், சோதிடம் முதலிய தமிழ்க் கலைகளை கற்றார்கள். குருகுலவாசத்திற்கு விச்சிரவசுவின் புதல்வர்கள் அகத்தியரிடம் வந்தனர். பதினெண் சித்தர்களால் நடத்தப்பட்டு வந்த அகத்திய தாபனத்தில் அறுபத்தினான்கு கலைகளையும் இவர்கள் கற்றார்கள். ராஜகுமாரர்களுக்கு வேண்டிய வாட்பயிற்சி, விற்பயிற்சி, தண்டப்பயிற்சி, ஆனையேற்றம், குதிரையேற்றம், படையணிவகுப்பு போர் முறைகள் நாடுநகர நிர்மாணம், குளங்கள், நீர்ப்பாசனம், இரத்தினப் பரீட்சை வீணை யாழ் மத்தளம் முதலிய இசைக்கருவிகளை வாசித்தல், நடனம், நாட்டியம், வர்மப்பயிற்சி, ஆட்சியல், எல்லாவற்றையும்

அகத்தியரும் புலத்தியரும் ஏனைய சித்தர்களும் வழங்கினார்கள்.

இவர்களுள் இராவணன், கும்பகர்ணன், மகோதரன் மிகவும் பலம் பொருந்தியவர்களாகவும் வலிமை மிக்கவர்களாகவும் விளங்கினர். இராவணன் ஆற்றில் குளிக்கச் செல்லும் போது நீர் அருந்தவரும் யானைகளை தூக்கி பந்தாக எறிவானாம். கும்பகர்ணன் அந்த யானையை தூக்கி ஆற்றில் எறிவானாம். ஆனைக்கூட்டம் இவர்களைக் கண்டால் அஞ்சுமாம்.

இலங்கேசன் விளையாட்டாக குபேரன் விமானத்தில் பறந்து சென்றான். கங்கை நதி வரைசென்று விட்டான். சிவபூசை செய்யவேண்டிய நேரம் வந்தது. இறங்கி சிவபூசை செய்கிறான். கங்கையில் திடீரென நீர் வரவில்லை. யாரடா எனது சிவபூசை குழப்புபவன் என்று ஆத்திரமடைந்து ஆற்றின் குறுக்கே படுத்து நீராடிக் கொண்டிருந்த கார்த்த வீரியார்ச்சுனனுடன் மோதுகின்றான். சிறுவனாக இருந்த இராவணனைப் பிடித்து சிறையில் அடைத்தான். பின் பேரனான புலத்தியர் இராவணனைக் காணாது கலங்கி ஞானத்தால் கண்டறிந்து அங்கு சென்று இராவணனை சிறை மீட்டு வருகிறார். தனியாக சென்று அவனுடைய நாட்டில் அவன் படை பட்டாளங்களுடன் போர் செய்ததால் அகப்பட நேர்ந்தது. போர் ஆரம்பிக்கு முன்னர் படைபலத்தை அதிகரித்து இருத்தல் வேண்டும் என புலத்திய சித்தர் இராவணனுக்கு அறிவுரை கூறுகின்றார்.

அகத்தியதாபனம்

முத்துாரில் அகத்திய மகா சித்தரால் அமைக்கப்பட்டு தமிழ் கலைகள் அறுபத்தினான்கையும் போதித்து வந்தது அகத்திய தாபனம். அந்த பல்கலைத் தாபனம் பதினெண் சித்தர் குழாத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. ஆய கலைகள் அறுபத்தினான்கினையும் சித்தர்கள் அங்கே போதித்து வந்தார்கள். முத்துக்கள் விளைந்ததாலும் முத்து வியாபாரத்தில் அவ்வூர் புகழ் பெற்றதாலும் முத்துார் என அழைக்கப்படலாயிற்று. அகத்தியர், புலத்தியர், சிகண்டி முதலியவர்கள் முதன்மை பெற்ற சித்தர்களாக இருந்தனர். காலத்திற்கு காலம் வெவ்வேறு சித்தர்கள் பதினெண் சித்தர் குழுவில் இடம் பெற்றனர்.

பல அரசர்கள் அகத்திய தாபனத்தில் தங்கள் அரச பதவிக்குரிய கல்வியினைக் கற்றுக் கொண்டார்கள். இந்திரன், குபேரன், இராவணன், கும்பகர்ணன், விபீடணன், மகோதரன், மகாபார்சுவன், கரன், தூடணன், திரிசிரன், மயில் இராவணன், அக்ககுமாரன், மேகநாதன் போன்ற பல அரசகுமாரர்கள் அகத்திய தாபனத்தில் கற்று அரசரானவர்கள். அரசகுமாரர்களின் வழிபாட்டிற்காகவும் தமது பூசைகளுக்காகவும் அகத்தியர் அங்கே ஒரு லிங்கத்தை அமைத்தார். தினமும் கல்விப் பயிற்சி ஆரம்பிப்பதற்கு முன்னர் வழிபாடு நடக்கும். பூசையின் முடிவில் அகத்தியர் பரம்பொருள் சிவனின் பெரும் புகழை மாணவர்களுக்கு கொஞ்ச நேரம் எடுத்துக் கூறுவார்.

சொல்லில் அடங்காததும் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாததுமான சிவபெருமானின் திவ்விய மங்கள குணங்களை எடுத்துக் கூறுகையில் பிரம விட்டுணுவாதி தேவாதி தேவர்களுக்கெல்லாம் சிவன் முதல்வன்,

நித்தியமானவர், தன் உடலில் மலர்மாலை அணிந்திருந் தாலும் தம் பக்தர்களுக்கு முத்துமாலை, பவளமாலைகளை கொடுப்பவர். தான் சாம்பலைப் பூசியிருந்தாலும் தம்மை நினைப்பவர்களுக்கு சந்தனாதி சுகந்த பரிமள சுகந்தங் களைக் கொடுப்பவர். தான் எருதை வாகனமாக கொண்டிருந் தாலும் தன்னை துதிப்பவர்களுக்கு யானை, குதிரை வாகனங்களைக் கொடுக்கிறார். தான் சர்ப்பாபரணங்களை அணிந்திருந்தாலும் தம் தொண்டர்களுக்கு மகர குண்டலாதி ஆபரணங்களைக் கொடுக்கிறார். தான் சடாதாரியாக இருந்தும் தம் அன்பர்களுக்கு மணிமகுடம் வழங்குகிறார். தான் யானைத்தோலைப் போர்த்தாலும் தம் பக்தர்களுக்கு பட்டுப் பீதாம்பரம் வழங்குகிறார். தம்மை அடைந்தவர்களுக்கு அவரவர் விருப்பத்திற் கேற்ப இகபர சுகங்களை கொடுக்கிறார். அவர் மகிமைகளை தெரிந்து கொள்ளும் சக்தி ஒருவருக்கும் கிடையாது. நீங்களும் வழிபட்டு மேன்மை யடையுங்கள் என்று குரு தெரிவித்தார். இளவல் இலங்கேசன் இராசதகுணம் கொண்டவனாகவும் தன் வீரத்தையும் மிடுக்கையும் மற்றவர்களிடம் காண்பிக்கும் போக்குடையவனாகவும் இருந்தான். கும்பகர்ணனோ மதகரி போல மற்போரில் தன் திறமையை காட்டி வந்தான். மகோதரன் படைநடத்துவதில் வியூகங்களை வகுப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தான். கரனும் சிறந்த வில்லாளியாவான்.

அதிகாலை எழுந்து மாவலியாற்றில் நீராடி சிவலிங்க வழிபாடு செய்தனர். இலங்கேசன் சிவவழிபாட்டில் அதிக ஈடுபாடு காட்டி வந்தான். ஒருநாள் எல்லா மாணவர்களும் வந்து விட்டனர். புலத்திய சித்தர் போதிக்க வந்தார். இலங்கேசனைக் காணவில்லை. அவனைத் தேடுகையில் "ஓ சங்கரா சர்வரட்சகா, தேவதேவா, மகாதேவனே, வித்தைகளின் நாயகனே நான் அறுபத்தினான்கு கலைகளிலும் சிறந்து விளங்க அருள் புரிவீராக." என்று

சிவனை துதித்துக் கொண்டிருந்தான். நேரம் போனது தெரியாமல் தன்னை மறந்து தியானத்தில் இருப்பதைப் புலத்தியர் கண்டார். தன் பேரன் இவ்வளவு தெய்வசிந்தனை உள்ளவனாக இருப்பது கண்டு உள்ளம் பூரித்துப் போனார். மாணவ சிறுவனாக இருக்கும்போதே இலங்கேசன் சிவன்மீது அளவற்ற பக்தி செலுத்தி வந்தான்.

ஆட்சியியல், தமிழ், சைவம், சோதிடம், மருத்துவம், மந்திரம், வில் வாள் வேல் தண்டம் ஆகியவற்றின் போர்முறை, ஆனையேற்றம், குதிரையேற்றம் முதலிய எல்லா தமிழ் கலைகளையும் கற்றார்கள். இரத்தினப் பரீட்சை, நீர்ப்பாசனம், நாடுநகர் கட்டமைப்பு, சிற்பக்கலை, கட்டிடக்கலை, இசைக்கலை, நடனக்கலை ஆகியவற்றையும் கற்றார்கள். இலங்கேசன் ஏனைய மாணவர்களை விட தான் கல்வியில் முன்னுக்குவர வேண்டும் என்பதில் மிக அக்கறையுடன் காணப்பட்டான். அறுபத்தினான்கு கலைகளிலும் இலங்கேசன் தேர்ச்சி பெற்று மிகவும் சிறந்து விளங்கினான்.

மேகநாதன், அக்ககுமாரன், அதிகாயன், தேவராந்தகன், நராந்தகன், திரிசிரன், கும்பன், நிகும்பன், நள கூபரன் முதலியோர் அடுத்து அகத்திய தாபனத்தில் சேர்ந்து கல்வி பயின்றார்கள். அம்பு, வில், வாள், வேல், தண்டம் முதலிய படைக்கலங்கள், அவற்றின் பாவனை, போர்த் தளபாடங்கள், போர்முறை, தந்திர வியூகங்கள் முதலியன பற்றி அகத்தியர் நூலை இயற்றினார். அதுவே சக்தி சூத்திரம், அங்கு போதிக்கப்பட்டு வந்தது எனலாம்.

குபேர மன்னனின் சிறப்பு

ஒப்பற்ற மாண்புகள் நிறைந்த இலங்காபுரியை மன்னன் குபேரன் ஆண்டு வந்தான். அவன் செங்கோலோச்சி புகழுடன் விளங்கினான். அறிவாற்றல், அருளாட்சி அறம், பெருந்தன்மை வீரம், ஈகை, நீதி தவறாமை, ஆகிய அத்தனை உயர்ந்த குணங்களையும் குபேரன் பெற்று சிறப்புடன் வாழ்ந்தான். சிறந்த சிவபக்தனான குபேரன் பல சிவாலயங்களைக் கட்டினான். சிவவழிபாட்டிலும் சிவ பூசையிலும் அக்கறையுடன் வாழ்ந்தவன். எப்பொழுதும் வெண்ணீறணிந்து உருத்திராக்கம் தரித்து சிவசிந்தனையில் செழித்தவன். எல்லோரிடமும் அன்பு தயை கொண்டவன். மன்னுயிரை தன்னுயிர் போல காப்பவன். குபேரன் ஆட்சியில் மக்கள் நன்மையடைந்தனர். நாடு நலம் பெற்றது. மக்கள் வாழ்த்தினார்கள். புலவர்கள் போற்றினார்கள். உயர்ந்த பெரும் புகழையும் உன்னத சிறப்புக்களையும் பெற்று ஓங்கி உயர்ந்த பெருமையை பெற்று ஈடு இணையற்று விளங்கினான். விசுவகர்மாவின் மகள் சித்திரலேகாவை மணந்து இன்புற்று வாழ்ந்தான். சிவனை நோக்கி தவம் செய்து சங்கநிதி பதுமநிதி, வடதிசை காவலன் பதவியும் பெற்று இமயமலையில் அளகாபுரி என்ற நகரை அமைத்து ஆட்சி செய்து வரலானான். அள்ள குறையாத செல்வங் களைப் பெற்று நிதிக்கிழவனுமானான்.

மாதோட்ட நகர்க்காட்சி

மாதோட்ட நகரக் கொடிகள் (நாக இலச்சினை பொறிக்கப்பட்டவை) அசைந்தும் ஆடியும் புலத்தியர் பேரன் இலங்கேசனை வரவேற்றன. மாளிகைகளின் உப்பரிகைக ளில் நாக கன்னியர்கள் அப்சர கன்னிகளைப் போன்று

காட்சி அளித்தார்கள். வானளாவிய மாடங்கள், பளிங்கு மாளிகைகள் எங்கும் இனிய இசை ஒலித்த வண்ணம் இருந்தது. நகரின் புறத்தே சிவனின் வெள்ளிமலை போன்ற அழகிய சிவாலயம் காணப்பட்டது. அடியார்கள் வழிபடும் பக்தி மாலைகள் ஒலித்துக்கொண்டிருந்தன. அங்கு மணிஒலி மங்கள ஒலி மெல்லிதாக வந்தது. சிவவழிபாடு சிறப்பாக நாக மக்களால் செய்யப்பட்டு வந்தது. செந்தமிழால் பக்தியாக சிவபூசைகள் நடைபெற்றன. அருகே வெண்மையான நீரைக் கொண்ட புண்ணிய தீர்த்தம் பாலாவி ஆறு ஓடிக்கொண்டிருந்தது. பாலாவி ஆறு மெதுவாக கன்னியைப் போன்று அசைந்தும் வளைந்தும் நெளிந்தும் சென்று கொண்டிருந்தது. பார்ப்போர் உள்ளத்தைக் கவர்ந்தது. பாலாவி ஆற்றின் பெருமையால் இந்நகரம் பாலாவி மண்டலம் என்றும் அழைக்கப்பட்டது.

கேது என்ற நாக அரசன் வழிபட்டு வந்ததால் திருக்கேதீச்சரம் என்று ஆலயப்பகுதி பெயர் பெற்றது. அவன் இங்கு தவமிருந்து சிவன் அருளால் நவக்கிரகங்களுள் ஒன்றாக உயர்வடைந்தான். மயன் என்ற சிற்பியினால் திருக்கேதீச்சர ஆலயம் கட்டப்பட்டதாக உள்ளது. சிவபக்தனான மன்னன் மயன் போலவே அவன் செல்வ மகள் வண்டோதரியும் சிவ வழிபாட்டில் சிறந்து விளங்கியவள். அழகிலும், கற்பிலும், பதிபக்தியிலும், புராண இதிகாசங்களில் சிறப்பு வரலாறு பெற்ற பெண் மணிகள் எழுவர். அவர்கள் வண்டோதரி, சீதை, சாவித்திரி, தமயந்தி, தாரா, நளாயினி, அனுசூயா ஆகியோராவர். சிவபெருமானிடம் பேரருள் இன்பம் பெற்று முதலாவதாக எண்ணப்படுபவர் வண்டோதரியாகும். இது வண்டோதரியின் தனிச் சிறப்பாகும்.

வண்டோதரியின் தந்தை மயன் அரசன் மட்டுமன்றி சிறந்த சிற்ப வல்லவன். மயனாமதம் என்ற சிற்ப கட்டிட

நிர்மாண நூல் இவனால் இயற்றப்பட்டது. திருக்கேதீச்சர ஆலயம், திருப்பெருந்துறை, மாதோட்ட நகர், இலங்காபுரி, அளகாபுரி, அமராவதி, போகவதி என்ற புகழ் பெற்ற இராசதானிகள் மயனால் நிர்மாணிக்கப்பட்டவை. தமிழ் அரசர்களான மயன், விசுவகர்மா, துவட்டா ஆகியோர் சிறந்த கட்டிட நிர்மாண கலைஞர்களும் சகோதரர்களுமாவர். தமிழ்ச் சிவாகமங்களையும் கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர்கள். சிற்பக் கலையிலும், கட்டிடக் கலையிலும் சிறப்பான விற்பன்னர்கள். சிறப்பான கோயில்களையும், நகரங்களையும், மாடமாளிகைகளையும், கோட்டை கொத்தளங்களையும் சிறப்பாக அமைப்பதில் ஈடு இணை இல்லாதவர்கள்.

வண்டோதரி தன் தோழியை விழித்து, "வானூர்தியில் செல்கின்ற பார்ப்போர் மயங்கும் அழகும் சமுத்திரம் போன்ற காம்பீரியமும் மேருமலை போன்ற உறுதியுங்கொண்ட அந்த இளவரசன் யார்?" என்றாள். கொடுப்பதில் அண்ணன் குபேரனையும், ஆற்றலில் அகத்தியரையும், கவர்ச்சியில் இந்திரனையும் ஒத்த திராவிட குலத்தில் தோன்றிய இலங்கேசன், என்றாள் தோழி. மங்கையர் பலரும் இவனை விரும்பினர். அழகிய நங்கையரை அவனும் விரும்பினான். தன் விமானத்தில் ஏறி உலகை சுற்றிவருவான். இயற்கையின் அழகையும், ஆறுகளின் அழகினையும், குன்றுகளையும், வனங்களையும், மலர்களையும், மான்களையும், மயில்களையும், மங்கையரின் எழிலையும் இரசிப்பதில் ஆர்வமிக்கவன், என்றாள் தோழி.

வண்டோதரி கேதீச்சர ஆலயத்தில் வழிபாடு செய்து அரண்மனை திரும்புகையில் வான்வழியே விமானத்தில் சென்ற இராவணனைக் கண்டு காதல் கொண்டாள். இளைய குமாரனான இராவணன் விமானத்தில் சென்று

கொண்டிருக்கையில் அழகிய இராசமல்லிகை மலர்களின் இனிய ரம்மியமான வாசனை காற்றில் மிதந்து வந்தது. அத்திசையில் விமானத்தினை செலுத்தினான். அழகிய இராசகுமாரியும் சேடிகளும் தோரில் போய்க கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் முன்னால் விமானத்தை இறக்கினான். அவர்கள் பயந்தபோது "அஞ்சுகமே அஞ்சாதே, மன்னன் மகளைப்போல எழிலும் பரிவாரமும் கொண்ட மான்விழியாளே எங்கே செல்கிறாய்? மயிலே நீ யார் பெற்ற மகள்? மங்கையே எங்கே உன் அரண்மனை? உன் வேல்விழிகள் என் நெஞ்சைத் துளைக்கின்றன. நான் இச்சிரவாகு முனிவர் மகன். என் பெயர் இலங்கேசன். விச்ங்காபுரி அரசன் குபேரன் தம்பி. என் மனம் உன்னை நாடுகிறது" என்றான்.

"இலங்காபுரி இளவல் இலங்கேசனுக்கு வந்தனம். மாதோட்ட மன்னன் மயன் பெற்ற குமாரி நான். என் பெயர் வண்டோதரி. எங்கள் குலதெய்வமாகிய திருக்கேதீச்சர நாதனை வழிபாடு செய்துவிட்டு அரண்மனைக்கு புறப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்" என்றவளின் முகம் நாணத்தில் சிவந்தது. "கார்கூந்தலில் பிறைநுதல், மூங்கிற் தோள்கள், முல்லைப்பல் வரிசை, கொடியிடை கொண்ட தோகையே உன்னை மணந்து இன்புற்றிருக்க விரும்புகின்றேன், இசைவாயாக என்றான்" இலங்கேசன். இலங்காபுரி இளவலுக்கு வணக்கம். பெற்றோர்கள் பேசவேண்டிய மணவாழ்க்கை இன்னும் முடிவாகவில்லை அரசே. அவர்களுடன் தாங்கள் இதைப் பற்றிப் பேசுவதே நல்லதாகும் என்றாள் வண்டோதரி. வண்டோதரியும் தன்னை விரும்புகிறாள் என்பதை அறிந்த இலங்கேசன் மகிழ்ச்சியுடன் இலங்காபுரி சென்றான். குபேரன் மயனுக்கு வண்டோதரியை பெண்கேட்டு தூது அனுப்பினான்.

வண்டோதரியின் வாட்டம்

இராவணனைச் சந்தித்ததிலிருந்தே வண்டோதரி தன்னை மறந்தாள். அலங்காரங்களை மறந்தாள். தன் வசமிழந்தாள். மன்னன் மயன் காரணமறியாது கலக்கமடைந்தான். பின் சேடியர் மூலம் நடந்தவற்றை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். நாம் செய்த பாக்கியம் விச்சிரவசு முனிவர் மகன் இராவணன் மணமகனாக வரப்போவது என மாதோட்ட மக்கள் மகிழ்வெய்தினர்.

இலங்கையின் எழுச்சி

மயன் இலங்காபுரிக்கு திருமணம் பற்றி ஒப்புதல் தெரிவித்து பதில் அனுப்பினான். விச்சிரவசு முனிவரும் கேகசியும் குபேரனின் மனைவிக்கு தங்கை முறையான வண்டோதரி இராவணனுக்கு மணமகளாக அமையப் போவதை எண்ணி புளங்காகிதம் அடைந்தார்கள். தூதனாய் வந்தவனிடமே எதிர்வரும் சுபவேளையில் மணவிழாவை வைக்க நாட்குறித்து அனுப்பினான். குபேரன், தம்பி இராவணனின் மணவிழாவை சிறப்பாக செய்வதற்கு ஏற்பாடு செய்தான். இந்த இனிய சேதியை இலங்காபுரி மக்களுக்கு அறிவிக்கவும். அமைச்சர்களும், நால்வகை சேனைகளும், புலத்திய நகர மக்களும், திரிகூடமலை மக்களும், இராவணன் திருமண விழாவில் கலந்து கொள்ள வேண்டி முரசறைந்தான். குபேர அரசனின் வள்ளுவன் மக்களுக்கெல்லாம் முரசறைந்து கூற அவர்கள் உவகையில் திளைத்தார்கள். புலத்திய சித்தர், அகத்திய சித்தர், மாலியவானுக்கும் ஓலை போக்கினான்.

சித்தர்கள், அமைச்சர்கள், படைகள், ஆண்பெண், குழந்தைகள் எல்லோரும் மலர்ந்த முகத்தினராய் திரண்டு வந்தனர். அனைவர் உள்ளங்களிலும் மாதோட்ட நன்னகர் நோக்கிச் செல்லும் ஆர்வமே மிகுந்திருந்தது. பெண்கள் எல்லோரும் யானைகளிலும் குதிரைகளிலும் ஏறிச் சென்றனர். படைகள் சங்கு, பேரிகைக் முழக்கங்களுடன் சென்றன. அரண்மனைப் பெண்கள் தேர்களில் சென்றார்கள். வழித்தொலைவு நெடுகிலும் மக்கள் பேசியும் பாடியும் ஆடிக்கொண்டும் சென்றார்கள். பாணர்களும், விறலியரும் இசைபாடி மகிழ்ந்த வண்ணம் சென்றார்கள். பிரபுக்கள் பல்லக்கில் சென்றார்கள். அகத்தியரும் புலத்தியரும் தனித்தனி முத்து பல்லக்கில் சென்றார்கள். விச்சிரவசு முனிவரும் கேகசியும் மன்னன் குபேரனும், இராவணனும் நல்ல நேரம் பார்த்து தேரில் புறப்பட்டனர். கும்பகர்ணன், மகோதரன், மகாபார்சுவன் விச்சிரவசு முனிவரின் இளைய குமாரர்கள் யானைகளிலும் குதிரைகளிலும் சென்றார்கள். பலவித இசைக்கருவிகளை இசைத்து இனிய ஒலி எழுப்பினார்கள் இசைக் கலைஞர்கள்.

மகேந்திர மலை

மகேந்திர மலையில் அனைவரும் குதிரைகள், யானைகள், தேர்கள், பல்லக்குகளிலிருந்து இறங்கி ஓய்வெடுத்தார்கள். யானைகளை தேவதாரு மரங்களிலும் மாமரங்களிலும் கட்டி வைத்தார்கள். நடந்த களைப்புத்தீர ஆடவர்கள் அந்த சோலைகளில் நன்கு ஓய்வெடுத்தார்கள். பெண்களும் படுத்து ஓய்வு எடுத்தனர். மகேந்திர மலையில் (மிகுந்தலை) கரிய பாறைகளில் தேர்களின் சில்லுகள் திரும்பத்திரும்ப சென்றதால் வெண்மை நிறமடைந்தன. அந்தச் சோலையில் விசிறிய இனிய காற்று

பேசிக்கொண்டிருந்த ஆண் பெண் எல்லோரிடத்திலும் தூக்கத்தை வரவழைத்தது. முன்னால் வந்தவர்கள் உறங்கிக்கொண்டிருக்க பின்னால் வந்தவர்கள் இறங்கிக்கொண்டிருந்தார்கள். மகேந்திர மலை மக்களால் நிரம்பி வழிந்தது. யானைகளை வரிசையாக கட்டி வைத்தது புதிய மலைத்தொடர் போல கரியமலையாக காட்சியளித்தது.

இளமங்கையரும் ஆடவரும் அந்த மலைக் காட்சியில் தங்கள் மனதைப் பறிகொடுத்தவர்களாக சுற்றித் திரிந்தார்கள். யானைகள் பிறைத்திங்கள் போன்ற தம் கொம்புகளால் தேன்கூட்டைக் குத்த, தேன் பாய்ந்த வண்ணமிருந்தது. இவர்களைக் கண்ட கவிகளும் மந்திகளும் மரங்களில் அங்கும் இங்கும் தாவித்திரிந்தன. மலையில் அமைந்துள்ள முன்னாளில் சிவனின் இருப்பிடமான கோவில், குகைக் கோயில்களையும், பார்த்து பூசனை வழிபாடு செய்து வணங்கினார்கள். சுனையுள்ள இடத்தை பளிங்குத் தரை என்று எண்ணி கால் வைத்ததால் ஆடைகளை நனைத்து வந்தார்கள். ஆண்களும் பெண்களும் இணை இணையாக அங்கெல்லாம் சுற்றி இனிய காட்சிகளைக் கண்டு மெய்மறந்து திரிந்தார்கள். அந்த மலையை விட்டு அகல முடியாத அளவில் பல விதமான இயற்கைக் காட்சிகளைக் கண்டு வியந்து நடந்தனர்.

மாலையில் கதிரவன் மறையும் நேரம் சிவப்பு நிறம் தோன்றி வானத்தைப் பொன் மயமாக்கியது. செவ்வானம் வீசிய ஒளியால் இளந்தளிர், சிவந்த மணிகள், போல் தோற்றம் காட்டின. இருள்சூழ ஆரம்பித்ததும் பெண்கள் தங்கிய பகுதிகளிலும், படைகள் தங்கிய இடங்களிலும் விளக்குகள் ஏற்றப்பட்டன. பரந்த கடலில் செந்தாமரை பூத்தது போன்று விளக்குகள் காட்சி தந்தன.

கதிரவன் மறுநாள் உதயமாகியபோது பொழுது புலர்ந்தது. எல்லோரும் எழுந்து காலைக்கடன்களை முடித்து தங்களை அழகுபடுத்திக் கொண்டனர். கூத்தர்களின் ஆடலும் பாடலும் இனிய பொழுது போக்காக அமைந்தன. எல்லோரும் அதை இனிது இரசித்தார்கள். யானைகளின் பிளிறல் ஒலியும் குறப் பெண்களின் பாட்டொலியும் ஆரவாரம் செய்தன.

பூக்கொய்தல்

நன்றாக வெயில் காய முன்னர் அருவியாற்றை அடைந்து கடம்பவன சோலை நிழலில் தங்க வேண்டும் என எண்ணி எல்லோரும் விரைந்து சென்றார்கள். ஆற்றங்கரையில் இனிய சோலையை அடைந்து இளைப்பாறினர். அந்த சோலையிலுள்ள மயில், அன்னம், குயில் எல்லாம் கூட்டம் கூட்டமாக மக்களைக் கண்டு அஞ்சினவாம். இனிய மாதர்களின் அழகு நடனத்தில் ஆடவர்கள் மயங்கி நின்றனர்.

பூத்துக்குலுங்கிய இனிய நறுமணம் வீசிய மலர்களை எல்லாம் பறித்திட எண்ணி எட்டிய கொப்புகளை வளைக்க மலர்களைப் பறிக்கும் விதத்தில் அவை வளைந்து கொடுத்தன. எட்டாத கொப்புகள் வளையாமலே நின்றன. ஆடவர்களும் நின்ற பெண்களும் அவர்கள் விருப்பத்திற்கு உட்படுவதையும் ஊடி நின்றவர்கள் எதையும் அனுபவிக்காததையும் ஒத்திருந்தன.

பெண்களின் முகங்களை தாமரைகளாக எண்ணி வண்டுகள் எல்லாம் சுற்றி சுற்றிப் பறந்தன. கண்களை குவளை மலர்கள் என்ற எண்ணிப் பறந்தன. வண்டுகள் இடைவிடாமல் மொய்க்கவும் மங்கையர்கள் எவ்வளவோ விரட்டிப் பார்த்தும் விடவில்லை.

பளிங்கில் தன் மனைவியின் மேனியின் நிழல் கண்டு அதைத் தன் மனைவி என்றெண்ணி ஒருவன் அன்பு செய்தானாம். அவன் மனைவியோ தன் கணவன் இன்னொரு பெண்ணிடத்தில் அன்பு கொண்டுள்ளான் என்று ஊடினாளாம்.

இன்னொரு ஆடவன் தன் அன்புத் துணைவிக்கு மாலை சூட்டினான். இதைக் கண்ட பெண்ணொருத்தி தன் கணவன் தனக்கு ஏன் மாலை சூட்டவில்லை என புலம்பினாள். செழிப்பாக வளர்ந்திருந்த தென்னை மரங்களிலுள்ள இளநீர் குலைகள் மங்கையின் கொங்கை போல விளங்கினவாம். இவ்வாறு ஆடவரும் பெண்டிரும் பூக்கொய்ய வந்த இடத்தில் அவர்களின் விளையாட்டுக்கள் இனிதாக நடந்தன. பூக்கொய்தலை முடித்து புனலாடி மகிழ எண்ணி கிளம்பினார்கள்.

நீர் விளையாட்டு

ஆண் யானைகளுடன் பெண் யானைகளும் ஆடி அசைந்து வந்தது போன்று ஆடவர்களும் பெண்களும் ஆற்றுக்கு வந்தனர். நீரில் இறங்கி விளையாட ஆரம்பித்தனர். தேவமங்கையர் பாற்கடலில் ஆடிக் களித்தது போன்றிருந்தது. சில பெண்கள் தம் கணவர்களைத் தழுவினார்கள். சிலர் நீரில் விளையாடி இன்புற்றார்கள். சிலர் நீரிலுள்ள வாளை மீன்களைக் கண்டு அஞ்சி தம் கணவர்களை அணைத்தனர். சில பெண்கள் கணவர் தோள்களைப் பற்றினர். நீரில் மங்கையர் முகங்களும் தாமரைகளும் ஒரே மாதிரிக் காட்சியளித்தன. குவளை மலர்களும் அவர் கண்களும் பேதம் தெரியாமல் தோன்றின. நறுமணம் மிகுந்த நலங்குப் பொடியை நீரில் குழைத்து கணவன்மார் மீது வீசினர். அவர்களும் மனைவியர் மீது

எதிர் வீசி இன்புற்றனர். சில பெண்கள் தம் தாமரை போன்ற கைகளால் கணவர்மீது நீரை வாரி இறைத்து மகிழ்ந்தார்கள். சிலர் வாயினால் நீரை மொண்டு வாயினால் பீச்சியடித்தார்கள்.

மின்னலைப் போன்ற இடையும் மூங்கிலைப் போன்ற தோள்களையுமுடைய பெண்கள் விளையாடுவதற்காக அன்னத்தை தம்முடன் அழைத்தார்கள். தங்கள் கணவர் வாரி இறைத்த நீர் தங்கள் மார்பின்மீது பட அதைத் தாங்க மாட்டாத பெண்கள் வருந்தினர். சிலர் இன்பமுடன் நீரில் விளையாடிய வண்ணம் ஆடிக்களித்து தம் அன்புக் கணவர்களை தழுவத் துடித்தார்கள். இவ்வாறு நாடிச் சென்ற பெண்களின் முகம் புதிய தாமரை போன்று பொலிவு பெற்றிருந்தது. பெண்கள் சிலர் நீராடிக்கொண்டிருக்கையில் இடையில் அணிந்திருந்த மேகலைகள் நழுவி கீழே வந்து கால்களின் பக்கம் வர அதை உணராமல் கால்களைப் பாம்பு பற்றியதாக எண்ணிப் பதறிய வண்ணம் நீரை விட்டு வெளியே வந்தனர். அவர்கள் பூசியிருந்த சந்தனம் குங்குமம் பலவகை மணப்பொருட்கள் கழுவப்பட்டதால் அழுக்கு நீக்கப்பட்ட மணிகள் என ஒளிவீசி நின்றனர். நீரிலே குங்குமம் சாந்து கரைந்ததால் சிவப்பு நிறமுடன் தோன்றியதாம்.

வரவேற்றல்

தூதன் தெரிவித்தபடி வண்டொதரி மணவிழாவை மயன் முரசறைவித்து அறிவித்தான். குபேர மன்னனும் இராவணனும் மாதோட்ட நகர் எல்லையருகே வந்து கொண்டிருப்பதை அறிந்த மன்னன் மயன் சேனைகளுடனும் பெருமகர்களுடனும் குபேரனையும் அவனுடைய நாட்டு

மக்களையும் வரவேற்க வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொண்டிருந்தான். குபேர மன்னனின் பெரும் சேனைகள் வரவர கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. விண்ணை மறைக்கும் வண்ணம் வெண்கொற்றக் குடைகள் பிடிக்கப்பட்டு யானைகளிலும் குதிரைகளிலும் கவர்ச்சி மிக்க தேர்களிலும் வந்து கொண்டிருந்த காட்சி கண்களுக்கு இனிய விருந்தாக இருந்தது. வெண்சாமரம் வீசப்பட்ட பல்லக்குகள் வரிசை வரிசையாக வந்துகொண்டிருந்தன. மாதோட்ட மாநகரத்து அழகுப் பெண்கள் நடந்து வந்த தோற்றத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். அணியணியாக வந்த காலாட்படைகள் குதிரைப் படைகள் அணிவகுத்து வந்த யானைப் படைகளினதும் காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. மாதோட்ட மன்னன் வந்த காட்சியும் இனிய காட்சியாக இருந்தது. அழகு மங்கையரெல்லாம் பொன் தட்டுக்களில் மங்கலப் பொருட்களைச் சுமந்து வந்தனர். அமைச்சர்களோடும் பெருமகர்களோடும் மயன் வந்து கொண்டிருந்தான். வாசனை தூள்களையும் மலர்களையும் வழியெல்லாம் தூவி வந்தனர். நகர எல்லையில் இரு சேனைகளும் சந்தித்தன. மயன் குபேரன் தேரில் ஏறிச் சென்றான். குபேரனும் மயனும் விச்சிரவசு முனிவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். மயன் இராவணனுக்கு மாணிக்க மாலை சூட்டி மலர்ச்செண்டு கொடுத்து அழைத்தான். பெருந்தச்சன் குபேரனைத் தழுவிக் கொண்டான். நாக நாட்டின் தலைநகரான மாதோட்ட நன்னகரின் இராஜ வீதியால் ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. வீதி எங்கணும் வாழை, கமுகு நாட்டப் பெற்று மாவிலை தோரணங்கள், மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மங்கல மங்கையர்கள் மங்கல கும்பங்களை வைத்து மலர்தூவி வரவேற்றனர்.

உலாவருதல்

மாதோட்ட நகரே வீதிக்கு வந்துவிட்டது. பாலை, பேதை, மடந்தை, மங்கை, பேரிளம்பெண், விருத்தை, கிழவி எல்லோரும் இராவணனை அறிந்திருந்தார்கள் அல்லவா? அவன் பேரழகை கண்களால் பருக நான்முந்தி நீமுந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு வீதியில் காத்திருந்தார்களாம். மயன் படைத்த மாதோட்ட வீதிகளில் நின்ற பெண்களிற் சில அன்னக்குழாம் போலவும், சில மயிற்கூடம் போலவும், இன்னும் சில மான்களின் கூட்டம் போலவும் காட்சி தந்தன. அம் மங்கையர் தம் கூந்தல் அவிழ்ந்ததையோ, மேகலை அறுந்து வீழ்ந்ததையோ, ஆடைகள் நழுவியதையோ எண்ணவில்லை. வரை எடுக்கும் தோள் வரனை, மலையை வெட்டும் வாள் வீரனைக் கண்ணால் கண்டு மகிழவே துடித்தார்கள். பெண்கள் அவன் திருவுருவை காண தேனை மொய்த்த ஈக்கள் போல மாறி விட்டார்கள். இடைகள் துவழவும், நூபுரங்கள் ஒலிக்கவும், பாதங்கள் நோகவும் பெண்கள் இலங்கேசன் பேரழகை புகழ்ந்தும் வியந்தும் போற்றினார்கள்.

இந்த ஒப்பற்றவன் வீதியில் உலாச் சென்று கொண்டிருந்தான். அவன் அழகையும் நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் செல்லும் காட்சியையும் கண்ட பெண்கள் கண் இமைக்காமல் பார்த்தார்கள். இமைத்தால் மறைந்தும் பார்வையிலிருந்து மறைந்தும் சென்று விடுவான் என்பதாம். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு அவர்களை விட்டுச் சென்று விட்டன. மன்மதன் மலர் அம்புகள் அவர்களை வாட்டி வதைத்தன. இலங்கேசன் தனக்கு ஒதுக்கப்பட்ட மாளிகைக்குச் சென்று புனித நீரில் நீராடி வெண்பட்டாடை புனைந்து திலகமிட்டு சிவனையும் உமையவளையும் வணங்கினான். மணமகனை அலங்கரிப்பதற்கு தலையில்

செம்பட்டு முடியை சூட்டினர். பொன்மாலைகள், மலர் மாலைகள், வெண்பட்டு உத்தரியம், தோள்வளைகளையும் தோளில் அணிவித்தனர். வீரப்பட்டத்தை நெற்றியிலும், கர்ண குண்டலங்களை காதிலும் சூட்டினர். வைரப்பதக்கங்களை மார்பிலும், வீரக்கழல்களை காலிலும் அணிவித்தனர். சுகந்த சந்தனப் பூச்சுக்களைப் பூசினர். வாசனாதிகளை பூசினர்.

வண்டோதரி மணவிழா

மணவிழா மாளிகையை மாதோட்டங்களின் உலா சென்றடைந்தது. அரசர்கள், அமைச்சர்கள், தவசிகள், பெருமகர்கள் எல்லாரும் வந்து மண்டபம் நிரம்பியது. நாகநாட்டு வேந்தன், வீணாகானபுர மன்னன், குமரி நாட்டு மன்னன், கந்தர்வவேந்தன், இயக்க வேந்தன், அசுர இந்திரன், எல்லாரும் அவரவருக்குரிய இருக்கைகளில் அமர்ந்தனர். வந்தவர்கள் தத்தமக்கென விசேடமாகப் போடப்பட்ட இருக்கையில் அமர்ந்தார்கள். மங்கல முரசுகள் ஒலித்தன சங்குகள் ஆர்த்தவண்ணமிருந்தன. தாரகை, பேரிகை முழங்கிய வண்ணமிருந்தன. மணவிழா மண்டபம் நன்கு அலங்கரிக்கப்பட்டு சிறப்பாக அமைக்கப்பட்டு காணப்பட்டது. நவமணிகள் இழைக்கப்பட்டு மணி மண்டபமாக காட்சியளித்தது. உலாவில் வந்த மங்கல வாத்தியங்கள் தனியாக அமைக்கப்பட்ட மேடையில் வாசித்த வண்ணமிருந்தன.

அழகு மங்கையர் வெண்சாமரம் வீசினர். தேன் போன்ற இனிய சொல்லையுடைய மங்கையர் வாழ்த்துப்பாடினர். வெண்குற்றக்குடைகள் எங்கும் நிறைந்து காணப்பட்டன திருமண விழாவிற்கு வந்த அனைவரும் அன்போடு வரவேற்று உபசரித்தார்கள். மாதோட்ட அரச குடும்பத்தினர் சிலநங்கையர் வெற்றிலை பாக்கு வழங்கினர். இன்னும்

சிலர் இனிய பானங்களை வழங்கினர். இனிய காம இன்பம் எல்லா இன்பங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு தனி இன்பம் என்பதை மணமக்கள் உணர்ந்தனர். சுபநேரம் நெருங்கியது அகத்தியர் மேடைக்கு மணமகனை அழைத்து வருமாறு கூறினார். குபேரனும் மயனுமாக இலங்கேசனை மண்டபத்திற்கு அழைத்து வந்து இரத்தினங்கள் இழைக்கப் பெற்று பொன்னாலான புதிய ஆசனத்தில் அமரச் செய்தனர். அழகிய நாககன்னிகள் அவனுக்கு சாமரம் வீசினர்.

புலத்தியர் வண்டோதரியை அழைத்து வருமாறு கூறினார். கேகசியும், சித்திரலேகாவும் பாங்கியரும் சேடியரும் மணமகளை அலங்காரங்களுடன் சபைக்கு அழைத்து வந்தனர். உச்சியில் பிறையும், நெற்றியில் சுட்டியும், மூக்கில் மின்னியும், மிலாக்கும், காதில் குழை, கழுத்திலே அட்டியல். மார்பிலே முத்துமாலை, தோல்களிலே தோல்வளையும், கைகளிலே பதுமராக வளையல்கள், இடையிலே மேகலையும் தாரகைச் சும்மையும், கால்களில் சிலம்புகளையும் அணிவித்திருந்தனர். நெற்றியிலே திலகம் சிந்தூரம் செவ்வாய் நட்சத்திரம் போல ஒளிவீசியது. சேகரப் பூவையும் புன்னைப்பூவின் பொன்னிற மகரந்தப் பொடியையும் சேர்த்து வண்டோதரி கன்னங்களை பொன்னிறமாக்கி இருந்தனர் நாககன்னியர். வண்டோதரி அழகினைக் கண்ட மங்கையர் மயங்கித் தவித்தார்கள். உலகின் உத்தமப் பெண்ணான கற்பரசி வண்டோதரி மணமேடைக்கு மெதுவாக வந்து கொண்டிருந்தாள். வருகையில் மேகலையும், சிலம்புகளும், வளையல்களும் தாளத்துடன் மெல்லிய இசையாக ஒலித்தது. அடிமேல் அடிவைத்து அன்னம் போல மயன் மகள் வந்து மேடையில் அமர்ந்தாள். மாப்பிள்ளை பக்கம் விச்சிரவசு, கேகசியும், பெண் பக்கம் மயனும் நாகதேவியும் அமர்ந்தனர்.

அகத்தியரை திருமணத்தை நிறைவேற்றி வைக்குமாறு புலத்தியரும் மன்னன் மயனும் வேண்டிக் கொண்டனர். புலத்தியரை மணமகன் குலமுறையை கூறுமாறு அகத்தியர் கூறினார். பிரம்ம தேவரிலிருந்து இராவணன் வரை அவர் கூறினார். பின்னர் மயனை பெண்ணின் குலமுறையை சபைக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். மயன் தங்கள் தேவலோக தலைமுறையை எடுத்துரைத்தார்.

சுபவேளையில் வண்டோதரியை இராவணனுக்கு மாலையை அணிவிக்க அகத்தியர் பணித்தார். பின்னர் மயன் வண்டோதரியின் கையைப் பிடித்து தன் மகளை இராவணனின் கையில் ஒப்படைத்தார். மங்கள வாத்தியங்கள் முழங்கவும் வாழ்த்தொலிகள் வானுலகை எட்டவும் மலர் மாரி பொழியவும் தந்தை விச்சிரவசு கேகசியும் மகன் கையில் மங்கல நாணை எடுத்துக் கொடுக்க இராவணன் வண்டோதரி கழுத்தில் பூட்டினான். முனிவர்கள் ஆசீர்வதித்தார்கள். பிரம்மா ஆசீர்வதித்தார். தேவர்கள் ஆசீர்வதித்தனர். பெற்றோர் ஆசீர்வதித்தனர். அமைச்சர்கள் ஆசீர்வதித்தனர். எல்லோரும் தங்கமாலை, இரத்தினமாலை, முத்துமாலை, வைரமாலைகளை மணமக்களுக்கு பரிசளித்து வாழ்த்தினர். தேவ கன்னியர் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேருன்றி பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் ஆண்டுகள் பதினாறு பேறும் பெற்று மங்கலமாக வாழுமாறு வாழ்த்துப் பாடினார்கள். மயன் பொன்னாலான பூக்களால் மணமக்களை ஆசீர்வாதம் பண்ணினான். வந்திருந்தவர்களுக்கு பரிசில்கள் வழங்கினான். மணத் தம்பதிகளுக்கு மங்கல ஆரத்தி எடுத்தார்கள் நாக மங்கையர். மணத்தம்பதிகள் எழுந்து சென்று அகத்தியர் பாதங்களிலும் புலத்தியர் பாதங்களிலும் விச்சிரவசு முனிவர்

பாதங்களிலும் கேகசியின் பாதங்களிலும் பின்னர் மயன், ராணி பாதங்களிலும் வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றனர். மயன் குபேரன் மங்கலப் பொருட்களை பரிசளித்தனர். சங்கம், மத்தளம், மேளம், குழல், வீணை, யாழ், ராஜபேரிகை எல்லாம் ஒலித்தன.

மயன் முனிவர்களுக்கும், மாமன்னர்களுக்கும், மணமக்களுக்கும், மந்திரிகள், பெருமக்கள் மணவிழாவைக் காண வந்த தேவர் முதலிய எல்லோருக்கும் இனிய விருந்தளித்தான். (அதியாத்மராமாயணத்தில் இலங்கேசன் வண்டோதரி திருமணவிழா மாதோட்ட நகரில் நடந்தேறிய விபரம் காணப்படுகிறது.)

உரிமைப்போர்

இராவணன் தனது ஆற்றலை நிரூபிக்கும் வகையில் போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தான். அவன் விமானத்தில் உலகம் எங்கும் சுற்றி நாடுநகரங்களையும் அங்குள்ள மனிதர் வாழ்க்கைகளை பற்றி அறிந்தும் வந்தான்.

பாட்டன் மாலியவான் ஒருநாள் இலங்கேசனிடம் வந்தார். இலங்கேசா நீ இலங்காபுரி மன்னன் ஆவதற்கு சகல தகுதியும் பெற்றுள்ளாய். திரிகூட மலையின் வாரிசு நீதான். ஆற்றலும் வீரமும் வலிமையும் உள்ளவன். வயதான என்னைப் போரில் வென்று திரிகூடமலை இராச்சியத்தை குபேரன் அபகரித்துக் கொண்டான். எப்படியாவது நீ இலங்கைக்கு அரசனாக முடிசூட வேண்டும் என்றான்.

தாய் கேகசி, தன் தந்தை மாலியவான் பேச்சைக் கேட்டு விசனமுற்றாள். இப்பொழுது தானே திருமணம் முடித்து மனைவி வண்டோதரியுடன் திரிகூடமலைக்கு

இராவணன் வந்துள்ளான். அதற்கிடையில் போர் செய்ய வேண்டுமென்று கூறுவது சரியல்ல. நான் தற்பொழுது போரை விரும்பவில்லை என்று சொன்னாள். இருவர் பேசுவதையும் கேட்டுக்கொண்டிருந்த விச்சிரவசு பேசலானார். கேகசி திரிகூடமலை இராவணனுக்கு சேரவேண்டியதாய் இருக்கலாம். ஆனால் என் பிள்ளைகள் ஒருவரோடொருவர் போர் செய்வது அழகல்ல. புலத்தியர் மரபுக்கு நல்லதல்ல. எனவே இராவணா நீ சென்று குபேரனிடம் உன் நாட்டைக் கேள். அவன் தருவான் என் குமாரர்கள் ஒருவரோடொருவர் அன்பாகவும், ஒற்றுமையாகவும் இருத்தல் வேண்டும். இருந்தால் அவர்களை உலகில் எவராலும் வெல்ல முடியாது. எல்லாம் வல்ல சிவபெருமான் என் புதலவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும் என்று கூறி முடித்தார்.

தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்ற வாக்கிற்கிணங்க இராவணன் குபேரனிடம் சென்றான். தனக்கு சேரவேண்டிய திரிகூடமலை இராச்சியத்தை தனக்கு தருமாறு கேட்டான். இதனைக் கேட்ட குபேரன் பெரிதாக சிரித்தான். இராவணா இந்த நாட்டைப் போரில் வென்று கைப்பற்றினேன். யாரிடமும் கேட்டுப் பெறவில்லை. நாட்டைக் கேட்டுப் பெற முடியாது. வீரர்களுக்கு யாசிப்பது அழகல்ல. ஆகவே அரசுரிமை வென்ற எனக்கே சொந்தம் என்றான்.

இராவணன் சென்று பெற்றோரிடமும் மாலியவானிடமும் நடந்ததை தெரிவித்தான். தந்தை தூது அனுப்பியும் குபேரன் பாதி நாட்டைக் கொடுக்க சம்மதிக்கவில்லை. இதனால் கொதிப்படைந்த விச்சிரவசு முனிவர் இலங்கேசா மகாகைலாயம் சென்று தவமிருந்து சிவனிடம் ஈரேழு பதினான்கு லோகங்களை ஆளும் வரம் பெற்று வா என்று ஆசீர்வதித்து அனுப்பினார். இலங்கேசன்

மகாகைலாயம் சென்று தவமிருந்தான். சிவபெருமான் இலங்கேசன் முன் தோன்றினார். ஆனந்த பரவசத்தில் இலங்கேசன், பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் என் பரிபூராணந்தமே. ஆதியும் நீயே, அந்தமும் நீயே, பரம் பொருளே, பரமேசுவரா வெள்ளிமலை வாசா, உன் திருப்பாதங்களே சரணம் என்று வணங்கி துதித்தான். இலங்கேசா என்ன வரம் வேண்டும் கேள்? என்று கூறினார். எம் பெருமானே, என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும். வேறென்ன வேண்டும்? இறைவா, எப்பொழுதும் உன்னருகில் இருக்கவேண்டும். இலங்கேசா நீ காட்டும் அன்புக்கு மகிழ்ந்தேன். வேறு என்ன வரம் வேண்டும்? என்று சிவன் கேட்டார்.

முக்கோடி வாழ்நாளும் தேவர்களாலோ, அசுரர்களாலோ மிருகங்களாலோ வெல்ல முடியாத வலிமையும் ஈரேழு பதினான்கு லோகங்களையும் நான் ஆட்சி செய்தல் வேண்டும் என்று கேட்டான். அன்புக்கு கட்டுப்பட்ட சிவன் எல்லா வரங்களையும் வழங்கினார். இத்துடன் வில், அம்புகள், சந்திரகாசம் என்ற வாளையும் வழங்கினார். மட்டற்ற மகிழ்ச்சியுடன் மீண்ட இலங்கேசன் நேராக தந்தையிடம் சென்று ஆசீர்வாதம் பெற்றான். பேரனான புலத்திய சித்தரிடமும் குருவான அகத்தியரிடமும் சென்று பணிந்தான். பாட்டன் மாலியவானிடம் சென்றான். அவன் அகமகிழ்ந்து தன் படைகளையும் படைக் கலங்களையும் இராவணனுக்கு அளித்தான். மாமன் மாரீசனும் இராவணா எனது படைகளையும் ஆயுதங்களையும் நீயே எடுத்துக் கொள் எமது இராச்சியத்தை மீட்கப் போர் செய் என்று கூறினான்.

இராவணன் எல்லோர் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு அண்ணன்

குபேரனிடம் சென்று அண்ணா எனக்குச் சேரவேண்டிய ஆட்சியையும் அரசையும் என்னிடம் ஒப்படையுங்கள் என்று கேட்டான். அதற்கு குபேரன் இணங்க மறுத்து விட்டான். அண்ணா உடன்பிறப்புக்கள் அரசுரிமைக்காக ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வதும், போர் செய்வதும் நல்லதல்ல. எமது பகைமை மாற்றான் வெற்றிக்கே வழிகோலும் என்றான். இராவணனை இகழ்ச்சியாக குபேரன் எடுத்தெறிந்து பேசி உனது நாட்டை முடிந்தால் பேரிட்டுப் பெற்றுக்கொள் நாம் போர் முனையில் சந்திப்போம் என்று ஆத்திரத்துடன் கூறினான்.

போர் நடந்தது, இராவணன் வென்றான். அண்ணா எனது உரிமைக்காகவே போர் செய்தேன். உன்னை கொல்வதற்காக அல்ல, நீ என்றும்போல எங்களுடன் இருக்கலாம், என்றான் இராவணன். தோல்வியால் குறுகிப்போன குபேரன் நானும் சிவனை நாடி வரங்கள் பெற்று இலங்கையை விட சிறந்த நாட்டை அமைக்கப்போகிறேன் என்று கூறினான்.

இராவணன் முடி சூடல்

புலத்திய மகாசித்தர் இலங்காபுரி இராச்சிய சபையில் பேசலானார். இராவணனுக்கு முடிசூட்டல் வேண்டும் உடன் ஏற்பாடு செய்யுங்கள் என்றார். நவமணிகள், தங்கம், மூலிகைகள், மலர்மாலைகள், தூயவெண் பட்டாடைகள், தேர், பட்டத்துயானை, இரண்டு வெண்சாமரம், வீணைக்கொடி, வெண்கொற்றக்குடை, நூறு பொற்குடங்கள், நல்ல புலித்தோல் எல்லாவற்றையும் மண்டபத்தில் சேருங்கள் என்றார். அகத்திய குருவை அழைத்து வாருங்கள் என்றார். நகர வாயில்களையும் அந்தப்புர வாயில்களையும்

அலங்கரிக்கும் வேலையில் கும்பகர்ணன் ஈடுபட்டான். வீதிகள் எங்கும் கொடிகள் பறந்தன. மங்கள கும்பங்களை மங்கையர் வைத்தனர். வீதிகள் முற்றங்கள் மங்கல நீர் தெளித்து புனிதமாக்கினர். சிப்பந்திகள் புத்தாடை அணிந்து ஆங்காங்கே கடமை புரிந்தனர். மண்டபங்கள் மாலைகளாலும் தோரணங்களாலும் அலங்கரிப்பதனை விபிடணன் கவனித்தான். மங்கல வாத்தியர், பாணர்கள், இசைவாணர்கள், நடனமாதர்கள் எல்லாம் அரசவையில் ஆயத்தமானார்கள். நறுமலர்களின் வாசனையும், சுகந்த புகைகளின் நறுமணமும் நகர் எங்கும் பரவியது. மக்கள் மகிழ்ச்சியுடன் ஆடினார்கள், பாடினார்கள். நகர மாந்தர் இலங்காபுரியை அலங்கரித்தனர். கோட்டைகள், மதில்கள், கடைவீதிகள் எங்கும் கொடிகள் பறந்தன.

சித்தர்கள், முனிவர்கள், மற்ற நாடுகளின் மன்னர்கள் இந்திரன், குபேரன், உறவினர்கள் இலங்காபுரியில் வந்து சேர்ந்தார்கள். நல்ல சகுனங்கள் தென்பட்டன. இராவணன் தன் பக்தியினால் சிவனையும், பார்வதியையும் நோக்கி நோன்பிருந்தான்.

முடிசூட்டு விழா

அகத்தியர், புலத்தியர், விச்சிரவசு முதலிய முனிவர்கள் நறுமணமுள்ள தெளிந்த மருத்து நீரினால் இராவணனுக்கு முழுகச் செய்தார்கள். அகத்தியர் கட்டளைப்படி முறையே கன்னியர்களும், மந்திரிமார்களும் மங்கல நீராட்டினார்கள். அரண்மனை தலைமை மருத்துவன் சிறந்த மூலிகை ரசங்களால் முழுக்காட்டினான். எண்பேராய தலைவர்கள் மங்கல கும்ப நீராட்டினார்கள்.

(எண் பேராயம் - கணக்கர், கருமகாரர், கருமசுற்றம்,

கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரை வீரர் ஆகிய அலுவலர்கள்)

இரத்தினங்கள் இழைத்த பொன் மண்டபத்தில் பொன்னாலான ஆசனத்தில் இராவணனை உட்கார வைத்து வழிவழியாக வந்த இளஞ்சூரியனைப் போல ஒளிவீசிய இரத்தின முடியை மன்னன் மாலியவான் எடுத்துக்கொடுக்க அகத்தியர் இராவணனுக்குச் சூட்டினார். புலத்தியர் செங்கோலை இராவணன் கையில் கொடுத்தார். அண்ணன் குபேரன் பட்டத்து வாளை அணிவித்தான். வெண்கொற்றக் குடையை மகாதரன் பிடித்தான். நாக கன்னியர் வெண் சாமரம் வீசினார்கள். மந்திரிகள் பொன்னாபரணங்களை மேலாடையாக அணிவித்தார்கள். தாய் கேகசி முத்து மாலையை அணிவித்தாள். கந்தவர்கள் இன்னிசை பாடினார்கள். தேவகன்னிகைகள் நடனமாடினர். நாகவேந்தர்களும், அரசர்களும் மாலை அணிவித்து வாழ்த்தி பரிசுகளை வழங்கினார்கள். மகிழ்ந்த இலங்காபதி எல்லாருக்கும் பரிசுகள் வழங்கினார். எங்கும் வாழ்த்தொலிகள் ஏற்றொலிகள், பட்டத்துயானை மீதேறி நகருலா வந்தான் இராவணன். அணிந்திருந்த இரத்தினங்களும் பொன்னாபரணங்களும் இரவைப் பகலாக்கின. தன் இரு கைகளினாலும் பொற்குடத்திலிருந்து பொற்காசுகளை அள்ளி மக்களை நோக்கி வீசி எறிந்தபடி வந்தான்.

உ. சுந்தரகாண்டம்

அமராவதி, அளகாபுரியைவிட மிகவும் சிறந்தது இலங்காபுரி நகர். (என்று வால்மீகி தன் இராமாயணத்தில் புகழ்ந்து கூறுகின்றார்.) இலங்காபுரி அளகாபுரி இரண்டுமே அகத்தியருடைய வழிகாட்டலில் வடிவமைப்பில் குபேரனால் அமைக்கப்பட்ட நகரங்களாகும். அமராவதி நகரும் அகத்தியருடைய வழிகாட்டலில் இந்திரனால் அமைக்கப்பட்ட தாகும். திராவிட நாகரிகம் முதலில் இலங்காபுரியில் சிறப்புற்று விளங்கியது.அடுத்து இமயமலையில் குபேரனால் அமைக்கப்பட்ட அளகாபுரியிலும் சிறப்புற்று விளங்கியது. திராவிட நாகரிகமே. இலங்கேசன் குபேரனுடன் போரிட்டு தாய் நாட்டை கைப்பற்றி, புட்பக விமானத்தையும் தமதாக்கிக் கொள்கிறான்.

ஈழவள நாட்டின் தலைநகர் இலங்காபுரி, இலங்கைநகர், இலங்கைமாநகர், இலங்காபட்டினம், என்றும் அழைக்கப்பட்டது. பல்லாயிரமாண்டுகளாக உலக திராவிட மக்களின் இராசதானியாக திகழ்ந்துள்ளதை(பல நூல்களில்) காணலாம். வால்மீகி இராமாயணத்திலே இலங்கா புரியைப் பற்றிய பகுதியை சுந்தரகாண்டம் என்று குறிப்பிட்டதிலிருந்தே இலங்காபுரியின் சிறப்புக்கு அவர் கொடுத்த முதன்மை புலப்படுகிறது.

இலங்காபுரி

ஆளுமைமிக்க இலங்கேசனின் ஆட்சிக்காலத்தில் இலங்காபுரி மென்மேலும் பொலிவு பெற்று மிக்க வனப்புடன் விளங்கியதனால் அனுமன் இலங்காபுரி பற்றிகூறும் பொழுது, சிறப்புக்களுக்கு அமராவதி, அழகாபுரியை உதாரணம்

காட்டும் கவிகள், இலங்காபுரியை அறிந்திருக்கவில்லை என்றார். அறிந்திருந்தால் இந்த அதிசிறந்த நகரினையே உதாரணம் காட்டியிருப்பார்கள் என்று புகழ்கிறான். அனுமன் கண்ட இலங்காபுரி, வெகு தூரத்தில் வரும் போதே இலங்காபுரி ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் நகரம் போல மிக அழகாக காட்சியளிக்கின்றது. திரிகூடமலையின் நடுவிலே அமைந்த குன்றிலே மயன் என்ற சிற்பியினால் இலங்கைநகர் நிர்மாணிக்கப்பட்டது. இலங்கைநகர் கோட்டையைச் சுற்றி ஒரு மைல் அகலமான அகழி அமைக்கப்பட்டிருந்தது. அகழிகளில் தாமரை முதலிய மலர்கள் பூத்திருந்தன. அகழிகளின் மேல் பாலங்கள் காணப்பட்டன. நான்கு வாயில்களில் காணப்பட்ட பாலங்களை எதிரிகள் வந்தால் கோட்டைக்கு உள்ளே இழுத்துக் கொள்ளவும் வகை செய்யப்பட்டிருந்தது. நகரினைச் சுற்றி ஏழு மைல் அகலத்திற்கு பொன்னலான மதிலும் காணப்பட்டது.

இந்நகரமானது நூல் இடப்பட்டது போல நேராக தொடர்ந்திருப்பனவும் பொன்னால் பொருந்தி நுட்பமாக அமைந்ததாகவும் அழகு பொருந்தியனவுமான மனைகளான சிறந்த மணிகள் அனைத்தும் பதிக்கப் பெற்றதும் மேன்மை பொருந்திய இராவணனின் அரண்மனை ஒப்பில்லாத தலைமணி நடுவில் வைக்கப்பெற்ற பெருமை பொருந்தியது. இராஜவீதி மிகப்பொலிவுடன் விளங்கியது. நறுமலர்கள் உதிர்ந்து கிடந்தனவாம். தோரணங்களாலும் முத்துக்களாலும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பளிங்குக் கற்களால் செய்யப்பட்ட மாளிகைகள் வேறொரு பொருளின் ஒளிபட்ட அளவிலேயே தெரிவனவும், படாது போனால் தெரியாதனவாயும் அமைந்தன. பவளமாளிகை நீலமணி மாளிகை ஆங்கே தோற்றமளித்தது. அரண்மனை மதிலில்

காலயந்திரங்கள் (கடிகாரங்கள்) பொருத்தப்பட்டு இருந்தன. எங்கும் பொன் வெள்ளி நவமணிகள் ஒளி வீசிக் கொண்டிருந்தன.

கடலால் சூழப்பட்ட நகருக்குள்ளே கடற்காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது. உலகத்தின் செல்வம் எல்லாம் இலங்கை நகரில் குவிந்து கிடக்க காணப்பட்டது. (என அனுமன் வாயிலாகக் கூறுகின்றார். இலங்கைநகர் இன்றும் திருகோணமலை இலிங்கநகர் என மருவிக் காணப்படுகிறது. இந்நகரினை அண்மித்தே அன்றைய இலங்கைநகர் அமைந்திருந்தது. இராமனாலோ அன்றி காலவெள்ளத்தாலோ கடலில் மூழ்கிவிட்டது.) பட்டணத்தில் சுகாதாரக் கோட்பாடுகள் எல்லாம் மிகப் பொருத்தமாக அமைக்கப்பட்டு சிறப்புற்றிருந்தது. பட்டணத்தைத் துப்பரவாக வைத்திருப்பதில் நகரவாசிகள் பயிற்சிகள் மிகப் பெற்றவர்கள் என்பதால் சமுதாய மருத்துவம் சிறப்பாக பேணப்பட்டது, எனலாம்.

ஒவ்வொரு மாளிகையிலும் தேவமடந்தையரை நிகர்த்த இளமை துள்ளும் மங்கையர்கள் ஏழிசையை ராகபேதங்களுடன் இன்னிசை பாடிக்கொண்டிருந்தனர். நூபுரங்களின் ஒலியும் மேகலைகளின் ஒலியும் சேர்ந்து ஒலித்தன. சிரிப்பு ஒலியும் வீரகர்ச்சனையும் காதில் விழுந்தன. எங்கே பார்த்தாலும் ஒரே ஆரவாரமாய் இருந்தது. சில மாளிகைகளில் மந்திரங்களை செபித்துக் கொண்டிருந்தனர். இன்னும் சில மாளிகைகளில் தங்கள் அரசன் இலங்கேசனின் புகழையும் பெருமைகளையும் பெருமிதத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள். இராசவீதியைச் சூழ்ந்து சேனை நின்றுகொண்டிருந்தது. சேனா வீரர்களுக்கு நடுவிலே ஒற்றர்களும் உலவிக் கொண்டிருந்தார்கள். பற்பல விதமான ஆயுதங்களை ஏந்திக் கொண்டு வீரர்கள்

சஞ்சரித்தனர்.

மாளிகைகள் பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தன. போர் யானைகளும் போர்க் குதிரைகளும் தேர்களும் பல்லக்குகளும் அதிகமாகவும் ஆயுதம் ஏந்திய வீரர் பலர் காவல் புரிந்தும் அழகிய அரண்மனை காணப்பட்டது. இராவணனின் அரண்மனை வெகு எடுப்பாகவும் கம்பீரமாகவும் நின்றது. வெள்ளியாலும் பொன்னாலும் செய்த தோரணங்கள் அரண்மனையை அழகு செய்தன. பலவித வாயில்களும் அறைகளும் கொண்ட அந்த அரண்மனை சொர்க்கம் போல காட்சியளித்தது. வாயில் காப்போர் பணிவுடன் கண்காணிப்புடன் நின்று வாயில்களைக் காவல் புரிந்தார்கள். சந்தனம் அகில் முதலியவற்றின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. பேரிகை மத்தளம் சங்கம் முதலியவற்றின் நாதங்கள் சதா ஒலித்தன. நவரத்தினங்களின் ஒளியும் எங்கும் வியாபித்துப் பரவியது. தேர்கள் சதா வருவதும் போவதுமாக இருந்தன. இலங்கேசனது படுக்கையறையை பெண் வீராங்கனைகள் காவல் புரிந்தனர். பொன் மயமான படுக்கைகளும் தங்கத்தால் செய்யப்பட்ட உண்கலங்களும் தேனில் சமைத்த உணவுப் பொருட்களும் மிகுதியாக அங்கே இருந்தன. ஆயுதசாலைகள் நிலாமுற்றங்கள் இராவணனின் புயவலிமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் புட்பக விமானத்தின் அமைப்பும் வேலைப்பாடுகளும் ஆச்சரியப்படும் வகையில் அமைந்திருந்தன.

அந்தப்புரத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் தேனுண்ட மயக்கத்தில் அயர்ந்து தூங்கினார்கள். தேவமாதர்கள், கந்தர்வபெண்கள், அசுரபெண்கள், இயக்க கன்னிகள் எனப்பல வகையினப் பெண்கள் இருந்தனர். இவர்கள் இலங்கேசன்மீது பிரியம்கொண்டு வந்தவர்கள்

இரத்தினங்கள் இழைக்கப்பட்ட படுக்கையில் இலங்கேசன் உறங்கினான். பொன்னாடை அணிந்திருந்தான். ஒளியுள்ள குண்டலங்கள் காதுகளை அலங்கரித்தன. நறுமணம் கமழும் சந்தனம் உடல் முழுவதும் பூசியிருந்தான். அரக்குண்ட மயக்கில் நன்றாக தூங்கினான். அவன் கால்மாட்டில் காமக்கிழத்தியர் பலர் படுத்திருந்தார்கள். மதுவுண்ட மயக்கிலும் காம இன்பத்திலும் திளைத்துத் திளைத்துச் சோர்ந்து போய் அப்படி அப்படியே தம்மை மறந்து தூங்கினார்கள். நாட்டியத்தில் வல்ல பெண்ணொருத்தி அழகாக அபிநயம் பிடித்தவாறே படுத்து உறங்கினாள். மற்றொருத்தி தாமரைக்கொடி போல ஒரு வீணையைத் தழுவிக் கொண்டு தூங்கினாள். ஒருத்தி மத்தளத்தைத் தழுவியபடி நித்திரை புரிந்தாள். இவர்கள் இப்படி அயர்ந்து தூங்க மற்றொரு படுக்கையில் தனியாக ஒரு பெண் அயர்ந்து தூங்கினாள். அவள் அழகில் அந்தப் பள்ளியறையின் அழகு பன்மடங்கு சோபித்தது. அவளே பட்டத்துராணி வண்டோதரி. (அவளுடைய அழகில் மயங்கிய அனுமன் அவளே சீதையாக இருக்கலாம் என ஐயுறுகிறான்.)

பாகசாலையில் பற்பல விதங்களில் சமைத்த பல்வேறு இறைச்சிகள் இருந்தன. வெள்ளிக்குடங்களிலும் பொற்குடங்களிலும் பானவகைகள் இருந்தன. சில குடங்களில் மதுவகை நிரம்பியிருந்தன. சில குடங்கள் காலியாகவும், சிலகுடங்களில் மது பாதியும் காணப்பட்டது. அங்கேயும் பெண்கள் பலர் உறங்கினார்கள். மது தேன் மலர்கள் நறும்புகை சந்தனம் முதலியவற்றின் வாசனை எங்கும் வியாபித்துக் கொண்டிருந்தது. (என்று அனுமன் கண்டதாக கூறினான்.)

அரசபேரவை

தங்கமயமான தேரில் இலங்கைக் கோமான் புறப்பட்டு வந்தான். நானாவிதத்திலும் பகட்டாக உடையணிந்த வீரர்கள் ஆயுதபாணியாக இலங்கேசனின் தேருக்கு முன்னேயும் பின்னேயும் பக்கவாட்டிலும் சென்றார்கள். சிலர் தேர்களில் சென்றார்கள், சிலர் யானைகளில் சென்றார்கள். சிலர் குதிரைகளிற் சென்றார்கள். சிலர் நடந்து சென்றார்கள். சங்கம் பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கின. தேர்கள் செல்லும் ஓசையால் திசைகள் அதிர்ந்தன. சகல சம்பத்தும் நிறைந்த ராச வீதியில் மாகோன் கம்பீரமாக வந்தான். வீரர்கள் குடை பிடித்தார்கள், சாமரங்களை விசிறினார்கள். இலங்கேசுவரன் வாழ்க, இலங்காதிபன் வெல்க, அரசே வெற்றி பெறுக என்று மக்கள் வீதிகளில் நின்று அரசனை வாழ்த்தி கைகூப்பி வணங்கினார்கள். இத்தகைய வைபவச் சிறப்புடன் இலங்கையர்கோன் தன் அரச மண்டபத்தை அடைந்தான். தங்கத்தாலும் வெள்ளியாலும் தூண்கள் நாட்டி மயன் என்னும் சிற்பி அந்த மண்டபத்தை வெகு விமரிசையோடு நிர்மாணித்திருந்தான். மாசுமறுவற்ற படிகக் கற்கள் தரைமீது பதிக்கப்பட்டிருந்தன. தங்கத்தால் பூ வேலை செய்யப்பெற்ற பட்டு விதானம் மேலே கட்டப்பட்டிருந்தது. அறுநூறு வீரர்கள் அரச மண்டபத்தைக் காவல் புரிந்தார்கள். அந்த மண்டபத்தின் நடுவே வைடூரியக்கல்லான ஆசனம் இருந்தது. அதன்மீது பிரியகம் என்னும் மிருகத்தின் தோல் விரித்துத் திண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அரசன் சென்று அந்த சிறந்த ஆசனத்தின் மீது அமர்ந்தான்.

அரசன் மண்டபத்துள் பிரவேசிக்கையில் அமைச்சர் முதலாக அனைவரும் இலங்கையர்கோன் வாழ்க! இராவணேந்திரன் வாழ்க!! இலங்கேசுவரன் வாழ்க!!! என

வாழ்த்தினார்கள். நாட்டின் அறிஞர்கள் மருத்துவம் சோதிடத்தில் தேர்ச்சி பெற்ற திறமைசாலிகள் ஐம் பெரும் குழுவினர், (பெருமக்கள் குழு, அறவோர் குழு, மருத்தர் குழு, நிமித்தர் குழு, அமைச்சா குழு ஆகியவையாகும்.) எண் பேராயத்தினர். சித்தர்கள், தளபதிகள், வேளாளர்கள், பதினெண் குடி தலைவர்கள் எல்லோரும் சபைக்கு வந்திருந்தனர். சிலர் குதிரைகளில் வந்தனர். சிலர் யானைகளில் வந்தனர். சிலர் இரதங்களில் வந்தனர். சிலர் நடந்தும் வந்தனர். வந்திருந்தவர்கள் அனைவரும் புத்திமான்கள், காரியங்களை ஆராய்ந்து முடிவெடுப்பதில் திறமைசாலிகள், ஆற்றலும் திறமையும் மிக்கவர்கள், நுணுகி ஆராயும் இயல்புடையவர்கள். விபீடணனும் தேரில் சபைக்கு வந்து அண்ணன் பாதங்களைத் தொட்டு வணங்கினான். எல்லோரும் தத்தமது தகுதிக்கேற்ப ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். இலங்கேசனின் அரச சபை மிகுந்த சோபிதமுற்று விளங்கியது. ஒவ்வொருவரும் தகுந்த முறையில் ஆடை ஆபரணங்களால் தம்மை அலங்காரித்துக் கொண்டிருந்தார்கள். சந்தனம் பூசிக்கொண்டும், மாலை சூடிக்கொண்டும் அனைவரும் வந்திருந்த படியால் எங்கும் நறுமணம் கமழ்ந்தது. எல்லாரும் கம்பீரமாகவும் மன்னன் முகத்தைக் கவனித்தபடியும் இருந்தார்கள். வசுக்கள் மத்தியில் இந்திரன் போல இராவணேந்திரன் வீற்றிருந்தான்.

எல்லாரும் அவைக்கு வந்திருக்கிறார்களா? என்று முதலில் இராவணன் கண்ணோட்டம் விட்டுக் கவனித்தான். பிறகு சேனைத் தலைவன் பிரகதத்தனை நோக்கி சேனாதிபதி நால்வகைப் படைகளையும் அனுப்பி நகரை நன்றாகப் பாதுகாக்க ஏற்பாடு செய்துவிட்டு வா என்று உத்தரவிட்டான். அவ்வாறே ஏற்பாடு செய்துவிட்டு

பிரகதத்தான் திரும்பினான். அரசே உள்ளும் புறமும் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து விட்டேன். ஆகவே வேறு சிந்தனையின்றி கவனிக்க வேண்டிய காரியத்தை இனி கவனிக்கலாம் என்று கூறினான். இதன் பின்னர் இராவணன் சபையோரை நோக்கிப் பேசலானான். சபை கூடி ஆராய்ந்து சபையோரின் கருத்துப்படி மன்னன் ஆணை பிறப்பித்தான்.

நகர வீதிகளிலே மான்கள் அங்கும் இங்கும் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. குயில்கள் கீதமிசைத்தன. இலங்காபட்டினத்தைச் சுற்றியிருந்த கடலிலே மீன்கள் மின்னும் வாள் போன்று ஒளிவீசின. கடலலைகள் வெண்திரைகளாக ஓயாது காட்சியளித்தன. அடிக்கும் அலைகளால் கடற் செல்வங்களாகிய முத்து பவளம் சந்தனம் அகில் தேவதாரம் இலங்கா பட்டினத்தில் கொளித்தன. ஆங்காங்கே நடமாடிக் கொண்டிருந்த நகரவாசிகள் திண்மையும் கட்டழகும் வாய்க்கப் பெற்ற மேனியுடையவர்களாக இருந்தனர். உடலமைப்பில் நிறைவு பெற்றிருந்தனர். எனினும் பலபேர் வரம்பு கடந்த சுகபோகத்திலும் மதுபோதையிலும் சொக்கியிருந்தனர். அரக்கு என்பது மது. தேவகுலத்தில் பிறந்தாலும் மதுபோதையின் களிப்பில் எப்பொழுதும் காணப்பட்டதால் அரக்கர் எனப்பட்டனர்.

இலங்கேசனின் மாட்சிமை

இலங்காபுரி இலங்கேசன் காலத்திலேயே வரலாற்றுச் சிறப்புக்களைப் பெற்று அதி உன்னத நிலையில் திகழ்ந்தது. இலங்காபுரி வேந்தன் படைத்திருந்த பெருமைகள் அத்தனையும் கண்டு களித்த அனுமன் அதனை சிறப்புற வர்ணித்தான். இலங்கை வேந்தன் பராக்கிரமத்தின் வடிவம், கவர்ச்சிகரமான உடல், பண்பாட்டில் மேலோன்,

ஒழுங்குப்பாட்டுடன் நடந்து கொள்வதில் தேர்ச்சி பெற்றவன். ஆட்சி முறையில் ஒப்பற்றவன், திட்பமும் மனத்தெளிவும் வாய்க்கப்பெற்ற மந்திரிமாரின் பொருத்தமான தலைவன், வல்லமையே வடிவெடுத்த சேனாதிபதிகளுக்கு இறைவனாக இலங்கினான். தேவேந்திரனையே இராஜரீதியில் தோற்கடித்தவன். இலங்காபுரி வேந்தன் வியப்புக்குரிய ஒரு மூர்த்தியாவான். தகைமைகள் பல அவனிடம் திகழ்ந்து கொண்டிருந்தன. அரச படாடோபத்துடன் தங்கத்தால் இழைக்கப் பெற்ற விமானத்தில் ஊர்ந்து புறப்பட்டு அரசவைக் கூட்டத்திற்கு வந்தான். மிகப்பெரிய மண்டபத்திலே இராஜசபை கூடியது. இராச்சிய சபை காண்பதற்கு மிகக் கவர்ச்சியாக இருந்தது.

இராவணன் உலா வருகையில் அவன் மேனி பேரமைப்புடன் காணப்பட்டது. இலாவண்யம் நிறைந்திருந்தது. கட்டழகு வாய்ந்த உடல் மிகுந்த சௌந்தர்யத்துடன் காணப்பட்டது. மின்னொளி மௌலி பத்தும், பத்துச் சூரியர்கள் உதித்தது போல ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. அன்னக்குழாம் போன்ற பெண்கள் சுற்றி வரவும், அவர்களின் அணிமணிகள் ஒளிவீசவும், சிலம்பு கிண்கிணி மேகலை ஒலிக்கவும், அழகிய கயல் போன்ற கண்களையுடைய இயக்கியர், அரம்பையர், விஞ்ஞைய நங்கையர், நாகமடைந்தையர், சித்தநாரியர், அரக்கியர், கனிமொழி பேசும் மயில் போன்ற இளம் பெண்கள் சுற்றிவரவும், கரியவிழிகளும் மின்னல் இடையும் சிவந்த வாயினையும் குவிந்த கொங்கைகளையும் முங்கிற் தோள்களையும் உடைய பெண்கள் வெண்சாமரை வீசவும் ஆலவட்டம் ஏந்தவும் அரம்பையர் முதலிய தேவமாதர்கள் தமது கரும்பிலுமினிய குரலில் தாளத்துடன் பாடிவரவும் இராவணன் வருகை அமைந்தது.

இலங்காபுரியின் கோட்டையிலும், இலங்கேசனின் இரதங்களிலும், விமானங்களிலும் வீணைக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. எங்கும் தோற்காத வெற்றிக்கொடியாக மிளிர்ந்தது. ஈரேழு பதினான்கு உலகங்களிலும் வீணைக்கொடி ஒய்யாரமாவும் உல்லாசமாகவும், எப்பொழுதும் ஆடி அசைந்து இராவணேந்திரன் புகழை மீட்டியது. வீணைக் கொடியின் நாதம் இலங்காபுரி மக்களின் இதயத்தை மகிழச்செய்தது. இலங்கேசனும் வீணையை மீட்டி, அதில் இலயித்திருப்பான். வீணை அழகின் உருவம், சாந்தியின் சின்னம், இதயத்தின் ஒலி, இனிமையின் நாதம், மென்மையின் லாவகம், இன்னும் எத்தனையோ உயர்ந்த பண்புகளைக் கொண்டது. வீணையை இலங்காபுரியின் இலச்சினையாக கொண்டவன் இலங்கேசன். இலங்காபுரியின் அரண்மனையிலே பல மண்பங்கள் சிறப்புடன் திகழ்ந்தன. அத்தாணி மண்டபம், மன்னர்கள் திறை செலுத்தும் மண்டபம், புலவர்கள் கூடி தமிழ் ஆராயும் மண்டபம், இசைக் கலைஞர் பாட்டிசைக்கும் இசை மண்டபம், நடனமாதர்கள் அபிநய பாவங்களை காட்டும் நாட்டிய மண்டபம், சிற்ப ஓவியக்கலை மண்டபம், மருத்துவர் ஒன்று கூடும் மருத்துவ மண்டபம் மன்னர் இளைப்பாறும் மண்டபம், இரகசியங்களை விவாதிக்கும் மந்திர சபா மண்டபம் என்று அநேக மண்டபங்கள் இலங்காபுரியின் மாட்சிமையைப் பறைசாற்றின. உலகின் எல்லா அரசர்களுமே வருடத்திற்கு ஒரு முறை இலங்காபுரி வந்து தமது திறையை செலுத்திக் கொண்டிருந்தனர்.

புலத்தியரின் போதனை

இலங்கேசன் அத்தாணி மண்டபத்தில் அழகாக வீற்றிருக்கும் பொழுது புலத்திய சித்தர் ஒரு நாள் வந்தார். மன்னன் அவரை அன்புடனும் பண்புடனும் வரவேற்றான். தன்னுடைய பேரன் தேவலோகத்திற்கு அரசனை இந்திரனாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்து ஆசீர்வதித்தார். பின் அறிவுரைகளைப் பகரலானார். உனது கடமைகளை உரிய காலத்தில் நிறைவேற்று, நாளைக்குச் செய்யவேண்டியவற்றை இன்றே நன்றாக யோசித்து முடிவு செய், மற்றவர்களுடன் ஆலோசனை செய்து நீ எடுக்கும் தீர்மானம் அதனை நிறைவேற்று முன்னர் வெளியே தெரியக்கூடாது. எடுக்கிற முடிவு நிறைவேற்றப்பட்ட பின்னர் அல்லது நிறைவேற்றப்படும் பொழுதுதான் மற்ற மன்னர்களுக்கு அறியக் கூடியதாக இருக்கவேண்டும். அறிவுள்ளவன் சிக்கலான நேரங்களில் பெரும் உதவியாக இருப்பான். மனதில் உறுதி, எண்ணத்தில் தூய்மை, காரியத்தை நிறைவேற்றுவதில் சாமர்த்தியம் கொண்ட மந்திரி மன்னனுக்குப் புகழ் சேர்ப்பான். அரசனிடம் விசுவாசம், தளராத முயற்சி. குறையாத ஊக்கம், மனதில் தூய்மை படைத் தலைவனிடம் இருக்க வேண்டும். ஊழியருக்கு ஊதியம் அளிப்பதில் காலதாமதம் நிகழ்ந்தால் விசுவாசம் கெடும். மற்ற மன்னர்களின் எல்லா அதிகாரிகளையும் உனது மந்திரி குலகுரு, இளவரசன் தவிர்ந்த இரண்டாம் மட்ட அதிகாரிகளையும் உன்னுடைய ஒற்றர்கள் கண்காணித்து வரவேண்டும். எதிரிகளை வலிமை இழந்தவர்களாக எண்ணாமல் கண்காணிக்க வேண்டும். பெண்களுக்கு சரியான பாதுகாப்பு அளித்து, மரியாதையுடன் நடத்த வேண்டும். அவர்களை முற்றிலும் நம்பிவிடாமலும், இரகசியத் தைத் தெரிவிக்காமலும் இருக்க வேண்டும். விவசாயிகளும், வியாபாரிகளும் இடையூறுகளின்றி இருக்க வேண்டும்.

பணியாட்கள் அரசனை எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம், சந்திக்கவே முடியாது என்ற நிலைகள் தவறானவை. நடுநிலைதான் நன்மை பயக்கும். செலவு, வரவை மிஞ்சாமல் இருக்க வேண்டும். நன்னடத்தை உடைய ஒருவன் பொய்ச் சாட்சியினால் தண்டனைக் குள்ளாகாமல் இருத்தல் வேண்டும். குற்றவாளி விடுவிக்கப்படாமல் இருத்தல் வேண்டும். ஏழை, பணக்காரன் என்ற பாரபட்சமின்றி வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும். தவறாகத் தண்டிக்கப்பட்டவன் சிந்துகின்ற கண்ணீர் அரசனின் குலத்தையே அழிக்கவல்லது. இன்பத்தில் நாட்டம் கொண்டு, அறம் பொருள் குறைவு ஏற்படாமல் காக்க வேண்டும்.

அரசனாகிய நீ உன்னிடம் குறைகள் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். அவை நாத்திகம் பேசுதல், பொய் பேசுதல், காரணம் இன்றி கோபம் கொள்ளுதல், கவனக்குறைவு, காரியத்தை தாமதப்படுத்தல், அறிவாளிகளைச் சந்திக்காமல் இருத்தல், சோம்பல், புலன்களை அடக்காமல் இருத்தல், அரசின் நடவடிக்கைகளை தான் மட்டும் யோசித்தல், அறிவற்றவர்களைக் கலந்தாலோசித்தல், முடிவு செய்யப்பட்ட பணிகளை ஆரம்பிக்காமல் இருத்தல், இரகசியங்களைக் காப்பதில் அலட்சியம், எல்லோருக்கும் நன்மை புரிவதில் அக்கறையின்மை, ஒரே சமயத்தில் பலபக்கங்களில் போருக்குச் செல்வது ஆகும். இன்னும் தவிர்க்க வேண்டியவை வேட்டையாடுவது, சூதாடுவது, பகலில் உறங்குவது, வீண் பேச்சில் காலம் கழிப்பது, பெண்களோடு உறவு, குடிப்பழக்கம், நடனத்தில் ஆர்வம், இசைக்கலையில் காலம் கழிப்பது, வாத்தியம் வாசிப்பதில் நேரம் செலவிடுவது, தேசத்தை விட்டு வெளியே செல்வதும் ஆகும்.

அரசனாகிய உனக்குப் பகைகள் ஏற்படலாம். அவை வேண்டுமென்றே பகையை வளர்ப்பவர்களால், பொருளாசையினால், பெண்களினால், சுடு சொல்லால், தீங்கு செய்வதால் ஏற்படுபவைகளாகும். செய்யக் கூடாத காரியத்தில் முனைவது, செய்யவேண்டிய காரியத்தில் முனையாமல் இருப்பது, செய்யவேண்டிய வற்றினை காலதாமதம் செய்வதும் தவிர்க்கப்படவேண்டும்.

அரசன் கையாள வேண்டிய வழிகள் இணங்கிப் போதல், கொடுத்துச் சரிசெய்தல், வேறுபடுதல், தண்டித்தல் ஆகும். மேலும் எதிரிகளை பிளவு படுத்துவதும், நட்புக் கொள்வதும் முறையாகும் என்றும் தெரிவித்தார். நல்ல புத்தி சொன்னதை அகமகிழ்ந்து ஏற்று நன்றி தெரிவித்தான் இலங்காதிபன்.

இலங்காபுரியில் உருக்கிய தங்கத்தின் நிறம் கொண்ட இளம் பெண்மணிகள் பலர் இருந்தனர். எல்லோருமே அழகு நிரம்பியிருந்தனர். மாளிகை, அரண்மனை, அந்தப்புரம் எல்லா இடங்களிலும் மக்கள் ஆனந்தமாக பாடிக்கொண்டும், விளையாடிக்கொண்டும் இருந்தனர். தெய்விக மயமான இலங்கை நகர் சுவர்க்கம் போலக் காட்சியளித்தது. அந்தப்புர மங்கையர் ஒருவரைக் காட்டிலும் மற்றவர் சௌந்தர்யம் அதிகமானவர் போன்றிருந்தனர். அந்தப்புரத் தலைவியைக் கண்ட அனுமன் அவள் சீதை என தடுமாறுகிறான். தாயைப்போல பிள்ளை, பிள்ளையைப் போல தாய். சில இடங்களில் பக்தி இசை ஒலித்துக் கொண்டிருந்தது. அவ்விசை மன திருப்தியை உண்டுபண்ணியது. இன்னும் சிறந்த பாங்கிலே இனிய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். நன்கு இரசிக்கக் கூடிய இசைப் பாடல்களை இராகம் தாளம் முதலிய

ஒழுங்குகளோடு பாடும் இசைக் கலைஞர்கள் பலர் இருந்தனர். வீணை, யாழ், மேளம், சூழல், மத்தளம், முதலிய பல இசைக் கருவிகளின் ஒலிகள் மனதை இலயிக்கச் செய்தன. மக்கள் கவர்ச்சியான உடல் அமைப்பும் நடையுடை பாவனைகளையும் கொண்டிருந்தனர். ஆங்காங்கே பூங்காக்களும் சிங்காரத் தோட்டங்களும் நகரவாசிகள் படைத்திருந்த அழகுப் பண்புக்கு அறிகுறிகளாயின. நகரின் நடுவே பெரிய சிவாலயம் அமைந்திருந்தது. கோட்டைக்கு வெளியெ அமைந்த அசோகவனம் மிகவும் முக்கியமான இடமாகும்.

அசோகவனம்

சோகத்தினை மறுக்கும் அமைப்புக்கள் கொண்ட பூங்கா அசோகவனமாகும். சுற்றுமதிலுடன் கூடியும் வீரர்களினால் காவல் செய்யப்பட்டும் இருந்தது. சுகபோகத்தை நாடுபவர்களுக்கு அதற்கேற்ப உணர்ச்சியை ஊட்ட வல்லது. இயற்கையின் மகிமைக்கு விளக்கமாகும். இயற்கையின் வனப்பும் வல்லமையும் இப்பூங்காவில் ஒன்றுகூடி திகழ்ந்திருந்தன. பூமியில் புதைந்து கிடந்த நவமணிகள் அலங்காரிப்பதற்கு தாராளமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. பூங்கா உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போகும் பாங்கில் அமைந்திருந்தது. மாறி மாறி வரும் பருவகாலங்களில் பூக்கவும், காய்க்கவும், பழுக்கவும் வல்ல மரவகைகள் வளர்க்கப் பட்டிருந்தன. பறவைகள், வண்டுகள், விலங்குகளுக்கும் மகிழ்வூட்டும் வனம் இது ஒன்றேயாம். இலங்கேசனுக்கு மிகவும் விருப்பமான ஓய்விடமாக அசோகவனம் அமைந்திருந்தது. மனைவிமாரோடு கூடிக்குலாவி இருப்பதற்கு வருமிடமாகும். மகிழ்ந்திருப்பதற்கு பொருத்தமான இடமாகும். (திருகோண

மலையில் அலஸ்தோட்டம் சூழலில் குறிப்பிட்ட அமைப்புக்கள் காணப்படுகின்றன.)

தமிழ்ப் பேரவை

தமிழ்ப் புலவர்கள் ஒன்றுகூடி அவை அமைத்து தமிழ் ஆராய்ந்தனர். இலக்கணம், யாப்பு பற்றி விவாதித்தனர். நூல்களை இயற்றி அரங்கேற்றினார். இவ்வாறு தமிழ் வளர்த்த புலவர்களுள் அகத்தியர், புலத்தியர், சேந்தன், செங்கோடன், நெடுந்துரையன், இராவணன் சிறப்பாக எடுத்துக் கூறப்படுபவர்கள் இலங்கையின் இரண்டாவது தமிழ்ப் பேரவையைச் சேர்ந்தவர்கள். இராவணேசுவரன் காலம் திரேதாயுகம் என்றே இராமாயணம் முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன. தமிழ்ச் சோதிடவியல் கணிதப்படி தற்பொழுது கலியுகத்தில் ஐயாயிரத்து நூறு ஆண்டுகள் சென்றுவிட்டன. துவாபரயுகம் பதினான்காயிரத்து நானூறு ஆண்டுகள் ஆகமொத்தம் பத்தொன்பதினாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது திரேதாயுகம் ஆகும். வரலாற்று அறிஞர்கள் இரண்டாவது தமிழ்ப் பேரவைக் காலம் 19998 ஆண்டுகளுகட்கு முந்தியது என தெரிவித்துள்ளார்கள். கி.மு. 24000 ஆண்டு முதல் கி.மு. 18000 ஆண்டுகள் வரை இரண்டாவது தமிழ்ப் பேரவைக் காலம் என்றும் வேறு சில அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். செங்கோன் என்ற ஈழத்து அரசனின் போர் வெற்றியைப் பாடும் "செங்கோன் தரைச் செலவு" என்ற நூல் சேந்தனால் இயற்றப்பட்டு, அகத்தியரால் பாயிரம் பாடப்பட்டு, இரண்டாவது தமிழ்ப் பேரவையில் அரங்கேற்றப்பட்டது. இங்கே சோதிடக் கணிப்பும், வரலாற்று அறிஞர்களின் கூற்றும் ஒன்றாக பொருந்தி வருவது கவனிக்கற்பாலது.

நாதத்தின் நாதன்

ஆயகலைகள் அறுபத்துநான்கிலும் வல்ல இலங்கேசன் இசைக்கலையிலும் மிகவும் சிறந்து விளங்கினான். இலங்காபுரியில் நரம்புக்கருவிகள், துளைக்கருவிகள், தோற்கருவிகள் எல்லாவற்றினதும் இனியநாதம் செவிக்கு இதமூட்டிக் கொண்டிருந்தது. *வண்டோதரி தன் தோழியிடம் மன்னருக்கு நாம் காத்திருப்பது தெரியாதா? இருந்தும் ஏன் இசைக் கருவிகளுடன் காலத்தைக் கழிக்கிறார்? இனிமையாக தாள இராகங்களுடன் பாடுவதில் மட்டுமல்ல* இசைக்கருவிகளை மீட்டுவதிலும் இராவணேசன் நல்ல தேர்ச்சி பெற்றவர். யாழ், வீணை போன்ற இசைக்கருவிகளை உருவாக்கி இசை நூல்களையும் இயற்றியுள்ளார். அவர் வீணை மீட்டி பாடினால் நான் உலகையே மறந்து விடுவேன். அவருடைய கலா இரசனை அளவிடமுடியாதது. இயற்கை எழில் கொஞ்சும் அசோக வனத்திலிருந்து இராவணேசன் வீணை மீட்டிப்பாடுவது வழக்கமாகும். அந்த இசையைக் கேட்டு கொடிய விலங்குகள், பறவைகள் ஈர்க்கப்பட்டு வந்து இலயித்திருக்கும், பாங்கியரும் சேடியரும் கூட அவ்விசையில் மயங்கித் திளைப்பார்கள். தமிழிசை பற்றியும் இசைநுணுக்கங்கள் பற்றியும் இராவணியம் என்ற இசைநூலை இராவணன் இயற்றியுள்ளார். தமிழிசை என்றால் நாதருக்கு உயிர் என்றாள். இலங்கேசன் எல்லாவற்றிலும் எப்பொழுதும் தானே சிறந்தவனாகவும், உயர்ந்தவனாகவும் வெற்றித் திருமகனாகவும் இருக்க விரும்பி விடாமுயற்சியுடனும், தளராத ஊக்கத்துடனும் அயராது உழைத்து அவற்றை அடைந்தவன். இசையிலும் தானே உயர்ந்தவனாக இருக்க விரும்பினான். இராவணன் சகல கலைகளையும் அகத்திய தாபனத்திலே கற்றான்.

அகத்தியரே எல்லாக் கலைகளிலும் வல்லவராகவும், சிறந்தவராகவும் மதிக்கப்பட்டார். அவரை வென்றால் தானே முதல்வனாகி விடலாம் எனத் துணிந்தான். குருவுடன் போட்டி ஆகாது என பலரும் தடுத்தனர். நாதமே வடிவான இசையே உருவான சங்கரனையே இன்னிசையால் வென்றவன் நான் குருவையும் வெல்வேன் என்றான். தோல்வி என்பதையே கண்டறியாத இராவணேந்திரன், அகத்தியரின் வலிமைமையையும், ஆற்றல்களையும், பெருமைகளையும் எண்ணிப்பார்க்க மறந்துவிட்டான். வரங்களின் வலிமையினால் இறுமாப்புற்றிருந்த இலங்கேசன் குரு என்றும் பாராமல் அவரைப் போட்டிக்கு அழைத்தான். அகத்தியர் மறுத்தார். போட்டி நடந்தது. நடுவராக இருப்பதற்கு அவர்களைவிட வல்லவர்கள் இல்லையாதலால் கல்மலையே நடுவராக பொதுவில் வைத்தார்கள். யாருடைய இசையைக் கேட்டு கல்மலை கசிந்து உருகுகின்றதோ அவரே வெற்றி பெற்றவர் என இணங்கினார்கள். இசையில் யார் வல்லவர்? யார் வெற்றி பெறுவார்? என அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு போட்டி உச்சமாக இருந்தது. அண்ட சராசரங்கள் அனைத்தும் அடங்கின. அகத்தியர் இசைக்கும் போது மலை கசிந்துருகி வெற்றியை அறிவித்தது. குருவின் மதிப்பை உணராமல் அவமதித்த படியால் நீ கற்ற வித்தைகள் தக்க தருணத்தில் பயன்படாது போகும், என் சீடனைக் கொண்டே உன்னை ஒடுக்குவேன் இராவணா என்றார் அகத்தியர். இச்சம்பவத்தினால் மனமுடைந்து அகத்தியர் தம் சொந்த ஊரையும் ஈழவள நாட்டையும் விட்டு நீங்கி குமரி கண்டம் சென்றார். (மலை பொதுவில் இருந்து இசைப் போட்டி நடந்த இடமே இன்று பொத்துவில் என அழைக்கப்படுகிறது.) இராவணன் மாணவனாகவும், உறவினனாகவும் இருந்தபோதிலும் அகந்தையான செய்கையால் வெறுப்படைந்து வெளியேறினார்.

இராவண சித்தர்

அரண்மனை மருத்துவ மாடத்தில் அரசனும் தலைமை மருத்துவன் சுசேணனும் இரசமணியை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். அரசே தாங்கள் சிவபக்தனாகவும், சிறந்த மருத்துவனாகவும், சித்தனாகவும் இருக்கிறீர்கள். சித்துக்களைப்பற்றி நானும் அறியலாமா? என்றான். சுசேனா என்னால் உருவாக்கப்பட்ட இரசமணியே அட்டமா சித்திகளுக்கும் மூல கருவாகும் என்றான். அதனை இலங்கைவேந்தன் குளிகை என்றே எல்லோரும் அழைக்கிறார்கள். சித்தர்கள் வேறு உருவத்தை எடுப்பதற்கும் கூடுவிட்டு கூடுபாய்தல் என்ற பிறர் உடலில் பிரவேசிப்பதற்கும் காண்டாமிருக கொம்பிலிருந்து தயாரித்த மருந்தினை உட்கொண்டு அதன் சக்தியினால் செய்து வருகிறார்கள். என் தாயார் கேகசி நோயுற்றிருந்த காலத்தில் குளிப்பதனால் நோய் நீங்கவும், இளமையோடிருக்கவும் வெட்டப்பட்ட கிணறுகளே கன்னியா குமரி தீர்த்தம் எனப்படும் வெந்நீருற்றுக்கள் ஏழும் ஆகும் என்றார். (போக மகா சித்தர் இராவணனின் மருத்துவச் சிறப்புக்கள் பற்றி போகர் ஏழாயிரம் என்ற நூலில் தெரிவித்தள்ளார்.) இராவணேசன் தமது மருத்துவக் கண்டுபிடிப்புக்களை மூன்று நூல்களாக எழுதியுள்ளார். அவை பொது மருத்துவம். குழந்தை மருத்துவம், மதுமருந்துகள் ஆகும். (இராவணச் சித்தரால் உருவாக்கப்பட்ட புதிய மருந்துகள் பல்வேறு மருத்துவ நூல்களிலும் காணப்படுகின்றன)

சுசேணன், "அரசே போரில் உயிர் காப்பதற்கு பயன்படும் மூலிகைகள் பற்றிச் சொல்லுங்கள்" என்றான். வெட்டுப்பட்ட உடலைப் பொருத்துகின்ற வெட்டொட்டி என்ற மூலிகை என்று கூறி மூலிகையை கையில் கொடுத்து

இலட்சணங்களைப் பார்க்கச் சொன்னான், வேந்தன். அரசன் இறந்து போனவர்களின் உயிரை மீட்பது அமிர்தசஞ்சீவி மூலிகை. சுசேணன், "வேந்தே இவற்றை எங்கே பெற்றுக் கொள்ளலாம்" என்றான். மேரு மலையில் மருத்துவ மலைப்பகுதியில் இவை வளருகின்றன. அசோக வனத்தில் பல அரிய மூலிகைகளை வளர்த்து வருகிறேன். மருத்துவ மாடத்தில் ஏடுகள் எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டன. அரச குடும்பத்தவர்களுக்கும் அரண்மனை ஊழியர்களுக்கும் அங்கு இலவச சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. நாட்டின் தலை சிறந்த மருத்துவர்கள் கூடி மருத்துவ விடயங்களை இம்மண்டபத்தில் ஆராய்வர். ஐம்பெரும் குழுவில் மருத்துவ குழுவும் ஒன்றாகும். நாட்டிலுள்ள மருத்துவர்களில் சிறந்த ஐவரை மன்னன் உறுப்பினராக நியமித்தான். நாட்டின் மருத்துவ விடயங்களுக்கும், போரில் காயப்படும் வீரர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும், மக்களை சுகதேகிகளாகப் பேணுவதற்கும் மருத்துவக் குழு பொறுப்பாக இருந்தது.

இராவணன் மணி, மந்திர, அவிழ்தம், இரச மருந்துகள், அறுவை மருத்துவம், வர்மக்கலை, அகாலமரண நூல் முதலியவற்றில் மிகத் தேர்ச்சி பெற்ற அறிஞன். மதுவினைப் பயன்படுத்தி முதன்முதலில் மருந்துகளைத் தயாரித்த பெருமை இலங்காதிபனையே சாரும். (சித்த நாகார்ச்சுனர் தமது இரசரத்தின சமுச்சயம் என்ற நூலில் இராவணனை பெருந்தொகையனை இரச மருந்துகளை உருவாக்கியவர் என்றும் திறமை வாய்ந்த சித்தர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.) இராம, இராவண போரின் போது இந்தியாவில் சஞ்சீவி மூலிகை அறியப்படவில்லை.

நாடுநகர நிர்மாணம் சுகாதார ஒழுங்கு விதிப்படி

அமைந்திருந்தது. நகரை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க நகர வாசிகள் நன்கு பயிற்றப்பட்டிருந்தார்கள். "களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் ஒருவரை யான் காணேன்" என அனுமன் இலங்காபுரிவாசிகளை வர்ணிக்கின்றான். எல்லோரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவதற்கும் நல்லாட்சி வேண்டும். குறைவற்ற செல்வம் வேண்டும். அதற்கும் மேலாக நோயற்ற வாழ்வு வேண்டும். தமிழர் மருத்துவம் காப்பு, நீக்கம், நிறைப்பு என முப்பிரிவுகளைக் கொண்டது. நோய் வராமல் காப்பது காப்பு. சுகாதார விதிகள், நோய்த் தடுப்பு முறைகள், மிக உயர்ந்த நிலையில் காணப்பட்டன. சிறந்த மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.

3. கைலாய காண்டம்

பெருவள நாட்டின் மத்தியில் மகாமேருமலை அமைந்திருந்தது. பூமத்திய ரேகையின் இருமருங்கிலும் இந்து சமுத்திரத்தின் நடுப்பாகத்தில் இலங்கையையும் உள்ளடக்கியதாக மகாமேரு அமைந்திருந்தது. (என திருமந்திரத்தில் காணப்படுகிறது.) அந்த மேரு மலையின் நடுவில் திரிகோணமலைக்கு வடகிழக்கே அண்மையாக அந்த மலைச்சிகரமே மகாகைலாயம் என அழைக்கப்பட்ட பரம்பொருளாகிய சிவனின் வாழ்விடமாகிய திருத்தலமாகும். வெண்பளிங்குக் கற்களால் அமைந்த வெள்ளிமலையில் நந்தி, பூதகணங்கள், சித்தர், முனிவர், சிவபெருமானுடன் இருந்தார்கள். (திரிகூடமலையின் இலங்கை நகருக்கும் திருக்கோணேசுவரம் என்ற தெட்சண கைலாயத்திற்கும் அண்மையிலே மகாகைலாயம் இருந்துள்ளதை இராமாயணம் தெரிவிக்கின்றது.) சஞ்சீவி எடுத்துவர இலங்காபுரியிலிருந்து அனுமன் ஆகாயத்தில் கிளம்புகையில் வடகுணதிசையில் தெரிந்த கைலயங்கிரியை நோக்கி சிவபக்தியினால் தன் தாமரைக் கைகளால் வணங்கினான். அதனை பார்வதிக்கு காண்பித்து சிவன் அனுமனை ஆசீர்வதித்தார். சம்புத்தீவின் நடுவிலே மேருமலை இருந்தது (என்கிறார் சுக்கிராச்சாரியார். கந்தபுராணத்திலும் மகாகைலாயம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.) அகத்தியர், புலத்தியர், இராவணன் சைவமுறைப்படி தமிழ்மொழியில் சிவ வழிபாடுகளையும் சடங்குகளையும் செய்து வந்தனர். ஆன்மீக நெறியில் மேம்பாடடைந்து இறைவனின் அருளைப் பெற்றவர்களே, மற்றவர்கள் இறையருளைப் பெறுவதற்கு வழிகாட்டும் ஐயராக இருந்துள்ளார்கள்.

ஒளிவீசிக்கொண்டிருக்கும் மகாகைலாயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானின் மேலான மங்கல குணங்களை வகுத்துச் சொல்ல யாராலும் முடியாது. ஆகாயத்தில் இருக்கும் நட்சத்திரங்களையும், உலகத்தில் இருக்கும் மணலையும், மழைத்துளிகளையும் எண்ணி முடித்தாலும் முடித்துவிடலாம். சிவபெருமானின் லீலா விநோதங்களையும் குணங்களையும் கணக்கிட யாரும் வல்லவரல்லர். சிவனின் மகுடத்தில் சந்திரன் ஒளிவீசிக்கொண்டிருந்தான். நெற்றிக் கண் திலகம் போன்று ஜொலித்தது. காதிலே பொற்குண்டலங்கள், மேல் முழுவதும் சந்தனம், பட்டுப்பீதாம்பரம். நவரத்தினங்களாலான நகைகளை அணிந்திருந்தார். யாராலும் வர்ணிக்க முடியாத சர்வாபரண அலங்கார உருவத்தோடு விளங்கினார். பூதகணங்கள் சகல வாத்தியங்களையும் முழக்கினர். தேவாதிதேவர்கள் மகேசுவரனுக்கு பணியாற்றி நின்றார்கள். பிரம்மா, விட்டுணு சேவித்துக் கொண்டிருந்தார்கள். அகத்தியர் முதலான ஏழு சித்தர்களும் மந்திர துதிபாடி ஆசீர்வதித்தார்கள். இந்திரன், ஆதித்தன், நதிகள், சமுத்திரங்கள், கந்தர்வர்கள், தேவதாசிகள், நாகர்கள், குபேரன் முதலான அட்ட திக்குப் பாலகர்கள் தொழுதும், பணிசெய்தும் நின்றனர். கோடிசூரியர்களின் காந்தியும் குளிர்ந்த பார்வையும் கொவ்வையிதழ் வாயில் குமிழ்சிரிப்பும் அழகான அணிமணிகளும் அதி உன்னத கிரீடங்களையும் தரித்து வீற்றிருந்தார். ஊழிக்காலத்தில் தாண்டவம் ஆடும் போது தன் உடலில் உருத்திராட்சமாலை அணிந்திருந்தாலும் தன் பக்தர்களுக்கு முத்துமாலைகளைக் கொடுப்பவர். தான் நீற்றினைப் பூசினாலும் தன் பக்தர்களுக்கு சந்தனம் முதலிய பரிமள சுகந்தங்களைக் கொடுப்பவர். தான் எருதை வாகனமாகக் கொண்டிருந்தாலும் தன்னைத் துதிப்பவர்க்கு யானை, குதிரை வாகனங்களைக் கொடுக்கிறார். தான்

சர்ப்பாரணங்களை அணிந்தாலும் தமது தொண்டர்களுக்கு மகர குண்டலாதி பொன்னாபரணங்களைக் கொடுக்கிறார். தான் சடாதாரியாக இருந்தும் தம் அன்பர்களுக்கு மணி மகுடத்தை வழங்குகிறார். தான் யானைத்தோலைப் போர்த்தியிருந்தாலும் பட்டுப் பீதாம்பரங்களை உடுத்த எமக்கு தருகிறார். தன்னை அடைந்தவர்களுக்கு அவரவர் விருப்பத்திற் கேற்றவாறு இகபரசுகபோகங்களை கொடுக்கிறார். அவருடைய மகிமைகளை தெரிந்து கொள்ளும் சக்தி ஒருவருக்கும் கிடையாது.

இலங்கேசன் சிவனை நோக்கி தவம் இருந்தான். "மகாதேவா பரமாத்மருபரே உமக்கு வணக்கம் சர்வருபா, மங்களதரா, பாவத்திலிருந்து காப்பவனே நித்தியா, நீலகண்டா, நீர்வடிவானவரே வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!! துக்கம் நேரிடும் போது முறையிட கட்டளையிட்ட தேவரீரே எங்களுக்கு உற்ற துணை, உம்மை வழிபட்டால் ஒழிய, எங்கள் துக்கங்கள் ஒழியாது, பிரம்மா விட்டுணுக்களுக்கு ஆதியானவரே, உலக பிதாவே, உயிர்களைக் காப்பவரே, வித்தைகளுக் கெல்லாம் நாயகனே, அணுவிற்கு அணுவாகவும், பெரியதற்கு பெரியதுமாய் உள்ளவரே, ஒன்றிலும் அகப்படாதவரே, கோடி சூரிய ஒளி பொருந்தியவரே, அநாதியானவரே, நீரே என்னைக் காக்க வேண்டும். ஐந்து திருமுகங்களை உடையவரே, திரிசூலத்தை ஏந்தியவரே, யாராலும் கண்டறிய முடியாத மென்மையான திருவடிகளை உடையவரே வணக்கம். வரமருள வேண்டும்" என போற்றித் துதித்தான். இலங்கேசன் தவத்திற்கு சிவபெருமான் காட்சி அளிக்காததால், தீ மூட்டி அதில் விழுந்து இறக்கப் போகையில், சிவன் இலங்கேசனின் கையைப் பிடித்து தடுத்து, "உன் தவத்தால் மகிழ்ந்தேன், வேண்டும்

வரத்தைக்கேள்" என்றார். "சங்கரா, தேவர்களுக்கு எல்லாம் மகாதேவனே, எங்களுக்கு இதமான வரங்களைத் தந்தருளும். உலகத்திலுள்ளவர்களை எல்லாம் வெல்லத்தக்க பலத்தை எனக்கு கொடுத்தருளும் என வேண்டித் துதித்தான். ஈரேழு உலகங்களையும் முக்கோடி வாணாளும் நான் ஆட்சி செய்ய வேண்டும். உம்மிடம் எப்பொழுதும் பக்தியுடையவனாக அருகிலேயே இருக்க வேண்டும், தேவர்கள் அசுரர்கள் விலங்குகள் முதலானோரால் நான் கொல்லப்படக் கூடாது" என்று வேண்டினான். சிவபெருமானும் சந்திரகாசம் என்ற வாள், சிவதனு, அம்புகள், வசம் ஆகியவற்றை வழங்கி அவ்வாறே வரமருளினார்.

நாரதர் சதி

இதனை அறிந்த தேவர்கள் தங்களுக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தையும் தொல்லைகளையும் கருதிப் பயந்தனர். நாரதரை அணுகி, சூழ்ச்சியால் இராவணனை ஒழிப்பதற்கு உதவுமாறு கேட்டார்கள். தேவர்களை காக்க, இராவணனை ஒழிப்பதற்கு தக்க உபாயம் செய்வதாக கூறிவிட்டு, நாரதர் இலங்கேசனிடம் சென்றார். சதி செய்ய வந்தவரை வரவேற்றான். "நாரதரே நான் சிவனருளால் சர்வவல்லமை பெற்றவனாக இருக்கிறேன் என்னை யாராலும் வெல்ல முடியாது" என்றான் இலங்காதிபன். அதைக்கேட்ட நாரதர் "இராவணா சிவபெருமான் ஆலகால விடத்தைக் குடித்து தன்னை மறந்த நிலையிலிருப்பவர், அவர் உனக்களித்த வரத்தை சோதித்து பார்த்தாயா? உனக்கு வரமளித்த சிவபெருமானிடமே உனது பலத்தை சோதித்துப்பார் முடிந்தால் உனக்கு கிடைத்த வரங்கள் கைகூடும் என்று அறிந்துகொள்" என நயவஞ்சகமாக

கூறினார். மகாசிவபக்தனான இராவணனை சிவனிடமிருந்து பிரித்து பேத்தை உண்டாக்க சதி செய்தார். இராவணன் வரபலத்தாலும், கரபலத்தாலும், தோள் வலியாலும், வாள் வலியாலும், கைலாய மலையை பெயர்த்து தூக்கினான். அதனால் அம்மலையில் இருந்த மரங்கள் குலுங்கின, அருவிகள் வழிதவறின, பிரம்மா நிலைதவறி விழுந்தார். மால் மயக்கமுற்றார். இவ்வாறு மூவுலகங்களும் நிலைகுலைந்து விட்டதைக் கண்ட சிவபெருமான் கடும் கோபமடைந்து இராவணா உன் தலையை துண்டித்துக் கரங்களை அறுத்து உன்னை வதம் செய்ய ஒரு மனிதன் உண்டாவான் என சபித்து விட்டதைக் கேட்ட தேவர்கள் மகிழ்ந்தனர். ஆனால் கைலையை தூக்கி நின்ற இராவணனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் அந்த சிவசாபம் ஒரு பொருட்டாக தெரியவில்லை. சிவ பெருமான் கொடுத்த வரம் கைகூடியது என்று மகிழ்ந்து மலையை இருந்தபடி வைத்துவிட்டுச் சென்று விட்டான். அன்று முதல் தேவர்களை வென்று அங்கும் தன் ஆட்சியை செலுத்தினான்.

அகத்தியர் பெருமை

திருமால், நான்முகன், இந்திரன், வீரபத்திரர், ஐயனார், பூதகணங்களுடன் மாப்பிள்ளை அழைப்பிற்காய் கைலாயம் வந்தனர். நந்திதேவர் புகழ்ந்துகொண்டு முன்னே சென்றார். சித்தர்களும், தேவர்களும், முனிவர்களும் வாழ்த்துக் கூறினார்கள். தும்புரு, நாரதர், விஞ்ஞையர், இன்னிசை பாடினார்கள். மேல் முழுவதும் சந்தனம், பட்டுபீதாம்பரம், நவரத்தினங்கள் இழைத்த பொன்னாபரணங்கள் அணிந்து யாராலும் வர்ணிக்க முடியாத சர்வாலங்கார உருவத்தோடு மணக்கோலத்தில் சிவன் விளங்கினார். இறைவன் எருதின் மீது ஏறினார். சூழ்ந்து

நின்றவர் ஆரவாரம் செய்து பேரொலி எழுப்பினார்கள். ஞாயிறு குடை பிடித்தான், சந்திரன் மகுடத்தில் ஒளிர்ந்தான், வாயு சாமரம் வீசினான், வருணன் சாந்தாற்றி சுற்றினான், இந்திரன் ஆலவட்டம் சுழற்றினான், பூதர்கள் சகல இசைக் கருவிகளையும் முழக்கினார்கள், மகா கைலாயத்திலிருந்து புறப்பட்டு இமயமலையை அடைந்தனர். பர்வதத்திலே மங்கையர்கள் எண்வகை மங்கலங்களைக் காட்டினார்கள். ஆரத்தி எடுத்தார்கள். எல்லா உலகத்திலிருந்தும் எல்லோரும் ஒன்றாக கூடியதால் இமயமலை நடுங்கியது, நிலவுலகம் வடபால் தாழ்ந்து, தென்பால் உயர்ந்தது, எல்லோரும் நிலை குலைந்தனர். தேவர்கள் ஓலமிட்டார்கள்.

சிவன் புன்முறுவல் செய்து அகத்தியரை அழைத்து வருக என்றார். அகத்தியர் வந்து வணங்கி நின்றார். சிவன், "அகத்தியரே யாவரும் இங்கே வந்து கூடினமையால் வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்துவிட்டது. உயிர்கள் எல்லாம் அஞ்சுகின்றன, உலகம் தடுமாறுகிறது, நீர் தென்னாட்டை யடைந்து அங்கு இருந்தால் உலகம் சமநிலை அடைந்துவிடும். ஆகையால் அங்கு சென்று இருப்பாயாக" என்று திருவாய் மலர்ந்தார். இதனைக் கேட்ட குறுமுனிவர் வருந்தினார். இறைவன், "நினக்கு ஒப்பானவர்கள் இவ்வுலகத்தில் இலர் நான்முகனும் உமக்கு ஒப்பாக மாட்டான். நீ உருவத்திற் சிறியை ஆயினும் பெருமையிற் பெரியை. நீ நினைத்தவை யாவற்றையும் தவறாது முடிக்கவல்லை. இவ்வரிய செயல் வேறு எவராலும் இயலாது. யாவரிலும் சிறந்தவனாகிய நின்னாலேதான் முடிதல் வேண்டும். நீ செல்லக்கடவாய்" என்றார். அகத்தியர், "யான் திருமணக் கோலத்தைக் காண்டல் இயலுமா? யாது செய்வேன்?" என்றார். "நாம் அங்கு வந்து எமது திருமணக் கோலத்தைக் காட்டுவோம், நீ மகிழ்வுடன்

பார்க்கலாம்'' என சிவன் இயம்பினார். இறைவன் திருவடிகளை வணங்கி புதியமலை சென்றார். உலகம் சமமானது. முத்தூரில் வந்து தங்கினார் இறைவனும் இறைவியும் மணக்கோலத்தில் எழுந்தருளி திருமங்கலாய் என்ற இடத்தில் காட்சி கொடுத்தனர். (திருக்கரசைப் புராணம் கூறுகிறது.)

வரையினை எடுத்த தோளான் இலங்கேசன் குபேரனுடன் போரிட்டு இலங்கை மாநகரையும் புட்பகவிமானத்தையும் கைப்பற்றினான். புட்பக விமானத்தில் ஏறிப் பறந்தான். விமானம் ஆகாயத்தில கிளம்பியதும் பறக்க மறுத்து நின்று விட்டது. ஆகாயத்திலே நின்றுவிட்டதால் ஏன் என இலங்கேசன் தலையை நீட்டி வெளியே பார்த்தான். கிழே மகா கைலாயம் காணப்பட்டது. நந்தி விமானத்தை பார்த்தார். மன்னன் விமானம் நின்றுவிட்ட காரணத்தை வினவினான். இது கைலைமலை இறைவனும் இறைவியும் உள்ளனர். கைலைமலைக்கு மேலால் யாரும் பறக்ககூடாது. விமானத்தை நான்தான் நிறுத்தினேன்.நீ மலையை சுற்றிபறந்து போகலாம் என்றார் நந்தி. அதுகேட்டு சினமடைந்த மன்னன் விமானத்தை விட்டிறங்கி கைலாய மலையைவெட்டித் தூக்க முனைந்தான். நந்தி புத்தி கூறித் தடுத்தார். குரங்கு முகத்தோடுள்ள நீயா எமக்கு அறிவுரை புகட்டுகிறாய் என நையாண்டி பண்ணினான் மன்னன். எம்மைப் பார்த்து குரங்குமுகம் என இழிவாக பேசியதால் குரங்கினால் உனது நாடு அழியும்,அப்போது உனக்கும் அழிவுண்டாகும் என நந்தி சினந்து சபித்தார். இலங்கேசன் கைலையை வெட்டித் தூக்கி வைத்துவிட்டு பறந்து சென்றான். இது இரண்டாவது முறை மலைபைப் பெயர்த்தது. (கந்த புராணம் வரை எடுத்த படலத்தில் காணப்படுகிறது.)

மகா கைலாயம்

இலங்காதிபன் தமிழ் இசை, நாட்டிய கலைகளில் நல்லஞானமுடையவன். காலையில் எழுந்து தினமும் புட்பக விமானத்தில் கைலைக்குச் சென்று சிவபிரானை பூசித்து வந்தான். இதனால் அரச சபைக்குச் செல்வதில் தாமதம் ஏற்படுவது குறித்து மிகுந்த வருத்தமடைந்தான். தாய் கேகசியும் வயது முதிர்ச்சியினால் தினமும் கைலை சென்று வழிபட சிரமப் பட்டாள். அதனால் கைலையை பெயர்த்து இலங்காபுரியில் வைக்க எண்ணினான். உடனே கைலைக்குச் சென்று மலையை சிவபிரான் பார்வதியுடன் அப்படியே தனது தோளினைக் கொடுத்தும் வாளினால் வெட்டியும் தூக்க முற்பட்டான். இதனால் கைலைமலை பலமாக அதிர்ந்தது. மலை மேலிருந்த சிவபிரான் இலங்கேசன் பக்தியையும் பலத்தையும் கண்டு மகிழ்வுற்றார். பார்வதியோ கைலை அசைவது கண்டு அஞ்சி சிவபிரானை சேர்த்தணைத்துக் கொண்டு மலை ஏன் அசைகிறது என்று வினவினாள்? சிவபிரானும் தனது சிறந்த பக்தனான இலங்கேசன் தான் வாழ்கின்ற இலங்கைக்கு கைலை மலையை பெயர்த்து எடுத்துக் கொண்டு போகிறான், என்றார். பார்வதி அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே சிவன் தன் கால் சுண்டு விரலால் மலையை மெதுவாக சிறிது அழுத்தினார். மலையைத் தூக்கிக் கொண்டிருந்த இலங்காதிபன் மலையின் இடையில் அகப்பட்டுக் கொண்டான். எத்தனை முயன்றும் விடுபட முடியவில்லை. தனது பலம் முழுவதும் கூட்டி தன்னை அழுத்தும் மலையைத் தள்ள முயன்றான், இயலவில்லை. முதல் இரு தடவைகளும் தூக்கியவனுக்கு வியப்பாக இருந்தது. கர்வகுணம் படைத்தவனாயினும் இலங்கேசன் சிறந்த ஞானி. மலை சிவனால் அழுத்தப்படுகின்றது என்பதை உணர்ந்து கொண்டான். நாதமே உருவான சங்கரன் இசைக்கு மட்டுமே

மயங்குவான். ஆதலால் பக்திஇசையில் பாடலாம் என்று முடிவெடுத்தான். மலை நெரித்ததினால் சிதைந்து போன கையை ஒடித்து கை நரம்புகளை வீணை நரம்புகளாக பிணைத்து வீணையாக மீட்டி பாடலான்.

செஞ்கடை வனத்திலிருந்து செல்லுகின்ற கங்கையால்
மிஞ்சுகின்ற புனிதமுற்று மிளிருகின்ற கழுத்திலே
நஞ்சுகொண்ட பாம்பணிந்து டம டம டம என
அஞ்சும் வண்ணம் ஒலி எழுப்பி உடுக்கை தாங்கி ஆடுவோய்

ஓங்குகின்ற மங்களத்தை உதவ வேண்டும் தேவனே
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

முடியெனும் பெருங்கலத்தில் முருகு கங்கை அலையெனும்
கொடி விளங்கும் உச்சியில் தக தக தக என
நெடி தொலிக்கும் தழல் சிவந்து நின்றிருக்கும் நெற்றியும்
வடிவிளம் பிறை சுமந்து சென்னி ஒன்றும் வாய்த்தவர்

உனதிடத்தில் கணங்கள் தோறும் உளம் நிலைக்க அருளுவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

இமயவேந்தன் இனிய செல்வி காதல் லீலைக் குறவதாய்
அமுத தீப விழியின் ஓர அழகு நோக்கில் மகிழ்வதாய்
கமழு மன்பு கனியும் பார்வை தடுத்த துன்பம் உடையதாய்
அமையும் நான்கு திசையின் ஆடை அணிந்திலங்கும் வடிவுளாய்

உன்னைக் கண்டு நெஞ்சில் என்றும் உவகை கொள்ள செய்குவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

தேவர் வந்து வணங்கும்போது சிந்துகின்ற மகரந்தம்
மேவுகின்ற பாத பீடம் மின்னுகின்ற வாசுகி
ஆவலோடு கட்டி நிற்கும் அழகு மிக்க சடைமுடி
ஓவியத்து வெண்ணிலா தரித்த சென்னி உடையவா

அறமும் நல்ல பொருளும் இன்ப வீடும் சேர அருளுவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

வானவீதி உலவுகின்ற வண்ண மேகக் கருமையும்
தேன்வடிக்கும் நிலவு முற்றும் தேய்ந்த நாளின் இருளதும்
கோன்மை கொண்டு சேர்ந்திருக்கும் கறுத்த கண்டம் கொண்ட நீ
யானை தந்த தோலுடுத்தி அகங்கலத்து நிற்கிறாய்
உயர்வு மிக்க மங்களத்தை உண்டு பண்ணி அருளுவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

குவளைப்பூவின் கரு நிறத்தைக் கொண்டிலங்கும் கண்டனே
தவறிழைத்த மதனொழித்தாய் தழலிட்டாய் முப்புரம்
புவன மீது பிறவி கொய்தாய் தக்கன் வேள்வி பொடித்தனை
கவலை தந்த கஜனைச் சுட்டாய் காலன் தன்னை அழித்தனை
உவகை பொங்க அருளை நாளும் உலக மோங்கப் பெய்குவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

ஓங்குகின்ற மங்களங்கள் உடைய தேவ தேவனே
பாங்குமிக்க கலைகள் ஆறு பத்தும் நான்கும் கூடிய
பூங்கொடிக்குள் ஊறுகின்ற புதுரசத்தை மாந்திட
ஏங்கி இன்பம் நுகருகின்ற வண்டு போன்ற ஈசனே
உம்மை என்றும் ஏற்றுவேன் உள்ளதில் வைத்துப் போற்றுவேன்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

ஆற்றலோடு சுற்றுகின்ற அரவ முச்சில் வெளிப்படும்
காற்றினாலே விளங்கி நின்று கயவருக்கு கெடுதலைத்
தோற்றுவிக்கும் நெற்றி ஜோதி துலங்குகின்ற தூயனே
நாற்றிசைக்கும் திமிம் ஒலித்து நடனமாடும் நாதனே
உலகம் தன்னில் எவற்றினுக்கும் உயர்ந்து நித்தம் இயங்குவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

மலரும் கல்லும் பாம்பும் முத்தும் மணியும் மண்ணின் கட்டியும்
நலமும் பிறவும் நட்பும் பகையும் துரும்பும் கமலக் கண்ணியும்
உலகின் அரசும் குடிகள் தாமும் உயர்வும் தாழ்வும் ஒன்றென
அலையும் மனது கருதும் நிலையை அளிக்க வேண்டும் ஐயனே
ஒன்றி நிற்கும் உளத்தைத் தாங்கி உன்னைப் போற்ற அருளுவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

தேவகங்கைக் கொடி பறக்கும் குடிலை தன்னில் திகழுவோய்
பாவ எண்ணம் போக்கிக் கைகள் கூப்பி நின்று படரொளி
மேவும் நல்ல உமையின் நெற்றி மிளிருகின்ற சிவ எனும்
சீவனான மந்திரத்தை தினமும் ஓத அருளுவாய்
ஓதி ஓதி இன்பம் எய்தி ஓங்க நாளும் உதவுவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

தூய தேவலோக மாதர் தலையில் சூடும் சுகமலர்
பாய நல்கும் தேனினாலே படரும் மேனி அழகினாய்
ஓய்தலின்றிப் பகலும் அல்லும் உண்டு பண்ணி உயிரினம்
நேய அன்பில் நெகிழ்ந்து நின்று நிதம் களிக்கச் செய்குவாய்
உள்ளம் கொள்ளும் மகிழ்வினூடே உன்னைக் காண அருளுவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

ஊழித்தீ போல் ஒளி பெருகித் தீயவற்றை ஒழிப்பதாய்ச்
சூழும் பெண்கள் கூடி ஆடித்தொழுது பாடும் சிவ எனும்
வாழும் சீவ மந்திரத்தை அணியதாகக் கொண்டதாய்
ஆழ நோக்கும் விழியமைந்த அன்னை உமை மன்றலில்
ஆழி சூழ்ந்த புவியில் வந்த அருமை மிக்க ஒலியது
பாழறுத்து வெற்றி சேர்த்து பயன் பெருகச் செய்குவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

சடையடைந்த ஒளியின் வெள்ளம் தக தகக்கும் படமணி
படையல் செய்யும் குங்குமத்து குழம்பு தோய்ந்த திசையெனும்
மடைந்த மாலின் வதனத்தோடு கொழுப்பினால் இருண்ட கண்
உடைய அந்த கஜனின் தோலில் உடையணிந்த அழகனே
அசைவதான அசைவதற்ற அனைத்தினிற்கும் நாயகா
நசை தவிர்த்து மனம் வியக்கும் நற்களிப்பை அருளுவாய்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

நெற்றி என்ற சந்தி தன்னில் ஒளிருகின்ற நெருப்பினால்
சுட்டெரிந்து போன காமன் தொழுது நிற்கும் இந்திரன்
வட்ட நிலாக் கீற்றிலான வண்ண மிக்க தலையணி

மட்டிலாத கங்கை பாயும் மாசிலாத சடையுடன்
தெட்டறுந்த மண்டை ஓடும் உடையதான ஒளியினைக்
கட்ட முற்றும் கலைந்து போகக் கருதி நல்க வேண்டுமே
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

நெற்றி என்ற தவிசில் நின்று நெஞ்சில் அச்சம் ஊட்டியே
சுற்றி எங்கும் ஒலித்த தீயில் காமன் தன்னைச் சுட்டவா
உற்ற தேவிக் கிட்ட பொட்டில் உத்தி கண்ட ஓவியா
பற்றி உன்னைப் பாடி நிற்கப் பண்ண வேண்டும் பரமனே
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

என்ற பாடலைப் பாடலானான். சடாமுடியைத் தரித்தவனே, இடது புறம் மிகவும் இனிமையானவரும் உலகிலேயே மிகவும் நாணம் மிகுந்தவளுமான பார்வதியை வைத்து இருப்பவரே, தொங்குகின்ற மிருதுவான பாம்பினை மாலையாக அணிந்திருப்பவரே, டம டம என்று டமருவிலிருந்து பொங்கி வருகின்ற நாதத்தினால் உந்தப்பெற்று சகாரத் தாண்டவம் என்கிற நடனத்தினை ஆடுகின்ற இறைவனே என்னைப் பற்றியுள்ள இந்தத் துன்பத்திலிருந்து காப்பாற்றுவாயாக என்று பாடினான். இராவணன் சிறந்த அறிஞன் அறுபத்தினான்கு கலைகளிலும் சிறந்த புலமையுடையவன். அவன் பாடிய பாடலில் தொனித்த சந்தம் சுண்டுவிரலை அழுத்திக் கொண்டிருந்த பரமசிவனை ஈர்த்தது. சந்தத்திற்கேற்ப மெல்ல உடல் அசைக்கலானார். சிறிது நேரத்தில் சுண்டு விரலின் அழுத்தம் குறைந்தது. இராவணன் தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்தான். பரமசிவன் முன் சென்று வணங்கி தொடர்ந்து அதே பாடலைப் பாடினான். பாடலின் பொருளும் அதற் தொனித்த சந்தமும் சிவனை மெல்ல ஆனந்த தாண்டவம் ஆடச் செய்தது. எல்லாம் வல்ல அந்த மகாதேவனை இராவணன் தனது இசையால் மயக்கியதும்

தலை சிதைந்தும் கை இழந்து நிற்பதும் கண்ட பரமசிவன் இராவணனின் தலையும் கைகளும் எத்தனை முறை துண்டிக்கப்பட்டாலும் வளரட்டும் என்ற வரத்தினைத் தந்தார்.

பின்னர் அதே போல ஒரு வாத்தியத்தினை செய்து அதற்கு இராவண வாத்தியம் என்றும் பெயரிட்டு இசைக்கலானான். இராவண வாத்தியம் இன்றும் வட இந்தியாவில் இசைக்கப் பெறுகின்றது. இந்தச் சம்பவத்தின் பின்னரே வெள்ளியங்கிரி கைலாயம் என அழைக்கப்படலாயிற்று. கை இல் ஆயம்- கைலாயம், இராவணனின் கை இல்லாமல் போனதாலேயே கைலாயம் என்ற காரணப் பெயர் உண்டாயிற்று. இலங்கேசனும் அழுத்தப்பட்டு அழுது வருந்திய காரணத்தால் இராவணன் என்றும் அழைக்கப்பட்டான். மூன்றாவது முறையும் இராவணன் வெற்றி பெற்றான். (கோணமாமலையின் படுகை, இராவண வெட்டு, வெள்ளை மலைத்தொடர், தெட்சிண கைலாச மான்மியம், தட்சிண கைலாச புராணம், நாவுக்கரசர் தேவாரம், திருமந்திரம், திருக்கரசைப் புராணம், இராமாயணம், கந்தபுராணம், ஆகியவைகள் மகா கைலாயம் திருக்கோணேசுவரத்திற்கு அண்மையாக இருந்து, இன்று மறைந்து விட்டது என்பதற்கு சான்று பகர்கின்றன.) இமயமலை அரசன் மகளாக பார்வதி தோன்றி சிவன் கைலையிலிருந்து சென்று மணமுடித்த பின்னரே பர்வதமலை உத்தரகைலை என அழைக்கப்பட்டது. எனவே உத்தரகைலை வேறு, தெட்சணகைலை வேறு, மகா கைலாயம் வேறாகும்.

மாயவனின் மாயம்

பெருவள நாட்டின் பேரரசனான இராவணன் கடுந்தவம் புரிவதில் வல்லவன். கைலாயம் சென்று ஆத்ம

லிங்கத்தைப் பெற்று வந்து இலங்கை நகரில் நிலை நிறுத்திவிட்டால் தன்னை யாவராலும் எதுவும் செய்துவிட முடியாது என்று அறிந்ததால், காற்றை உணவாகக் கொண்டு கடுந்தவம் புரிந்தான். மகாதேவா, பரம்பொருளே, பக்தர்களைக் காப்பவனே, மங்களத்தைத் தருபவனே, தலையில் சந்திரனைச் சூடியவரே, சடையில் கங்கையை தரித்தவனே, தயாநிதியே, கருணாமூர்த்தியே, தேவாதி தேவனே வணக்கம், வணக்கம் எனத் துதித்தான். இச் செய்தி தேவர்களுக்கு எட்டிய போது விட்டுணுவை நாடினார். விட்டுணு தான் இராவணனுக்கு ஆத்மலிங்கம் கிடைக்காமற் செய்வதாகக் கூறினார். சிவன் தவத்தினைக் கண்டு மகிழ்ந்து இராவணன் முன் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். அப்பொழுது விட்டுணு மாயையால் அவனுள் புகுந்து அவன் புத்தியை மாற்றி, சிவபெருமானே உமையவள் என் பின்னால் வரவேண்டும், என்று கேட்க வைத்தார். அதனைக்கேட்டு ஒருகணம் திடுக்கிட்டாலும், திருவிளையாடல்களில் வல்லவரான சிவபிரான் சமாளித்து, அழைத்துப்போ என சக்தியை அனுப்பி வைத்தார். உமையாள் தன்னைப் பின் தொடர்ந்து வருவதை எண்ணாமல் இராவணன் இலங்கை நோக்கிப் புறப்பட்டான். எப்பொழுதும் அன்னையாக என்னைத் துதிக்கும் இலங்கேசனுக்கு புத்தி பேதலித்து விட்டதா? என ஒன்றும் புரியாமல் உமையவள் பின்னே புறப்பட்டாள். குறுக்கே வந்த நாரதர் உமாதேவியாரே இப்படி இராவணன் பின்னால் எங்கே புறப்படுகிறீர்கள் எனக் கேட்டார். நாரதா இராவணன் தவமிருந்து என் நாயகரிடம் என்னைப் பின் தொடர்ந்து உமையவள் வரவேண்டும் என்று கேட்டான். அவரும் அப்படியே வரம் தந்து விட்டு என்னையும் விட்டு விட்டார். ஒன்றும் புரியாமல் நான் குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில் தான் நீ வந்தாய் என கவலையோடு கூறினாள். பரமேசுவரி

நடந்து என்ன தெரியுமா? இராவணன் ஆத்மலிங்கம் பெறவேண்டுமென சிவபிரானை எண்ணித் தவமிருந்தான். அது அவனுக்கு கிடைத்து விட்டால் தேவர்களுக்கு துன்பம் தரக்கூடியது என அறிந்த விட்டுணு மாயையாகி அவனுள் புகுந்து புத்தியை மாற்றி ஆத்மலிங்கம் கேட்பதற்கு பதிலாக தங்களைக் கேட்க வைத்து விட்டார். இதனால் தேவர்களுக்கு இலாபம் ஆனால் தங்கள் நிலைதான் பரிதாபமாக இருக்கிறது என்றார் நாரதர். இவர்கள் பேசியதைக் கேட்ட இராவணன் தான் ஏமாந்து விட்டதை உணர்ந்து உமையவளைப் பணிந்து வணங்கி கைலாயத் திற்கு அனுப்பிவிட்டு மறுபடியும் கடும் தவமிருந்தான்.

மாயவன் மாயையால் தான் தனக்கு சோதனை ஏற்பட்டது என்ற அறிந்த உமையாள் என்னை இராவணன் அழைத்துப் போக காரணமாக இருந்த விட்டுணு இராமாவதாரத்திலே மனைவியை பிரிந்து தவிக்க வேண்டும். அவர் மனைவியை இராவணன் கவர்ந்து செல்ல வேண்டும், என சாபமிட்டாள். பின்பு அச்சாபம் இராமவதாரத்தில் அப்படியே நடைபெற்றது. (என நாரதர் புராணம் கூறுகின்றது.) பார்வதியின் சாபத்தினால் தான், இராமன் மனைவி சீதையை இராவணன் கவர்ந்தான் என்பதும், விட்டுணுவே காரணம் என்பதும் தெளிவாகின்றது. பார்வதிக்கு பாவம் செய்த காரணத்தினால் இராம அவதாரம் என்ற பிறவி எடுத்து மனைவி சீதையை பிரிந்து தவித்தார்.

ஆத்மலிங்கம்

பார்த்திவ லிங்கத்தை வாசனைமிக்க மலர்களால் பூசித்து வணங்கி, இசைக் கருவிகளை மீட்டி நடனம் ஆடினான், தவமியற்றினான், சிவன் முன்தோன்றி வேண்டும் வரத்தைக்கேள் என்றார். மகாதேவா, நித்தியா, நிலகண்டா,

நீர்வடிவானவரே வணக்கம், அநாதியானரே, தேவரீரே நீரே என்னை காக்கவேண்டும். மகேசுவரா என் மனம் எப்பொழுதும் நீதியாக இருக்கவேண்டும். என் கீர்த்தியே உலகில் சிறப்பாக இருக்கவேண்டும். கைலயங்கிரியில் வசிப்பவரே, ஐந்து திருமுகங்களையுடையவரே, மங்களகரமானவரே, முக்கண்ணுடையவரே, சத்தியோசாத சொருபியே, இடபக்கொடியை உடையவரே, இடப்பாகத்தில் பார்வதியை இருத்தியவரே, பத்து திருக்கரங்களையுடைவரே, பரமானந்த ரூபியே, சிரோமாலையை தரித்தவரே, பிநாகவில்லையும், சிறந்த திரிசூலத்தையும் உடையவரே, யாராலும் கண்டறிய முடியாத மெல்லிய திருவடிகளை உடையவரே வணக்கம். ஆத்மலிங்கத்தை அருளி என்னைக் காத்தருள வேண்டும். சிவபெருமான் ஆத்மலிங்கத்தினைக் கொடுத்து இராவணா, இதை நீ இலங்கைநகர் செல்லும் வரை கையிலேயே வைத்திருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தப்பித் தவறிக்கூட கீழே வைத்துவிட்டால் அதை அப்புறம் பெயர்தெடுக்க முடியாது என்று கூறி அனுப்பினார். மீண்டும் தேவர்கள் கூடி சதி செய்தனர். இராவணன் லிங்கத்தை இலங்கை நகருக்கு எடுத்துச் செல்லாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நாரதரிடம் விண்ணப்பித்தனர். இராவணனுக்கு காலைக்கடன் கழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அருகில் தென்பட்ட சிறுவனிடம் சிறிது நேரத்தில் வந்துவிடுகிறேன், கீழே மட்டும் வைத்துவிடாதே, என்று கொடுத்தான். மூன்று முறை குரல்கொடுப்பேன் அதற்குள் நீங்கள் வரவில்லை என்றால் நான் கீழே வைத்துவிடுவேன் என்றான் சிறுவன். லிங்கத்தைக் கொடுத்துவிட்டு இராவணன் சென்றுவிட்டான். சிறுவனோ மூன்று முறை அழைத்துவிட்டு வராததால் ஆத்மலிங்கத்தை கீழே வைத்துவிட்டான். இராவணன் அதை எடுக்க எவ்வளவோ முயன்றான் முடியவில்லை, ஏமாற்றத்துடன்

இலங்கை நகர் திரும்பினான். (லிங்கம் வைக்கப்பட்ட இடம் கோகர்ணம் என்று மகாவம்சம் கூறும் திருக்கோணேசுவரம் ஆகும்.)

திருக்கோணேசுவரம்

இராவணன் கட்டிய் கோவில் திருக்கோணேசுவரம். திரிகோணமலையின் ஒரு மூலையில் தெட்சணகைலாயம் என்னும் இத்தலம் அமைந்துள்ளது.

சோமநாதபுரம்

சோமநாதபுரம் என்ற ஊரிலே முதலில் தங்கத்தினால் ஒரு சிவலாயத்தை தான் அப்பகுதியை ஆட்சி செய்த காலத்தில் இலங்கேசன் கட்டுவித்தான். அத்தலம் சோமநாதம், சோமநாத், பிரபாச பட்டினம் என்றும் அழைக்கப்படும் (வட இந்தியவிலுள்ள) இடமாகும்.

திருமுறைகளில் இராவணேசுவரன்

இறைவன் அருளைப்பெற்ற அருளாளர்களும் ஞானிகளும் இராவணனை சிவனடியாராக போற்றிப் பாடியுள்ளார்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருமூலர் மிகச் சிறந்த சிவபக்தனாக திருமுறைகளில் வெளிப் படுத்தியுள்ளார்கள். பண்டிதர்கள், புலவர்கள், கல்விமான்கள் எல்லாம் ஞானிகளாக முடியாது. இராவணன் வண்டோதரியால் பேணப்பட்டு வந்த திருக்கேதிசுவர நாதனை வழிபட்டு வரம் பெற்றான் என்பதை ஞானசம்பந்தர்

வண்டமரோதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி யுய்தான்

குலதெய்வமான கேதீச்சரத்தினைப் பாடிப் பணிந்து

வண்டோதரிக்கு நினைத்த மாத்திரத்தில் சிவன் காட்சி கொடுத்தாராம்.

மணிவாசகர் குயிற்பத்து பாடல்களில்

ஆர்கலி சூழ் தெனன்னிலங்கை யழகர் வண்டோதரிக்கும் பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானை

மங்களசுவாமி கூறினார் மெய்யடியார்களே! இலங்கையில் மங்கை நல்லாள் மாதர்குல மாணிக்கம் கற்பரசியான வண்டோதரி என்னைக்குறித்து தவம் இயற்றிக் கொண்டிருக்கிறாள். யான் அங்கு சென்று வருகிறேன். அதுவரை இந்தச் சிவாமங்களை பாதுகாப்பாக பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். என் திருமேனியை எப்பொழுது இராவணன் தீண்டுகிறானோ அக்கணமே இங்குள்ள அக்கினி தீர்த்தத்தில் ஒரு பேரோளியாகத் தோன்றி நான் உங்களுக்கு அருளுவேன் என்று கூறி மறைந்தார்.

தவத்தில் ஆழ்ந்திருந்திருந்த வண்டோதரி முன்னிலையில் சிவபெருமான் அழகே உருவான *குழந்தையாக தோன்றினார்.* அதைக் கண்ணுற்ற வண்டோதரி மெய் மறந்து போனாள். அங்கு வந்த இராவணன் அக்குழந்தையை எடுத்துக் கொஞ்சினான். அக்கணமே உத்தரகோச மங்கையில் அக்கினி தீர்த்தத்தில் ஓர் ஒளிப்பிழம்பு வெளிப்பட்டது. பரவசமடைந்த முனிவர்கள் ஒருவர் தவிர்ந்து எல்லோரும் சோதியில் பாய்ந்து நீரில் மூழ்கினர். மூழ்கியவர்களுக்கு சிவபெருமான் தேவி மங்களாம்பிகையோடு காட்சியளித்தார். முனிவர்களை லிங்கங்களாக உறையுமாறு அருள் செய்து நடுவில் தானே சகத்திரலிங்கமாக அமர்ந்தார்.

பின்னர் தீர்த்தக்கரையில் அமர்ந்திருந்த முனிவரை நோக்கி நாம் அளித்த சிவாகமங்களை உம் உயிரிலும் மேலாக கருதி நீர் காத்தீர், எனவே இவ்வூரின் பாண்டி நாட்டில் ஓர் பழம்பதியில் அவதரித்து மாணிக்கவாசகர் என்று அழைக்கப்படுவீர். உம்மால் சைவமும் தமிழும் தழைத்தோங்குவதாக என்று மங்கள நாதன் அருளி மறைந்தார். (எனவே மாணிக்கவாசகர் அவதரிக்க இராவணனே காரணமாக ஆனான். திருவாசகத்திலும் உத்தரகோச மங்கை தல புராணத்திலும் காணப்படுகின்றது.)

திருத்தாண்டகம்

இராமன் சிவபக்தனான இராவணனை சூழ்ச்சியால் கொன்ற பாவம் நீங்குவதற்காக இரா்மேச்சரத்தில் லிங்கம் அமைத்து சிவபூசை செய்து பூசித்தான் என்பதை நாவுக்கரசர் தேவாரத்தில் பாடினார்.

செங்கண் மால் சிலைபிடித்துச் சேனையோடும்
சேது பந்தனம் செய்து சென்று புக்குப்
பொங்கு போர் பல செய்து புகலால் வென்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கு ஒரு தன் திருவிரலால் இறையே யூன்றி
அடர்த்து அவர்க்கே அருள்புரிந்த அடிகள்
இந்நாள் வங்கமலி கடல்புடை சூழ் மாடவீதி
வலம்புரமேவு புக்கு அங்கு மன்னினாரே

இங்கே போரக்கன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான் இராவணன். இரக்கமின்றி அநேக போர்களை நடத்தியதால் அரக்கன் எனப்பட்டான்.

திருநீற்றுப்பதிகம்

திருநீற்றுப்பதிகத்தில் ஞானசம்பந்தர் "இராவணன் மேலது நீறு" என்று பாடியுள்ளார்.

திருவாசகம்

இறைவாத்தன்மை அருளி தமக்கு கைலாய வாகனமாக சேவிக்கும் பதவியை அளித்தனர். இறைவன் தன் ஒரு திருவிரலால் ஊன்றி அமர்த்தி இராவணனுக்கே அருள்புரிந்த திருப்பாதங்கள் என்று மணிவாசகர் பாடியுள்ளார்.

உந்து திரைக் கடலைக் கடந்தன் னேங்குமதில் இலங்கையுதன்
பந்தனை மெல் விரலாட அருளுறும் பரிசறிவார் எம் பிரானவரே.

அப்பர் தேவாரம்

இராமாயணங்கள் கூறுவது போல இராவணன் சிவனால் தண்டிக்கப்படவில்லை. திரு வடியினால் ஆசீர்வதிக்கப்பட்டு அருள் செய்யப்பட்டான். வரங்களும் பெற்றான் என்கிறார் நாவுக்கரசர்.

எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறை விரலால் வைத்துகந்த ஈசா போற்றி

திருமந்திரம்

தாங்கி இருபது தோளும் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
ஆங்கு தெரிந்து அமரா என்று அழைத்த பின்
நீங்கா அருள் செய்தான் நின்மலன் தாளே

வைத்தியநாத ஈச்சரம்

இராவணன் பரதகண்டத்திலே திசை உலா செய்து கொண்டிருந்த பொழுது நோய்வாய்ப்பட்டான். உடனே அவ்விடத்திலே லிங்கத்தை அமைத்து சிவபூசை செய்தான். நோய் நீங்கியது. அவ்வாறு பூசித்த இடம் வைத்தியநாத ஈசுவரம். அங்கு சிவன் கோவிலைக் கட்டினான். (வட இந்தியாவில் அமைந்துள்ளது வைத்தியநாதஈச்சரம் என்ற தலம்.)

4. இந்திர காண்டம்

இலங்காபுரி மன்னனாக முடிசூடிய இராவணன் தான் பேரரசனாகவும், இந்திரனாகவும் வர விரும்பினான். தான் கற்ற கலைகளினாலும், பெற்ற வரங்களினாலும் அடைந்த வலிமையினால் பூலோகம், மேல் உலோகம், பாதாளலோகம் முதலிய ஈரேழு பதினான்கு லோகங்களையும் இலங்காபுரியின் ஆட்சியின் கீழ் கொண்டுவர விரும்பி திசை உலா சென்றான். குலகுரு அகத்தியர், புலத்தியர் ஆகியோரைப் பணிந்து அவர்களின் ஆலோசனைக்கும் ஆசீர்வாதத்திற்கும் அமைய படைகளை நடாத்தி பெரு வெற்றிகளைக் குவித்தான்

அயோத்தியை வென்ற இலங்கேசன்

அயோத்தி நகரை அடைந்த இலங்கேசன், அரசன் அநரணியனைப் பார்த்து போர் புரிவதற்கு அஞ்சினேன் என்று சொல்வாய் அல்லது போர் புரிவாய் என்றான். அநரணியன் கோபாவேசமும், வீராவேசமும் கொண்டு இருவரும் பொருவோமாக என்றான். இருவர் படைகளும் பொருதின. அநரணியன் சேனையை இராவணன் அழித்தான். அநரணியன் சோனை மாரி போல இராவணன் மேல் பாணமாரி சொரிந்தான். இலங்கையர்கோன் அநரணியன் ஆவி சோர்ந்து பதைபதைக்கும்படி பணைத்து பெருத்த பாரப் பருங்கைகளினால் பலமாக அறைந்து உன்படைகள் நொறுங்கியது நீயும் அடிபட்டு விழுந்தாய் என்போருக்கு அஞ்சினாய் என்று கூறி இடிஇடித்தாற் போல பெருநகை செய்தான். அயோத்தி அரசன் ஏ கெடு மதியுடையவனே நான் தோற்றேன் என்று சொல்லிச் சிரித்தாயே நான்

முதுகிடவில்லை. என் தேகத்தைக் கொன்றாலும் என் வீரத்தைக் கொல்லல் இயலாது. வெற்றியிலும் வீரம் மேலானது. நீ என்னை இகழ்ந்து சிரித்தாயாதலால் என் குலத்தில் உதிக்கும் அரசனுடைய கொடிய பாணங்களால் உன் தலை அறுக்கப்பட்டு பூமியில் விழுந்து புரளுவதாக என்று கூறிச் சபித்தான் (என கம்பராமாயணசாரம் செந்தமிழ் இதழில் காணப்படுகின்றது. அயோத்தி ஏற்கனவே இராவணனால் வெல்லப்பட்டு அவன் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடாகும். யுத்தத்தினால் வெல்லப்பட முடியாத நகர் அயோத்தி என்பது இதனை அறியாதவர் கூற்றாகும்.)

தசமகுடதரன்

தேவலோகம், நாகலோகம், வருணலோகம், வாயுலோகம்,எமலோகம், அக்கினிலோகம், நிருதிலோகம், மேல்லோகம், பாதாளலோகம், ஈசானலோகம் ஆகிய பத்து லோகங்களையும் வென்று முடிசூடி இராவணேசுவரனாக ஆட்சி செலுத்தினான்.

பத்து உலோகங்களையும் வென்று அவற்றின் முடிகளைச் சூடிக் கொண்டதால் தசமகுடதரன் எனப் புகழ்பட்டான். மணிமுடி மௌலி பத்தும் அணிந்தான்.

அட்டதிக்கு பாலகரை வென்றான்

அட்டதிக்கு யானைகளையும் பொருதி அவற்றின் கொம்புகளையும் முறித்து அவற்றை அடக்குகின்றான். இந்திரன், குபேரன், வாயு, வருணன், அக்கினி, நிருதி, ஈசானன், எமன் ஆகியோரையும் திசை உலாவின் போது போரிட்டு வென்று அம்மணி முடிகளையும் சூடினான். இராவணன் இட்ட கட்டளைப்படி தான் வாயு வீச வேண்டும். அக்கினி எரித்தல் வேண்டும், வருணன் மழை பொழிதல்

வேண்டும். எங்கு மழை பொழியச் சொல்கிறானே, எப்பொழுது பொழியச் சொல்கிறானோ அப்பொழுது அங்கு மழை பொழிதல் வேண்டும்.

இந்திரனை வென்று தேவலோகத்தினை ஆட்சி செய்தபடியால் இராவணேந்திரன் என இந்திரப்பதவியும் பெற்றான். தேவர்கள் அடிமைகளாக அவன் விரும்பியவாறு இட்ட வேலைகளைச் செய்தனர், பயந்தும் பணிந்தும் நடந்து வந்தனர். இராவணன் ஆட்சியின் கீழ் வந்த நாகநாட்டினை கும்பகர்ணன் மணிமலையிலிருந்து ஆட்சி செய்தான். (நாகநாட்டின் மணிமலை, முல்லைத்தீவில் மண்மலை என்றும், கும்பகர்ணமலை என்றும் இன்று அழைக்கப்படும் இடமாகும்.) மணிமலையின் கொடியில் சிங்கம் இலச்சினையாக இருந்தது. மணி பல்லவமும் வன்னிநாடும் அன்று நாக நாடு என அழைக்கப்பட்டது. மணிபல்லவத்தை மாரீசன் கூடலில் இருந்து மாரீசன் கவனித்து வந்தான். இராவணன் தம்பியான கும்பகர்ணன் அறநெறிகளைக் கடைப்பிடிப்பவன். இறைவனை நோக்கி கடும் தவம் செய்தான். இராவணனைப்போல அபரிமிதமான வரங்களைப் பெற்றால் தங்களுக்கு விமோசனமேயிராது என்பதை உணர்ந்த தேவர்கள் சரசுவதியை நாடினர். அதன் பயனாக கும்பகர்ணன் சிவனிடம் நித்தியத்துவத்திற்குப் பதிலாக நித்திரைத்துவம் என வரம் பெற்றான். இருந்தாலும் அவனும் அதிவீரபராக்கிரமசாலி. ஒரு சமயம் இந்திரனை ஐராவதத்துடன் அப்படியே தூக்கி அடித்தவன். மிகுந்த பலமும் எழுந்து நின்றால் சூரியனை மறைக்கும் தோற்றமும் கொண்டவன்.

அக்கினி தேவனை வென்றான்

உலகில் எல்லாவற்றையும் எரித்து அழிக்கும் அக்கினி சில முனிவர்களுக்கும் பகவானாக விளங்கினான். வேள்விகளிலும் யாகங்களிலும், ஓமங்களிலும் அக்கினி வளர்த்து உயிர்ப்பலி கொடுத்து ஆகுதி சொரிந்து ஆசைகளை நிறைவேற்றி வந்தார்கள் முனிவர்கள். இது வேதநெறிக்கு எதிரானதும் புறம்பானதுமாகும். அக்கினி தேவனின் கொட்டத்தை அடக்குவதற்கு இராவணன் அக்கினி லோகத்திற்கு படை எடுத்து சென்றான். அக்கினியும் படைகளும் இராவணன் படைகளுடன் மோதினார்கள். இராவணன் படைகள் அக்கினியின் படைகளை எளிதாக அழித்து விட்டனர். ஆத்திரமடைந்த அக்கினி தீச்சுவாலை கக்கியபடி இராவணனுடன் போரிட்டான். இராவணன் படைகள் வெம்மை தாங்காது தளர்ந்தனர். இராவணன் உற்சாகத்துடன் தாக்கி பாணங்களை சொரிந்து திக்குமுக்காடச் செய்தான். அக்கினி அத்திரத்தை அக்கினி ஏவினான். வருணாத்திரத்தை விட்டு அதனை இராவணன் அவித்தான். இராவணன் பாணங்களினால் அக்கினியை அடைத்துவிட்டு அடித்து துன்புறுத்தினான். அக்கினி தான் தோற்றுவிட்டதாக கூறிப்பணிந்தான். இனிமேல் துட்டபுத்தி முனிவர்களின் வேள்வி யாகங்களுக்கு செல்லக்கூடாது, அவிப்பாகம் ஏற்கக்கூடாது, நான் எரியச் சொன்னால் தான் எரிய வேண்டும் என்று இராவணன் கட்டளையிட்டான்.

வாயு வேதனை வெற்றி கொண்டான்

மகாகைலாய மலையின் சிகரங்களைப் பெயர்த்து வீசியதால் பெருமையும் இறுமாப்பும் கொண்டான் வாயு. வாயுபகவான் என்று சிலர் போற்றித் துதித்தார்கள்.

இராவணன் ஆட்சியில் வாயு அழிவுகளை ஏற்படுத்தக் கூடாது தென்றலாக வீசவேண்டும் என்று வாயுவுக்கு கட்டளை பிறப்பித்தான். வாயு தன்னுடைய மாயாசால வேலைகளைக் காண்பித்தான், நிற்பான் நழுவுவான், ஓடுவான், புயலாக வருவான். இராவணன் கண்களில் பொறிபறக்க கடுங்கோபத்துடன் ஆயிரம் பாணங்களைத் தொடுத்து நகர வொட்டாமல் அடைத்தான். தன் கதையினால் துவம்சம் பண்ணினான். வாயுதேவன் தோல்வியை ஒப்புக் கொண்டு விடுதலை செய்யுமாறு வேண்டினான். இனிமேல் நான் எங்கு, எந்தளவில், எப்பொழுது வீசச் சொல்கிறேனோ அவ்வாறே நீ வீச வேண்டும். இலங்காபுரியில் தென்றலாக எப்பொழுதும் வீசவேண்டும் என்றும் வாயுவுக்கு இராவணன் கட்டளை பிறப்பித்தான். கட்டளைப்படியே நடப்பதாக பணிந்த வாயுவை இராவணன் விடுதலை செய்தான்.

இந்திரற்கு இந்திரன்.

உலகின் பல நாடுகளையும் வென்று பேரரசனாக, பெருங்கோனாக இலங்காபுரியில் இருந்து இலங்கேசன் ஆட்சி செய்து வந்தான். ஒருநாள் பேரனான மாலியவான் அரண்மனைக்கு வந்தான். இலங்கேசன் ஆரக்கட்டி தழுவி வரவேற்றான். இலங்கேசனின் வெற்றிகளை புகழ்ந்து பாராட்டினான். இலங்கேசுவரா இந்த வெற்றிகள் எல்லாம் உன் ஆற்றலுக்கும் புயவலிக்கும் அற்பமே. நீ பேரரசனாக ஆனது மட்டும் போதாது. நீ இந்திரனை வென்று நீயே இந்திரனாக முடிசூடிக் கொள்ள வேண்டும். ஒரே காலத்தில் பேரரசர்கள் பலர் இருக்கலாம். இந்திரபதவியை ஒருவர் தான் வகிக்க முடியும். உன் வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள் உடனே தேவலோகம் செல். பெரும் படையுடன் சென்று இந்திரனை வென்று வா என்று மாலியவான் தெரிவித்தான்.

மகாரதனை அழைத்து படைகளை அணிவகுக்கச் சொன்னான் மன்னன். தரைப்படைகளுடன் வான் படையும் சேர்ந்து அமராவதி சென்றது. திடீரென இராவணன் படையுடன் வந்ததும் தேவேந்திரன் திகைத்தான். இருந்தாலும் இந்த மனிதப்படையா தேவலோகத்தை வெல்ல முடியும் என்று தேவசபையைக் கூட்டி விவாதித்தான். அதற்கிடையில் இராவணன் படைகள் இந்திரனின் அரண்மனையை சூழ்ந்து கொண்டன. வச்சிராயுதம் இருக்கையில் எந்த எதிரியினாலும் என்னைத் தோற்கடிக்க முடியாது என எண்ணி இந்திரன் போர் முரசு அறைவித்தான். போர் ஆரம்பித்தது தேவசேனையை இராவணனின் எட்டுக்குதிரைகள் பூட்டிய தேர் கண்ணிமைக்கும் பொழுதுள் புகுந்து கலங்கடித்தன. இராவணனின் தளபதிகள் குதிரைகளிலும், யானைகளிலும் இருந்து படை நடத்தினார்கள். அவர்களின் வீரகர்ச்சனையில் தேவலோகம் அதிர்ந்தது. இந்திரனின் தளபதி சிறைப்பபிடிக்கப்பட்டான். படைகள் களத்தை விட்டே சிதறி ஓடின. மேகநாதன் இந்திரனை கட்டியிழுத்து வந்தான். அகம் மகிழ்ந்த தந்தை தன் முத்துமாலையை மேகநாதனின் கழுத்தில் போட்டு இந்திரசித்தன் என்று கட்டித்தழுவி வாயாரப் பாராட்டினான்.

தானியமாலினி

தேவலோகத்தில் வந்து மானிட மன்னன் நடத்திய போரையும், பெற்ற வெற்றியையும் கேள்வியுற்று இராசகுமாரி தானிய மாலினி ஆயுதபாணியாக போர்க்களம் புகுந்தாள். இந்திரனை வென்றவன் என்னையும் வென்ற பின் சிறைபிடித்துச் செல்லட்டும் என்றாள். இராவணன் தளபதி வாளும் வாய்ப்பேச்சுமாக வந்த தானிய மாலினியை தாக்கவில்லை. பெண்களை எதிர்த்து களத்தில் ஆண்கள் போரிடும் வழக்கம் தமிழர்களிடம் கிடையாது. பெண்களை

காதலுக்கும், ஆயுதங்களையும், போர்களையும் வீரத்திற்கும் பயன்படுத்தினார்கள். எனவே தேவலோக இராசகுமாரியை மன்னன் முன் அழைத்துச் சென்று விட்டான் தளபதி. அங்கே சென்றவுடன் இராவணனின் பேரழகு, கம்பீரம், மிடுக்கு எடுப்பான தோற்றம் தானிய மாலினியின் சிந்தனையைக் கலைத்து போரிடும் நோக்கம் மறைந்து விட்டது. இருந்தாலும் தான் மன்னனுடன் போரிட வந்ததாகவும், தன்னை வென்றபின் இந்திரனை சிறைக்கைதியாக கொண்டு செல்லலாம் என்றும் கூறினாள். அதை புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்த இலங்கை வேந்தன் பெரிதாகச் சிரித்தான். அச்சிரிப்பு தானிய மாலினியையும் சிரிக்க வைத்தது. தான் ஒரு பெரிய வீராங்கனை தேவலோகத்தின் மானம் காக்க வந்த தேவதை என்ற எண்ணம் மறைந்துவிட்டது. என்ன மன்னர் என்னைப் பார்த்து ஏளனமாக சிரிக்கிறாரோ? என்றாள் போலியான கோபத்துடன். மீண்டும் சிரித்தான் மன்னன். இராவணன் பேசலானான். போருக்கு வந்திருக்கும் பேதையே, இந்திரன் தோற்கடிக்கப்பட்டு சிறைபட்டுள்ளது தெரிந்துமா நீ என்னுடன் மோத வந்துள்ளாய்? நான் பெண்களுடன் போரிட என்ன பேடியா? எங்கள் வழக்கம் பெண்களுக்கு எதிராக ஆயுதம் எடுப்பதில்லை என்றான். இலங்காபுரியின் ஒரு சாதாரண படை வீரன் போதும் உன்னை தோற்கடிக்கவும், சிறைப்பிடிக்கவும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. என்னிடமே உன்னை அழைத்து வந்தார்கள். ஏன் தெரியுமா? நீ ஒரு பெண் தேவலோகத்தில் பெண்களை எதிர்த்து ஆண்கள் போரிடுகிறார்களா? வெட்கமாக இருக்கிறதே என்று மீண்டும் சிரித்தான். அந்தச் சிரிப்பில் மயங்கிய தானிய மாலினி அப்படி என்றால் தன்னையும் சிறைசெய்து இந்திராணியுடன் சேர்த்து அழைத்துச் செல்லச் சொன்னாள். உங்களை சிறை எடுக்க வேண்டிய அவசியம்

எங்களுக்கு இல்லை என்றான். அழகிய இராசகுமாரி யாரையாவது மணம் முடித்து மங்கலமாக வாழவேண்டாமா? என்றான் மன்னன். இதுவரை யாரையும் மணமுடிக்க வேண்டும் என்று எண்ணவில்லை. ஆனால் இப்பொழுது என்று இழுத்தாள். நீங்கள் யாரையாவது விரும்பினால் நான் மணம் முடித்து வைக்கிறேன் என்றான் மன்னன், தானிய மாலினி கேட்டாள் உங்கள் வாக்குறுதியை நம்பலாமா? பேச்சை மாற்றமாட்டீர்களா? என்றாள் மாலினி. இராவணேந்திரன் சொன்னால் அது சொன்னதுதான் சந்தேகம் ஏனோ? யாரை விரும்புகிறாய்? என்றான் மன்னன். மன்னா உங்களையே என் மனம் பெரிதும் விரும்புகிறது என்றாள் மாலினி. என்ன? உனக்குப் புத்தி பேதலித்து விட்டதா? நான் மணமானவன். எனக்கு மகாதேவி போன்ற வண்டோதரி பட்டத்துராணியாக இருக்கின்றாள். என்னால் உன்னை மணக்க முடியாது என்றான் மன்னன். இராவணேந்திரன் தந்த வாக்குறுதி, பேச்சு எல்லாம் பொய்தானா? என்னை ஏமாற்றி விட்டீர்களே. என்னை நீங்கள் மணக்கவில்லையானால் நான் தீயில் வீழ்ந்து இறந்து விடுவேன். அந்தப்பழி உங்களைச் சும்மா விடாது. மன்னர்கள் பல பெண்களை மணப்பதற்கு தடையில்லை. நீங்கள் வேண்டுமென்றே என்னை மணமுடிக்க மறுக்கிறீர்கள் என்று குமுறி அழுதாள். என்ராணி வண்டோதரியிடம் கேள் அவள் சொல்வாள் உனக்கு பதில், என்று கூறிவிட்டு மன்னன் புறப்பட்டான். ஆனால் தானியமாலினியோ தானும் கூடவருவதாக தொடர்ந்து இலங்காபுரிக்கு வந்தாள். வண்டோதரி இராவணனுக்கு மாலினியை மணமுடித்து வைத்தாள்.

தேவலோகத்துக்கு தமக்கு கீழ் மன்னனாக இருந்து ஆட்சி செய்வதற்கு மகன் இந்திரசித்தனை நியமித்தான்

இராவணேந்திரன். இந்திரசித்துவும் நல்லாட்சி நடாத்தி வந்தான். தேவலோக கன்னிகைகளான ஊர்வசி, அரம்பை, திலோத்தமை, மேனகை, காஞ்சனாமாலை இலங்காபுரியின் அரண்மனையில் சேடிகளாக ஆடிப்பாடி மன்னரை மகிழ்வித்தார்கள். இந்திராணி வண்டோதரியின் தோழியாக பணிபுரிந்து வரலானாள். தேவேந்திரனும் இலங்காபுரி அரண்மனையில் இராவணனுக்கு சேவகம் செய்து வரலானான். வாசமல்லிகை என்ற வண்டோதரியின் தோழி இந்திராணி ஏன் ஒரே பயமாக இருக்கிறீர்கள்? என்றாள். முன்பு தேவலோகத்தை இரகுகுல நகுசன் வென்றபோது என்னை அடையவும் தேடி வந்தான். அதனால் இராவணன் அந்தப்புரத்தில் பயமில்லையா? என்றாள் இந்திராணி. நகுசன், விட்டுணு போன்று போரில் தோற்ற அல்லது இறந்த அரசர்களின் மனைவிமாரை பெண்ணாளும் வழக்கம் இலங்காபுரியில் இல்லை. எங்கள் வேந்தன் எத்தனையோ அரசர்களை வென்றுள்ளார். ஆனால் எந்த அரசர்களின் மனைவிமாரையும் இச்சிக்கவில்லை என்று வாசமல்லிகை இந்திராணிக்கு பெருமையாக கூறினாள்.

நிருதியை வென்றான்

நிருதியின் நாட்டிலே அவர்கள் மனிதர்களுக்கு கட்டுப்படாதவர்களாக பெரும் பலம் படைத்த இராட்சத உருவம் கொண்டவர்களாக வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்கள் உருவவலிமையிலும் பெரியவர்கள் என்பதால் மானிடர்கள் பயந்து அவர்களுடன் பொருத முன் வருவதில்லை. பெரும் படையுடன் இராவணன் விமானத்தில் ஏறி அங்கு சென்றான். நிருதியும் அவனுடைய இராட்சதப் படைகளும் இராவணனுடனும் படைகளுடனும் மோதினார்கள். ஒருவரை ஒருவர் நேரடியாக அடித்துக்

கொண்டார்கள். போரில் இலகுவில் வெற்றி கொள்ள முடியாதபடி போர் இருவர் இருவராக நடந்தது. மல்யுத்தம் போன்று கையை முறித்தார்கள். காலை ஒடித்தார்கள். நிருதி இராவணனின் படைகளின் கை ஓங்குவதைக் கண்டு கடும் சீற்றத்துடன் மரங்களை அப்படியே பெயர்த்து இராவணன் மீது வீசினான். இராவணன் அவற்றை எளிதாக தன் கதையினால் தடுத்துவிட்டான். இறுதியில் இராவணனுடன் நேராக மோதினான். இராவணன் தன் கதையினால் நிருதியை அடித்து நொருக்கி காலின் கீழ் போட்டு துவைத்தான். வேதனை தாங்காமல் நிருதியின் வாயிலிருந்து குருதி சொரிந்தது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணிய நிருதி இராவணனிடம் தான் தோல்வி அடைந்துள்ளதாக ஒப்புக் கொள்வதாகவும் தன்னை விடுவிக்குமாறு பணிந்து மன்றாடினான். இராவணனை எவ்வளவு வீர தீர சூரனாக இருந்தாலும் பணிந்தவர்களுடன் சண்டை போடுவதில்லை.அவர்களைத் துன்புறுத்துவதில்லை. உடனே அவனை விடுவித்து இனிமேல் நான் சொல்கிறபடிதான் நடக்க வேண்டும் என்று கட்டளை யிட்டான். நிருதி சென்று தன் திசைக்காவல் கடமையில் ஈடுபட்டான்.

இராவணனை, சித்தர்களும் முனிவர்களும் ஈசுவரனை ஒத்தவனாக மதித்து இராவணேசுவரன் என்று அழைத்தார்கள்.

இராவணன் தம்பி மயில்ராவணனை பாதாளலோகத்தினை ஆட்சிசெய்ய நியமித்தான். (மயில ராவணன் கோட்டை கதிர்காமத்திற்கு தெற்கே உள்ள கடலில் காணப்படும் சின்னராவணன் கோட்டையாகும்) தேவ, கந்தர்வர்களையும், இயக்க, கின்னரர்களையும், சித்த சாரணர்களையும் வென்றான். பின் பூவுலகிற்கு திரும்பினான்.

அடங்காத மக்களை எல்லாம் அடக்கி ஒடுக்கினான். அகந்தை பிடித்தவர்களை எல்லாம் ஈவிரக்கமில்லாமல் தாக்கிப் பணியவைத்தான். இராவணன் என்ற பெயர் கேட்டதுமே அனைவரும் நடுநடுங்கினர். தேவர்கள் செய்த வஞ்சனைகளுக்காகவும், சூழ்ச்சிகளுக்காகவும், கடுமையான தண்டனைகளை விதித்தான். தேவர்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. அரசர்களை ஒருவர் பின் ஒருவராய் போரில் வென்று வீழ்த்தி வந்தான். தோல்வியுற்றதாக ஒப்புக்கொண்டு தப்பினர் சிலர். தைரியமாக எதிர்த்து மடிந்துபட்டனர் பலர்.

இலங்கேசன் வெற்றியும் எமதர்மன் தோல்வியும்.

திரிலோக சஞ்சாரியான நாரதர் தம் இனத்தவர்களான தேவர்கள் படும் துயரினைப் போக்கிட உளம் கொண்டார். பலம் மிகுந்த பகைவனிடம் பகை மூளுமாறு செய்து இராவணனை ஒழித்துக்கட்ட நினைத்தார். இலங்காபுரி சென்ற நாரதரை, வரவேற்று மரியாதை செய்து, மாமுனியே என்னால் ஆகவேண்டிய காரியம் இருந்தால் கூறுங்கள் என்றான் இலங்கை வேந்தன். "இராவணேந்திரா, நீ தேவர்களையும், இயக்கர்களையும், நாகர்களையும் பலமுறை வென்றவன். கந்தவர், கின்னர், வித்தியாதரர், ஆகியோரிடத்திலும் உன் பராக்கிரத்தைக் காட்டியிருக்கிறாய். இதை எல்லாம் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். உன்னுடைய மகத்தான வெற்றிகளின் மூலம் உன் பலம், வீரம், ஆற்றல், பிரபஞ்சவாசிகளுக்கு நன்கு விளக்கப்பட்டு விட்டன. காட்டானையின் மத்தகத்தைப் பிளந்து இரத்தம் குடித்தேன் என்று கூறுவதன்றோ அரிமாவுக்கு அழகு. எனவே நீ போரிட்டு வெற்றி கொள்ள தகுந்தவன் எமன் ஒருவனே ஆவான். அனைத்து உயிரையும்

அபகரித்துச் செல்லும் எமனை நீ வென்று விடுவாயாகில் எல்லா உயிர்களையுமே நீ வென்றுவிட்டதாக பொருள்படும். நீயும் மரணமில்லாப் பெருவாழ்வு வாழலாம். உன் வீரியத்திற்கேற்ற பகைவனையன்றோ நீ நாடிச் செல்ல வேண்டும்." என்றார் நாரதர்.

நாரதர் கூறியவற்றைக் கேட்டு இராவணன் பெருமித முற்றான். தன் பாராக்கிரமத்தை இவ்வளவு புகழ்ந்துரைத்த நாரதரைப் போற்றினான். வெற்றி வெறி அவன் தலைக்கேறி விட்டது. பிரபஞ்ச அதிபதியாகிய ஆட்சி செலுத்தும் எனக்கு இயமனை வெல்வது சிறிய வேலை. நாரதர், இலங்கேசுவரா உன்னைத் தவிர இயமனை வெல்லக்கூடியவர் எவருமே இல்லை. இந்தச் சரீரத்துடன் இயமலோகம் போனவரே கிடையாது. போய் அங்கிருந்து திரும்பியவர் எவரும் இல்லை. நீ ஒருவனே எவ்வுலகிற்கும் செல்லக்கூடியவன், திரும்பியும் வரக்கூடியவன். வெள்ளிமலையை அம்மானை ஆடிவிட்டு நீ சிவபிரானுடைய அருளைப் பெற்றவன் அன்றோ. சிவன் காலகாலனாவான். அவனருள் பெற்ற உனக்கு இயமலோகம் சென்று வருவது ஒரு விளையாட்டுப் போன்றதே ஆகும். இராவணனுடைய வீர உணர்வு விம்மிற்று. அவனுடைய முகத்தில் கர்வச்சிரிப்பு தவழ்ந்தது. உடலில் நிறைந்திருந்த சூரபலம் அங்கம் ஒவ்வொன்றிலும் துள்ளிற்று. நாரதமுனிவரே இயமனை வெற்றி கொள்ளும் முயற்சி எனக்கு வெகு லேசான தொருகாரியம். போர் எனக்கு பிராணன் போன்றது. உயிர்களுக்கெல்லாம் மரணத்தைத் தந்து தொந்தரவு செய்யும் அந்தப் பொல்லாத காலனை கலங்க அடித்து வென்று விடுகின்றேன் என்று உறுதி கூறிவிட்டு பெரும் படையுடன் இயமலோகம் செல்ல ஏற்பாடு செய்யலானான்.

காலத்தால் வெல்லப்படாத ஒன்று உலகில்

இருந்ததே இல்லை. காலத்தின் தேவையான இயமனை எந்த உபாயத்தைக் கொண்டு இராவணன் வெற்றி கொள்ளப் போகின்றான் என்று யோசனை செய்தவாறே நாரதர் எமலோகத்திற்கு புறப்பட்டார். தசமகுடதரனுக்கும் காலனுக்கும் நடக்க விருந்த போரினைக் காணவிரும்பியே சென்றார். எமதர்மனே நீ எல்லாவற்றையும் வெல்லுகின்ற கால காலன், விரைவிலே ஒருவன் உன்னை வீழ்த்த வரப்போகிறான். இயக்க இந்திரனான இராவணன் உன்னையும் வென்று வெற்றிக் கொடி நாட்ட வந்து கொண்டிருக்கிறான். இதனைச் சொல்லவே வந்தேன் என்றார்.

இராவணனுடைய வன்மையை நீ அறிவாய். அவனுடன் போரிட நீ ஆயத்தப் படுத்திக் கொள். உன்னுடைய காலதண்டம் செயற்படுவதைக் காணும் ஆவல் எனக்கு வெகு காலமாக இருந்து வந்துள்ளது. நாரதர் இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் போதே புட்பகவிமானம் எமலோகத்தில் வந்து இறங்கிவிட்டது. பெரிய படைசூழ காட்சி தந்தான் இலங்கேசன். ஆனால் அவன் விமானத்தினின்றும் இறங்குவதற்கு முன்னமேயே பயங்கர ரூபிகளான எமகிங்கரர்கள் அவனைச் சூழ்ந்து வலிவுடன் தாக்கினர். ஆனால் எமலோகப் படையை இராவணன் வெகு எளிதில் ஒடுக்கிவிட்டான். தன்னுடைய படைவீரர் பரிதாபமாக அழிந்துபட்டதையும் பூலோக வாசியான இராவணன் வெற்றிகொண்டதையும் பார்க்க எமனுக்கு ஆத்திரம் மூண்டது. தானே இரதத்தில் ஏறிக்கொண்டு முன்புறத்தில் ஒரு கோர தேவதையை அமரவைத்தான். தன்னுடைய முக்கிய ஆயுதமான காலதண்டத்தை அருகில் வைத்தான். கோர சொரூபமுள்ள அந்தக் கருவி மூன்று லோகங்களையும் ஒரே கணத்தில் அழித்துவிடக்கூடியது. பிரளயாக்கினி போல சுடர்விட்டுக் கொண்டு அது எமனுக்கு

உதவிபுரிய ஆயத்தமாக இருந்தது. காலபாசங்களும் காலனுக்கு உபகாரம் செய்யக் காத்து நின்றன. இராவணன், எமபோர் மூவுலக மக்களையுமே கலங்க வைத்தன. கோர உருவத்தில் வந்த எமனைப் பார்த்ததுமே இராவணன் படை பயங்கொண்டு பின் வாங்கியது. இராவணன் ஒருவனே அச்சமின்றிக் கலங்காது நின்றான். கொழுந்து விட்டெரியும் காலாக்கினிக்கு கதிகலங்காது அசைவற்றிருக்கும் நீர் நிலை போன்று அவன் உறுதியாக நின்றான்.

இராவணனும் எமனும் நேருக்கு நேராக நின்று ஒருவரோடோருவர் போரிடலாயினர். மலையோடு மலை மோதுவதைப் போன்று ஒருவரை ஒருவர் தாக்கினர். வீரம் வீரத்தின் மீது வீசிற்று. மரணத்தைச் சொரியும் அம்புகள் ஓயாது பொழிந்த வண்ணம் இருந்தன. ஏழு நாட்கள் போர் நில்லாது நடைபெற்றது. தன்னுடைய வல்லாண்மை எல்லாம் பயன்படுத்தி தசக்கீரீடனை தவிடு பொடியாக்கிவிட தர்மராஜன் தன்னாலான முயற்சி எல்லாம் செய்தான். இராவணனோ தைரியம் தளரவில்லை. எதிர்த்தாக்குதல் செய்து எமனையே திணறடித்தான். இதைக் கண்ட கூற்றுவனுக்கு கோபம் பொங்கி எழுந்தது. அவனுடைய மூச்சும் கூட நெருப்பு மயமாக இருந்தது. கண்களினின்றும் தீப்பொறி பறந்தது. ஒருபொழுதும் தோல்வி காணாத காலதண்டத்தைக் கையில் எடுத்தான். காலபாசமும் உடனே தீக்கொழுந்தாக எரிந்து பிரபஞ்சத்தை வாட்டிற்று. உலகங்கள் நடுங்கின. நாசகாலம் வந்துற்றது என யாவரும் அஞ்சினர். அடுத்த கணம் சிவனிடம் பெற்ற வரத்தினால் இராவணனை அழிக்க முடியாது என்பதை எமன் உணர்ந்தான். அதர்ம வழியில் உலகை அழிக்காது போரை அத்துடன் நிறுத்திக் கொண்டான். அவனுடைய இரதங்களும் குதிரைகளும் படைகளும் அக்கணமே பின்வாங்கி அவ்விடத்தினின்றும்

மறைந்துவிட்டன. இராவணனோ எமன் பின் வாங்கிக் கொண்டதை எண்ணிப் பெருமிதங் கொண்டான். காலனைத் தோல்வியுறச் செய்ததால் வெற்றி வேட்கை மேலும் வளர்ந்தது.

வெற்றிவேந்தனாக தன்னுடைய திக்கு விசயத்தை தொடர்ந்து நடத்தலானான். அவன் நாகலோகம் சென்று வாசுகியை வென்றான். பின்னர் காலகேயர்களை ஜெயித்தான். வருணலோகத்துள் புகுந்து வருணபுத்திரர்களை வென்றான். பிறகு இலங்கை திரும்பினான். அவனுக்கு அப்பொழுதும் இருப்புக் கொள்ளவில்லை. சூரிய லோகம் சந்திர லோகம் முதலிய லோகங்களுக்கும் விசயம் செய்து விருதுகளுடன் திரும்பி வந்தான்.

வாலியின் வலிய நட்பு

இலங்கேசன் வெற்றி மதோன்மத்தனாய் இருக்கும் பொழுது நாரதர் இராவணன் மாளிகைக்குள் நுழைந்தார். தன்னுடைய திக்கு விசயவரலாற்றை திரிலோக சஞ்சாரிக்கு எடுத்துச் சொன்னான். இலங்கேசுவரா உன் வீரப்பிரதாபங்களைக் கேட்டு பூரித்துப் போனேன். நீ யாராலும் வெல்ல முடியாத வீரன் என்பதில் ஐயமேதுமில்லை. உனக்கு சமமானவர் என்று கூற வல்ல ஒருவரை யானறியேன். வாலி ஒரு குரங்கு அதன் வல்லமைக்கு அளவே இல்லை என்றார். திசைகள் யாவிலும் திக்கு விசயம் செய்து சம்பூரண சத்துரு சங்காரம் செய்த தசமகுடன் ஏளனமாக நகைத்தான். நாரதர் வாலியை வெறும் வானரம் என்று எண்ணிவிடாதே, இந்திரனுடைய மகன், மகாபராக்கிரமசாலி, வரம் பல பெற்றவன் எதிரில் நிற்கும் எதிரியின் பலம், பாதி வாலியைச் சேர்ந்துவிடும்.

வாலி ஒன்றரைப் பலவானாக வெற்றி பெறுவான். அவன் சிவபூசை செய்யும் போது பின்னால் சென்று அவனுக்கு தெரியாமல் தாக்கி அழித்து விடு என்று கூறிவிட்டு உடன் கிட்கிந்தைக்குச் சென்று வாலியிடம், அட்டத்திக்குப் பாலகர்களை வென்று எமதர்மனைத் தோற்கடித்த இராவணன் உன்னிடம் வருகிறான். யாவராலும் வெல்லப் படமுடியாத வரமும் என்றைக்கும் தோல்வியை சந்திக்காத வாள் முதலிய சிவனின் ஆயுதங்களும் பெற்றவன். அவனை நீ வெற்றி கொள்ளவேண்டும், என்றார். வாலியின் சிவபூசை முடிகின்ற போது இராவணன் கர்ச்சித்தவாறே பின்னால் சென்று இறுககட்டிப் பிடித்தான். யாவராலும் வெல்லப்படமுடியாத வரமும், வாளும், வாணாளும், கொண்ட இலங்கேசனுடன் போரிட்டு மடிவதிலும் நட்புக்கொள்வதே நல்லது. எமனைத் தோற்கடித்த காலகாலன் என்னைத் தோற்கடிப்பது சிரமமா? பின்னால் நின்று தாக்கியிருக்கலாம் அம்பு விட்டிருக்கலாம் வாளால் வெட்டியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. தோல்வியிலும் சமாதானம் மேலானது. எங்களை அழிக்கவல்லோ நாரதர் கலகமூட்டி விடுகிறார் என சிந்தித்த வாலி, நானும் சிவபக்தன் சிவபூசை செய்கிறேன், சிவபக்தனாகிய நீ இடையூறு விளைவிக்கலாமா, நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன் என்றான். சிவபூசை முடிந்தபின்னரே உன்னைப் பிடித்தேன், சிவபூசையைக் கலைக்கவில்லை, உனது அறிவான பேச்சினால் உண்மையைப் புரிந்துகொண்டேன். உனது மதிநுட்பமான செய்கையால் நாம் நண்பர்களானோம் என்றான் இராவணன். இருவரும் அன்புடன் தழுவிக் கொண்டார்கள். கிட்கிந்தா நாட்டுக் கொடி குரங்கு இலச்சினை கொண்டதால் அரசன் வாலி என அழைக்கப்பட்டான்.

வாலி, தேவேந்திரனுக்கும் அருணிக்கும் பிறந்த

தேவமைந்தன். (கவிகள் அவனைக் கவி என்றனர். வானரமங்கை என்றால் தேவமகளிர், அவளை மந்தியாக்கியவர்கள் கவிகள். இராவணனை வாலி கட்டியதாகவும் இராவணன் நட்பு நாடியதாகவும் ஒரு கருத்து உள்ளது. தேவர்களின் புராணங்கள் எல்லாமே ஆரியரால் எழுதப்பட்டவை. ஆரியர்கள் திராவிடரை பழித்தும், இழித்தும் எழுதியுள்ளார்கள். அவற்றை மொழி பெயர்க்கும் தமிழர்களும் உண்மையை ஆராயாது தம்மைத் தாமே தாழ்த்தி எழுதுவது அறியாமையே. வாலி இராவணனுடன் நட்புக் கொண்டதால்தான் வாலி வதம் நிகழ்ந்தது என இராமாயாணம் கூறுகின்றது. ஆகவே வாலி வலிமை குன்றியதாலேயே நட்புக்கொண்டான்.)

முக்கோடி வாணாள்

சூரியன் மகன் மனு சோழர்களின் முதல் மன்னன் ஆவான். மனுவின் மகன் இச்சுவாகு அயோத்தியின் முதல் அரசன். அவன் மகன் குச்சி, பேரன் விகுக்சி, அவன் புதல்வன் பாணன், பாணன் மகனே அநரணியன். இராவணன் திசையுலாவின் போது அநரணியனை வென்று அயோத்தியை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். அவன் மகன் பிருது. பிருது மகன் திரிசங்கு, அவன் மகன் துந்துமாரன், அவன் மகன் மாந்தாதா, அவன் மகன் சுசந்தி, சுசந்திக்கு துருவசந்தி, பிரசேனசித்து என இரு புதல்வர்கள், துருவசந்தியின் மகன் பரதன், பரதன் மகன் அசிதன், அவனைப் பகைவர்கள் புறமுதுகிட்டோட வைத்து விட்டார்கள். அவன் தன் இருமனைவியரையும் அழைத்துச் சென்று பிருகு முனிவர் ஆசிரமத்தில் வசித்தான். அவன் மனைவி காளிந்தி சகரனைப் பெற்றாள். சகரன் மகன் அசமஞ்சன். அசமஞ்சன் புதல்வன் அஞ்சுமான் அவன்

குமாரன் இரகு. இரகு புதல்வன் பிரவிருத்தன், இவனை கல்மாசபாதன் என்றும் கூறுவர். இவன் மகன் சங்கணன. சங்கணன் மைந்தன் சுதர்சன். அவன் புதல்வன் அக்கினிவர்ணன். இவன் குமாரன் சீக்கிரகன். அவன்புதல்வன் மரு. மருவுக்கு பிரசுருகன் என்று ஒரு மகன் இருந்தான். அவனுக்கு அம்பாரீசன் பிறந்தான். அம்பாரீசன் மகன் நகுசன். நகுசன் மைந்தன் யயாதி. யயாதி குமாரன் நாபாகன். அவன் மகன் அயன். அயனுக்குப் பிறந்தவன் இந்த தசரதன். தசரதமன்னன் மகன் இராமன். இராவணன் முக்கோடி வருடங்களை வாணாளாகப் பெற்றவன். அநரணியன் முதலாவதாக இராமன் வரை முப்பது தலைமுறை மன்னர்களின் ஆட்சி அயோத்தியில் நடைபெற்றுள்ளது. உலகம் எங்கும் இராவணன் ஆட்சி மாறாமல் தொடர்ந்து நிலவியுள்ளது. இராமன் பதினோராயிரம் ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தவன் கம்பராமாயணம்) இராமனுடைய வாணாளைப் போல மூவாயிரம் மடங்கு காலம் இராவணேந்திரனின் ஆட்சி ஈரேழு உலகங்களிலும் நடைபெற்றது. இராவணேசுவரன் கீர்த்தியின் மூர்த்தியாவான்.

நவக்கிரக நாயகன்

தனது பராக்கிரமத்தினால் நவக்கிரகங்களையும் பலமுறை கட்டிப் போட்டான். இலங்காபுரி சிம்மாசனத்தின் ஒன்பது படிகளாக அவர்களைப் படுக்க வைத்தான். அவர்களின் முதுகில் மிதித்துக்கொண்டு ஏறிச்சென்று சிம்மாசனத்தில் அமர்வான். சூரியன் முதலான ஒன்பது கிரகங்களும் அரண்மனையில் தொண்டுகள் செய்து வந்தனர். இராவணேந்திரனின் கட்டளைப்படியே தங்களின் கடமைகளைச் செய்து வந்தார்கள். இராவணன் எங்கு காயச் செல்கிறானோ அங்கு தான் சூரியன் காய்ந்து வரலானான்.

எங்கு வெப்பத்தைக் கூட்ட வேண்டும் எங்கு வெப்பத்தைக் குறைக்க வேண்டும் என்றும் உத்தரவுப்படிதான் காய வேண்டும். இலங்காபுரிக்கு மேலாக வெப்பத்தைக் குறைத்தே காய்ந்து வருவான். ஏனைய சந்திரன் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது ஆகிய கிரகங்களும் இராவணன் கட்டளைப்படி அண்டத்தில் சஞ்சரித்து வந்து கொண்டிருந்தார்கள். எந்தெந்த கிரகம் எந்த எந்த ராசியில் நின்றால் தனக்கு நன்மை பயக்குமோ என்று அறிந்து அந்த அந்த ராசி மண்டலத்தில் அந்தக் கிரகங்களை இருக்க வைத்தான். இந்திரசித்து பிறக்கும் போது அவ்வாறு கட்டி வைத்தான்.

5. சீறைக்காண்டம்

சீதையின் தோற்றம்

பத்மாட்சன் என்ற மன்னன் தனது மகள் சுயம் வரத்திற்காக எல்லா மன்னர்களுக்கும் ஓலை அனுப்பினான். பதுமை சுயம்வரத்தில் எல்லா வேந்தர்களும் கலந்து கொண்டார்கள். பதுமை யாருக்கும் மாலையிடவில்லை. பத்மாட்சன் தன் மகளை ஒருவருக்கும் திருமணம் செய்து கொடுக்க முன்வரவில்லை. சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களை அவமானப்படுத்தி இறுமாப்புடன் பேசினான். ஆத்திரமடைந்த மன்னர்கள் அவனை அடித்துக் கொன்றனர். அரண்மனை எல்லாவற்றையும் அழித்து விட்டார்கள். பதுமையை பழிவாங்க தேடினார்கள். அவள் ஒளிந்து கொண்டாள். அவர்களிடமிருந்து காப்பாற்றவே அவள் கையைப் பிடித்து அழைத்தான். அவள் மறுத்து அக்கினியில் வீழ்ந்தாள். அவள் செய்கையால் மனம் வருந்திய இராவணன் அக்கினியில் அவளைத் தேடினான். சாம்பரில் ஐந்து இரத்தினங்கள் இருந்தன. அவற்றைப் பேழை ஒன்றில் போட்டு மூடி இலங்கைக்கு எடுத்து வந்தான். வண்டோதரியை அழைத்து உனக்காக அபூர்வமான பரிசு கொண்டு வந்துள்ளேன் என்று பேழையை அவளிடம் கொடுத்தான். பேழையிலிருந்த மணிகள் மறைந்து விட்டன. அவள் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். மிகுந்த ஒளியுடன் கூடிய குழந்தை பெரிதாக நகைக்கலாயிற்று. வண்டோதரிக்கு பயம் ஏற்பட்டது. உன்னையும், உன்னைச் சார்ந்தவர்களும் அழிந்து போவதற்கு காரணமாகவே பிறந்தேன் என்று கூறி நகைத்தது. நாதா தன் குலத்தையே நாசம் செய்தவள் இங்கு வந்து பிறந்துள்ளாள். நாம்

இவளை இங்கே வைத்திருப்பது நமது குலத்திற்கு ஆபத்து, உங்கள் உயிருக்கு பங்கம் விளைவிக்குமோ என பயமாக இருக்கிறது. இவளை இந்தப் பேழையிலிட்டு எங்காவது கண்காணாத இடத்தில் கொண்டுபோய் போட்டு விடச் சொல்லுங்கள் என்றாள் வண்டோதரி. அழகில் மட்டுமல்ல அறிவிலும் சிறந்தவள் வண்டோதரி சோதிடரை அழைத்து இக் குழந்தை சாபமிடுகிறதே ஏன்? என்று மன்னன் கேட்டான். இக் குழந்தை பழைய வினையால் அழிவு காலத்திற்குப் பிறந்துள்ளது. இங்கே இருந்தால் இலங்கை அழிந்துவிடும். இலங்கேசன் ஆட்சிக்குள் எங்கு இருந்தாலும் அங்கு அழிவு ஏற்படும். உடனடியாக வேற்று நாட்டில் கொண்டுபோய் விடச் சொல்லுங்கள் என்றார் சோதிடர். இவற்றைக் கேட்ட குழந்தை மேலும் நகைக்கலாயிற்று. இப்போது என்னை எங்கு கொண்டுபோய் தூர எறிந்தாலும் நான் மீண்டும் இங்கு வருவேன். அப்பொழுது நீங்களும் இலங்கைநகரும் அழிந்துபோகும் என்று கூறிச் சிரித்தது. அனைவரும் திகைத்தனர். இராவணேசன் அதுவரை இக்குழந்தை உயிருடன் இருந்தால்தானே கேடு விளைவிக்கும் இப்பொழுதே கொன்றுவிடுகின்றேன் என பற்களை நறநற என கடித்து வாளை உருவினான். வண்டோதரி அவனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு, ஐயா இப்பொழுது நீங்கள் இக்குழந்தையை கொல்ல முற்பட்டால் உடனேயே நமது குலம் நாசமாவதற்கு வழி உண்டாகிவிடும். குழந்தை கூறியது போல நடக்க இன்னும் எத்தனையோ காலங்கள் உள்ளன. அவசரப்பட்டு நாமாக ஏன் நாசத்தைத் தேடிக் கொள்ள வேண்டும்? என்று தடுத்து வாளை உறையில் போட்டாள். இராவணன் அகம்பனனை அழைத்து இந்தக் குழந்தையை பேழையுடன் தூக்கிக்கொண்டு, சிவதனுசையும் கொண்டு போய் எல்லைக்கு அப்பால் எங்காவது வீசி எறியுங்கள் என்று

ஆணையிட்டான். காடு, மலை, வனாந்தரங்களைத் தாண்டி எமது நாட்டு எல்லையைக் கடந்து வேறு நாட்டில் ஓர் இடத்தில் தோண்டிப் புதைத்து விடுங்கள், வீசி எறிந்தால் மறுமடியும் இங்கு வந்துவிடுவாள் என்று தாய் கூறினாள். மகாலட்சுமியே மோட்ச பதவி அளிப்பதற்காக இராவணனுக்கு மகளாக இலங்கையில் வந்துபிறந்தாள்.

மிதிலை

அகம்பனன் பேழையையும் வில்லையும் எடுத்துக் கொண்டு ஆகாய மார்க்கமாக நெடுந்தூரம் சென்று கொண்டிருந்தான். மிதிலாபுரியின் மன்னன் வயலை உழும் பொருட்டு அங்கு வந்துகொண்டிருந்தான். அதனைக் கண்ட அகம்பனன் வயலில் பேழையையும் வில்லையும் வைத்துவிட்டு மறைந்திருந்து பார்த்தான். குழந்தையின் அழுகுரல் கேட்டு அங்கு வந்த சனகமன்னன் குழந்தையையும் வில்லையும் யார் வைத்தார்கள்? எப்படி இங்கே வந்தது? என்று தேடிப்பார்த்தான் அறியமுடியவில்லை. தன் பிள்ளையில்லாத குறையைத் தீர ஆண்டவன் குழந்தையைத் தந்தான் என உவகை பொங்க குழந்தையையும் வில்லையும் எடுத்துக்கொண்டு அரண்மனை சென்றான். அகம்பனன் திரும்பிச் சென்று இலங்கேசனிடம் நடந்தவற்றை உரைத்தான்.

குழந்தையை உழவு சாலில் கண்டெடுத்ததால் சீதை என்றே மன்னன் பெயரிட்டழைத்தான். குழந்தையில்லாத சனகன் தன் மகளாகவே வளர்த்து வந்தான். சனகன் மகளாக வளர்ந்ததால் சானகி என்றும் அழைத்தார்கள். மகாலட்சுமி போன்ற குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் மன்னன் திளைக்கலானான். (சில இராமாயணங்களில் சீதையின் பிறப்புப் பற்றிய விபரம் காணப்படுகிறது.

வேதங்களிலே சீதையின் வரலாறு பற்றிக் காணப்படுகிறது. மகாலட்சுமியே வேதவதியாகவும், பதுமையாகவும், சீதையாகவும் அவதரித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. குசத்துவஜன் மகள் என்றும், ஆங்கிரசர் மகள் என்றும், பத்மாட்சன் மகள் என்றும் ஒரு சம்பவத்தை முனிவர்கள் தவறாக முன்றாக குழப்பி விட்டார்கள். வெகு காலத்திற்குப் பின்னரே வடமொழியில் இராமாயணம் எழுதப்பட்டதால் ஏற்பட்ட தவறுகள் எனலாம்.) அகம்பனன் தண்டகாரணியத் திலிருந்து சீதையை வேவு பார்த்து வந்தான். இராவணன் அவ்வப்போது மகளைப் பற்றி அறிந்து வந்துள்ளான். வண்டோதரி மறந்தே போய்விட்டாள்.

மிதிலையில் சீதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரலானாள். பாங்காகவே வளர்ந்து பருவமடைந்தாள். சீதையின் எழில் பல மன்னர்களைப் பெண் கேட்க வைத்தது. அன்னம் போன்ற அழகும், நடையும், மென்மையும் கொண்ட சானகிக்கு மணாளனைத் தெரிவு செய்ய மன்னன் சுயம்வரம் ஏற்படுத்தினான். தங்கை காமவல்லியும் சீதையை உளவு பார்க்க உதவினாள். சுயம்வர ஓலை கிடைத்ததும் தன் மகளைப் பார்க்கவும் மணவிழாவினைக் கண்டுகளிக்கவும் விரும்பி இராவணன் சுயம்வரத்தில் கலந்துகொண்டான். பல வருடங்களுக்குப் பிறகு தன் மகளை அழகோவியமாக பார்த்து பூரித்துப் போனான். இராவணன் வில்லை வளைக்க முயற்சிக்க வில்லை. மணவிழாவினைக் கண்குளிர கண்டு பெருமகிழ் வெய்தினான். தன் மக்களைக் கண்போல் காப்பவனும் நீதி தவறாதவனுமாகிய தசரதன் வரம் வேண்டி முதல் பெற்றமுதல்வன் அயோத்தியின் வாரிசு இராமன் மணமகனாக கிடைத்ததால் அளவில்லா ஆனந்தம் அடைந்தான். சீதை அயோத்தியின் பட்டத்துராணியாக வாழப்போகிறாள் என இராவணன் கனவு கண்டான்.

அயோத்தி சென்ற சீதை சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்ந்து வந்தாள்.

ஆரணங்கின் ஆரணியகம்

காலம் சுழன்றது. கைகேயி கட்டளையால் இராமன் மரவுரி தரித்து பதினான்காண்டுகள் வனவாசத்திற்காக காடேகிறான். பதிவிரதை சீதையும் பட்டாடைகளையும், பொன்னாபரணங்களையும் களைந்து மரவுரி தரித்து தவக்கோலம் பூண்டு கணவனுடன் வனவாசம் போனாள். இட்ட அடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க, சீதை வனத்தில் நடந்தாள். பஞ்சணையில் படுத்தவள் மண்தரையில் துயின்றாள். அரண்மனையில் வாழ்ந்தவள் ஆச்சிரமத்தில் வசித்தாள்.

அகம்பனன் சேதி

இலங்கேசன் அத்தாணி மண்டபத்தில் அவையினருடன் ஆலோசனையில் கலந்திருந்தான். அகம்பனன் அந்நேரம் அங்கே வந்து, இந்திராதி இந்திரனே! எங்கள் அரசே வணக்கம் என்றான். இலங்கேசன் அகம்பனனை தனியே அழைத்துப் பேசலானான். பரதகண்டத்தில் எமது அரசுகளின் நல்லாட்சி நடக்கின்றதா? கரன், திரிசிரன், தூடணன் நலமா? அற்ப ஆசைகளை நிறைவேற்ற வேண்டி இருடிகள் இப்பொழுதும் உயிர்ப்பலி கொடுத்து வேள்விகளையும் யாகங்களையும் நடாத்த முனைகின்றார்களா? என்ன சேதி கொண்டு வந்தாய் சொல்? என்றான். அரசே வணக்கம், அரசுகள் நல்லாட்சி புரிகின்றன. உயிர்ப்பலி வேள்விகளை நடத்தாது தங்களின் அரசர்கள் காத்து வருகிறார்கள். இருந்தும்.....என இழுத்தான். ஏன் தயங்குகிறாய்? சொல் என்றான். என்னால் மிதிலையில்

விடப்பட்ட பெண் குழந்தை சனகமன்னன் எடுத்துச் சென்றார் அல்லவா? அதற்கென்ன இப்பொழுது? அப்பெண் சீதா இராமனை மணமுடித்தாள். தசரதன் மனைவி கைகேயி தன் மகன் பரதன் நாடாள வேண்டும், இராமன் பதினான்காண்டுகள் வனவாசம் போகவேண்டும் என வரம் கேட்டு இராமனை காட்டுக்கு அனுப்பி விட்டாள். சீதையும் மரவுரி தரித்து இராமனுடன் காட்டுக்கு வந்து அல்லல் படுகிறாள். இராவணன், யார் சீதையை காட்டுக்கு அனுப்பினார்கள் சொல்? என்றான். சீதை பிடிவாதமாக நின்றதால் இராமனே அழைத்து வந்தான் பொன்னாபரணங்களையும், பட்டாடைகளையும் இழந்து சோகமே வடிவாக இருக்கிறாள். ஆசிரமத்தில் தவம் செய்கிற வயதா இது? தண்டனையல்லவா அனுபவிக்கிறாள். இதனைத் தங்களுக்கு தெரிவிக்கவே வந்தேன் என்றான். இலங்காதிபன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினான். தன் மகளை மகிழ்ச்சியாக வாழவைக்க என்ன செய்யலாம் என யோசித்தான். அவள் குழந்தையாக இருந்தபோது இட்ட சபதத்தையும், சாபத்தையம் எண்ணித் தயங்கினான். நீண்ட நேரமாக தனிமையில் தனக்குள்ளே விவாதித்தான். அகம்பனன், அரசே என்ன யோசனை? எனக்கேட்டு நீண்ட மௌனத்தைக் கலைத்தான். சீதையை அழைத்து வந்து இந்த அரண்மனையில் மகிழ்ச்சியாக வாழவிடுங்கள். தங்களைத் தந்தை என்று தெரியாத படியால் நீங்கள் சென்று அழைத்தாலும் சீதை வரமாட்டாள். தாங்கள் அவர்களுடன் போரிட்டு வென்று சீதையை கூட்டி வாருங்கள் என்றான். இலங்கையர்கோன் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான். சீதையை அழைத்து வந்தால் இலங்கைக்குக் கேடு. நான் போரிட்டால் இராமனைக் கொல்ல வேண்டும். கொன்றால் காமவல்லியைப் போல பொட்டிழந்து, பூவிழந்து வாழாவெட்டியாகிவிடுவாள். அது இன்னும் அதிக

வேதனை தரும். தந்திரமாக காமவல்லியைக் கொண்டு சீதையை கூட்டிச்சென்று சனத்தான அரண்மனையில் கரன் பாதுகாப்பில் விடுவதே நல்லது என்ற முடிவுக்கு வந்தவனாய் ஓர் ஓலையை எழுதி, காமவல்லியிடம் இதனைக் கொண்டுபோய் கொடு என்று கூறி அகம்பனனிடம் கொடுத்தான். அகம்பனன் சனத்தானத்திற்குச் சென்று காமவல்லியிடம் அவ்வோலையைக் கொடுத்தான்.

அறிவிற் சிறந்தவள் சீதை

இராமர், இலட்சுமணர், சீதை அகத்தியரின் ஆச்சிரமம் நாடி புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சீதை அவர்களைப் பார்த்து பேசத் தொடங்கினாள். மிகவும் நல்ல மனிதர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக தங்களையும் அறியாமல் தர்மத்திற்கு விரோதமான பாதையை அடைந்து விடுகின்றார்கள். விருப்பத்தினால் எற்படும் விளைவுகளைத் தவிர்ப்பதால் மட்டுமே இந்த நிலையிலிருந்து ஒருவர் தப்ப முடியும். விருப்பத்தினால் விளைகின்ற தவறுகள் மூன்று பொய்பேசுதல், பிறன் மனைவியை அடைதல், விரோதமின்றியே ஒருவனைக் கொடுமைக்குள்ளாக்குதல் ஆகும். இதில் மூன்றாவது தங்களைச் சார்ந்துவிடுமோ என்று நான் அஞ்சுகின்றேன். தண்டக வனத்தில் யாகங்களைப் பாதுகாப்பதற்காக தொல்லை செய்கின்ற அரசர்களை அழித்து விடுவதாக உங்கள் சகோதரருடன் ஆயுதம் ஏந்தி முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் நடத்தை என் மனதில் கவலையை தோற்றுவிக்கிறது. அரசர்களை அழிக்கின்ற எண்ணத்துடன் தண்டக வனம் நோக்கி நீங்கள் முன்னேறுவது முறையான செயலாக எனக்கு தெரியவில்லை.

தீயின் அருகில் வைக்கப்படுகின்ற எரிபொருள் அக்கினியின் வேகத்தை வளர்க்கிறது. ஆயுதங்களை கையில் ஏந்திய பிறகு ஒருவன் அமைதியை நாடுவது கடினம். முனிவர்களும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. தூய்மையான முனிவரின் மேன்மையான தவத்திற்கு இடையூறு செய்ய விரும்பிய இந்திரன் ஒரு போர் வீரனாக முனிவரிடம் சென்றான். ஒளிமிக்க வாளைக் கொடுத்து தான் திரும்ப கேட்கும் வரை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கேட்டான். அன்றிலிருந்து அதை அவர் எப்பொழுதும் கையிலேயே வைத்திருந்தார். மனம் மாறியது. கடமைகளைத் தவறினார். கத்தியின் சக்தியில் நம்பிக்கையுண்டானது. அவர் கொடியவரானார். நரகில் வீழந்தார். ஆயுதத்தின் நட்பு துறவியைக் கூட கொடியவனாக மாற்றிவிடும்.

தனக்கு தீங்கிழைக்காதவனை கொடுமைப் படுத்துவது தகாத காரியமாகும். உங்களுக்கு குற்றமிழைக்காத தென்னாட்டு அரசர்களை அழித்துவிட தீர்மானித்திருப்பது உங்களுக்கு உகந்தது அல்ல துன்பத்திற் குள்ளாகிறவர்களை காப்பாற்றுவதற்குத் தான் சத்திரியன் வில் ஏந்துகிறான். காட்டு வாழ்க்கைக்கும் ஆயுதத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது. துறவற வாழ்க்கையை மேற்கொண்டு காட்டுக்கு வந்தவர்களுக்கு சத்திரிய தர்மம் எவ்வாறு பொருத்தமானது. துறவற வாழ்க்கைக்கு வந்த இடத்தில் ஆயுதம் ஏந்துவது சரியல்ல. அயோத்தி சென்ற பிறகு சத்திரிய தர்மத்திற்கு ஏற்ப நடந்து கொள்ளலாம். அறம், பொருள், இன்பம், வீடு நான்கு நிலைகளுக்கும் அறம்தான் அத்திவாரம். இந்த உலகமே தர்மத்தினால் தான் காப்பாற்றப்படுகிறது. தவம் செய்கிறவன் தர்மத்தின் பாதையை அடைகிறான். என் மனத்தில் எழுந்த எண்ணங்களைக் கூறிவிட்டேன். நீங்கள் சிந்தித்து, தம்பியுடனும் ஆலோசனை செய்து தீர்மானித்து செய்யுங்கள்

என்றாள் சீதை. இராமன், நீ என் மீதுள்ள பேரன்பினால் பேசினாய். துன்பப்படுபவர்களை காப்பாற்றுவதற்குத்தான் சத்திரியன் வில்லை ஏந்துகிறான் என்று நீயே சொல்லிவிட்ட பிறகு நான் மேலும் சொல்ல என்ன இருக்கிறது என்றான். (வால்மீகி ராமாணயத்தில் காணப்படும் இந்தக் கட்டம் கம்பராமாயணத்தில் இடம்பெறவில்லை.)

தேவர்களும் கந்தர்வர்களும் சித்தர்களும் மாபெரும் முனிவர்களும் அகத்தியரை வணங்குவதற்காக இங்கே காத்திருக்கிறார்கள். பொய் பேசுகிறவன், கொடுமை செய்பவன், தீய எண்ணம் கொண்டவன், பாவ நோக்கம் உடையவன் இங்கே வாழ முடியாதபடி அகத்தியரின் ஒளிபரவி வீசுகிறது. நாமும் அவரை வணங்கி ஆசி பெறுவோம் என்று அகத்தியர் பாதங்களில் மூவரும் விழுந்து வணங்கினார்கள். இராமருக்கு விருந்து படைத்த அகத்தியர் ஒரு வில், அம்புகள், ஒரு வாள் ஆகியவற்றை இராமருக்கு கொடுத்துவிட்டு அவை பற்றிய விபரங்களைக் கூறினார். இந்த வில் தேவதச்சனால் செய்யப்பட்டது, தெய்வத்தன்மை கொண்டது. சிவனால் கொடுக்கப்பட்டது. இரண்டு அம்புறாத்தூணிகள் இந்திரனால் கொடுக்கப்பட்டவை. தீயிற்கு நிகரான பாணங்கள் வந்து கொண்டேயிருக்கும், தீர்ந்து போகாது. இந்தக் கத்தி சூரியனுக்கு நிகரானது, சிவனால் கொடுக்கப்பட்டது. என்றுமே தோல்வியை சந்திக்காதது, பெற்றுக் கொள்வாயாக, என்றார்.

சீதையின் முகத்தைப் பார்த்தால் அவள் களைத்திருப்பது நன்றாகத் தெரிகிறது. கணவனிடம் கொண்ட அன்பின் காரணமாக கொடுமைகள் நிறைந்த வனத்திற்கு வந்திருக்கிறாள். என்ன செய்தால் அவள் மனத்திற்கு திருப்தி ஏற்படும் என அறிந்து அதைச் செய்வாயாக. நன்றாக இருக்கும்போது அன்பு காட்டுவதும்,

சோதனை வரும்போது விட்டு விலகுவதும் படைப்பின் ஆரம்ப காலத்திலிருந்தே பெண்களின் இயற்கை. பெண்கள் மின்னலைப்போன்று கணநேரத்தில் மாறும் தன்மை கொண்டவர்கள். ஆயுதங்களைப் போல கூர்மையானவர்கள். கழுகைப் போலவும், சூறைக் காற்றைப்போலவும் வேகமுடையவர்கள். ஆனால் சீதை இந்தக் குறைகளுக்கு அப்பாற்பட்டவள், போற்றத் தகுந்தவள். அருந்ததி போல தெய்வீக தன்மை நிறைந்தவள் என்றாள். நீ காட்டுக்கு வந்த விசயமும், அது தொடர்பான மற்ற விபரங்களையும் நான் அறிவேன் என்றும் கூறினார். தவஞ்செய்ய கானகம் வந்த இராமனுக்கு ஆயுதங்கள் எதற்காக அகத்தியர் கொடுத்தார்? இராமன் போருக்கு ஆயத்தப் படுத்தப்பட்டு விட்டான். விருத்திராசுரனிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ள இந்திரன் அகத்தியரைச் சரண் அடைந்தான். முனிவர்கள் கூறக்கேட்டு இராமனும் அகத்தியர் ஆதரவை நாடிச் சென்றான். அகத்தியரும் இராவணனின் பகையை எண்ணியே இராமனுக்கு ஆயுத படைக்கல உதவிகளைச் செய்துள்ளார். அகத்தியரின் அருள் சுமந்தேன் என்று இராமன் கூறுவதிலிருந்து எல்லா அரசர்களையும் அகத்தியர் அருளால் வெல்லும் நம்பிக்கை இராமனிடம் காணப்படுகின்றது.

காமவல்லி

மிஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ் செவிய கஞ்சம் நிகர் சீறடியளாகி
அம் சொல் இளமஞ்ஞை எனஅன்னம் என மின்னும்
வஞ்சி என நஞ்சம் என வஞ்ச மகள் வந்தாள்.
என கம்பர்.

அகம்பனன் காமவல்லியிடம் இராவணனின்

ஓலையைக் கொடுத்தான். சீதை இருக்கும் இடத்தைத் தெரிவித்து, அவளை நேரில் பார்த்துப் பேசி, கூட்டிச்சென்று கரன் அரண்மனையில் இருக்கச் செய் என ஓலையில் காணப்பட்டது. காமவல்லி சீதை இருக்கும் இடத்தை நாடிப் புறப்பட்டாள். காமவல்லி கண்டோர் மனதைக் கலங்க வைக்கும் பேரெழில் படைத்தவள். காமத்தைத் தூண்டும் அங்க லாவண்யங்களைக் கொண்டவள். ஆர்ப்பரித்த சிரிப்புடன் பஞ்சவடிக்கு வந்தாள். இராம, இலக்குவர்களைக் கண்டு, நீங்கள் யார்? காட்டுக்கு மனைவியுடன் வந்திருப்பது ஏன்? சடைமுடியுடன் தவ வேடம் தாங்கி, வில்லை கையில் பிடித்துக்கொண்டு இங்கு வந்திருப்பதன் நோக்கம் யாது? என வினவினாள். இராமன், தாங்கள் யார் என்பதை தெரிவித்தும், தவம் செய்யக் காட்டுக்கு வந்திருக்கிறோம் என்றான். பெண்ணே ஏது பதி? யாது பெயர்? யாவருறவு? என காமவல்லியிடம் கேட்டான். என் பெயர் காமவல்லி. குபேரன், இராவணனின் தங்கை பிரம்மாவின் பேத்தி, தனித்துச் சஞ்சரிப்பவள். அரசர்களுக்கு அரசர்களாக இருப்பவர் என் அண்ணர், பேராற்றல் மிக்க கரனும், தூடணனும் என் சகோதரர்கள். நான் சனத்தானத்தில் தங்குகிறேன் என்றாள். தங்களைப் பார்த்ததும் பிரியம் ஏற்பட்டுவிட்டது. தங்களைக் கணவனாக அடைய வேண்டும் என்பது என் ஆசை. என்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டாள். அப்பொழுது சீதை வந்தது கண்டு வியப்புற்றாள். தாய் வண்டோதரியைப் போலவே சீதை இருந்தாள். மரவுரி தரித்து வாடி வதங்கி சோபை இழந்து சோகத்தில் மூழ்கி இருந்தாள். சீதையை அழைத்துப் போய் கரன் அரண்மனையில் மகிழ்ச்சியாக வாழவைக்க விரும்பினாள். மெல்லச் சிரித்த இராமன், பெண்ணே நான் கல்யாணமானவன். அருகிலே மனைவி இருப்பதைப் பார். தம்பி இலக்குவனுக்கு மனைவியில்லை, அழகும்

மிடுக்குமுள்ள அவனை விரும்பினால் நீ மணந்துகொள் என்று வேடிக்கையாக சொனனான். காமவல்லி அதனை நம்பி காதல் வயப்பட்டாள். காம மயக்கத்தில் இலக்குவனிடம் போனாள். உனக்கு தகுந்த மனைவி நானே மகிழ்ச்சியாக வாழலாம் என்றாள். நான் சுதந்திர புருடன் அல்லன். இராமனுக்கு ஊழியம் செய்ய காட்டுக்கு வந்திருப்பவன். இராமனுக்கு நீ மனையியானால் பொருத்தமாக இருக்கும். அழகற்ற சீதையை ஒதுக்கிவிட்டு, அவர் உன்னை மனைவியாக ஏற்றுக் கொள்வார் என்று சொன்னான். இவர்களின் வார்த்தைகளால் காமமும், மோகமும் அதிகரிக்க இராமனிடம் திரும்பிச் சென்றாள். இராவணனோ, குபேரனோ ஒத்துக்கொண்டால் தான் மணஞ் செய்துகொள்ளலாம் என இராமன் வாக்களித்தான். இப்பொழுது கந்தர்வமணம் செய்து கொள்ளலாம், என்றாள் காமவல்லி. வேடிக்கை பார்த்த இராம, இலக்குவனனைப் புரிந்து கொண்டாள். சீதையைத் தூக்கிக் கொண்டு கரன் அரண்மனை செல்ல முயன்றாள். (வால்மீகி ராமாயணத்தில் காமவல்லி சீதையை கரனிடம் தூக்கிச் செல்ல முயன்றாள் என்றே குறிப்பிட்டுள்ளார்.) இராமன் ஆணைப்படி இலக்குவன் காமவல்லியை கீழே தள்ளி காலால் மிதித்து காது, மூக்கு, முலைகளை வாளால் அரிந்து விடுகிறான். குருதி வழிந்தோட வெகுண்டெழுந்த காமவல்லி, அண்ணா இராவணேசன் வருவான் உங்களை வதம் பண்ணி சீதையை சிறை எடுப்பான், என சபதம் செய்து சென்றாள்.

சனத்தானம்

அங்கங்கள் அறுக்கப்பட்டதால் இரத்தம் வழிந்தோட அலறிப்புடைத்துக்கொண்டு கரன் இடத்திற்கு ஓடினாள். கோதாவரி நதிக்கு வடக்கே சனத்தானம் என்ற இராவணனின்

இராசதானி (ஒரிசா) இருந்தது. உறவினர்களான சுபாகு, மாரீசன், கரனை அரசராக்கி ஆட்சி நடத்தி வந்தான் இராவணன். கரன் கோபாவேசம் கொண்டு பதினான்கு வீரர்களையும் தூடணனையும், திரிசிரசையும் போருக்கு அனுப்பினான். இராமன் அவர்களை அழித்தான். கரன் பெருத்த ஆரவாரத்துடன் போய், அம்பு மழை பொழிந்தான். ஒரு பாணத்தினால் இராமன் வில்லை இரண்டாக துண்டித்தான். ஏழு பாணங்களை ஏவி இராமன் கவசங்களை சிதறுண்டு விழச் செய்தான். இராமன் அகத்தியர் தந்த வில்லை எடுத்து பாணந் தொடுத்தான். காலபாசத்தினைப் போல கொடிய கதையை இராமனை நோக்கி ஏவினான். இராமன் அம்பினால் அதை அழித்தான், அநேக பாணங்களை ஏவி கரனை வதம் பண்ணினான்.

அகம்பனன் வேகமாக இலங்காபுரிக்கு வந்து இலங்கேசனிடம் சனத்தானத்தின் அழிவைக் கூறினான். மன்னன் இருக்கையை விட்டெழுந்து அங்கும் இங்கும் நடந்தபடியே பேசலானான். நினைத்தவர்கள் உள்ளத்தில் எல்லாம் நடுக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அந்த சனத்தானத்தை அழிக்க முற்பட்டவன் எவன்? தன்னுயிரை துறக்க முடிவு செய்துவிட்ட அவன் யார்? மூவுலகிலும் அடைக்கலம் புகவழியில்லாமல் என்னை விரோதித்துக் கொள்ள துணிந்துவிட்ட அவன் யார்? என்னுடன் மோதிவிட்டு நிம்மதியாக இருக்க இந்திரனாலும் முடியாது, அந்த விட்டுணுவாலும் முடியாது. காலத்திற்கும் நானே காலன், நெருப்புக்கு நானே தீ, மரணத்திற்கு சாவை அழிக்கக் கூடியவன் நான், நான் கோபம் கொண்டால் காற்றை நிறுத்துவேன், சூரியனை எரிப்பேன், நீ கூறும் அழிவு யாரால் ஏற்பட்டது என்பதைச் சொல்? என்றான். அவன் கூறி முடிந்ததும் கோபம் மேலும் அதிகரித்தது.

இராவணன் தன் அரச சபையைக் கூட்டி ஆலோசனை நடத்தினான். இந்திரன் வீற்றிருப்பது போல மந்திரிமார் புடைசூழ அரசர்க்கரசனாக இலட்சணங்களுடன் வீற்றிருந்தான். வீறிட்டு அலறி அடித்துக்கொண்டு "கைலை மலை எடுத்த அண்ணாவோ" என்று அலங்கோலமாக ஓடி வந்தாள் காமவல்லி. ''உனக்குப் பெருங்கேடு வந்துகொண்டிருப்பதை அறியாமல் இருக்கிறாய். இராமனால் உறவினர்கள் எல்லாரும் கொல்லப்பட்டார்கள். ஒற்றர்களைக் கொண்டு நீ எதையும் அறிந்து கொள்ளாமல் இருப்பதால் உனது அழிவுக்கு நீயே அடிகோலி விட்டாய். தவவேடம் தாங்கி கையில் வேடனைப்போல வில், இளம் மனைவியுடன் தவம் செய்ய வந்துள்ளோம்"என்றார்கள். உள்நோக்கத்துடன் வஞ்சனையாக தவ வேடத்தில் வந்துள்ளார்கள் என ஐயுறவுற்றது சரியாகப் போய்விட்டது. இராமன் பெரிய வில்லைக் கையில் பிடித்து வெகு துரிதமாக அம்புகளை எய்கிறான். பெண் என்றும் பாராமல் என் அழகிய உறுப்புக்களை அறுத்துப் போடச்சொன்ன பதர். வீடு கொழுத்துகிற இராசாவுக்கு நெருப்பெடுக்கிற மந்திரிபோல தம்பி இலக்குவன். சீதையை தூக்கிக்கொண்டு கரன் அரண்மனை செல்ல முயன்றேன். அப்பொழுதுதான் இராமன் கூறியதும், இலக்குவன் என் மேலழகினைச் சிதைத்து விட்டான். உன் பணியைச் செய்ததற்காக, தீராத பழியையும், அவமானத்தையும் ஏற்படுத்தி என் வாழ்வை அழித்து விட்டான். இதற்குப் பழிவாங்க நீ சீதையை சிறை எடுக்க வேண்டும். இராமன் இலக்குவர்களை கொல்ல வேண்டும். உன் மரியாதையைக் காப்பாற்ற விரும்பினால் தண்டகாரணிய வனத்திற்கு உடன் புறப்படு என்றாள். இராவணனுக்கு மனம் இரண்டாக அலைமோதியது. தங்கைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தண்டனை வழங்க வேண்டும். அறியாது காலயுத்வனைக் கொன்றதால்

காமவல்லி பொட்டிழந்தது போல சீதையும் என் கையால் பொட்டிழத்தல் கூடாது. சீதை என் ஆள்பரப்புக்கு வந்ததுமே அழிவு ஆரம்பித்து விட்டது. அழிவு நேர்ந்தாலும் பரவாயில்லை சீதையை சிறை எடுக்க தீர்மானித்தான்.

மாரீசன்

விமானத்திலேறி வடக்கே மாரீசன் ஆசிரமத்தை அடைந்தான். மாமா பரதகண்டத்தில் எனது அரசுகள் எல்லாவற்றையும் இராமன் அழித்துவிட்டான். எந்தக் குற்றமும் செய்யாத என் தங்கை காமவல்லி அங்கம் அறுக்கப்பட்டு மானபங்கப்பட்டுள்ளாள். பழிக்குப் பழிவாங்க இராமன் மனைவி சீதையை சிறை எடுக்கப் போகிறேன். அதற்கு நீ உதவ வேண்டும், பஞ் சவடியில் பொன்மானாக உலவ வேண்டும். உன்னைப் பிடித்துத் தருமாறு சீதை கேட்பாள். அவர்கள் பிடிக்க விரைவார்கள். அந்தச் சமயம் சீதையை நான் தூக்கி வருவேன். விரக வேதனையில் இராமன் துடிதுடித்து மாளட்டும் என்றான். மாரீசன், "கற்பரசியான சீதையை உன்னால் சிறை எடுக்க முடியாது. மீறினால் உடன் அழிவுகால இரவு ஆகி உன்னை அழித்து விடுவாள்" என்று கூறினான். "இராவணேந்திரா நீ சமுத்திரங்களைக் கடைந்தவன், மலைகளைப் பெயர்த்து எறிந்தவன், தெய்வீக ஆயுதங்களைக் கையாளும் வல்லமை படைத்தவன், நாக அரசர்களான வாசுகியையும், தக்ஷகனையும் தோற்கடித்தவன், குபேரனை வென்று புட்பக விமானத்தைப் பறித்தவன். இந்திரனின் நந்தவனத்தையே அழித்துக் காட்டியவன். பெரும் மலையை ஒத்தவனாக நின்று உன் கைகளினால் சூரியனையும் சந்திரனையும் தடுத்தவன், கடுந்தவம் புரிந்து பெரும் வரங்களைப் பெற்றவன். உயிர்ப்பலி, யாகங்களையும் அழிப்பவன்,

மூவுலகங்களுக்கும் இந்திரனாக உள்ளாய். அனைத்து உலகங்களையும் நடுங்கச் செய்தவன், எதிரிகளை வாட்டுகிறவன், இப்போர்ப்பட்ட உனக்கு இது அழகல்ல" என்றான். இதைக் கேட்ட இராவணன் சினந்து, மாமா உன்னிடம் உதவி கேட்டு வந்தேனே ஒழிய உபதேசம் கேட்க வரவில்லை என்றான். இருவரும் விமானத்தில் ஏறி தண்டக வனம் சென்றார்கள்.

இராவண தவசி

பஞ்சவடியில் விமானத்தை இறக்கி மறைத்து வைத்துவிட்டு தவவேடத்தில் இராவணன் பர்ணசாலைக்கு சென்றான். அங்கே இராம, லக்குவர்களும் சீதையும் அவனை வரவேற்றனர். சீதை பிரம்பினால் செய்யப்பட்ட இருக்கையை எடுத்துப் போட்டாள். கால் கழுவ நீர் கொடுத்தாள். கனிகளையும், கிழங்குகளையும் அவர் முன் வைத்தாள். இராவணன், அவளை நோக்கி திருமகள் போல விளங்கும் தாங்கள் யார்? எல்லோரும் எதற்காக காட்டுக்கு வந்திருக்கிறீர்கள்? என்று கேட்டான். சீதை நடந்தவற்றைக் கூறினாள். இவ்வளவு துன்பங்களை சீதை அனுபவிப்பது கண்டும் வாழாவிருக்கும் இராமனை, இராவணன் ஏசுகிறான். சீதை மரவுரி தரித்து வனத்தில் துன்பப்படுவதால் அவளை எதற்காக அழைத்து வந்தாய் என தகாத மொழி பல பேசுகிறான். சீதையிடம் அன்பில்லாத படியால்தான் வனத்திற்கு அழைத்து வந்து வருத்தப்பட வைத்துள்ளாய் என்று இராமனைக் கடிந்தான். (என அதியாத்மராமாயணம்.) சீதைக்காக இரங்கிய துறவி, பட்டாடைகளையும், பொன்னாபரணங்களையும் வழங்கி, என் மகளைப்போல இருக்கிறாய், உன்னை அழகுக் கோலத்தில் பார்க்க விரும்புகிறேன் இவற்றை அணிந்துவா என தெரிவித்தார்.

சீதையும் அவற்றை அணிந்துகொண்டு அன்போடு அளவளாவுகையில் மாரீசன் மாயமானாக சீதை முன் தோன்றினான். அதனைக் கண்ட சீதை, நாதா, இந்த அழகான பொன்மானை வைத்துக் கொள்ளவேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது. இந்த மானை எனக்கு பிடித்துத் தாருங்கள் என்றாள். தம்பி நான் இந்த மானைப் பிடித்து வருகின்றேன், பகைவர்களால் சீதைக்கு ஆபத்து நேராமல் நீ இங்கே காவலாக இரு, என்று சொல்லிவிட்டு இராமன் பொய்மான் பின் சென்றான். மான் ஓடி ஓடி வெகுதூரம் சென்றுவிட்டது. இராமன் அம்புவிட்டு மானைக் கொன்றான், மாயனான மாரீசன் ஏ இலக்குமணா, சீதா, இலக்குமணா என்று அலறிக்கொண்டு உயிர்விட்டான். இராமன் வழியில் ஒரு மானைக் கொன்று அதன் இறைச்சியை எடுத்துக்கொண்டு விரைந்து நடந்தான். சிங்கத்திடம் அகப்பட்ட காளை கதறுவதை ஒப்ப உன் தமையன் கதறுகிறார். நீ புறப்பட்டுச் சென்று அவரைக் காப்பாற்று என்றாள் சீதை இராமன் கட்டளையை எண்ணி இலக்குவன் புறப்படவில்லை. சீதை அளவற்ற கோபம் கொண்டு வாயில் வந்தபடி பேசலானாள். நீ நல்லவன் போல வேடமிட்ட கொடியவன், உன் தமையனுக்கு விரோதி, அவர் அழிய வேண்டும் என்று விரும்புகிறாய். இராகவன் இறந்த பின் நான் உயிர் தரியேன் என்று அழுதாள். இராமனுடைய கட்டளையை மீறி தங்களை விட்டுப்போக முடியாது என இலக்குவன் கூறினான். சீதையின் கண்கள் கோபத்தாற் சிவந்தன. தீயவனே, இரக்கமற்றவனே என்னை அடையும் எண்ணத்தை மனதிற்கொண்டு அவரைப் பின்தொடர்ந்து காட்டுக்கு வந்திருக்கிறாய். உன் எண்ணம் நிறைவேறாது என்று சொன்னதும் இலக்குவன் வணங்கி தமையனைத் தேடிச் செல்கிறேன் என்று கூறிவிட்டு புறப்பட்டான்.

இலக்குவன் போனபின் மீண்டும் இராவணன் சீதையுடன் பேசலானான். சீதா நான் இலங்கைக்கு அரசன், மூவுலகங்களுக்கும் அதிபதி, நீ என்னுடன் வந்துவிடு. உனக்கு பணிவிடை செய்ய ஐயாயிரம் பெண்கள் தயாராக இருக்கிறார்கள் என்றான். இராவணா, நான் இன்னொருவன் மனைவி என்பதை அறியாது நீ இப்படி பேசுகிறாய் என்றாள் சீதை. நீ இன்னொருவன் மனைவியாக இருக்கலாம். எனக்கு மகள்தானே. நீ இலங்கையில் பிறந்தபொழுது, இலங்கையை அழிப்பேன், என் குலத்தை அழிப்பேன், என்றுகூறி நகைத்த படியாலும், சோதிடர்கள் சொன்ன படியாலும், உன்னைப் பேழையில் வைத்து மிதிலையில் விட்டோம், உன்னை அடையாளம் காணவே சிவதனுசை உன்னுடன் வைத்தேன். எனது ஆற்றலையும் வலிமையையும் நீ தெரியாமல் பேசுகிறாய் என்று கூறி தன் சுய உருவை எடுத்தான்.

இந்திரற்கு இந்திரன் எழுதல் ஆகலாச்
சுந்தரன் நான் முகன் மரபில் தோன்றினான்
அந்தரத் தொடும் எவ்வுலகும் ஆள்கிறான்
மந்திரத்து அருமறை வைகும் நாவினான்

ஈசனாண்டிருந்த பேர் இலங்கு மால் வரை
ஊசி வேரோடும் பறித்தெடுக்கும் ஊற்றத்தான்
ஆசைகள் சுமந்த பேர் அமரி யானைகள்
பூசை செய் மருப்பினை பொடிசெய் தோளினான்

மேருவை பறிக்க வேண்டின் விண்ணினை இடிக்க வேண்டின் நீரினை க் கலக்க வேண்டின் நெருப்பினை அவிக்க வேண்டின்
பாரினை எடுக்க வேண்டின் பால் நிகர் செஞ்சொல் ஏழாய் யாரெனக் கருதிச் சொன்னாய்.

(என்ற கம்பராமாயணம்)

இந்தக் காட்டில் என்ன சுகத்தைக் கண்டாய். இந்த வயதில் இத்துன்ப வாழ்க்கை தேவைதானா? மகளே சீதா என்னுடன் வந்துவிடு என்று கூறி, இடது கையால் சீதையின் கூந்தலையும், வலது கையால் தொடையையும் பிடித்துத் தூக்கி இராவணேசன் தன் விமானத்திற்கு கொண்டு சென்று ஏறினான். சீதையை தன் மடிமீது வைத்துக்கொண்டு புட்பக விமானத்தில் அமர்ந்து அதனைச் செலுத்தினான். கற்பின் கனல் சீதை இராவணனை தன் தந்தை என்று கூறிய படியாலும், துன்பத்தை நீக்கவேண்டும் என்பதற்காக தூக்கிச் சென்றதாலும், இராவணனை சுட்டிடெரிக்கவில்லை. சீதை இராமா, இராவணன் என்னை தூக்கிப் போகிறான். உம் கண்களுக்கு தெரியவில்லையா? என்னை மீட்டுச் செல்லும் என புலம்பினாள். சடாயு எதிர்ப்படவே அதனை வெட்டி வீழ்த்தினான். (சீதை கற்பின் கனல் என்பதை வால்மீகி, கம்பன் எல்லா கவிகளுமே ஏற்றுக் கொண்டுள்ளனர்.) சீதையின் கூந்தல் மலர்கள் கீழே விழுந்தன. முத்துமாலைகள், காற்சிலம்புகள் கழன்று விழுந்தன. சீதை நகைகளைக் கழற்றி எறிந்து கொண்டு வந்தாள். இலங்கை நகருக்கு கொண்டுபோய் அரண்மனைச் சிறப்புக்களை எல்லாம் காட்டினான். பிறகு சேடியரை அழைத்து அசோக வனத்தில் சீதையை காவலில் வைக்குமாறு கட்டளையிட்டான். அன்னபானம், ஆடை, ஆபரணங்கள் முதலியவற்றை சீதை விரும்பியவாறு கொடுக்க வேண்டும், கொடுஞ் சொற்களை யாரும் அவளுடன் பேசக்கூடாது எனவும் பணிப்பெண்களுக்குப் பணித்தான்.

இராவணன் எட்டு அஞ்சா நெஞ்சம் கொண்ட வீரர்களை அழைத்து, நீங்கள் சனத்தானத்திற்குச் சென்று இராமனைக் கண்காணியுங்கள். அவனைப் பற்றிய செய்தியை

அடிக்கடி எனக்கு அனுப்புங்கள் என்றான். அவர்கள் வணங்கி விடைபெற்றுச் சென்றனர். (சீதை ஆடை ஆபரணங்களைக் களைந்து மரவுரி தரித்து தவவேடத்தில் வனவாசம் போனவள், தவம் செய்யும் முனி பத்தினிகள் எவரும் நகை அணிவதில்லை, வனத்தில் நகைகளை வைத்திருப்பதுமில்லை. சீதை மேற்சட்டையில் கட்டி நகைகளை எறிந்தாள். மரவுரியுடன் கூட்டிச் சென்றால் இலங்கை சிரிக்கும் என்பதால் சீதைக்கு நகைகளையும் பட்டாடைகளையும் இராவணன் தான் கொடுத்து அழைத்தான்) வண்டோதரியுடனும், பாரிவாரங்களுடனும் அசோக வனத்திற்குச் சென்று சீதையைப் பார்த்துப் பேசி வந்தான். அசோக வனத்தில சீதை ஒரு வருடத்திற்குமேல் இருந்தாள். இராவணனால் தான் சீதை கற்பின் செல்வி எனப் போற்றப்படும் நிலை ஏற்பட்டது. சீதை சோகத்தை மறப்பதற்காகவும், சீதையின் சோகம் மறைவதற்காகவும் அசோகவனத்தில் விட்டான். சீதைக்கு பிறரால் துன்பம் ஏற்படாது தடுப்பதற்காக மட்டுமல்ல சீதை தனக்குத்தானே துன்பம் விளைவித்து ஆபத்தைத் தேடாதிருப்பதற்காகவும் பெண்கள் காவலில் வைத்தான். விபீடணன் மகள் திரிசடையை காவல் தலைவியாக நியமித்தான். சீதையை மகிழ்விப்பதற்காக இராணவன் இசைக் கலைஞர்களைக் கொண்டு இசையினைப் பிறப்பித்தான். நடன மாதுகளைக் கொண்டு ஆடல் பாடல்களினால் மகிழச் செய்தான். புள்ளி மான்களை இரசிக்க வைத்தான். வண்ண மயில்களை ஆடவைத்தான். குயில்களைக் கூவவைத்தான். வண்ண மலர்கள் மலர்ந்து மணம்வீசின. தடாகங்களில் மீன்கள் துள்ளிப்பாய்ந்து விளையாடின. ஆனால் இலங்கையில் சீதை மட்டுமே தனித்து வித்தியாசமாக சோகமாக காட்சி யளித்தாள். இராமனை மறந்து விடுமாறும் இலங்கையில் மகிழ்ச்சியாக இருக்குமாறு இராவணன் சொல்லிப் பார்த்தான்.

(கணவன் வீட்டில் வேதனைப்படும் மகளை, வசதியுள்ள பெற்றார் தம் வீட்டுக்கு அழைத்து வந்து மகிழ்ச்சியாக வாழ வைப்பது வழக்கமாகும். அதைத்தான் இராவணனும் செய்தான்) கணவன் எப்பொழுதும் மனைவியை மகிழ்ச்சியாக வைத்துக் காப்பாற்றக் கடமைப்பட்டவன் ஆனால் இராமனால் சீதையை எப்பொழுதுமே மகிழ்ச்சியாக வைத்துக் காப்பாற்ற முடியவில்லை.

அனுமன் தூது

அசோக வனத்திற்கு மாருதி வந்தான். சீதையுடன் பேசி அவளை மகிழ வைத்தான். இராமனின் கணையாழியை சீதையிடம் கொடுத்தான். சீதை சூடாமணியை அனுமனிடம் கொடுத்தாள். அதற்குள் காவலர் அனுமனைக் கண்டனர். கைது செய்ய முற்பட்டனர். அனுமன் அடித்தும் உடைத்தும் நொருக்கியும் சேதப்படுத்தி அட்டகாசம் புரிந்தான். இந்திரசித்து அவனை இழுத்துக் கட்டிப்போய் அரசன் முன் விட்டான். நான் தூதனாக வந்தேன். ஏன் என்னைக் கைது செய்யவேண்டும்.? தூதனுக்குரிய இருக்கையை வழங்குமாறு அனுமன் கேட்டான். இரவிலே திருட்டுத்தனமாக அந்தப்புரத்துள்ளும், அசோக வனத்துள்ளும் நுழைந்து காவலர்களை தாக்கி பூங்காவை அழித்த நீ தண்டனையை அனுபவிக்க வேண்டும். தூதன் என்பதால் உயிருடன் விடுகிறேன், எனகூறி காவலர்களை அனுமனை இலங்கை வீதி எங்கும் விலங்குடன் இழுத்துச் சென்று அசோகவனம் தாண்டிய பின் வாலைக் கொழுத்தி விடுங்கள் என்றான். அனுமன் அந்த நெருப்பினால் இலங்கை நகரின் ஒரு பகுதியையும், புறநகர்ப் பகுதியையும் எரியூட்டினான். இலங்கைநகரைச் சுற்றியிருந்த ஆற்றுக்கப்பால் இருந்த

இடங்கள் எரிந்து சாம்பராயின. (சாம்பலான இடம் சாம்பல்தீவு என அழைக்கப்படுகிறது.) சல்லிக்கடலில் அனுமன் தன் உடலின் தீயை அணைத்தான். (அவ்வாறு புறநகர்ப் பகுதி எரியும் போது திருமங்கலாய்ப்பகுதி எரியவில்லை என்றும் மண்நிறவேறுபாடு காணப்படுவதாகவும் அவ்வூரார் தெரிவிக்கின்றனர்.)

6. போர்க் காண்டம்

இராமனும், இலக்குவனனும ஓடிச் சென்று ஆச்சிரமத்தைப் பார்த்தபொழுது, தவசியையோ, சீதையையோ காணவில்லை. சீதா, சானகி என்று கத்திக் கொண்டு எங்கும் தேடினார்கள் ஒன்றையும் அறிய முடியவில்லை. இராமன் கவலையில் புலம்பலானான், "நான் முற்பிறவியில் எண்ணற்ற தீய செயல்களைப் புரிந்திருக்க வேண்டும். கூனிக்கு அம்புவிட்டேன், தாடகையைக் கொன்றேன், காமவல்லியின் அளகத்தை அறுக்கச் சொன்னேன், எல்லாப் பாவங்களும் ஒன்று சேர்ந்து பலிக்கத் தொடங்கி விட்டதா? ஆட்சியை இழந்தேன், உற்றாரைப் பிரிந்தேன், தந்தையும் என்னால் மடிந்தார், தாயும் தொலைவிலுள்ளார், சீதையையும் காணவில்லை" என்று இராமன் சோகத்தில் துவண்டான். சடாயு தான் சீதையை கண்டதை இராமனுக்கு தெரிவித்தது. இராவணன் புட்பக விமானத்தில் சீதையை ஏற்றிக்கொண்டு தெற்கே போவதையும் அவள் நகைகளை வீசியதையும் கண்டதாகவும் சொல்லியது. மேலும் "வனத்திலே தையலை தனியே விட்டு மான்பின் சென்றது இராமன் குற்றம். மாயமான் என்று அறிந்ததும் சீதையை விட்டுச் சென்றது இலக்குவன் குற்றம். குலப்பழியைத் தேடிக் கொண்டீர்கள் உங்கள் பிழைகளால்தான் இவ்வாறு நடந்தது" என்றும் சடாயு கூறிற்று. சீதையைத் தேடி இருவரும் தென்திசை நோக்கி நடக்கலாயினர். காடு, மலை, கல்லும், முள்ளும், பள்ளம், மேடு எல்லாம் நடந்தார்கள். துன்பத்தில் துவண்டார்கள், துக்கத்தில் நொடிந்து போனார்கள்.

வாலிவதம்

அனுமனையும் சுக்கிரீவனையும் சந்தித்தார்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்து மற்றவர் துன்பத்தைப் போக்குவது என்று ஒப்பந்தம் செய்தனர். அனுமன் இராமனிடம், வாலியை எதிர்த்து வெல்ல முடியாது. எதிர்ப்பவர்களின் பலம் பாதி அவனிடம் சென்றுவிடும், வாலியின் வலிமைதான் இராவணன் அரசுக்கே காவல், வாலியும் இராவணனும் நெருங்கிய நண்பர்கள், வாலி சீதையை தேடித் தரமாட்டான், இராவணனுக்கே உதவுவான், அதற்கு ஒரே வழி சூழ்ச்சியால் வாலியை வதம் பண்ணுவது தான், என்று சொன்னான். கொலைத்திட்டம் வகுத்தாயிற்று. இலக்குவன் இந்த இழிவான சதித்திட்டத்தை எள்ளி நகையாடுகிறான் தம்முன்னோன் வாணாள் கொள்ளக் கொடுங் கூற்றுவனைக் கொணர்ந்தான். வானரங்களின் எள்ளற்குரிய செயலாகும் என மனம் கொதித்தான். "நண்பனாக வருபவனிடத்தில் உள்ள நல்லதை மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டும். அவனது குற்றங் குறைகளைப் பார்த்து நமக்கு அவனால் ஏற்படக்கூடிய நன்மைகளை இழக்கக் கூடாது" என்றான் இராமன். வாலி, சுக்கிரீவன் இருவரையும் மோதவிட்டு சண்டை உக்கிரமாக நடக்கையில் இராமன் மறைவிலிருந்து வாலிக்கு அம்பு விட்டான். வாலி வீழ்ந்தான், அம்பினை இராமனுடையது என்று கண்டு, இராமனை "வில்லறம் துறந்த வீரனே, சாது வேடத்தில் மறைந்துள்ள துட்டன், பிறரை ஏமாற்றுவதற்காக தவவேடமிட்டு திரிபவன், தர்மத்திற்கு விரோதமாக நான் கொல்லப்பட்டேன். அந்தோ இராமா உன் அறிவின்மைக்காக நான் வருந்துகின்றேன், முறை தவறி நீ என்னைக் கொன்றது கொடுமையானது, கொடூரமானது, முடியுமானால் விடைசொல்" என்றான் வாலி. இராமன் பேசலானான், "மரணத்தை

எவர்தான் தடுக்க முடியும், பரதன் ஆணைக்குட்பட்டு நெறி தவறியவர்களை தண்டித்து வருகின்றோம், சுக்கிரீவனைக் கொல்ல முனைந்தாய். அவன் மனைவி உருமையை அபகரித்தாய், இதற்காக மரணதண்டனை அளிக்கப்பட்டது, மனுநீதிப்படி சரியானது'' என்றான். இராமனின் பதிலைக்கேட்டு ஆத்திரமடைந்த வாலி என்னை சூதால் கொன்றாய், அடுத்த பிறவியில் என்றாலும் உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்றான் வாலி. வாலியைக் கொன்றது அநீதியானது என்று இராமன் ஒப்புக்கொள்கிறான். ''நான் துவாபர யுகத்தில் அடுத்த அவதாரத்தில் கிருஷ்ணனாகவும், நீ வேடராசனாகவும் பிறப்போம். நீவிடும் பாணம் என் பாதத்தில் பட்டு நான் இறப்பேன்'' என்று இராமன் பகர்ந்தான் (என சூரிய புராணம்,). கிட்கிந்தை மக்கள் கந்தர்வர்கள் அவர்கள் வனத்தில் சஞ்சரிப்பவர்கள், இசையில் தேர்ச்சி பெற்றவர்கள். வானரர் என்றால் தேவர்கள். தேவர்களின் புத்திரர்களே வானரர்கள் (என சூரியபுராணம்). கிட்கிந்தை நாட்டின் கொடியில் குரங்கு இலச்சினை இருந்தது. அதனால் அரசனையும் வால்மீகி வாலி என குறிப்பிட்டுள்ளார். (அருச்சுனனையும் வாலி என்று வியாசர் குறிப்பிட்டுள்ளார்.

கந்தபுராணத்தில் தெய்வயானையை வானரமகளிர் என்று குறிப்பிட்டுள்ளார்கள். வானரர் என்பதற்கும் வானரம் என்பதற்கும் பேதம் புரியாததால் உண்டான தவறு. உலகின் மிகச் சிறந்த அழகிகளைத் தேடி ரமித்த இந்திரன் மந்திக் குரங்கை நாடி வந்தானா? கவிகளின் கற்பனை மாறாட்டம். அருணியின் அழகில் இந்திரன் மயங்கியதும் அல்லாமல் சூரியனும் தேடி வந்தானல்லவா, அவள் இரதியேதான்.)

மந்திராலோசனை

அரசபேரவையில் இராவணன் பேசலானான். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினுள் எது எதை எந்தச் சமயத்தில் செய்ய வேண்டும் என்ற சந்தேகம் நேரும்போது அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் இன்ப துன்பங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து முடிவெடுப்பது அவசியமாகும். அதற்குத் தகுந்த ஆற்றலும் திறமையும் உங்களுக்கு உண்டு. உங்களைக் கலந்து நான் மேற்கொண்ட எந்தக் காரியமும் தோல்வி அடைந்தது இல்லை. தேவர்களால் சூழப்பட்ட இந்திரன் சுகமாய் வாழ்ந்தது போல நானும் உங்களால் சூழப்பட்டு சகல சுகத்துடனும் இந்திரனாக வாழந்து வருகிறேன். தாடகை வனத்திலிருந்து எமது அரசுகளை அழித்தும், எனது தங்கை காமவல்லியை அங்க பங்கம் செய்து அவமானப் படுத்தியதற்காகவும் பழிவாங்குவதற்காக இராமனுடைய அன்பு மனைவி சீதையை நான் சிறை எடுத்து அசோகவனத்தில் வைத்துள்ளேன். ஒரு குரங்கு வந்து அட்டகாசம் செய்து விட்டுத் திரும்பியதைப் பார்த்தால் போர் எத்தகையதாய் இருக்கும் என்பதை நிச்சயிக்க முடியவில்லை. இராமன் சீதையை மீட்க விரும்பினால் போரில் வென்று பெற்றுக் கொள்ளட்டும். சீதை பாதுகாப்பாகவும், நன்றாகவும் இருக்கிறாள். அவளை விடமுடியாது. தாடகை, கரன், தூடணன், திரிசிரனை இராமன் கொன்றான். அதற்குத் தண்டனையாக சீதை சிறை வைக்கப்பட்டுள்ளாள். ஆகையால் யோசனை செய்து உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள். யோசித்துப் பார்த்து முடிவைச் சொல்லுங்கள். உங்கள் உதவியினால் தேவாசுரர்களை நான் வென்றேன். இராமனும், இலக்குவனும் சீதையைத் தேடிக்கொண்டு கடற்கரைக்கு வந்திருக்கிறார்கள். சுக்கிரீவனும், மற்ற வானர வீரர்களும் உதவியாக

வந்திருக்கிறார்கள். இராம இலக்குவர்களை வெற்றி கொள்வதற்கு தகுந்த யோசனை சொல்லுங்கள்.

கும்பகர்ணன் பேசலானான் அரசே, இராம இலக்குவர்களைப் பகைத்துக்கொண்டு சீதையை தூக்கி வந்திருக்கிறீர்கள், இருவரையும் போரில் வென்று தூக்கி வந்திருக்க வேண்டும். இராமனுடன் தங்களுக்கு பகைமை ஏற்பட்டு விட்டதே என்பதற்காக கலங்க வேண்டாம். இந்திரன் வந்தாலும் சரி, சூரியன் வந்தாலும் சரி, வருணன் வந்தாலும்சரி. வாயு வந்தாலும் சரி, தங்களுக்கு பகைவன் யாராயிருப்பினும் சரி, அவனை எதிர்த்து நான் வதம் செய்கிறேன். இராமன் தாக்குவதற்கு முன்னே அவனைக் கொல்வேன் தங்களுக்கு நான் வெற்றி தேடித்தருகிறேன். ஆகவே கவலையற்று இருங்கள்.

மந்திரி மகாபார்வசுவன் இராவணனைக் கைகூப்பி வணங்கி, பகைவர்களை அடக்கும் ஆற்றல் மிக்க அரசே பகைவர்களை தாங்கள் ஒரு பொருட்டாக கருத வேண்டாம். இந்திரனே எதிர்த்து வந்தாலும் கும்பகர்ணனும் இந்திரசித்துவுமே சமாளித்துக் கொள்வார்கள். பகைவர்களை நாங்கள் வதம் செய்துவிடுகிறோம், என்றான்.

விபீடணன் பேசலானான், இலங்கைக் கோமானே, ஆசையை விட்டு சீதையை இராமனிடம் சேர்ப்பித்து விடுங்கள். இந்திரசித்தாயினும்சரி, கும்பகர்ணனாயினும்சரி, இராமரை எதிர்த்து யாராலும் நிற்க முடியாது. நந்தி எம்பெருமான் சாபத்தினால் குரங்கு இலங்கையை தாக்கியழித்தது. இலங்கையில் பிறந்த குழந்தை உன்னை அழிக்கப்போவதாக கூறினாளே அவளே சீதையின் வடிவில் வந்துள்ளாளோ என நான் அஞ்சுகிறேன். சிவனின் அசுரர்களை அழிக்கப் பயன்பட்ட வில் அம்புகளை அகத்திய

மாமுனியிடமிருந்து அவர் ஆசியோடு இராமன் பெற்றுள்ளான் என்றான்.

மந்திரி பிரகதத்தன் மறுத்துப் பேசலானான், தேவர், கந்தர்வர், நாகர், இயக்கர் முதலியவர்களுக்கே நாம் அஞ்சுவதில்லை. அப்படியிருக்கும்போது இந்த அற்ப மானுடர்களுக்கா நாம் பயப்படுவது என்றான்.

விபீடணன் இதனைக் கண்டித்து உரையாற்றினான், நீங்கள் அனைவரும் ஒன்று திரண்டாலும் இராமரை ஒன்றும் செய்ய முடியாது. வாலியை வதம் செய்த அந்த வீரனின் ஆற்றலுக்கு முன்னே தேவர்களாலும் எதிர்த்து நிற்க முடியாது. ஆகையால் சீதையை இராமனிடம் சேர்ப்பதற்கு முயலுங்கள் என்றான்.

இந்திரசித்து விபீடணனை நோக்கி கூறுகையில், தேவ குலத்திற்கும் எங்கள் பெருமைக்கும் அடுக்காத வார்த்தைகளைக் கூறினீர், புலத்தியர் மரபிற் பிறந்த எவனாவது இப்படிக் கூறுவானா? மன்னர் சீதைமேல் ஆசைப்பட்டு கவர்ந்து வந்ததாக மோசமாக பழி சுமத்தினீர். இராமன் எங்கள் அரசர்களைக் கொன்றதற்கும், காமவல்லிக்கு செய்த கொடுமைக்கும் தண்டனை வழங்கவே சீதை சிறை வைக்கப்பட்டாள். தேவவேந்திரனைக் கட்டியிழுத்து வந்த நான் மானுடர்களுக்குப் பயப்படுவதா? மறைந்து நின்று வாலியைக் கொன்றது வீரமா? வெட்கம். வெட்கம்.!!

விபீடணன் பேச்சுக்களால் கோபமுற்ற இராவணன் வீபீடணனை நோக்கிப் பேசலானான், பகைவனோடும் கோபங் கொண்டுள்ள பாம்போடும் வசிக்கலாம், நண்பனைப்போல நடித்து பகைவனுக்கு ஆதரவாக இருப்பவனுடன் சேர்ந்து வசித்தல் கூடாது. உடன் பிறந்தே கொல்லும் வியாதி

போல அகத்தில் பகையும் புறத்தில் புன்சிரிப்பும் கொண்டு நண்பனைப் போல நடிக்கிறாய். சந்தர்ப்பம் நேரும்போது துரோகம் செய்யவும் தயங்க மாட்டாய். என் வீழ்ச்சியில் மகிழ்ச்சியடையும் கயமைக் குணம் கொண்டு பேசுகிறாய். பழக்கிய யானைகள் காட்டு யானைகளைக் காட்டிக் கொடுப்பதுபோல உன் நடத்தையும் இருக்கிறது. உனக்கு உள்ளூர பகை இயல்பாகவே இருக்கிறதை நான் அறிவேன். உலகத்திலுள்ள அனைவரும் எனக்குப் பணிந்து நடக்கிறார்கள். பகைவர்களும் எனக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். பொறாமைக் கனல் உன் நெஞ்சில் வியாபித்து விட்டது. தேன் பருகிய வண்டு வேறு மலரைத் தேடிப்போகும் அதுபோல உன் நடத்தையும் இருக்கிறது. உனது மன நிலையை நான் தெரிந்து கொண்டேன். நீ குலத்தைக் கெடுப்பவன். நீ எப்பொழுதும் சீதைக்கும் இராமனுக்கும் பரிந்து பேசுகிறாய். சீதையை மோகித்து நான் கவர்ந்து வந்ததாக வீண் பழி சுமத்தினாய். இராமனைத் தண்டிக்கவே சீதையை சிறை வைத்தேன்.

இராவணனின் சீற்றமும் கடுமையான வார்த்தைகளும் விபீடணனின் நெஞ்சை உறுத்தியது. உண்மையாக துரோக எண்ணம் கொண்ட விபீடணன் தன் கதாயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்தான். சபையை விட்டு வெட்கிக் குனிந்த தலையுடன் வெளியேறினான். அவனுடைய சதியில் சேர்ந்த இன்னும் நால்வரும் எழுந்து அவனைப் பின்தொடர்ந்து புறப்பட்டார்கள். இலங்காபுரியிலிருந்து புறப்பட்ட அவர்கள் இராம இலக்குவர்களிருக்கும் சேதுக்கரையை நாடிச் சென்றார்கள்.

அரண்மனை அந்தப்புரம்

மாமன்னன் மனங்கவரும் வண்டோதரி மகாராணியே வணக்கம். இன்று அரசவையில் நடந்த ஆலோசனையின் போது விபீடணப்பிரபு எங்கள் இந்திராதி இந்திரன் இலங்கேசனைப் பற்றி தெரிவித்த கருத்துக்கள் என் மனத்தை உறுத்துகின்றன. அதனால் தங்களிடம் தெளிவு பெற வந்தேன் என்றாள் இராவணனின் இரண்டாவது மனைவி தானியமாலினி. மாலினி, எங்கள் இதய வேந்தனைப் பற்றி விபீடணன் என்ன குறை கூறினார்? என்று தாமதம் இன்றி சொல் என்றாள் வண்டொதரி. இராமன் மனைவி சீதையை மோகத்தால் கவர்ந்து வந்து இராவணேசன் சிறை வைத்திருப்பதாகக் கூறினார் என்றாள் மாலினி. பேரழகு படைத்த தேவமாதர்களான ஊர்வசி, இரம்பை, மேனகை , திலோத்தமை அவருக்கு சாமரம் வீசியும், கால் பிடித்தும், இசை வழங்கியும், நடனமாடியும் சேவை செய்கிறார்கள். அந்த அழகிகளையே ஏறெடுத்துப் பார்க்காதவர் என் பிரபு. தேவலோக அரசகுமாரியான நீயே பேரெழிலான தோற்றத்தையும், வீரத்தையும் கண்டு காதல் கொண்டு மணந்தாயே. என்னை மணந்த பின் அவர் எந்தப் பெண்ணையும் நாடியதில்லை. பத்மாட்சன் அழைப்பை ஏற்று சுயம்வரத்திற்குச் சென்றார். அவன் வந்திருந்த அரசர்களை அவமதித்தும், ஏறுமாறாகப் பேசியும் சுயம்வரத்தை நடத்தாமல் ஏமாற்றினான். ஆத்திரமடைந்த அரசர்கள் அவனை அடித்துக் கொன்று விட்டார்கள். பதுமையையும் பழிதீர்க்கத் தேடினார்கள். அவள் ஒளிந்து கொண்டாள். அவர் பதுமையை அழைத்துவர முயன்றார். சீதையை விரும்பியிருந்தால் சுயம்வரத்தில் வில்லை ஒடிக்காமல் விட்டிருப்பாரா? அசோக வனத்திற்கு என்னையும் அழைத்துச் செல்வாரா? இலங்காதிபதி சீதையிடம் தப்பாக எதையும்

பேசவில்லையே என்றாள் வண்டோதரி. அக்கா என்னை மன்னியுங்கள். தவறு என்று தெரிந்தும் கேட்டுவிட்டேன்.

தாடகையை கொன்றது, காமவல்லியை காதலிப்பது போல ஏமாற்றி மானபங்கம் செய்தது, அதற்கு தண்டிக்கவே சீதையை சிறை வைத்தார் என்பது எனக்கும் தெரியும். உங்களின் பேரழகுக்கு இணையான ஒரு அழகி உலகிலேயே இல்லை. அவருடைய அழகில் மயங்கி நான்தான் விரும்பி மணந்தேன் என்றாள் தானியமாலினி.

வண்டோதரி, " என் பதி எட்டுச் சித்தும் ஆடவல்ல சித்தன். விரும்பிய உருவை எடுக்கும் வல்லமை படைத்தவர். விட்டுணு, சலந்தரன் வேடந்தாங்கி பிருந்தையைக் கூடினான். கௌதமன் உருக்கொண்டு இந்திரன் அகலிகையை கலந்தான். தவசி வேடம் தாங்காமல் தாசரதி உருவம் எடுத்திருக்கலாமல்லவா? அவர் பிறர்மனை விரும்பும் பேதை அல்ல. அற்ப புத்தி படைத்த அறிவிலி, தப்பு நெறி படைத்த விபீடணன் தான் தப்பி ஓடுவதற்காக, வீண்பழி சுமத்தினான். சதா காலமும் நமச்சிவாய எனச் சொல்லும் என் நாதனுக்கா மோக ஆசை? அநியாயம், இதைவிடக் கொடுமை வேறென்ன இருக்க முடியும்? பக்தி நெறியிலே தோய்ந்து உலகம் முழுவதும் 1008 சிவலிங்கங்களை தாபித்த என் நாதனுக்கு சிற்றின்ப மோகமா? உலக மாதா பார்வதியை பரமேசுவரன் என் நாதனுடன் அனுப்பியும், தாயே என வணங்கி திருப்பி அனுப்பிய உத்தமன். இராமனுடையதும், விபீடணனுடையதும் கோரிக்கைக்கு இணங்கி சீதையை சிறையிலிருந்து விடவில்லையானால் மோகம் என்று அர்த்தமா? வீரமிருந்தால் போரில் வென்று சீதையை மீட்கட்டும். இதில் என்ன தவறு இருக்கிறது? எதிரி பகை அரசர் மனைவியரைச் சிறை எடுப்பது போர் முறைகளில் ஒன்று அரசநீதி தெரிவிக்கின்றது. என்று,

எதிரி பக்கம் செல்லவே அண்ணன்மீது பொய்யுரைத்தானா? கொடிய பழிச் சொல்லைக் கூறியும் தம்பி என்று நம்பி கொல்லாமல் விட்டவர் இலங்கேசுவரன்" என மொழிந்தாள்.

விபீடணன் தூரோகம்

அனுமன் இலங்கையைச் சுற்றிப் பார்க்கும பொழுது ராமா, ராமா என்ற ஒலி கேட்டு அங்கு சென்றான். யார் நீ? எதற்காக ராமா, ராமா என்று சொல்கிறாய்? என்றான். நான் இராவணன் தம்பி விபீடணன். இலங்கைக்கு அரசனாக வேண்டும் என்ற ஆசை என்னை வாட்டுகிறது. இராவணனுக்குப் பின் இந்திரசித்தனே நாட்டை ஆள்வான் என்றான். அனுமன், நான் இராம தூதன் அனுமன் நீங்கள் சீதையை மீட்க உதவினால் இராமன் உங்களுக்கு உதவுவான். சீதை எங்கே இருக்கிறாள்? நான் இராமனிடம் உங்களை அழைத்துப் போகிறேன் என பகர்ந்தான். மகிழ்ச்சியுற்ற விபீடணன் சீதை அசோகவனத்தில் இருக்கிறாள் என்றான். இருவரும் ஒருவருக்கொருவர் உதவுவதாக இணங்கிக் கொண்டனர்.

இலங்கையை விட்டு வெளியேறிய விபீடணன் நால்வருடன் இராமனிடம் சென்று அடைக்கலமாக வந்திருக்கின்றேன் என்றான். சுக்கிரீவன் இவனை நம்பக் கூடாது, இராவணனின் ஒற்றனாக இருக்கக்கூடும் என்றான் வாலியை வதம் செய்து சுக்கிரீவனுக்கு அரசை அளித்திருப்பது அறிந்து தங்களை நாடி வந்திருக்கிறான், விபீடணனை நாம் சேர்த்துக் கொள்ளலாம் என்றான் அனுமன். சுக்கிரீவன் மறுத்துரைத்தான். தன் தமையன் ஆபத்தில் இருக்கும்போது அவனைக் கைவிட்டு நம்பால் வந்திருக்கிறான். நமக்கு ஆபத்து நேர்ந்தால் நம்மை விட்டுப்

போகாமல் இருப்பான் என்று எப்படி நம்ப முடியும்? என்றான். தமையனைக் கொல்விக்க வந்து நிற்கும் தம்பி விபீடணனை நல்லவன் என்று எப்படி நம்புவது? என்றான் இலக்குவன். நண்பனாக வந்தவரிடத்தில் பயன்பெறும் தன்மையில்லாமல் அவரின் குற்றம் பற்றிக் கதைப்பது பயனுடையதாகாது, தனக்கு இராச்சியம் வேண்டு என்ற விருப்பத்தாலும் நம்மிடம் வந்திருக்கக்கூடும், அதைக் குற்றமாக கருதலாகாது என்றான் இராமன். விபீடணா, இராவணனின் பலாபலங்களை உள்ளபடி எனக்கு சொல்ல வேண்டும் என்று இராமன் கேட்டான்? இராமச்சந்திரா, இராவணன் வரம் பல பெற்றவன். கந்தர்வர்களாலும், மற்றவர்களாலும் அவனைக் கொல்ல முடியாது. கும்பகர்ணன் போர் செய்வதில் இந்திரனை நிகர்த்தவன். சேனாதிபதி பிரகத்தன், குபேரன் சேனாதிபதி மணிபத்திரனை தோற்கடித்தவன். யாருக்கும் தெரியாமல் கரந்து நின்று போர் புரிவதில் இந்திரசித்து மகா திறமைசாலி. மற்ற சேனாதிபதிகளான மகோதரன், மகாபார்சுவன், அகம்பனன் முதலியோர் போர் செய்வதில் லோகபாலர்களை நிகர்த்தவர்கள். வலிமைபெற்ற இத்தகைய வீரர்கள் இலங்கையில் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள். இவர்களின் உதவிகொண்டு இலங்கையர் கோன் லோகபாலகர்களுடன் போர் புரிந்து அவர்களைத் தோற்கடித்தான் என்று விபீடணன் தெரிவித்தான்.

நீ கூறியது அனைத்தும் உண்மை. உன்னை இலங்கைக்கு அரசனாக்குகிறேன் என்று இராமன் கூறினான். அண்ணலே, இயக்கர்களைக் கொல்வதற்கும், இலங்கையை தாக்குவதற்கும் என்னால் இயன்ற உதவியைச் செய்கிறேன் என விபீடணன் பதில் சொன்னான். இதைக்கேட்டு இராமன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். இலங்கைக்கு அரசனாக விபீடணனுக்கு பட்டாபிசேகம் செய்தான். நாட்டுக்கு வெளியே

அமைக்கப்பட்ட முதல் அரசு. இராவணன் சுகனை சுக்கிரீவனிடம் தூது அனுப்பினான். அவனை வானவீர்கள் தாக்கினார்கள்.

தருப்பைப்புல் மீது படுத்து மூன்று நாட்கள் சமுத்திர ராஜனைக் குறித்து இராமன் தவம் செய்தான். பலன் ஏற்படவில்லை. எனக்கு மரணமாவது சம்பவிக்கவேண்டும் அல்லது சமுத்திரத்தையாவது நான் கடக்கவேண்டும் என்ற உறுதியோடு சிவனை வேண்டித் தவமிருந்தான். நளன் வானவீர்களின் உதவியுடன் நூறுயோசனை தூரம் அணை கட்டினான். (இராமர் அணை இன்றும் பழுதுற்ற நிலையில் காணப்படுகிறது.) வானவீர்கள் அணை ஊடாக நடந்து வந்தார்கள். இராமனும் இலக்குவனும் அனுமன் தோளில் ஏறி வரலாயினர். விபீடணனும் நால்வரும் கையில் ஆயுதங்களுடன் இராவணன் படை வந்தால் தாக்கும் பொருட்டு முன் சென்றனர். விபீடணன், இராவணனின் ஒற்றர்களைப் பிடித்து இராமனுக்குக் காட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தான். அரண்மனை வந்த மாலியவான் அரசே, காலத்தையும் பலத்தையும் அறிந்து நடக்க அரசன் தெரிந்து கொண்டிருக்க வேண்டும. சீதையை விட்டுவிடுவது நல்லது என்றான். இராவணன் மாலியவானை நோக்கி தாத்தா, வெளிப்பார்வைக்கு உங்கள் பேச்சு எனக்கு நன்மை பயப்பதாக இருப்பினும் உண்மையில் அது என் பகைவனுக்கு சாதகமாக இருக்கிறது. இராமனைப் போருக்கு அழைக்கவே சீதையை சிறை எடுத்தேன். இராமனுக்குப் பயந்து சீதையை நான் ஒருபோதும் திருப்பிக் கொடுக்கப் போவது இல்லை. போரில் உயிர் துறந்தாலும் துறப்பேனே அன்றி பிறனை வணங்கி வாழ்வது என் இயல்புக்கு முற்றிலும் மாறானது. ஆகவே எனது இயல்பை மீறி என்னால் ஒருபோதும் நடக்க முடியாது என்று மறுதலித்தான். மாலியவான், அரசே வெற்றி பெறுவீராக என வாழ்த்தினான்.

இராமனின் படைகள் சல்லியின் வெள்ளை மலையில் பாசறை அமைத்து தங்கினார்கள். விபீடணன் தனது அமைச்சர்களாகிய அனலன், சரபன், சம்பாதி, பிரகசன் ஆகியோரை மாறுவேடத்தில் இலங்கை நகருக்குள் அனுப்பி போர் விபரங்களை அறிந்து இராமனுக்கு தெரிவிக்கிறான், இலங்கை வீரர்கள் இராவணனுக்காக போர் புரிய முனைப்புடன் இருக்கிறார்கள். அறுபது இலட்சம் வீரர்கள் போருக்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். இலங்கை நகரின் சிறப்பையும் எழிலையும் செல்வத்தையும், மாடமாளிகைகளும் சோலைகளும் வாவிகளும் நிறைந்து பார்க்க வெகு அழகாகக் காட்சியளிக்கும் இலங்கை நகரினைப் பார்த்து இராமன் ஆச்சரியப்பட்டான். ஒரு கோபுரத்தின் உப்பரிகையிலே இலங்கையர் கோன் கம்பீரமாக உட்கார்ந்திருக்க இரு வீரர்கள் வெண்சாமரம் வீசினார்கள். ஒருவன் வெண்கொற்றக் குடைபிடித்து பெருமைப் படுத்தினான். எவரும் அணுக முடியாதபடி கம்பீரமாக வீற்றிருக்கும் இராவணனை இராமன் பார்த்தான். போருக்கு முதல்நாள் இரவு சல்லிமலையில் அகோர உக்கிர காளியைத் தாபித்து இராமன் களப்பலி கொடுத்தான். புற அகழிக்கு வெளியே வெள்ளைமலை அமைந்திருந்தது. (நெடுங்காலஞ் சென்ற பின்னும் உக்கிர காளியின் உக்கிரமும் குறையவில்லை என்பதால் பாலம் போட்ட ஆற்றின் அருகில் தாபிக்கப்பட்டுள்ளது.)

இலங்கை நகர் முற்றுகை

வடக்கு வாயிலை இராம இலக்குவர், கிழக்கு வாயிலை அங்கதனும், மேற்கு வாயிலை அனுமனும் படைகளுக்கு தலைமை தாங்கி முற்றுகையிட்டனர். விபீடணன் படை நடுவிலிருந்து இராவணன் கோட்டை முற்றுகைக்கான உத்திகளைக் கூறினான்.

இலங்கைப் போர்

இராமன் போரைத் தொடங்குமாறு வானரப் படைகளுக்கு உத்தரவிட்டான். வானரர்கள் மதில்களை அழித்தார்கள். அகழிகளைத் தூர்த்தார்கள், உள் மதில் மேல் ஏறினார்கள். வாயில்களையும் கோபுரங்களையும் இடிக்க முற்பட்டார்கள். இராவணன் போரிடுமாறு தன் சேனைக்கு உத்தரவிட்டான். இராமன், மகாபார்சுவன் மகோதரன் முதலிய சேனாதிபதிகள் மீது அம்புமாரி பொழிந்தான். இந்திரசித்தனின் தேர் சேதமானது. அடுத்த நாள் போரில் இந்திரசித்தன் கூர்மையான பாணங்களினால் தாக்கி இராமனையும், இலக்குவனையும் மூர்ச்சையடையச் செய்தான். நாக பாணத்தினால் தாக்கி இருவரையும் கட்டினான். இவர்களின் உடல்களிலிருந்தும் இரத்தம் பெருகி வழிந்தது. தலையை நிமிர்த்த முடியாமல் இராமனும், இலக்குவனும் பூமியில் சாய்ந்தார்கள். உடல் முழுவதும் சிறிது கூட இடமின்றி பாணங்கள் பாய்ந்திருந்தன. குருதி கொட்டிக் கொண்டிருந்தது. இராமன் முதலில் கீழே சாய்ந்தான், கையில் இருந்த வில் பிடி தளர்ந்து நழுவிற்று.

இந்திரசித்தன் தன் படையினரிடையே வீரா வேசத்தோடு பேசலானான். கரனையும், தூடணனையும் கொன்ற இராமனும், இலக்குவனும் என் பாணத்திற்கு ஆற்றாது கீழே விழுந்து கிடக்கின்றார்கள். இலங்கை நகரைக் கலக்கியவர்கள் நான் ஏவிய கணைகளால் அடியுண்டு கிடக்கிறார்கள். இராமன் இறந்து விட்டான் என இலங்கைப் படை கொண்டாடியது. உடம்பு முழுவதும் பாணங்களால் துளைக்கப்பெற்று இராமனும், இலக்குவனும் பூமியில் கிடப்பதைப் பார்த்து சுக்கிரீவன் பயந்து போனான். இராமன் இறந்துவிட்டான் என வானரப் படைகள் கலங்கின. வானரப்படை அழிந்துபோய் இருப்பதையும் இலங்கைப்படை

உற்சாகத்துடனும், களிப்புடனும் இருப்பதையும், இராமனும் இலக்குவனும் அம்புகள் தைத்து இரத்தம் பெருகி வழிய மூர்ச்சித்து கீழே கிடப்பதையும் அவர்களைச் சுற்றிவர வானர வீரர்கள் கவலையோடு நிற்பதையும் அறிந்த சீதை வாய்விட்டுக் கதறி அழுதாள். விதியை யாராலும் வெல்ல முடியாது போலும் என பலவாறு புலம்பினாள்.

இராமன் மூர்ச்சையுற்ற நிலையில் புலம்பினான். "என் தம்பி போரில் தோற்று பூமியில் கிடக்கிறான். அருமைத் தம்பியை இழந்தபின் சீதை கிடைத்து என்ன பயன்? சீதையைப் போன்ற வேறு பெண் கிடைப்பாள். ஆனால் இலக்குவனைப் போன்ற தம்பி கிடைக்க மாட்டான். இலக்குவன் இறந்தது மெய்யானால் இப்பொழுதே நானும் என் உயிரை விடுவேன். என்னைத் தேற்றுவதற்கு யார் இருக்கிறார்கள்? பேசமுடியாத நிலையில் படுத்திருக்கிறாயே யானும் உனைத் தொடர்ந்து யமனுலகுக்கு வருகிறேன்."

இராமனும் இலக்குவனும் மூர்ச்சையுற்றுக் கிடக்கும் இடத்திற்கு விபீடணன் கதையுடன் வந்தான். இந்திரசித்தன் என நினைத்து வானவீரர்கள் பயந்துபோய் நாலா புறங்களாலும் ஓடினார்கள். மேனி முழுவதும் பாணங்கள் தைத்து இருவரும் படுத்திருப்பதைப் பார்த்து மனம் கலங்கினான். தனது கையைத் தண்ணீரில் நனைத்து இருவர் காயங்களையும் துடைத்து விட்டான். துயரம் தாங்க முடியாமல் கதறிப் புலம்பினான். முள்ளம் பன்றியின் உடல் மீதிருக்கும் முட்களைப்போல இவர்கள் மேனி முழுவதும் அம்புகள் நிறைந்திருந்தன. எவர்களுடைய பலத்தை நம்பி நான் மேன்மையடைய விரும்பினேனோ அவர்கள் மூர்ச்சித்து தரையில் கிடக்கிறார்கள்.

இராவணனின் படைப்பிரிவு தலைவர்களான தூம்ராக்சன், வச்சிரதிமிட்டிரன், அகம்பனன் ஆகியவர்களை

இராமன் கொன்று விட்டான். இராவணன் காலை இலங்கைநகர் மீண்டும் முற்றுகையிடப்பட்டிருப்பதை அறிந்தான். பிரகத்தன் என்ற தளபதியை அனுப்பினான். வீரப் போரில் தளபதி நீலனால் அவன் கொல்லப்பட்டான். தேவவேந்திரனையே தோற்கடித்த எனது சேனாதிபதி வானரர்களால் வதையுண்டிருப்பதால் நாம் இனி அலட்சியமாக இருத்தல் கூடாது. இன்று போருக்கு நானே தனித்து கிளம்பி பகைவர்களை அழிக்கிறேன் என்று வீரகர்ச்சனை செய்தான்.

உயர்தரமான பதினொரு குதிரைகள் பூட்டிய தேரில் இராவணன் ஏறினான். சங்கம், பேரிகை, தம்பட்டம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வந்திகள் தோத்திரம் செய்து துதித்தார்கள். இராமன் இராவணனைப் பார்த்து, அவன் உருவத்தையும், தோற்றத்தையும், பத்து மணி முடிகளின் ஒளியையும் கண்டு பிரமிப்படைந்தான். பெரு மீன்கள் சமுத்திர நீரைப் பிளந்துகொண்டு செல்வது போல வானர சேனையை பிளந்துகொண்டு உள்ளே புகுந்தான். மலைச் சிகரத்தைத் தூக்கி எதிர்த்த சுக்கிரீவன், இராவணன் பாணத்தால் காயமுற்று கதறிக் கொண்டு பூமியில் விழுந்து மூர்ச்சையானான். இலக்குவன், அனுமன், நீலன், மாறி, மாறி இராவணனுடன் போர் செய்தார்கள். ஒருவர் அடிபட்டு மூர்ச்சையடைந்து விழுந்ததும் மற்றவர் எழுந்து போரிட்டனர். இராவணன் கணை இலக்குவன் மார்பில் பாய்ந்ததால் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். இராமனும் இராவணனை எதிர்த்தான். அனுமன் தோளில் இருந்தே இராமன் போர் புரிந்தான். இராவணன் பாணங்களால் அனுமனைத் தாக்கினான். இராவணன் அட்டகாசமாக அம்புமாரி பொழிந்து இராமனை திக்குமுக்காடச் செய்தான். பாணங்களால் தாக்கப்பட்ட இராமன் தள்ளாடி தத்தளித்துச் சோர்ந்தான். இலக்குவன் அடிபட்டு மயங்கியதால் இராமன் மனம் தளர்ந்து

களைத்துப் போனான். அன்றைய போர் முடிவடைந்தது.

அடுத்தநாள் காலையில் தன் படைத் தலைவர்களை அழைத்து இராவணன் பேசலானான், நான் செய்த தவங்களும் பெற்ற வரங்களும் வீணாகினவா? இந்திரன் முதலானவர்களை எளிதில் வென்ற நான் மானுடனோடு நீண்ட போரினால் அவமானமடைந்தேன். பகைவர்களைத் தோற்கடிக்க வழிதேட வேண்டும் என சொன்னான். மாலியவான், இராவணா, "ஒவ்வொரு தளபதியையும், சிறிய படையையுமே அனுப்புகிறாய், பெரிய படையை அனுப்பி முழுப்பலத்துடன் இராமனைத் தோற்கடிக்க வேண்டும்," என்றான். இலங்கேசன் மீண்டும் சிறிய படையையே அனுப்புகிறான். இராம இலக்குவர்களை சரணடைய வைப்பதற்காகவே அவ்வாறு செய்தான். மகள் சீதையின் கணவன் இராமன் என்பதால் கொல்ல விரும்பவில்லை. கொன்றால் சீதை பொட்டிழந்து, பூவிழந்து வாழ்வையும் இழந்துவிடுவாள். அவனை வெல்லவே நினைத்தான். இராம இலக்குவர்கள் இந்திரசித்தனால் இறந்தபோதும் இராவணன் தன் அரண்மனை மருத்துவன் சுசேணனை அவர்களுக்குச் சிகிச்சையளிக்க அனுமதித்தான்.

கும்பகர்ணன் போர்

இராவணன் கும்பகர்ணனை எழுப்புங்கள் வீரனான அவன் வானரங்களையும், இராம இலக்குவர்களையும் வதைப்பான் என்பதில் ஐயமில்லை என்றான். கும்பகர்ணன் எழும்பும் போதே, இராமனையும் இலக்குவனையும், வானர சேனையையும் அழித்துவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பேன். இதனை முடித்துவிட்டு பிறகு தமையனாரைச் சந்திக்கிறேன் என்றான். கும்பகர்ணன் சென்றபோது இராவணன் புட்பக விமானத்திலிருந்தான் பாதங்களைத் தொட்டு வணங்கி அரசே ஏன் எழுப்பினீர்கள்? எனக் கேட்டான் கும்பகர்ணன்.

நீ சுகமாகத் தூங்கிக்கொண்டிருக்கிறாய், கடலுக்கு அணைகட்டி சுக்கிரீவனுடன் இலங்கைக்கு வந்து இராமன் இலங்கை நகரைப் பாழ் படுத்துகின்றான். எனது வீரர்கள் போரில் மடிகிறார்கள். வானரர்கள் மடியவில்லை. சிம்மாசன ஆசையால் விபீடணன் இலங்கையைக் காட்டிக் கொடுக்கிறான். இலங்கை நகரைக்காக்கவும் வானவீரர்களை அழிக்கவும் உன்னை எழுப்பச் செய்தேன். ஆற்றல் மிக்கவனே நம் பகைவர்களை நீ வதைக்கவேண்டும் என்று இராவணன் சொன்னான். வேந்தே தங்களுடைய பகைவனை நான் நாசம் செய்கின்றேன். இராமனையும் இலக்குவனையும் போர்க்களத்தில் இன்றே நான் கொல்கிறேன் என்று மொழிந்தான் கும்பகர்ணன்.

கும்பகர்ணன் பேச்சினால் மகிழ்ந்த இலங்கேசன் நவமணி மாலையை பரிசாக கழுத்தில் அணிவித்து அவனை ஆரத்தழுவி போருக்கு அனுப்பி வைத்தான். கும்பகர்ணன் போருக்கு வருவதைத் தடுப்பதற்கு இராமன், அனுமன், விபீடணன் சதியாலோசனை செய்தார்கள். கும்பகர்ணனும் இன்னொரு இராவணன் போன்ற வலிமை மிக்கவன் என்று பயந்த இராமன், இலங்கை அரச அதிபதி ஆசை காட்டினால் நம் பக்கம் சேர்க்கலாம் என்றான். விபீடணன் அதனை ஏற்று களத்தில் சென்று, கும்பகர்ணனிடம் ஆசை வார்த்தை பேசுகிறான். அற்ப மனிதர் இருவரை வணங்கி, குரங்கையும் கும்பிட்டு, உயிர்பிழைத்து உடம்பைப் பாதுகாத்துக் கொள்ளும் உன்போல மானமிழந்த செயலை நான் செய்ய மாட்டேன், என கும்பகர்ணன் விடை பகர்ந்தான். நான் நாட்டுப்பற்றும், அரச விசுவாசமும் உள்ளவன். இராசத் துரோகம் இழைக்கவோ, நாட்டிற்கு நட்டம் செய்யவோ, என்னால் முடியாது என்று விபீடணனைக் கடிந்து கூறினான். ஏமாற்றத்துடன் விபீடணன் திரும்பினான்.

கும்பகர்ணனின் அடியினால், கடும் போர் புரிந்த அனுமன் இரத்தம் கக்கிச் சோர்ந்தான். நீலன், அங்கதன், வானரர் எல்லாரும் கும்பகர்ணனுடன் போரிட்டு மூர்ச்சித்து விழுந்தனர். உக்கிரமாக போரிட்ட சுக்கிரீவனை அடித்து வீழ்த்திய கும்பகர்ணன், மூர்ச்சித்தவனைத் தூக்கிச் சுமந்து கொண்டு இலங்கை நகருள் சென்று நிலத்தில் போட்டான். கும்பகர்ணனுக்கு பன்னீராலும், நறுமலர்களாலும் முழுக்காட்டினார்கள். அவை நிலத்திற் கிடந்த சுக்கிரீவன் மீது படவே, அவன் மயக்கம் தெளிந்து எழுந்தான். கும்பகர்ணன் நிலத்துடன் சேர்த்து சுக்கிரீவனைத் துவைத்தான். அவன் ஒருவாறு தப்பி ஆகாச வழியாக இராமனிடம் சேர்ந்தான். கும்பகர்ணன் மீண்டும் கடும் போர் செய்தான். இராமன் பாணங்களால் ஒவ்வொரு அங்கமாக அறுத்து அவனைக் கொன்றான். கும்பகர்ணன் மந்திரி மாநாகன் வந்து இலங்கேசுவரனை வணங்கி, இலங்கைக் கோமானே வணக்கம் நாகநாட்டு அரசனாகிய கும்பகர்ணன் வீரசொர்க்கம் அடைந்தார், தங்கள் தம்பி விபீடணன் படைகள், பாதைகள், சுரங்க வழிகள் எல்லாவற்றையும் காட்டிக் கொடுக்கிறார். அவர் இராமன் பக்கலில் நிற்கும்வரை நாம் இராமனை வெல்வதும் முடியாது, அவர்களைக் கொல்வதும் முடியாது, என்றான்.

குமாரர் திரிசிரன் போர்

கும்பகர்ணன் இறந்த செய்தி கேட்டு, இராவணன் அழுது புலம்பினான். அரசே, கும்பகர்ணன் ஆற்றல் மிக்கவர்தான் ஆயினும் அவருக்காக தாங்கள் புலம்பக் கூடாது. மூவுலகையும் ஆளும் ஆற்றல் பெற்ற நீங்கள் கவலைப்படலாமா? இறைவனிடம் பெற்ற வில்லும், அம்பும், வாளும், கவசமும் இருக்கும்போது ஏன் தயங்க வேண்டும்? எனக்கு அனுமதி கொடுங்கள் இப்பொழுதே சென்று

இராமனை வதம் செய்து திரும்புகின்றேன் என்று திரிசிரகுமாரன் சொன்னான். இராவணன் தன் புதல்வர்களான தேவாந்தகன், நராந்தகன், அதிகாயன், திரிசிரன் நால்வரையும் கட்டியணைத்து ஆசிகூறிப் போருக்கு அனுப்பினான். இரதத்திலும், யானை மீதும், குதிரைமீதும், ஏறி,சேனையுடன் புறப்பட்டனர். வெற்றி அல்லது வீரசொர்க்கம் என்ற உறுதியோடு போரிட்டார்கள். அங்கதன் நராந்தகனைக் கொன்றான். அனுமன் தேவாந்தகனுடன் போர் புரிந்து வதம் செய்தான். நீலனும் அனுமனும் சேர்ந்து திரிசிரனைக் கொன்றார்கள். இராமன் மகோதரனையும் மகாநாகனையும் கொன்றான். இதனை அறிந்த அதிகாயன் தேரில் ஏறி சிங்க நாதம் செய்தான். கும்பகர்ணன் என்று வானரசேனை பயத்தில் இராமனை சரணடைந்தது. இராமன் பிரமித்துப் போனான். இராம இலக்குவர்களுடன் கடும் சமர் புரிந்தான். ஆயிரம் பாணங்களைப் பொழிந்தும் இலக்குவனால் அதிகாயனை அசைக்க முடியவில்லை. காயப்படவுமில்லை, கவசம் உடையவுமில்லை. இலக்குவனால் அதிகாயனை ஒன்றும் செய்ய முடியவில்லை. விபீடணன் பிரமாத்திரம் விட்டு வதைக்கச் சொன்னான். இலக்குவன் பிரமாத்திரம் விட்டு அதிகாயன் இறந்தான்.

இந்திரசித்தன் போர்

இந்திரசித்தன் தந்தையிடம், அரசர்க்கரசே இந்திரனையே வெற்றி கொண்ட எனக்கு இவர்கள் எம்மாத்திரம் இன்றே இராமனையும், இலக்குவனையும் வதம் செய்கிறேன் என்று கூறி, போர்ப் பறைகளும், சங்கங்களும் ஒலிக்க, சிறந்த தேரில் ஏறி போருக்குப் போனான். கடும்போர் செய்து அவர்களை மூர்ச்சித்து விழச் செய்தான். சுக்கிரீவன், நீலன், அங்கதன், சாம்பவன் எல்லாரும் மயங்கிக் கிடந்தனர். முதன் முறையாக நாகபாசத்தினால்

இலக்குவன் மூர்ச்சையுற்றான். பிரமாத்திரம் விட்டபொழுது இலக்குவன் இறந்து போய்விட்டான். இராமனும் தாக்கப்பட்டு மயக்க நிலையில் புலம்புகிறார். சிவதனுசை முறித்து விடமான சீதையை வாழ்க்கைத் துணையாகக் கொண்டேன், அதனால் என்னைச் சேர்ந்தோர் எல்லாரையும் மாய்ந்தாரகச் செய்தேன், மண்மேல் வைத்த ஆசையால் மாதா கைகேயி முதலானவர்க்கு புண்மேல் வைத்த நெருப்பொத்த வருத்தத்தைப் புரிந்தேன். பெண்மேல் வைத்த ஆசையால் தம்பியையும் நண்பரையும் இழக்கும் இந்தப் பேறுகள் பெற்றேன். உன்னை நாகபாசம் பிணைத்தபோதும, இப்போ பிரமாத்திரம் பாய்ந்த போதும் உடனிராமல் போய்விட்டேன். துன்புற்ற காலத்தில் உடனிராமல் அன்பற்றவர் செய்கை செய்தேன். தேசத்தவர் எல்லாம் என்செயல் கண்டு சிரியாரோ? விபீடணனுக்கு வாக்கினால் கொடுத்த இலங்கையை செய்கையினால் கொடுக்க முடியாமல் முடிகிறேன். இதனால் பொய்யனாய் நம் குலத்திற்கு பழியை தேடிக்கொடுத்துவிட்டேன் என அழுது பெருமூச்சுவிட்டு, புலன் ஒடுங்கி ஆவி அடங்கினான்.

சாம்பவன், இலங்காபுரி மருத்துவன் சுசேணன் இறந்தவர்களை உயிர்ப்பிக்கக் கூடியவன் என்றான். விபீடணன் சுசேணனை அழைத்து வந்தான். சுசேணன் இறந்தவர்களை உயிர்ப்பிக்க சஞ்சீவி மூலிகையை உடன் எடுத்துவருமாறு கேட்டான். விபீடணன் அனுமனை மருத்துவ மலைக்கு சடுதியில் சென்று விரைவாக எடுத்துவா என்றான். மேருமலைக்குச் சென்று மருத்துவமலைச் சிகரத்தில் தேடினான். எல்லாம் மூலிகைகளாக இருந்தபடியால் சஞ்சீவி, சல்லியகரணி, சந்தானகரணி, சாவர்யகரணி மூலிகைகளை இரவு நேரத்தில் இனங்காண முடியவில்லை. அவசியம் செல்லவேண்டும், ஒரு சிகரத்தினை அப்படியே பெயர்த்து எடுத்து வந்தான். சுசேணன் சிகிச்சை அளித்து இராம இலக்குவர்களையும், ஏனையவர்களையும் உயிர் பெற்றெழச்

செய்தான். (சித்த அவிழ்தத்தினால் இவர்களைக் குணமாக்கியதாக எழுத்தச்சன் ராமாயணத்தில் கூறுகிறார்.) விபீடணன், சுசேணன் திரும்பிச் செல்லாமல் தடுத்து விட்டான். ஆபத்து நேரத்தில் இராவணன் படைக்கு சிகிச்சை அளிக்க மருத்துவன் இல்லை என்றாகி விட்டது. கும்பகர்ணன் புதல்வர் கும்பன், நிகும்பன் போரிட்டு வீர சொர்க்கம் அடைந்தனர். மீண்டும் இராமன் படை போர் புரிந்தது. இந்திரசித்தன் பாணங்களால் இராம இலக்குவர்களைத் தாக்கினான். அவர்களும் பாணங்களைத் தொடுத்தாலும் அவை இந்திரசித்தனை ஒன்றும் செய்யவில்லை. இந்திரசித்தன் பாணங்கள் இராமன் உடல் முழுவதையும் துளைத்து விட்டன. அவன் அடியற்ற மரம்போல நிலத்தில் சாய்ந்தான். சுசேணன் சிகிச்சை அளித்து மீண்டும் உயிர் பெற்றான். இரவு நிகும்பலைக் கோவிலுக்கு இந்திரசித்தன் பூசை செய்யச் சென்றான்.

விபீடணன் இராமனிடம் இந்திரசித்தன் பூசை முடிந்து வரம் பெற்றால் அவனை வெல்லமுடியாது, தவத்தைக் கலைத்து தனியாக இருக்கையில் கோவிலில் வைத்தே கொன்றுவிட வேண்டும் என்றான். இலக்குவன் வானரப் படையுடன் விபீடணனோடு நிகும்பலை சென்று தாக்கினார்கள். இந்திரசித்தன தவத்தினை இடையில் நிறுத்தி, தேரில் ஏறி போரில் இறங்கினான். அனுமன் தோளில் ஏறி இலக்குவன் மேகநாதனைத் தாக்கினான். மேகநாதன் இடைவிடாது தொடுத்த பாணங்களால் அனுமன், இலக்குவன் உடம்பில் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் பெருகிற்று. இருவரும் களைக்காது ஆற்றலையும் திறமையையும் காட்டி நீண்ட நேரம் போர் செய்தார்கள். விபீடணனும் சேர்ந்து தாக்கினான். வாயினால் கூறாது இந்திரசித்தனைக் கொல்லுமாறு குறிப்பால் விபீடணன் இலக்குவனுக்கு உணர்த்தினான். ஏனென்றால் இலக்குவனின் மருமகன்தான் இந்திரசித்தன் (என்று கம்பன் கவிநயம் என்ற நூலில் திருமுருக கிருபானந்த

வாரியார் தெரிவித்துள்ளார்). மூன்று இரவும், மூன்று பகலும் போர் நடந்தது. வானவீரர்கள் இந்திரசித்தன் தேரினைத் தாக்கினார்கள். தரையில் நின்று போர் புரிந்தான். விபீடணன், இலக்குவன், அனுமன், வானரப்படை எல்லாம் சேர்ந்து தாக்கியதால் மேகநாதன் வீரசொர்க்கம் அடைந்தான். தவம் செய்தவன் தரையில் கிடந்தான். இளவரசு இந்திரசித்தன் இருக்கும்வரை தனக்கு ஆட்சி கிடைக்காது என்பதால் விபீடணன் சதியால் கொன்றான்.

இராவணன் படை அழிதல்

மந்திரிகள் சென்று இராவணனிடம் இந்திரனை வென்ற, போரில் தோல்வி காணாத தங்கள் புதல்வர், வீரசொர்க்கம் அடைந்தார் என்று சொன்னார்கள். தாங்கமுடியாத சோகத்தினால் மனச்சோர்வடைந்து படையினரிடையே இராவணன் பேசலானான். நீங்கள் அனைவரும் நால்வகைப் படைகளையும் அழைத்துக் கொண்டு போருக்குப் புறப்படுங்கள். இராமனைச் சூழ்ந்து அம்புமாரி பொழிந்து வதையுங்கள். உங்களால் முடியாது போனால் நாளை நான் வதம் செய்கின்றேன், என்று சொன்னான். இலங்கைப் படையுடன் கடும் போர் புரிந்த வானரப்படை இராமனைச் சரணடைந்தது. இராமனும் மற்றோரும் கடும் சமர் செய்து பதினாயிரம் தேர்களையும், பதினெண்ணாயிரம் யானைகளையும், பதினான்காயிரம் குதிரைகளையும், இரண்டு இலட்சம் வீரர்களையும் வதம் செய்தார்கள். அரசனில்லாது போர்க்களத்தில் போரிட்டதால் படைகளுக்கு பேரழிவு ஏற்பட்டு பெரிய மயானம் போல் காட்சியளித்தது.

வண்டோதரி சோகம்

தேவி நாளை போருக்கு நான் தலைமை தாங்கி செல்லப்போகிறேன் என்றான் மன்னன். நாதா நாளை போருக்குத் தாங்கள் செல்ல வேண்டாம். ஐயா எண்ணெய்த் தலையுடன் கரும் புரவிகள் பூட்டிய தேரில் மேலாடையின்றி தெற்கே செல்ல நான் கனவு னண்டேன். கண்ட நேரம் முதல் என் மனம் கலங்கி தவிக்கிறது. சீதையை சிறை விடுங்கள் என்றார் ராணி. சீதையை விட முடியாது விட்டால் அவள் மீண்டும் துன்பத்தினால் தவிக்க நேரும் என்றான் வேந்தன். வண்டோதரி கேட்டாள். சீதைமேல் அவ்வளவு பிரியமா? மன்னன் திடுக்குற்றான், விதி விளையாடுகிறது, நீயுமா ஐயுறவுற்றாய்? என் பிரிய தேவி பெண்களுக்கே உரிய பேதமையினால் கேட்டாயா? பெண்குழந்தை பிறந்த போது பெரிதாக நகைத்து சாபமிட்டதே, இலங்கை அழிவு கூறியதே, மிதிலையில் விட்டோமல்லவா? அந்த மகளே சீதையாகும் என்றான் மன்னவன். நாதா என்னை மன்னியுங்கள், பெண்களுக்கே உரிய சபலம் எனக்கும் வந்து விட்டதே என்று சோகத்தில் ஆழ்ந்தான் வண்டோதரி.

அதிரதவீரர்கள்

மகாரதன், மகாபார்சுவன், விருபாக்கன் என்ற வீரர்கள் மூன்று தேரில் புறப்பட்டு போரிட்டனர். இராவணனும் எட்டுக் குதிரைகள் பூட்டிய தேரில் கம்பீரமாக களம் புகுந்தான். இராவணன் பாணங்களைத் தொடுத்து, தொடுத்து வானரர்களை அழித்தான். சிலர் தலையை துண்டித்தான், சிலர் மார்பு துண்டிக்கப்பட்டு விழுந்தனர், சிலர் காதுகளை இழந்தனர், சிலர் கண்களை இழந்தனர், விட்டில் பூச்சிகள் விளக்கில் விழுந்து மடிவதை ஒப்ப வானரவீரர்கள் இராவணன் பாணத்தால் மடிந்தனர். இராமன் இருக்கும்

இடம் நாடி இராவணன் விரைந்தான். விருபாக்கன் சுக்கிரீவன் போரில் இறந்தான். அனுமன் சுக்கிரீவன் தாக்கி மகாதரன் மடிந்தான். அங்கதனும் மற்றவரும் மகாபார்சுவனைக் கொன்றார்கள். மூன்று மகாவீரர்களும் இறந்தபின் இராவணன் மீண்டும் களம் புகுந்தான். விரைவாக தேரை செலுத்து என தேர்ப்பாகனுக்கு கட்டளையிட்டான். தேர் செல்லும் ஓசை எல்லாத் திசைகளிலும் திகிலூட்டும் பேரொலியாக ஒலிக்க, இராமனை நாடி வந்தான். வரும்போதே வானர சேனையை வதைத்தான். வானரப்படை அங்கும் இங்கும் சிதறி ஓடியது. இராமனும் எதிர்த்துப் போரிட்டான். இலக்குவனும் கூரிய பாணங்களை இராவணன் மீது எய்தான். இராவணனுக்கும் இராமனுக்கும் கண்கள் சிவந்தன, ஊழிக்காலப் போர் நடந்தது.

இராவணன் ஒரு பாணத்தால் இராமனின் நெற்றியில் அடித்தான். அதிலிருந்து இரத்தம் கொட்டியது. இலக்குவன் ஏழு பாணங்களைவிட்டு தேரில் பறந்த வீணைக் கொடிளை அறுத்தான். இன்னொரு பாணம் தேர்ப்பாகனைக் கொன்றது. வீபீடணன் தன் கதாயுதத்தினால் இராவணன் தேர்க் குதிரைகளைத் தாக்கிக் கொன்றான். இலக்குவனின் பாணங்கள் இராவணன் வில்லைத்துண்டித்தன. இராவணன் தரையில் நின்று சக்தியாயுதத்தை இலக்குவன் மீது எறிந்தான். மார்பு பிளப்புண்டு இலக்குவன் பூமியில் சாய்ந்தான். இராமன் சுசேணனைப் பார்த்து என் தம்பியை இழந்து பின் நான் உயிருடன் இருந்து யாது பயன்? என் கையிலிருந்த வில் நழுவுகிறது. அம்புகள் தவறுகின்றன. என் உடன் பிறந்தவன் பூமியில் கிடந்து புரள்வதைப் பார்க்கும் போது என் நெஞ்சம் பதைபதைக்கிறது. சுசேணன் பச்சிலைகளை மீண்டும் அனுமனிடம் பெற்று இலக்குவன் முகத்தில் பிழிந்தான். அவன் உயிர் பெற்று எழுந்தான்.

இராமன் முதலிய எல்லாரும் சுசேணனைப் பாராட்டினார்கள்.

தேவர்கள் சிவனை துதித்தல்

தேவர்களும், கந்தவர்களும் இராமன் போரில் வெல்லவேண்டும் என்று சேர்ந்து நின்று போரிட்டார்கள், இருந்தும் ஏமாற்றமே. தேவர்கள் இராமன் தளர்ச்சி அடைவதைத் தாங்காமல் கைலாயம் சென்று சிவனைத் துதித்தார்கள். சிவன் தோன்றினார். எம்பெருமானே அரக்கர்களில் ஒருவரைக் கொல்ல ஆயிரம் இராமர்கள் ஒன்று கூடி இருபத்து நான்கு ஆண்டுகள் நின்று போர் செய்தாலும் கூட என்ன பயன்? அவர்களால் ஒருவரைக்கூட கொல்லமுடியாது. அரக்கரைக் கொல்வதென்பது போர்க் களத்தில் நின்ற பின்பு அல்லவா? என தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். துன்பத்தை இனி மேலும் தாங்க முடியாது. தாங்கள் கருணை கூர்ந்து எங்களைக் காப்பாற்றி அருள வேண்டுகிறோம் என குறையிரந்தார்கள். வேண்டுதலால் மனமிரங்கிய சிவன், இயக்கர்கள் செய்த ஊழ்வினை இவர்களை இலங்கையில் சேர்த்தது. நாம் வழங்கிய முக்கோடி வாணாள் முடிகிறது., சித்தர், முனிவர் ஆசீர்வாதத்தினாலும், எமது வில் அம்புகளாலும், விரைவில் இராமன் அவர்களைக் கொன்றொழிப்பான், அஞ்சவேண்டாம் என்று திருவாய் மலர்ந்து அருளினார்.

உற்சாகமடைந்த தேவேந்திரன் தேர். வில், அம்புகள், சத்திஆயுதம், கவசம், ஆகியவற்றை தேர்ப்பாகன் மாதவியிடம் கொடுத்து இராமனுடன் சேர்ந்து அவனுக்கு உதவியாக போரிடுமாறு அனுப்பி வைத்தான். மாதவி இராமனிடம் சென்று அவற்றைக் கொடுத்துவிட்டு சாரதியாக பணியாற்றினான். இறந்துபோன இலக்குவன் மீண்டும் உயிர்

பெற்று எழுந்தான். களைப்பும் சோர்வும் மனக்கிலேசமும் இராமனை வாட்டியது. கந்தவர்களும் இராமன் வெல்லவேண்டும் என்று சேர்ந்து போரிட்டார்கள். இராவணன் விடுத்த பாணங்களை தன் பாணங்களால் இராமன் தடுத்தான். பார்த்தவர் பிரமிக்கத் தக்கவாறு பெரும் போர் நடந்தது. இராவணன் தன் பாணங்களால் இராமன் தேர்ப்பாகன் மாதவியை அடித்து துன்புறுத்தினான். கொடியை அறுத்து வீழ்த்தினான். குதிரைகளை அடித்து வீழ்த்தினான். தேவர்கள் இதனைப் பார்த்து ஏக்கமடைந்தார்கள். இராமன் போரினால் களைப்புற்றிருப்பதைக் கண்ணுற்று மகரிசிகளும் வானரர்களும் விபீடணரும் கலக்க மடைந்தார்கள்.

இராவணனோ வில்லைக் கையில் பிடித்துக் கொண்டு பெரிய மலைபோல் விளங்கினான். அவனுக்கு ஆற்றமாட்டாது போர்க்களத்தில் இராமன் தயங்கி நின்றான். இராவணன் சூலத்தால் தாக்கினான். இராமன் சக்தியாயுதத்தால் தடுத்தான். பின்பு பாணங்களை விட்டு இராவணன் குதிரைகளைக் கொன்றான். இராமன் அம்புகள் இராவணன் உடலைத்தாக்கி இரத்தம் கொட்டியது. இராமன் ஏ அரக்கப் பதரே பிறன் மனைவியை நயப்பவனே, என் மனைவியை அபகரித்து வந்தாய் வெட்கமாக இல்லையா? எனது பாணங்களினால் உன் குண்டலங்களணிந்த தலை பூமியில் புரளும் என்றான். மனைவியைப் பறிகொடுத்த மானுடப்பதரே, பெண் சொல்லைக் காக்க காணேகிய பேடியே, சீதையைச் சிறை வைத்தது உன்னைத் தண்டிக்கத்தான். வாய் வீரம் பேசாதே என் வாள் வீரம் பேசினால் தெரியும் உன்கதி என்று இராவணன் இராமனைப் பேசினான். நான் அநரணியனை வென்றது முதல் அயோத்தியின் முப்பது தலைமுறை அரசர்களுக்கும் நானே இந்திரனாக இருந்து வருகின்றேன். தசரதச் சக்கரவர்த்தி

கூட தேவேந்திரனுக்கு உதவியாக போரிட்டாலும் நான் வென்றதும் பணிந்து இந்திரனாக ஏற்றுக் கொண்டார்.

இராமன் இலக்குவன் சுக்கிரீவன் அனுமன் விபீடணன் நீலன் எல்லாரும் சேர்ந்து தனித்து நின்ற இராவணனை ஆவேசமாக தாக்கினார்கள். வானரவீர்களும் தாக்கலானார்கள். இராவணன் பிரமித்துப் போனான். போர் முறைக்கு முரணாக தாக்குவதைக் கண்ட தேர்ப்பாகன் தேரை இவர்களை விலத்தி ஓட்டிப் போனான். இதனைக் கண்ட இராமன், களைத்துப் போனாய் இன்று போய் நாளை வா என்று கூறினான். இராவணனுக்கு கோபம் அபாரமாக வந்துவிட்டது. ஊக்கமும் உற்சாகமும் இல்லாதவனாக என்னைக் கருதி தேரை வேறு இடத்திற்கு ஓட்டுகிறாயா? புறங்கொடாப் போர்வீரன் என்று புகழ் பெற்றவன் நான். தாமதியாது தேரை இராமனிடம் ஓட்டிச் செல். நீ எதிரியின் கையாள் என சந்தேகிக்கிறேன். மெய்யாக்கி விடாதே என கடிந்து பேசினான் இராவணன்.

அரசே நான் பயந்தவனுமல்ல, பகைவர்களின் கையாளுமல்ல, தங்களிடம் இருக்கும் விசுவாசத்தினால் தான், தங்களுக்கு விருப்பம் இல்லாத காரியத்தைச் செய்ய நேர்ந்தது. களைப்புற்று தனித்து இருக்கும் தங்களின் மேல் இராமன் முதலிய அறுவரும் ஒரே நேரத்தில் பலவிதமாக தாக்கினார்கள். இளைப்பாற வேண்டும் என்பதால் தான் தேரை ஓட்டி வந்தேன், என்றான் தேர்ப்பாகன். பதிலைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டி தன கையில் அணிந்திருந்த கடகம் ஒன்றைக் கழற்றி தேர்ப்பாகனுக்கு வெகுமதியாக அளித்தான். இராவணன் போருக்கு உற்சாகமாக இருந்தான். இராவணன் திரும்பி வந்ததும், இராமன் முதலியோர் தனியாக நின்றவனை எல்லாரும் சேர்ந்து தாக்கியும் கொல்ல முடியவில்லையே

என்று கவலையுடன் சோர்வுற்றுக் காணப்பட்டார்கள். வானரப் படைகள் கலங்கிப் போயின.

இராவணன் வீர சொர்க்கம்

இராமன் இராவணனுடைய தலையை துண்டித்தான். அடுத்து வினாடி அவன் அடுத்த தலையுடன் தோன்றினான். மடியும் அறிகுறிகள் தென்படவில்லை. ஏதும் நடைபெறாதவன் என்ற நிலையில் இராவணன் வீற்றிருந்தான். மாயாவியான மாரீசனையும், மகாவீரன் கரனையும், வீரன் வாலியையும் கொன்றவையுமான அம்புகளை இராவணனைக் குறித்தும் எய்கிறேன் அவை பயன் அற்றுப் போகின்றன என்று இராமன் கலங்கி மனம் தளர்ந்தான். அகத்திய மகாசித்தரை அருள வேண்டித் துதித்தான். அவர் இராமன் முன் தோன்றினார். இராமன் அகத்தியரை வணங்கி, இராவணனை வெல்ல முடியாமல் திண்டாடுகின்றேன், அவனை வெல்வதற்கு அருள் புரியுமாறு வேண்டினான். அகத்தியர் இராவணன் மகாசிவபக்தன், புலத்தியருடைய பேரனான அவனைக் கொல்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இருப்பினும், சூரியபகவானின் அனுக்கிரகமும், சிவனின் அருளும் உனக்கிருந்தால் தான் இதில் நீ வெற்றி பெற முடியும். என்னால் வழங்கப்பட்ட ஆயுதங்களை பாவிக்கும் மந்திரங்களையும், பாவனை முறைகளையும் தெரிவிக்கிறேன், அவற்றைக் கொண்டு போர் செய் என்றார். சூரியனின் கருணையைப் பெற ஆதித்த இருதயம் என்ற மந்திரத்தைப் போதிக்கிறேன். முதலில் அம்மந்திரத்தைப் பாடி சூரியனைத் துதித்து, சிவனைப் பூசித்து போரினை ஆரம்பித்தால் வெற்றி பெறுவாய் என்று சொல்லி ஆசீர்வதித்தார். அடுத்த நாள் உதயத்தில் சூரியனைத் துதித்தான். சமுத்திரக் கரையில் பார்த்திவ லிங்கம்

உருவாக்கி தோத்திரங்களால் துதித்து, "சங்கரா, சர்வரட்சகா, சம்போ மகாதேவா, எனக்குப் பகைவனான இராவணன் மிகவும் பலவான், கைலாய மலையையே தன் கைகளால் தூக்கிய பராக்கிரமசாலி, உமக்கு அன்பனாகையால் ஜெயிப்பதற்கு அசாத்தியமாக இருக்கிறான். அவனை வெல்வதற்கு உமது திருவருட் கடாட்சத்தை வேண்டுகின்றேன்," என்று பிரதட்சணம் செய்து வேண்டினார். சிவன் மகிழ்ந்து "சுபம் உண்டாகட்டும்" என்றார். போரில் ஜெயிக்க வரம் வேண்டினான் இராமன். "சிவன் உனக்கு ஜெயம் உண்டாகும்" என மொழிந்தார்.

போர் ஆரம்பமானது. மாதவி இராமன் தேரினைச் செலுத்தினான். இராவணன் வானரப்படையை துவம்சம் செய்தான். இலக்குவன் மூர்ச்சையடைந்தான். இராவணன் காலருத்திரனாக பொங்கி எழுந்து தாக்கினான். சுக்கிரீவன் அனுமன் கதிகலங்கி பின் வாங்கினார்கள். தாக்குதலை தாங்க முடியாத விபீடணன் இராமனின் பின்னால் பதுங்கிக் கொண்டான். இராமன் சிவனின் ஆயுதங்களை மந்திரித்து ஏவினான். தலை போயிற்று. மீண்டும் முளைத்த தலையுடன் தோன்றி உக்கிரமாகச் சண்டையிட்டான். மீண்டும் தலையை இராமன் அறுத்தான். மீண்டும் முளைத்தது புதிய தலை. இராவணன் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். இவ்வாறு பத்துத் தலைகள் முளைத்தன. இராம, லக்குவர் பாணங்களினாலும், அனுமன், சுக்கிரீவன் கதைகளாலும், விபீடணன், நீலன் வாட்களினாலும் சுற்றி நின்று தாக்கி இராவணனின் கொடியை அறுத்தும், குதிரைகளைக் கொன்றும், தேரை தவிடு பொடியாக்கினர். விபீடணன் இராவணனின் நெஞ்சில் அமுதகலசம் இருக்கும் இரகசியத்தினை இராமனுக்குச் சொல்லி, நெஞ்சில் பாணம் விடச்செய்தான். (வெட்டறா மூலியை சித்தர்கள்

வைத்திருப்பர். எத்தனை முறை வெட்டினாலும் மீண்டும் பொருந்திக் கொள்ளும். பதினெட்டாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண மந்திரி பூதத்தம்பி வெட்டறா மூலியை வைத்திருந்ததை வரலாறு தெரிவிக்கிறது.) அனுமன் கதையினால் நெஞ்சில் அடித்தபோது இராவணன் மார்பிலிருந்து திக்கு யானைகளின் முறிந்த தந்தங்கள் வெளியேறின. விபீடணனும் சுக்கிரீவனும் பின்னால் நின்று தாக்கினார்கள். அமுதகலசம் உடையவும் ஆறு பேரும் தாக்கவும், சிவனின் ஆயுதங்களினாலும், அகத்தியர் மந்திரங்களினாலும் இராவணன் சிவ மோட்சம் அடைந்தான்.

வைகுந்த துவார பாலகர்கள் முனிவர் சாபத்தினால் இராவணன், கும்பகர்ணனாக பிறந்தார்கள். அவர்களை சாபம் நீக்கி வைகுந்தம் அழைத்து செல்லவே நாரணன் இராமனாக அவதரித்தான்.

வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்க இடமின்றி உயிர் இருக்கும்
இடம் நாடி இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் என நினைந்து உட்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி.

இராவணேசுவரன் மனச்சிறையில் சீதையை வைத்திருக்க வில்லை (என கம்பர்.) இராம அவதாரத்தின் அம்பினால் நெஞ்சில் தாக்கப்பட்டு இராவணன் வீரசொர்க்கம் அடைந்திருந்தது அவனின் கீர்த்தியாகும். இராவணன் இறந்ததும் இராமன் உடல் ஒளி மங்கிக் கறுத்துவிட்டது. சிவபக்தனை சூழ்ச்சியால் கொன்றதால் துட்டதேவதைகள்

இராமனைத் தொற்றிக் கொண்டன. சூழ்ச்சியால் இராமன் கொன்று இராவணன் இறக்கும் தறுவாயில் இருக்கும் போது, இராமன் சொல்கிறான், இராவணன் அறநெறிகளை நன்கு அறிந்தவன், அரசநீதி வழுவாதவன், போர்க்கலையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன், அவன் தோற்றது அவன் விதியாகும். என்னால் இராவணனைக் கொல்ல முடியவில்லை. அவனுடைய விதி அவனைக் கொன்றது இறக்கமுன்னர் இராவணனிடம் சென்று, அரசநீதி பற்றி அறிந்து கொள்ள விரும்புகின்றோம் என்று இராமன் கேட்டான்.

இராவணன் கூறுகிறான், இராமன் என்னைக் கொல்லவில்லை. அதற்கு முதலே பலர் என்னைக் கொன்று போட்டார்கள். சீதை பிறந்தவுடன் சீதையால் இலங்கை அழியும் என்று சோதிடர் சொன்னதால் மிதிலையில் விட்டேன். மீண்டும் சீதை இலங்கை வந்ததால் அழிவு நேர்ந்தது. உடன் பிறந்த விபீடணன் அரசு ஆசையால் உன் பக்கம் சேர்ந்து படை இரகசியங்களைக் காட்டிக் கொடுத்தான். அவனைக் கொன்றிருத்தல் வேண்டும். சகோதர கொலை பாவம். போரில் இறந்த உங்களை உயிர்பிக்க என் அரண்மனை மருத்துவனை சிகிச்சை அளிக்க அனுப்பினேன். அவன் திரும்பி வர விபீடணன் விடவில்லையாதலால் இலங்கைப்படைக்கு பேரழிவு ஏற்பட்டது. குரு நாதரான அகத்தியரைப் பகைத்ததாலும், அவர் சாபத்தினாலும் ஏற்பட்ட இழப்பு இராமனைக் கொன்றால் சீதை பொட்டிழந்து விடுவாள் என்பதால் என்னுடைய சந்திரகாசம் என்ற வீரவாளை உன் மேல் வீசாது விட்டது. என்வாணாள் முடிந்து விட்டது. இதனாலே தன்னந் தனியனாக நின்ற என்னை நீங்கள் அறுவரும் சேர்ந்து தாக்கினீர்கள். எனக்கு சாவு நெருங்கி விட்டது.

போரில் இறந்தால் வீர சொர்க்கம் பெறுவேன். இலக்குமணா, விபீடணன் என்னைக் காட்டிக் கொடுத்து போல நீயும் உன் அண்ணனைக் காட்டிக் கொடுத்து விடாதே. சீதை மகள் என்று கூறமுற்படுகையில் ஆவிபிரிந்து வீரசொர்க்கம் சென்றது. (இது வடமொழி இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளது.) இராமன் அதை விளங்கிக் கொள்ளவில்லை. "எப்படி சமுததிரம் கரையை கடக்க மாட்டாதோ, அதே போல தன் வரம்பு மீறாதவன் இராவணன்," என்று அவனுடைய உயர்ந்த குணத்தை மெச்சுகின்றான் இராமன். இராவணனின் முதுகில் பெருங் காயங்கள் இருப்பதைக் கண்ட இராமன் புறமுதுகிடாத வீரனான இராவணன் முதுகில் காயங்கள் ஏற்பட்டது எவ்வாறு? என தாக்கியவர்களிட்மே கேட்டான். மகாராணி மண்டோதரி இராவணன் உடல்மேல் விழுந்து, "பெண்ணான சீதை பிறக்க இலங்கை அழிந்துவிடும் என்ற பேச்சை மெய்யாக்கி விட்டாயே இலங்கை மன்னவா?" என்று இராவணனைப் பார்த்துக் கதறி அழுது உயிர் விட்டாள்.

சூழ்ச்சியால் கொன்றான்

நாயன்மார்கள் அருளார்கள் மட்டுமல்ல பேரறிவு படைத்த ஞானிகள் திருவருளினால் பல திருவிளையாடல்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தியவர்கள்.

செங்கண்மால் சிலை பிடித்துச் சேனையோடும்
சேது பந்தனம் செய்து சென்று புக்குப்
பொங்கு போர் பல செய்து புகலால் வென்ற
பேரரக்கன் நெடு முடிகள் பொடியாய் வீழ

என்று நாவுக்கரசர் திருத்தாண்டகத்தில் இராமன்

சூழ்ச்சியால் வென்றதை குறிப்பிட்டுள்ளார். இராமன் தன்னைப் பற்றிய துட்டதேவதைகள் நீங்கவும், பாவ விமோசனத்திற்காகவும் இராமேச்சரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்த நிகழ்ச்சியை, திருஞான சம்பந்ததரின் திரு இராமேச்சரப் பதிகம் கூறுகின்றது.

சனி புதன் ஞாயிறு வெள்ளி திங்கள் பல தீயன
முனிவது செய்து உகந்தானை வென்று அவ்வினை முடிய
இனி அருள் நல்கிடு என்ற அண்ணல் செய்த இராமேச்சரம்
பனி மதி சூடி நின்று ஆடவல்ல பர மேட்டியே.

பல சிவலிங்கங்களைத் தாபித்தவனும், சிவாலயங்களைக் கட்டியவனும், சிவபூசை வழிபாடுகளை தவறாமல் செய்தவனும் ஆகிய இராமனும் நல்ல சிவபக்தனே. இராவணனுடைய உடல் மருத்துவ எண்ணெய்களிலிட்டு பாதுகாக்கப்பட்டு வருவதாக கதை ஒன்றுண்டு. (கன்னியா பிரதேசத்தில் காணப்படும் பெரிய சமாதி , இராவணன் சமாதி என கூறப்படுகிறது.)

சீதையை சிதையில் தள்ளினான்

இராவணனைக் கொன்ற பின் அசோக வனத்திலிருந்த சீதையை அலங்கரித்து அழைத்துவர இராமன் இலக்குவனை அனுப்புகிறான். அவள் தாம் இருந்த கோலத்திலேயே வர விரும்புகிறாள். இலக்குவன், விபீடணன், சுக்கிரீவன், அனுமன், முனிவர், படையினர் முன்னிலையில் அலங்கரித்து அழைத்து வரப்பட்டாள். சீதையை நோக்கி, "பெண்ணே உன் நடத்தையிற் களங்கமுள்ளது, உன்னைப் பார்க்க என் கண்கள் கூசுகின்றன, மாற்றான் வீட்டில் பல காலம் இருந்துவிட்டு வரும் மனைவியை எந்த ஒரு கணவனும் குறிப்பாக நல்ல குலத்தில் பிறந்த எவனும்

ஏற்றுக் கொள்ள மாட்டான். உன்னை எனக்கு வேண்டியதில்லை. நீ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். இராவணனைப் பற்றி நன்கு அறிந்தவன் நான் அவனோ கொடியவன் உன்னைத் தீண்டாமல் விட்டு வைத்திருப்பானா? நம்பமாட்டேன். நீ எனக்கு வேண்டியதில்லை. நீ, இலக்குவன், விபீடணன், சுக்கிரீவன் யாருடனாவது சென்று சுகமாக வாழ் என்று கடிந்தான் இராமன். (என கம்பராமாயணம்.) இக் கொடிய சொற்களைக் கேட்ட முனிவரும் தேவரும், நிறை மகளிரும், வானரர்களும் மற்றும் எல்லோரும் ஐயகோ என கதறி அழுது அரற்றினார்கள். சீதை தன்னோடு சுகவாழ்வு வாழவில்லை என்பது இராமன் கூற்று. கற்புள்ள மனைவிக்கு அவதூறு கூறும் அவதார புருஷன். இராமன் கட்டளையை ஏற்று தீயில் இறங்கிய சீதையை தீ குளிர்வித்தது. தகிக்கப்படாத சீதையைக் கண்டு இராமன் பயந்து அவளைப் பத்தினியாக ஏற்றுக்கொண்டான். இலங்காபுரி அரசனாக விபீடணனுக்கு இராமன் மீண்டும் முடி சூட்டினான். சிங்கம் இருந்த சிம்மாசனத்தில் சிறு நரி போல இருந்தான் விபீடணன்.

7 பரத காண்டம்.

கோசல நாட்டை தசரதன் ஆண்டு வந்தான். அவனுக்கு மனைவியர் மூவர் இருந்தும் மழலையில்லை. புத்திரகாமேட்டி யாகத்தை கலைக்கோட்டு மாமுனிவரைக் கொண்டு செய்வித்தான். யாகத்திலிருந்து ஒரு கலசத்தில் பாயாசம் தோன்றியது. அதனை முனிவர் தசரதனிடம் கொடுத்து மனைவிகளுக்கு உண்ணக் கொடுத்தார். இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் தோன்றினார்கள். அதே பாயாசத்திலிருந்து தோன்றிய மற்றொருவனே ஆஞ்சநேயன் ஆவார். இராமன் தமிழ் மொழியிலேயே பேசினார். (என்று தவத்திரு திருமுருக கிருபானந்த வாரியார் சிந்தனைச் செல்வம் என்ற நூலில் 62, 63ம் பக்கங்களில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் ஆரிய மொழியில் இராமாயணம் எழுதப்பட்டதால் இராமன் ஆரியன் ஆகிவிடமுடியாது.)

பரதன் ஆட்சி

இராமாயணத்தில் கதாநாயகனுக்கு மேற்பட்ட பாத்திரமாக பரதன், இராமனிலும் மேம்பட்டு விளங்குகிறான் (என கிருபானந்த வாரியார்). சீதை கல்யாணத்தின் போது விசுவாமித்திரர், பெரும் நீதி வழுவாதவன், பரத நாட்டுக்கு வாரிசு, அருங்குணங்களாலும், எழிலாலும், இராமனை ஒத்தவன் என மொழிந்தார். இராமனுக்கு முடி சூட்டலின் போது, மனுக்குலத்து வழக்கம் மூத்தவனுக்கே முடி உரியது. ஆனால் பரதன் உன்னைவிட மூன்று மடங்கு நல்லவன், என்று கோசல்ல தெரிவித்தாள். தாய் கொடுத்த நாட்டை ஏற்றுக்கொள்ளாது முடிசூட மறுத்து, நாட்டை

ஒப்படைப்பதற்காக இராமனைத் தேடி காட்டுக்குச் சென்றான். பரதன் புகழுக்கு ஆயிரம் இராமர்களும் ஈடாக மாட்டார், என்று குகன் (வாயிலாக கம்பர் கூறுகின்றார்.) இராமன் வனவாசம் முடிந்து குறித்த தினத்தில் வரவில்லை. பரதன் தீயில் விழ ஆயத்தமானான். அப்பொழுது கோசலை பரதனை நோக்கி, உனது செய்கைகளை எண்ணினால் கோடி இராமர்கள் சேர்ந்தாலும் அண்ணலே உனக்கு ஈடாவரோ? புண்ணியவானாகிய உனது உயிர் போகுமானால், மண்ணும் வானும் எல்லா உயிர்களும் வாழுமோ? வாழ முடியாமல் அழிந்து படும். இராமன் இன்று வராவிடில் நாளை வருவான். நீ அவசரப்பட்டு உயிரை விடாதே, என்றாள்.

மாண்புமிகு அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் இராமனை ஆரியன் என்று குறிப்பிட்டது போல அவன் ஆரியன் அல்லன். திராவிட இனத்தின் சூரிய குலத்தில் உதித்தவன். சூரிய குலத்தைச் சேர்ந்த சோழ அரசன் மனு பரம்பரையில் இரகு வம்சம் தோன்றியது இராவணனுடைய ஆள்புலத்திற்கும், அவன் அண்ணன் குபேரன் நாட்டிற்கும் இடைப்பட்டது கோசல நாடாகும். (இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை மொகஞ்சதாரோ, கரப்பா திராவிட நாகரிகங்கள் வட இந்தியாவில் நிலவியதை நவீன ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.) ஆரிய அரசர்கள் சந்திரகுலத்தவர்களாவர். சோழர் குல மனுவேந்தன் சூரிய குலத்தில் தோன்றியவன்.

துன்னு வெங்கதிரோன் வழித் தோன்றினான்
மன்னு சீர் அநபாயன் வாரிமுதல்
மின்னு மாமணிப்பூண் மனு வேந்தனே

பெரியபுராணம்

காக்கம் சிறு புறாவுக்காக களிகூர்ந்து
தூக்கும் துலை புக்க தூயோன்.

விக்கிரம சோழனுலா

சிபிச்சக்கரவர்த்தியும் சோழ அரசன் என்கிறது. இராமனை தென்சொற் கடந்தான் என்று வால்மீகியும், தமிழ் அறிந்தவன் என்று கம்பரும் கூறுகின்றனர்.

வேள்வி தடுத்தல்

குருகுலப்பயிற்சி முடிந்து வந்த இராமன் அரண்மனைக்கு உள்ளேயே வில் விளையாட்டில் ஈடுபட்டான். மந்தரையின் பின்னால் நின்று அவள் முதுகில் அம்பு விட்டான். முதுகு கூனிவிட்டது. அழகிய மங்கை பின்னர் கூனி என்றே அழைக்கப்பட்டாள். விளையாட்டு வினையாகிவிட்டது. மங்கையின் வாழ்வு பாழாகிவிட்டது. விசுவாமித்திரமாமுனி தன் வேள்விகள் தண்டக வன அரசர்களால் அழிக்கப்படுவதிலிருந்து காப்பதற்கு இராம, இலக்குவர்களை அழைத்துச் சென்றார். பலி கொடுத்து நடாத்தப்பட்ட வேள்விகளையும், யாகங்களையும் சிவபக்தர்கள் தடுத்து அழித்து வந்தார்கள். தண்ட காருண்யத்திலே முன்பு தக்கன் வேள்வி சிவனால் தடுக்கப்பட்டது. சிவன் யாகங்களையும் மிருக பலிகளையும் தடுத்தவர்.

தாடகை வதம்

கோதாவரிக்கு வடக்கே சனத்தானம் மென்ற இராவணனின் இராசதானி இருந்தது. இராவணனின் பெரும்படை அங்கு நிறுத்தப்பட்டு ஆட்சி நடந்தது. காரா, சுபாகு என்ற இராவணனின் உறவினர் மன்னனாக ஆட்சி

செய்தான். முனிவர்கள் வித்தைகளைச் செய்து சக்தியைப் பெற்று மக்களையும் மன்னனையும் அல்லல்ப்பட வைத்தார்கள். சாபமிட்டு அழித்தார்கள். அதனால் எல்லோரும் முனிவர்களைக் கண்டு அஞ்சினார்கள். அயோத்திக்கு தெற்கே தாடகைவனம் என்ற இடத்தில் மாரீசன் தாடகை ஆட்சி நிலவியது. மாரீசன், இராமனால் கொல்லப்பட்ட பின்னரும் இயக்க அரசி தாடகையின் ஆட்சி நிலவியது. வடஇந்தியாவில் காணப்பட்ட முனிவர்களுக்கும், அரசர்களுக்கும் தாடகை சிம்ம சொப்பனமாக விளங்கினாள். ஆயிரம் யானைப்பலம் கொண்டவளாக புகழ்ந்துரைக்கப்பட்டாள். விசுவாமித்திரராலும் அவளைக் கொல்ல முடியவில்லை. இறுதியில் மந்திரமும், தந்திரமும் மருந்தும் ஒன்று சேர்ந்து தாக்கியதுபோல விசுவாமித்திரரின் மந்திரங்களும் தந்திரங்களும் இராமனின் தோள்வலிமையும் ஒன்றாகச் சேர்ந்து வலிமை மிக்க தாடகை கொல்லப் பட்டாள்.

பெண்ணரசியான தாடகையை கொன்றபாவம் நீங்க அங்கே இராமன் சிவலிங்கத்தைக் கோவிலாக்கி பூசை செய்தான். பாவமாக கொலை செய்வது பின்னர் அது நீங்க சிவபூசை செய்வதும் இராமன் வழக்கமாக இருந்தது. இராவணனும் அவனது ஆட்சிக்குட்பட்ட இந்தியாவில் காணப்பட்ட பலஅரசுகளும், குறுக்குவழியில் சுய இச்சைகளை பூர்த்தி செய்வதற்காக செய்யப்பட்ட அக்கினி வளர்க்கும் யாகங்களையும், வேள்விகளையும், மிருக பலிகளையும் நிறுத்தினார்கள். யாகங்களும் வேள்விகளும் வேதநெறிக்கும் சைவ பண்புக்கும் எதிரானவையாகும். அதனால் சிவபக்தர்கள் பலவேள்விகளை தடுத்ததில் ஆச்சரியமில்லை. தாடகை அரசி விசுவாமித்திரனின் பலி யாகங்களை அழித்தாள். இராவணனின் ஆட்சியில் வடக்கு

எல்லையில் வாசல் தடையாக இருந்தவளே தாடகை, தாள்தகை.

இரண்டு வரம்

இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் போகவும், பரதன் நாடாளவும் இரண்டு வரங்களை தசரதன் கைகேயிக்கு வழங்கினான். தசரதன் சோகத்தால் வாடி துக்கத்தால் மயங்கினான். கைகேயி இராமனை அழைத்து நீ மரவுரி தரித்து பதினான்காண்டுகள் தவம் செய்வதற்கு வனவாசம் போகவேண்டும். பரதன் நாடாள வேண்டும், இது அரச கட்டளை என்றாள். இதனை அறிந்த தசரதன் இராமனை காட்டுக்குச் செல்லாதே என் ஆறுதலுக்காகவாவது போகாதே. இன்று மட்டுமாவது என்னோடு இரு என்று கெஞ்சினான். மைந்தன் பிரிவினால் என் அன்னை உயிரிழக்காமல் நீர் பாதுகாக்க வேண்டும் என்று இராமன் தந்தையிடம் சொன்னான். இது தசரதனுக்கு கூரிய அம்புகளால் நெஞ்சினைத் துளைப்பது போல வேதனையாக இருந்தது. தன்னை அவமதித்து கொடுஞ் சொற்களைக் கூறியதால் மனவேதனை தாளாமல் தசரதன் இறந்தான். (செந்தமிழ் இதழில் கம்பராமாயண சாரம் என்று தொடர் கட்டுரையில் காணப்படுகிறது.)

பார்வதிக்கு செய்த பாவத்தை அனுபவிப்பதற்கும், கற்புள்ள பிருந்தையை அவள் கணவன் சலந்தரன் உருவெடுத்து அணைந்த பாவத்தை அனுபவிப்பதற்கும், அவர்கள் இட்ட சாபங்களினாலும், மாயவன் மனிதனாக அவதரித்தார். பாவத்தினாலும், சாபத்தினாலும் பிறந்த இராமன் மென்மேலும் பாவங்களையே செய்து மாறாதபெரும் பழியைச் சுமந்தான். பொய்ச்சாட்சி கூறியதற்காக, பார்வதி சாபத்தினால் விட்டுணு குருட்டுப்பாம்பாக முன்பு அவதரித்தார்.

பாவ நீக்கம்

சிவநேயச் செல்வனான இராவணனைக் கொன்ற பாவம் இராமனை விட்டபாடில்லை. ஈழத்தின் முனீச்சரம் முதலாக இராமேச்சரம், அயோத்தி வரை அவன் சிவலிங்கங்களைத் தாபித்தும் பூசனை புரிந்தும் பற்றிய துர்க் கணங்கள் நீங்கவில்லை. சிருங்கார முனிவர், பொன்னாசையை வென்ற எனக்கும் மகளின் திருமணத்திற்குப் பொன் வேண்டும். சொர்ணவல்லி பொன்னுக்காக இராமன் செய்த பாவங்கள் போகக் கொடுக்கும் எள்ளுத் தானத்தையா நான் வாங்குவது? இத்தனை காலம் நான் செய்த தவம் எல்லாம் அவமாகப் போகாதா? என்ன நினைத்து இதனைச் செய்யச் சொன்னாய்? என சினந்தான். தானம் வாங்கிய தவத்தோன் தன் தேகம் ஒளியிழந்தும் மயக்கமாகிச் சாய்ந்தார். முடி சூடிய இராமன் தேரில் பவனி வந்து கொண்டிருந்தான். அந்தக் காட்சியை சொர்ணவல்லி காட்ட சிருங்காரர் கண்டார். சீதாலட்சுமியின் அருட்பார்வையால் இழந்தவற்றை சிருங்காரர் மீண்டும் பெற்றார்.

கானகத்தில் கர்ப்பிணித்தாய்

துணி வெளுக்கும் தொழிலாளியின் மனைவியை மாற்றான் கவர்ந்து சென்று விட்டான். உறவினர்கள் அவளை மீட்டு வந்து கணவனிடம் சேர்த்தனர். பிறர் கொண்டு போன மனைவியை ஏற்கமாட்டேன் என கணவன் மறுத்துவிட்டான். ஊரார் அவள் பாவமறியாதவள், அவனால் கெடுக்கப்படவில்லை. கை விடுவது பாவம் என வாதாடினர். அவன் ஆவேசமாக இராவணன் கொண்டு போன மனைவியை இராமன் ஏற்று வைத்திருக்கலாம். ஆனால்

நான் அப்படியல்ல, ஊரான் கொண்டு போன மனைவியை ஏற்க முடியாது, என்று கூறி அவளை துரத்தி விட்டான். இதனைச் செவியுற்ற இராமன், நிறைமாத கர்ப்பிணியான பட்டத்துராணி சீதையை அழைத்துச் சென்று கொடிய மிருகங்கள் வாழும் காட்டின் நடுவே விட்டுவிட்டு வரும்படி கூறினான். ஒருவரும் இந்தப் பாவத்தைச் செய்ய முன்வரவில்லை. தர்மமே வடிவான சத்தியமே உருவான சக்கரவர்த்தித் திருமகன், தவம் செய்யும் முனிவர்களைத் தரிசித்து வா என்று சீதையிடம் பொய் கூறி இலக்குவனுடன் இரதத்தில் அனுப்பி வைக்கிறான். அவன் நடுக்காட்டில் தன்னந்தனியாக சீதையைத் தவிக்கவிட்டு திரும்பிப் பாராமல், பதில் கூறாமல் ஓடிவருகின்றான். இரக்கமற்ற அரக்கனாக கர்ப்பிணியாகிய மனைவியை இராமன் காட்டுக்கு அனுப்பினான். மனிதநேயமற்ற கொடியவன் இலக்குவன் நிறைவேற்றினான். இராம ராச்சியத்தில் இல்லற தர்மம். சீதை மறித்து ஏன் பதில் கூறாமல் என்னை விட்டு ஓடுகிறாய்? என்றாள்.

சீதையை தூயவள் என்று பரிசோதனை மூலம் அறிந்து வைத்தும், அசுத்தமுடையவளே என்று அவளை நீக்கிவிட்டோம் என்று இராமன் சொன்னான். அவன் ஏவலை மறுக்க அஞ்சி உன்னைக கொண்டு வந்தேன் என்று இலக்குவன் கூறினவுடன்., தணலிற் காய்ந்த இரும்புச் சலாகையை காதில் நுழைப்பது போன்ற அச்சொல் செவியில் நுழைந்ததும் சீதை மயங்கி தரையில் வீழ்ந்தாள். கிடந்து புரண்டாள், அத்துயர் பொறாது மீண்டும் வீழ்ந்தாள், இருகைகளாலும் வயிற்றில் அடித்துக் கொள்வாள், துயர் வெள்ளத்தில் அழுந்திக் கிடப்பாள். அம்மாவோ, அப்பாவோ, ஆருயிர் தோழிகளோ, தாசரதியோன் செய்த இக்கொடிய செயலை கேள்விப்பட்டபோது என்ன பாடுபடுவீகளோ? தீயில்

புகுந்து கற்பினை நிலைநாட்டிய யானோ இத்துயரப் படுவதற்குரியேன்? உலகிலே பழியாலே பழியை மறைப்பது இதுகாறும் காணாத ஒன்று. காகுத்தனிடத்தில் இந்த விபரீதத்தைக் கண்டேன். தன் மனைவியாகிய என்னை யாருமில்லாத காட்டில் விடச்சொன்ன இராமனோ, அவர் சொல்லுக்கு இசைந்து என்னை இக்காட்டில் விட்ட இலக்குவனோ, அயோத்தியில் உள்ள மகளிர் சிரிக்குமாறு இன்னும் சாகாமல் இருக்கிற யானோ, நெஞ்சு வலிமை யுடையோர் யார்? பெண்ணாகப் பிறந்தவர்களில் யான் பட்ட இப்பெருந் துயரம் யார் பட்டார்கள்? மனுக்குலத்தில் பிறந்தார்க்கு இது மனு நெறியோ? என அரற்றினாள். இலங்கைச் சிறையில் நெடுங்காலமிருந்து அழுது புலம்பி யான் பட்ட நெடுந் துயரம் போதாமல் உலகில் விளங்கும் படி பழியைப் பூட்டி தனியே காட்டில் விடச்செய்து துயரை விளைவித்து விட்டாயே விதியே என வெதும்பினாள்.

வான்மீகி

அவ்வழியே வந்த வான்மீகிசித்தர் சீதையைக் கண்டு ஆறுதல் கூறி, மரணத்தில் இருந்து மீட்டு ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று தங்க இடமும் கொடுத்து பாதுகாப்பாகவும் இருந்தார். அவள் மகப்பேற்றினையும் தன் பத்தினியைக் கொண்டு கவனித்தார். ஒருநாள் குளிக்கச் சென்ற சீதா, குரங்குகள் தன் குட்டிகளுடன் சென்றதைப் பார்த்து, திரும்பி வந்து தன் குழந்தையையும் தூக்கிப் போனாள். முனிவர் பூசையை முடித்துப் பார்த்தார். குழந்தையைக் காணவில்லை. உடனே அதுபோல ஒரு குழந்தையை தன் பத்தினியிடம் உருவாக்கி தொட்டிலில் படுக்க வைத்தார். திரும்பி வந்த சீதா தொட்டிலிலில் குழந்தையைக் கண்டு, முனிவரிடம் விபரம்

அறிந்தாள். இருவரையும் வளர்த்து ஆளாக்கினாள். அவர்கள் வான்மீகரிடம் இராசகுமாரர்களுக்குரிய பயிற்சிகளை நிறைவாகக் கற்றார்கள்.

திண்டி வனத்திற்கு அருகிலே பெருமுக்கல் மலையில் சீதை குகை உண்டு. அதில் சீதை பாதம் குகன் பாதம் செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றது. இக்குகையில் தான் இலவ, குசர்கள் பிறந்தார்கள் என்றும், வான்மீகர் வழிபட்ட லிங்கமே, முத்தியால ஈசுவரர் (கோவிலாக பதினோராம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டு, இவ்விடம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.) சீதாதேவிக்காக இக்குன்றில் வான்மீகியால் உருவாக்கப்பட்ட தீர்த்தம் ஆண்டு முழுவதும் வற்றாத சுனையாக உள்ளது. இச்சுனை வான்மீக தீர்த்தம் என்றே அழைக்கப்படுகின்றது. சீதை குகையில் தமிழ் எழுத்துக்கள் செதுக்கப்பட்டு காணப்படுகின்றன. (அவற்றினை திருவான்மியூர் ஆய்வாளர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள்). அவை வான்மீகி இலவகுசர்களால் எழுதப்பட்டவை (என்று நம்பப்படுகிறது.) சீதை, இலவன், குசன், இராமன், வான்மீகர் பேசிய மொழி தமிழ் என்பதை குகையில் உள்ள எழுத்துக்கள் உறுதி செய்கின்றன. இராமாயணம் முதலில் தமிழில்தான் பாடப்பட்டது, தமிழ்சித்தர் வான்மீகரே சீதையை காப்பாற்றியவர் என்பதற்கும் இவை சான்று பகர்கின்றன. இராமனிடமிருந்து வர இருக்கும் ஆபத்துக்களில் இருந்து அவளைக் காப்பாற்ற பாதுகாப்பான இந்தக் குகையில் முனிவர் தங்க வைத்துள்ளார். மூலராமாயணத்தினை தமிழில் பாடிய இந்த வான்மீகி அதை இலவகுசர்களுக்கு பாடப் பழக்கி அயோத்தி அரண்மணையில் பாடுவித்தார். உலகு புகழ் புண்ணிய கதை இராமனின் கதையே, அதை மனங்குளிர பாடிடுவோம் கேளுங்கள் கதையே என்று

பாடினார்கள் (என இராமாயணம் இயம்புகிறது.) அவர்கள் அப்பா வான்மீகி, அம்மா சானகி என்று சொன்னதால் தன் பிள்ளைகளை இராமனால் கண்டு கொள்ள முடியவில்லை.

இராமனின் தோல்வி

விசுவாமித்திர முனிவன் வரும் வழியிலே அந்நாட்டரசன் வேட்டையாடிக் கொண்டிருந்த படியால், அவரைக் கவனிக்காததால் மரியாதை செலுத்தவில்லை. கோபமடைந்த முனிவர், இராமரிடம், வேந்தன் தலையை தன் காலடியில் சேர்க்குமாறும், தன்னை இகழ்ந்தமைக்கு அதுவே தண்டனை என்றும் கூறினார். இராமன் வேந்தனை தேடிச் சென்றான். அவனுக்கு அஞ்சனை உயிர்ப்பிச்சை தந்து, அனுமனிடம் வேந்தனை நீ காப்பாற்ற வேண்டும் என்றாள். இராமன் அனுமன் மேல் சரமாரியாக பாணங்களைத் தொடுத்தான். அனுமன் அசையாமல் நின்று எல்லா அம்புகளையும் பிடித்து கையினால் முறித்து வீசிக் கொண்டிருந்தார். இதனைப் பார்த்த இராமன் மேலும் சீற்றமடைந்து தன் கதாயுதத்தினை ஏவினார். அனுமன் நெஞ்சினை பிளந்து உள்வாங்கினார். இராமன் படைக்கலங்களை இழந்து தோல்வியுற்றான். உடனே விசுவாமித்திரர் தோன்றி, போரினை நிறுத்தவும் நான் வேந்தனை மன்னிக்கிறேன் என்றார்.

குலதர்மம்

முனிகுமாரன் உயிரைக் காப்பாற்றுவதற்காக, சூத்திர குலத்தில் பிறந்தவனும் தவம் செய்து கொண்டிருந் தவனுமாகிய சம்புவனி ன் தலையை இராமன் வாளால் வெட்டி வீழ்த்தினான். முனிவன் பிள்ளை உயிர் பெற்றான். சம்புவன் யாருக்கும் தீங்கு செய்யாமல் தவம் செய்தான்.

தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் தவம் செய்யக்கூடாது என்று முனிவன் கேட்டுக் கொண்டதற்காக சம்புவனை இராமன் கொன்றான். இராம ராச்சியத்தில் தவத்திற்கு தண்டனை கொலையா?

இலவகுசர் வெற்றி

இராமன் இராசசூய யாகம் செய்ய விரும்பி குதிரையை அலங்கரித்து உலகை சுற்றிவர அனுப்பினான். அதனை இலவகுசர் பிடித்துக் கட்டி வைத்துவிட்டார்கள். இராமன் வனத்திற்கு தன் படைகளை அனுப்பியும், தாமே நேரிற் சென்று போரிட்டும், இலவகுசர்களை வெல்ல முடியவில்லை. இராமன் மயங்கிச் சாய்ந்தான். இதை அறிந்த சீதா களத்திற்குச் சென்று மக்களைத் தடுத்து இராமன் உயிரைக் காப்பாற்றினாள். புல்லனாகிலும் புருசன் அல்லவா?

பெருமுக்கல் மலையடிவாரத்தில் இராமன் சீதை எல்லோரும் ஒன்றாக சேர்ந்தார்கள். இராமாயணத்தை தமிழில் பாடிய வான்மிகர் இராமனை நோக்கிக் கூறுகின்றார், சிதை கற்புடையவள் என்று யான் கூறுவது முற்றிலும் உண்மை. கங்கையைப் போல தூய்மையானவளுக்கு ஒரு மாசு கூறுவோர். நெருங்கிய நரகத்தில் வீழ்வார்கள். சீதையையும் பிள்ளைகளையும் ஏற்றுக் கொள், என்றார். இராமனோ சீதையும் இலவகுசவர்களும் தீக்குளித்து தூய்மையானவர்கள் என்று நிரூபிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறான். அப்பா பெயர் வான்மீகர் என்று கூறிய படியாலும், சீதை வான்மீகர் ஆச்சிரமத்தில் வாழ்ந்தபடியாலும், பிள்ளைகள் இருவர் என்பதாலும் இராமன் சித்தரையும், சீதையையும் சந்தேகித்தான். ஆத்திரமுற்ற இலவன் கூறுகின்றான், அம்மா இது என்ன அநியாயம்? எத்தனை தடவை நீ நெருப்பில் குளிப்பது? வேண்டாம் இந்த விபரீத

விளையாட்டு. தாயே நீ தடுத்திருக்கா விட்டால் என் பாணங்கள் இராமனை இந்நேரம் எமனுலகம் அனுப்பியிருக்கும். குசலவன் குமுறுகிறான், நாம் ஏன் தீக்குளிக்க வேண்டும்? என்ன பாவம் செய்தோம்? அப்பா வான்மீகரே நீங்களாவது எங்களை காப்பாற்றுங்கள். ஆனால் இராமன் மனம் இரங்கவில்லை, இளகவில்லை. சித்தரின் போதனையாலும் இராமனின் சித்தம் தெளியவில்லை. வான்மீகர் மூர்ச்சையுற்றார். சீதையும் குமாரர்களும் தீக்குளித்தார்கள். குசலவன் சாம்பரானான், இலவனும் சீதையும் இராமனோடு அயோத்தி சென்றார்கள். சீதை புனிதமானவள் என்றாலும், குசலவன் சாம்பலானதும் இராமனுக்கு ஐயுறவு ஏற்பட்டது.

பூமாதேவி பொறுமை இழந்தாள்

அயோத்தியில் முனிவர்கள் யாகத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்துவிட்டார்கள். முனிந்து முனிந்தே உலகைக் கெடுத்த முனிவர்கள், சீதையை இருத்தி யாகம் செய்யவேண்டுமானால் சீதை மீண்டும் அயோத்தியில் தீக்குளிக்க வேண்டும் என்றனர். மூன்றாம் முறையும் சீதை தீக்குளிக்கவேண்டும் என்று இராமன் உத்தரவிட்டான். முற்றும் துறந்த முனிவர்களுக்கு சந்தேகத்தை துறக்க முடியவில்லை. மனைவி களங்கமற்றவள் என்று கூற மணாளனுக்கு மனம் வரவில்லை. பூமாதேவியான சீதை பொறுமை இழந்து சீறினாள். ஐயா வசிட்டரே, முக்காலமும் உணர்ந்த முனிவர்களே, நான் ஏன் தீக்குளிக்க வேண்டும்? குற்ற மில்லாவிட்டாலும் கணவன் சொல்லை தட்டாமல் முன்பிருமுறை தீக்குளித்தேன். ஏன் தலை குனிந்து மௌனமாக இருக்கீறீர்கள்? நியாயத்தைக் கூறுங்கள்

மணமுடித்த நாள் முதல் வனவாசத்திலிருந்தேன். அரச போகத்தைத் துறந்தேன். அரண்மனை சுகங்களை இழந்தேன். ஆடை ஆபரணங்களை மறந்தேன். மரவுரி தரித்து இராமன் மடியில் படுத்திருக்கும் போதே இந்திரன் மகன் சயந்தன் காகவடிவில் என் நெஞ்சைக் கொத்தினான். இராவணன் சிறை எடுத்தான். இவை இராமனால் என்னைக் காப்பாற்ற முடியாததால் நடந்தவை. அரசர் இலங்கையில் உன் நடத்தையில் களங்கமுள்ளது, உன்னை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்ற போதே உயிர் விட்டிருக்க வேண்டும்.. இராவணன் என்னை மாடச்சிறையில் வைத்தானே ஒழிய மனச் சிறையில் வைக்கவில்லை. அவன் அரசபவனியாகவே பார்க்கவந்தான். கட்டிய கணவனே அவதூறு கூறினால் பெண்கள் உயிர் வாழ முடியுமா? இராமனுடன் வாழ்வதிலும் பார்க்க தீயில் இறப்பதுமேல் என எண்ணி நெருப்பில் வீழ்ந்தேன். அக்கினி தேவன் சுட்டெரிக்கவில்லை. அருந்ததி அனைய கற்பினள் என அகத்திய மகாசித்தரும், கற்பின் செல்வி என வான்மீகரும் போற்றிய எனது கற்பினை அறிந்திருந்தும் என்னுடன் கலந்து பழகிய இராமனே குற்ற மற்ற எனது கற்பினை தீயது என்று சொல்வானாயின் வேறு சான்றும் இவ்வுலகில் உண்டோ? என் நெஞ்சைப் பிளந்து காட்டுகிறேன். என்று கோப மிகுதியால் சீதை கூறினாள். என்னை வைத்துக் காப்பாற்றுவதை தன் பாரமாகக் கருதி, ஏற்றுக் கொள்ளாமல் நீக்கி கானகத்தில் விட்டவன் இராமன்.

சீதை சினந்தெழுந்து மேலும் பேசுகிறாள். இந்நிலைக்கு நான் ஆளானது எனது ஊழ்வினையோ, அயோத்தியின் சூழ்வினையோ, தேடி ஓடி வந்து திறன்மிகு வில் ஒடித்து ஆசை மிகுதியில் அவசரத்தில் மயங்கியவர்கள், இப்பொழுது சீர் இழந்து, சிறப்பிழந்து நிற்கும் நிலை

காணீரோ, இராமரோ ஒன்றும் பேச இயலாத நிலையில் தலை குனிந்து கொண்டு நின்றார். கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோரே, வேள்விகள் தவங்கள் புரியும் முனி முதல்வர்களே, நீதியும் அரசநெறியும் அறிந்த அமைச்சர்களே, எனது இந்த நிலையைக் கண்டு கோபம் கொள்ள மாட்டீர்களோ? அநீதியை அநியாயத்தை நிறுத்து என்று கூறுவதற்கு யாரும் இல்லையா? இறைவா நான் என் செய்வேன் என அழுதாள். வேதநீதி புறக்கணிக்கப்பட்டதா? பேய் அரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள். அறிவிலிகளின் ஆட்சியில் பிணந்தின் பதை சாத்திரங்களை, அறிந்தோரும் சரி என ஏற்றுக் கொள்வர். தர்மம் அழிந்து விடும். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி. பெண்களை உறவினர்களாக கொண்டிருப்பவர்களே, பெண்களோடு உடன் பிறந்தவர்களே, பெண்ணான எனக்கு இங்கு இழைக்கப்படுவது பாவமல்லவா? இதை நீங்களும் மௌனமாக பார்த்திருப்பதனால் பெரும்பழியை கொள்வீரோ, கண்மூடி தலைகுனிந்து இருந்த சபையோரைப் பார்த்து உங்கள் கண்களைத் திறந்து பாருங்கள், இவ்வளவு கூறியும் சபையோர் எதுவும் பேசாமலிருப்பது கண்டு சபையோரை இருகை கூப்பி வணங்கினாள். அம்படிப்பட்ட மான் போல துடிதுடித்து அழுது நிலத்தில் புரண்டு துடிதுடித்தாள். அவளின் தலைவிரி கோலம் அயோத்திக்கு வரப்போகும் அழிவுக்கு கட்டியம் கூறியது.

சீதையின் சீற்றத்தைத் தணிக்க மந்திரி சுமந்திரன், தாயே பொறுத்தருளுங்கள். எல்லாம் பண்டை விதியின் பயனே. நீங்கள் கற்பின் கனல் அவமதித்தல் பாவம் என்றார். ஒருவரும் நீதி உரைக்கவில்லை. கண்ணோட்டம் இல்லாமல் இராமன் என்னைக் காட்டில் விடக் கண்டிருந்தும் இம் மண்ணுலகத்தவர் இராமன் கொடுமை பற்றி ஒன்றும்

வாய் திறவாது இருந்தார்கள். என்னை விரும்பாவிட்டால் என்னிடமே கூறி இருக்கலாம் அல்லது மிதிலைக்கு அனுப்பி வைத்திருக்கலாம். கொடிய விலங்குகள் என் உயிரைப் பறிக்கட்டும் என்றே வனத்தில் விட்டார்கள். கொடுங்கோல் மன்னன் ஆளும் நாட்டிலும், கடும்புலி வாழும் காடு சிறந்தது. சந்தேகம், தீராத சந்தேகம். மைந்தர்களின் பாணங்களால் மயக்கமுற்ற அரசனின் உயிரைக் காப்பாற்றினேன். மூன்றாம் முறை தீக்குளிக்கவா? பெண்களுக்கு வேதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி. நீதி செத்துவிட்டது, பூமாதேவியே! நீரே என்னை ஏற்றுக் கொள்ளும், என்றாள். பூமி பிளந்தது, அதில் சீதை விழுந்து உயிர் விட்டாள். மீண்டும் மூடிக் கொண்டது. சீதை தான் கற்பரசி, அயோத்தியில் கொடுங்கோலாட்சி என்பதை நிலை நாட்டினாள். (சீதையும் குசலகுமாரனும் உயிருடன் பூமிக்குள் புதைக்கப் பட்டனர் என்றும் ஒரு கதை உண்டு.)

இராசூய யாகத்தை நடாத்த , முனிவர்களின் ஆலோசனைக் கிணங்க தங்கத்தால் சீதையின் பதுமை செய்து இராமன் யாகத்தை நிறைவு செய்தான். சோகம் தாங்காமல் பூமியை வெட்டுவேன், அழிப்பேன், என்று சினந்து கூறி அரசபோகத்தைத் துறந்து கண்டபடி ஆவேசத்துடன் பாணங்களை ஏவியும் சினந் தணியாமல் அவதிப்பட்டு கானகத்திற்கு ஏகினான். இராமனின் கொடுமைகளை நாட்டு மக்கள் கேவலமாக விமர்சிக்கவும், கேட்கவும் தலைப்பட்டனர். வெட்கம் தாழாது இலக்குவன் சரயு நதியில் வீழ்ந்து உயிர் விடுகிறான். இலக்குவனின் மறைவும், துன்பங்களும், பழிச்சொற்களும், மனதை வாட்டியதால் உலகினை வெறுத்து இராமன் தான் உயிர் வாழ விரும்பாது தானும் சரயு நதியில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்கிறான். அயோத்தி மக்கள் இலவகுமாரனுக்கு முடிசூட்டினார்கள்.

உயர்ந்தோர் வாக்கு

மக்கள் திலகம் மாண்புமிகு இராமச்சந்திர பூபதி இலங்கையில் நுவரெலியா தமிழ்ச் சங்கத்தில் இராமாயணம் பற்றி ஆற்றிய உரையில், "இராமாயணத்தில் நான் போற்றுவது இராவணனையே, காரணம் எங்கள் நாட்டுப் பெண்ணை சிறை எடுத்து வந்தாலும், அவளைத் தொடாமல் அவள் கற்பைக் காப்பாற்றிக் கொடுத்த உத்தமனின் நாடு உங்கள் நாடு. இது கடவுளாலும் செய்ய முடியாத காரியம்," என்று தெரிவித்தார்.

தெய்வ அவதாரமாக எம் கண் முன் வாழ்ந்து வரும் பகவான் சத்திய சாயி பாபா அவர்கள், "இராவணன் நன்கு படித்து அறுபத்தினான்கு கலைகளிலும் தேர்ச்சி பெற்றவன். இராமனுக்கு முப்பத்தினான்கு கலைகளே தெரியும். இராமன் நல்லவன் ஆனால் இராவணன் உயர்ந்தவன்" என்றும் தெரிவித்துள்ளார்.

உசாவிய நூல்கள்

1. வால்மீகி இராமாயணம் - வடமொழி, இரத்தினாகரன், நாரதர் கதை.
2. வால்மீகி இராமாயணம் - வடமொழி, பிராசேதர்,பிரம்மா கதை.
3. வான்மீகி முலராமாயணம் - தமிழ், சித்தர் வான்மீகர், பார்த்துப் பாடியது.
4. ஆனந்த ராமாயணம் - ஆனந்தன்
5. வாசிட்ட ராமாயணம் - வசிட்டர்
6. வியாச ராமாயணம் - வியாசர்
7. போத்தன்னா ராமாயணம் - தெலுங்கு, போத்தன்னா.
8. எழுத்தச்ச ராமாயணம் - மலையாளம், எழுத்தச்சன்.
9. அதியாத்ம ராமாயணம் - சமஸ்கிருதம்.
10. கம்ப ராமாயணம் - தமிழ், கம்பன்.
11. துளசிதாச ராமாயணம் - இந்தி, துளசிதாசர்.
12. அனுமத ராமாயணம் - அனுமன்.
13. பழைய ராமாயணம் - தமிழ்
14. பாஸ்கர ராமாயணம் - பாஸ்கரர்.
15. அக்கினிவேச ராமாயணம் - அக்கினிவேசர்.
16. இராமதாச ராமாயணம் - மராட்டியம், இராமதாசர்.
17. ஜைன ராமாயணம் - தமிழ்
18. பம்பா ராமாயணம் - கன்னடம், அபிநவபம்பா
19. நாமதேவ ராமாயணம் - மராட்டியம், நாமதேவர்.
20. பாவார்த்த ராமாயணம் - ஏகநாதர்.
21. வெண்பா ராமாயணம் - தமிழ்.
22. போஜ ராமாயணம் - வடமொழி, போஜராஜன்.
23. முவர் ராமாயணம் - தமிழ்.
24. இராமாயண சாரம் - தமிழ், நாராயண ஜயங்கார்.
25. இராமாயண திருப்புகழ் - தமிழ்.
26. மகாபாரதம் - வடமொழி, வியாசர்.

27. கந்த புராணம்	-	வடமொழி, வியாசர்.
28. சூரிய புராணம்	-	வடமொழி, வியாசர்.
29. பத்ம புராணம்	-	வடமொழி, வியாசர்.
30. நாரத புராணம்	-	வடமொழி, வியாசர்.
31. சிவ புராணம்	-	வடமொழி, வியாசர்.
32. இரசரத்தின சமுச்சயம்	-	வடமொழி, தெலுங்கர் சித்தநாகார்ச்சுனர்,
33. மகாவம்சம்	-	பாளி,பௌத்த துறவிகள்.
34. தேவாரங்கள்	-	தமிழ், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்.
35. திருமந்திரம்	-	தமிழ், திருமூலர்.
36. இலங்கை பெருவேந்தன்	-	தமிழ், பேராசிரியர் பூர்ணலிங்கம்பிள்ளை
37. சக்கரவர்த்தித் திருமகன்	-	தமிழ், முதறிஞர் இராஜாஜி.
38. இராவண தரிசனம்	-	தமிழ், சித்தி அமரசிங்கம்.
39. நாம் தமிழர்	-	தமிழ்.
40. திருவாசகம்	-	தமிழ், மாணிக்கவாசகர்.
41. போகர் 7000	-	தமிழ், மாசித்தர் போகர்.
42. திருக்கரசைப் புராணம்	-	தமிழ், சுன்னாகம் குமாரசுவாமி புலவர்
43. தட்சிணகைலாய புராணம்	-	தமிழ், சிங்கை செகராசா சேகரன்
44. திருக்கோணேசுவரம்	-	தமிழ், ஞானசிரோமணி, பண்டிதர் இ. வடிவேல்.
45. பூம்பொழில் சஞ்சிகைகள்	-	தமிழ்,
46. செந்தமிழ் சஞ்சிகைகள்	-	தமிழ்,
47. யாக்ஞவல்லிய ராமாயணம்	-	வடமொழி யாக்ஞவல்லியர்
48 காளிதாச ராமாயணம்	-	சமஸ்கிருதம் மகாகவி காளிதாசன்.

எமது வெளியீடுகள்

01. ஒற்றைப்பனை (சிறுகதைத் தொகுப்பு)
02. கோயிலும் சுனையும் (நாடகத் தொகுதி)
03. கயல் விழி (கவிதை நாடகம்)
04. சாரணர் புதிய செயற்திட்டம்
05. 93ல் கலை இலக்கிய ஆய்வு (கட்டுரை தொகுதி)
06. இராவண தரிசனம் (இலக்கிய நாடகம்)
07. கங்கைக் காவியம் (காவியம்)
08. க்ழகப் புலவர் பெ.பொ.சி கவிதைகள்
09. சிந்தித்தால் (நற்சிந்தனைக் கதைகள்)
10. இரு நாடகங்கள் (நாடகம்)
00. திருப்பல்லாண்டு (உரையுடன்)
11. கவிதாலயம் (கவிதைத் தொகுப்பு)
12. அச்சாக்குட்டி (குழந்தை இலக்கியம்)
13. நெஞ்சில் ஓர் நிறைவு (சிறுகதை)
14. மாலையில் ஓர் உதயம் (நாவல்)
15. ஸ்திரீ இலட்சணம் (சிறுகதைத் தொகுப்பு)
16. திறனாய்வாளர் திருக்கோணமலை த.கனகசுந்தரம்பிள்ளை

மற்றும் பவழவிழா மலர்களான
காந்தி மாஸ்டர் சிறப்பு மலர்
கிழக்கில் பூத்த ஞானமலர்
இலக்கியப்பூந்துணர்

ஈழத்து இலக்கியச் சோலை

21, ஒளவையார் வீதி, திருக்கோணமலை.
இலங்கை

பேரறிஞர் டாக்டர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் இராசசேகரம் குலசேகரம், தமிழர் சுகாதாரம், முத்தூர் அகதியர், பருளை விநாயகர் தலவரலாறு ஆகிய நூல்களை எழுதினார். சித்த வைத்திய பரம்பரை, பிரபு ஆறுமுகம் பெரிய பரிகாரியார் சரித்திர ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளார். சிறந்த ஆய்வாளர் பல ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தவர். மருந்து, மருத்துவமலர் இதழ்களின் ஆசிரியராக இருப்பவர்.

சிங்கை நகர் (சங்கை நகர், சங்கானை) செகராசா சேகர பேரரசன் வம்சத்தில் தோன்றி இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலேய அரசினை எதிர்த்துப் போராடிய பல்லவ நாட்டின் (மணிபல்லவம்) மன்னனான இராசா சுப்பிரமணியம் (முளாய்) மகனாகிய கந்தசாமியின் புதல்வன் பாலசுப்பிரமணியம் ஆவர். அறுபத்தினான்கு கலைகளையும் அறிந்தவர். இருபது கலைகளிற்கு மேல் தேர்ச்சி பெற்றவர். தமிழ் தேசியத்தின் மீது அளவற்ற பக்தி கொண்டவர், முன்னாள் மாகாணப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர், தமிழின் தனித் தன்மையை பேணுபவர். தமிழ்க்கலைகளை வளர்ப்பதிலும் தமிழ்க்கலைஞர்களைக் கௌரவிப்பதிலும் ஆர்வமுடையவர். இலங்கை தமிழ் வைத்திய ஆராய்ச்சி மன்றத்தின் தவிசாளராக இருந்து, பல ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியவர். தமிழ் மக்களின் சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டுக்காக அரும்பணியாற்றிவர்.

23.12.4948 இல் பிறந்த இவர் 1973இல் இராதாதேவி என்பவரைத் திருமணம் செய்து, இரு குழந்தைகட்கு (ஆண், பெண்) தந்தையானார்.

இவரது வெற்றிக்கெல்லாம் ஊன்று கோலாகவும், உறுதுணையாகவும் இவரது மனைவி வைத்தியசாரணி இராதாதேவியே என்பதை அறியும் போது பெருமையாகவே இருக்கிறது.

31, ஒளவையார் வீதி
திருக்கோணமலை.

வீணைவேந்தன்

ISBN 955-1029-00-3

9789551029005 30000>